# TNPSC தேர்வுப் பெட்டகம்
# நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 2019

www.tnpscthervupettagam.com




SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள்** ........ 11
**தமிழ்நாடு செய்திகள்** ........ 24
விதை பதிக்கப்பட்ட விநாயகர் சிலைகள் ........ 24
நீருக்கடியிலான தொல்பொருள் அகழாய்வுகள் - தமிழ்நாடு ........ 24
கீழடியில் பழங்கால செங்கல் தொட்டி ........ 25
தமிழ்நாடு - அமெரிக்க முதலீடு: யாதும் ஊரே: ........ 25
போக்சோ விரைவு நீதிமன்றங்கள் ........ 25
மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு: உயிரி மருத்துவக் கழிவுகளுக்கான விதிகள், 2016 ........ 26
பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ: நாமக்கல், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் ........ 27
டிஜிட்டல் ஊக்கமளிப்புத் திட்டம் ........ 27
நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை உயர்வு ........ 27
புதிய கடலோர காவல்படை ரோந்து கப்பல் ........ 28
இரண்டாவது “சிறந்த தூய்மையான இடம்” – மதுரை மீனாட்சி அம்மன் ........ 29
மதராஸ் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி தஹில்ரமணி ........ 29
அயோடின் கலக்கப்பட்ட உப்பின் மிகக் குறைந்த நுகர்வு – தமிழ்நாடு ........ 30
பாம்பனில் பாசிப் பெருக்கம் ........ 30
தானியங்கு மழைமானி @ 1300 இடங்களில் ........ 31
தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை ........ 31
கீழடி தொல்பொருள் ஆய்வுத்தளம், சிவகங்கை ........ 32
கீழடி அகழ்வாய்வு ........ 34
தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் ........ 36
தமிழ்நாடு - கேரள பரம்பிக்குளம் ஆழியார் திட்ட மறு ஆய்வு ........ 36
**தேசியச் செய்திகள்** ........ 37
ஷாகுன் இணைய வாயில் ........ 37
தேசிய ஆய்வக இயக்குநரகம் ........ 37
இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டாவது முறைசாரா உச்சி மாநாடு – மாமல்லபுரம் ........ 38
புதிய ஆளுநர்கள் நியமனம் ........ 38
டிஜிட்டல் இந்தியாவுக்கான கட்டமைப்பு - மின்னணு & தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் கூகிள் ........ 39
இந்தியாவின் மிக நீளமான மின்மயமாக்கப்பட்ட ரயில் சுரங்கப் பாதை ........ 39
உலகத் தேர்தல் அமைப்புகளின் சங்கத்தின் 4 வது பொதுச் சபை ........ 39
வாக்காளர்கள் சரிபார்ப்புத் திட்டம் ........ 40
அங்கிகார் பிரச்சாரம் ........ 40
இந்தியா – கானா வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் ........ 41
மத்திய நேரடி வரி வாரியம் – சிறப்புப் பிரிவு ........ 42

8 அப்பாச்சி ஏ. எச் - 64இ தாக்குதல் ஹெலிகாப்டர்கள் ........ 42
உலகளாவிய வாழ்வாதாரக் குறியீடு 2019 ........ 42
தெற்காசிய சபாநாயகர்கள் மாநாடு ........ 43
சமுத்திரயான் திட்டம் ........ 43
சாகர் அவனேஷிகா - ஆராய்ச்சிக் கப்பல் ........ 44
ஜப்பான்-இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான வருடாந்திரப் பாதுகாப்பு அமைச்சகங்களுக்கிடையேயான சந்திப்பு ........ 44
20வது இந்தியா - ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாடு: சென்னை- விளாடிவோஸ்டாக் பயணப் பாதை ........ 44
“தனிப்பட்ட தீவிரவாதிகள்” என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது ........ 45
குழந்தைகளுக்கு காசநோய் மற்றும் தொழுநோய் ஆகியவற்றிற்கான முதல்நிலைப் பரிசோதனை ........ 45
இந்திய - ஆப்பிரிக்க கூட்டாண்மை பற்றிய தேசியக் கருத்தரங்கு ........ 45
பயணம், சுற்றுலா போட்டித்திறன் குறியீடு ........ 46
டெல்லி விமான நிலையத்தில் முக அங்கீகாரம் ........ 47
யுத் அபியாஸ் 2019: இந்தியா மற்றும் அமெரிக்கா ........ 47
கழுகுகள் பாதுகாப்பு - புதிய மருந்து ஃப்ளூனிக்சின் ........ 48
இந்தியா தன்னை "பறவைக் காய்ச்சல் அற்ற நாடாக" அறிவித்துள்ளது ........ 48
மாலியில் 4வது இந்தியப் பெருங்கடல் மாநாடு ........ 49
தென் கொரியாவிற்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் பயணம் ........ 49
இராணுவ மருந்துகள் மீதான கருத்தரங்கு: SCO உறுப்பு நாடுகள் ........ 50
சிலிநெக்ஸ் 2019: இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற் பயிற்சி ........ 50
கார்கில் முதல் கோஹிமா வரையிலான அல்ட்ரா மராத்தான் ........ 51
மேற்கு விமானப் படை கட்டுப்பாட்டக கமாண்டோக்கள் மாநாடு 2019 ........ 51
வட கிழக்கு மன்றத்தின் 68வது முழுமையான அமர்வு - 2019 ........ 52
பேரிடர் பதிலெதிர்ப்பிற்கான நேரு யுவ கேந்திரங்கள் ........ 52
பொதுவான உயர் நீதிமன்றம்: ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ........ 53
ஹெலிகாப்டர் உச்சி மாநாடு - 2019 ........ 53
தரிசு நிலங்களை மீட்டெடுத்தல்: இலக்கு திருத்தியமைக்கப்பட்டது ........ 53
ஜம்மு காஷ்மீர் மாநிலப் பிரிப்பு குறித்த சஞ்சய் மித்ரா குழு ........ 54
இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே பெட்ரோலியக் குழாய் ........ 54
பண்ணை இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பதற்காக பன்மொழிச் செயலி ........ 55
ஆற்றல் திறனுள்ள கட்டிடங்கள் - ANGAN மாநாடு ........ 55
இந்தியத் திறன் மேம்பாட்டு பணி ........ 56
ரஃபேலுக்காக கோல்டன் ஏரோஸ் படைப் பிரிவு மீண்டும் புத்துயிராக்கம் ........ 56
காஷ்மீர் ஆப்பிள்கள் - சந்தை இடையீட்டுத் திட்டம் ........ 57
விலங்குகளுக்கு நோய் கட்டுப்பாடு மற்றும் செயற்கைக் கருவூட்டல் ........ 57
இஞ்சியின் 2 புதிய இனங்கள் ........ 58
AEM மற்றும் இந்தியா ஆகியவற்றிற்கிடையேயான 16வது கலந்துரையாடல்: பேங்காக் ........ 59
அதிக எண்ணிக்கையிலான ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் – தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லி ........ 59
மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பெரும் அபராதங்களைத் திருத்தியமைத்தல் ........ 60

தேசிய மரபணுத் தொடர் (புற்றுநோய்) – இந்தியாவிற்கான குறிப்பிட்ட தீர்வுகள் ........ 60
தூய்மை என்பது சேவை (ஸ்வச்தா ஹை சேவா) 2019 - நெகிழிப் பயன்பாடு ........ 60
மலேரியா மற்றும் இந்தியா – 4வது இடம் ........ 61
இந்தியத் திறன்கள் நிறுவனம் - 3 நகரங்கள் ........ 62
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குண்டு துளைக்காத கவச ஆடைகள் ........ 62
பிரதான் மந்திரி கிசான் மான் தன் திட்டம் ........ 63
வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம் ........ 63
ஏகலைவா மாதிரிப் பள்ளிகள் தொடக்கம் ........ 63
தேசியப் புலனாய்வுத் தொடர் (NATGRID) திட்டம் ........ 64
ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்லோவேனியா - இந்தியக் குடியரசுத் தலைவர் பயணம் ........ 65
இந்திய மகளிர் காவல் துறை அதிகாரிகளுக்கு ஐ.நா. கௌரவ விருது ........ 65
மத்திய கருவிகள் அடையாளப் பதிவு ........ 66
கடல்சார் தகவல் தொடர்புச் சேவைகள் ........ 66
LEADS அறிக்கை 2019 ........ 67
ஹிம்விஜய் – போர்ப் பயிற்சி ........ 67
தூர்தர்ஷன் அலைவரிசை - 60 ஆண்டுகள் நிறைவு ........ 68
நாட்டின் பகுதிகளை வரைபடமாக்குவதற்கு ஆளில்லா விமானங்கள் ........ 68
முதலாவது தனியார் ரயில்: தேஜாஸ் தில்லி – லக்னோ ........ 69
மாஸ்கோவிற்கு தூதரகப் பணிக்காகச் செல்லும் முதலாவது பெண் விங் கமாண்டர் ........ 69
பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) திருத்த மசோதா, 2019 ........ 70
தூய்மையான நிலக்கரி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான தேசிய மையம் ........ 70
சிட்மெக்ஸ் - 19 (SITMEX – 19) ........ 71
5வது சர்வதேச ராமாயணத் திருவிழா ........ 71
பாரத் கட்டணம் செலுத்தும் முறை ........ 71
பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் வழங்கப்பட்ட போர் சார்ந்த மென்பொருள் ........ 72
எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு ........ 72
மின்னணு சிகரெட்டுகள் தடைசெய்யப்பட்டுள்ளன ........ 72
உலகின் மிகப்பெரிய வம்சாவளியினர் - இந்தியர்கள் ........ 73
மேம்பட்ட தரையிறங்கும் மைதானம் @ விஜயநகர், அருணாச்சலப் பிரதேசம் ........ 74
இந்திய ரயில்வே: ஹெட் ஆன் ஜெனரேஷன் (HOG) தொழில்நுட்பம் ........ 75
பொது கட்டிடக் கலையில் வளர்ந்து வரும் போக்குகள் ........ 75
புதிய விமானப்படைத் தலைமைத் தளபதி - ஆர்.கே.எஸ் பதௌரியா ........ 76
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு மதிப்பீடுகள் ........ 76
மாற்றுத் திறனாளிகளுக்கான கைப்பேசிகள் ........ 76
கனிம ஆய்வு ........ 77
இணையத்தை அணுகுவதற்கான உரிமை - கேரள உயர் நீதிமன்ற உத்தரவு ........ 77
தடுப்பூசிகளை உருவாக்க புதிய மாதிரி – உயிரித் தொழில்நுட்பத் துறை ........ 78
மீன்வளப் புள்ளிவிவரங்கள் குறித்த கையேடு – 2018 ........ 78

நீட் (NEAT) திட்டம் 2019 - உயர் கல்வியில் செயற்கை நுண்ணறிவு ........ 79
கந்தேரி நீர்மூழ்கிக் கப்பல்கள் ........ 79
NCG விஸ்வாம் புற்றுநோய் பராமரிப்பு இணைப்புத் திட்டம் ........ 80
மங்கோலியாவில் புத்தர் சிலை திறப்பு ........ 80
டிஜிட்டல் பணவழங்கீட்டு அபியான் ........ 81
லடாக்கில் சாங் தாங் ஒருங்கிணைந்த உடற்பயிற்சி ........ 81
நெகிழிப் புட்டிகளை நொறுக்கும் இயந்திரம் - மும்பை ........ 82
தேசியக் காவல் துறைப் பல்கலைக் கழகம் ........ 83
MIS தளம் – "எளிதில் அணுகக்கூடிய இந்தியா" என்ற பிரச்சாரம் ........ 84
சமூகப் பங்கு பரிவர்த்தனைகள் - இஷாத் உசேன் குழு ........ 84
BLEU கூட்டுப் பொருளாதார ஆணையக் கூட்டம் ........ 84
கரோ சம்பவ் - பொதி கட்டுதலின் கழிவு மேலாண்மை ........ 85
இந்தியா @ ஐ.நா காலநிலை நடவடிக்கை உச்சி மாநாடு ........ 85
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021 - ஜங்கனானா பவன் ........ 86
இஸ்பதி இராடா - எஃகுத் தொழில் துறை ........ 87
மோச்சி ஸ்வாபிமான் முன்னெடுப்பு - தோல் துறை ........ 87
லடாக்கி ஷொண்டோல் நடனம் - கின்னஸ் சாதனை ........ 88
அகில இந்திய உயர் கல்வி ஆய்வு 2018-19 ........ 88
ஐ.நா தலைமையகத்தில் காந்தி சூரிய ஒளிப் பூங்கா ........ 89
சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது ........ 90
காசநோய் எதிர்ப்புப் பிரச்சாரம் : காசநோய் ஹரிகா தேஷ் ஜீடிகா ........ 91
பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு மீளமைப்பு ........ 92
16வது குறு, நடுத்தர நிறுவனங்கள் மாநாடு, புது தில்லி ........ 92
முதலாவது இந்தியா - கேரிகாம் சந்திப்பு ........ 93
குப்பைகள் அகற்றம் @ சியாச்சின் ........ 93
நேத்ரா திட்டம் ........ 94
மிகப்பெரிய வறண்ட கப்பல் கட்டும் கூடம், மும்பை ........ 95
ICGS வராஹா - புதிய ரோந்துக் கப்பல் ........ 96
உலகளாவிய டிஜிட்டல் போட்டித் திறன் தரவரிசை ........ 96
23வது மலபார் பயிற்சி ........ 96
பெருங்கடல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் பற்றிய IPCC அறிக்கை ........ 97
ஐஎன்எஸ் நீலகிரி - எதிரிகளின் கண்ணில் புலப்படாத பீரங்கிப் போர்க் கப்பல் ........ 97
10 ஆண்டு கால கிராமப்புற துப்புரவு உத்தி (2019-2029) ........ 98
தபால் துறையில் CPGRAMS சீர்திருத்தங்கள் ........ 98
7வது உலக இந்துப் பொருளாதார மன்றம் 2019 ........ 99
நெகிழி ஏற்றுமதியில் முதல் இடம் ........ 99
**சர்வதேசச் செய்திகள்** ........ 100
மிகப்பெரிய நகரும் இரும்புக் கூண்டு - செர்னோபில் ........ 100
பாதுகாப்பான நகரங்கள் பட்டியல் ........ 100

போலியோவை அகற்றும் விளிம்பில் ஆப்பிரிக்கா ....... 101
அமெரிக்க விண்வெளி போர்க் கட்டுப்பாட்டகம் ....... 101
இந்தோனேசியாவின் தலைநகரம் மாற்றப்பட்டது ....... 102
ஆசியான் - அமெரிக்க கடல்சார் பயிற்சி ....... 102
எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றிற்கான உலகளாவிய நிதி ....... 103
ஹாங்காங்: நாடு கடத்தல் மசோதா திரும்பப் பெறப்பட்டது ....... 103
பாகிஸ்தானின் கஸ்னவி ஏவுகணை – இரவில் சோதனை ....... 104
**TSENTR 2019** - ரஷ்யாவில் போர் விளையாட்டுகள் ....... 105
போலிச் செய்திகளைக் கட்டுப்படுத்துதல் ....... 105
**2019** தெற்காசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு ....... 106
டோரியன் சூறாவளி: பஹாமாஸுக்கு உதவுதல் ....... 107
**24**வது உலக எரிசக்தி மாநாடு - அபுதாபி ....... 107
ஆசியாவின் அமைச்சரவைகளுக்கிடையேயான எரிசக்தித் தொடர்பான **8**வது வட்டமேசை மாநாடு ....... 107
படங்களற்ற (வெற்று) சிகரெட் பொதிகள் – தாய்லாந்து ....... 108
உலகளாவிய நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம்: இந்தியா ....... 108
சவுதி எண்ணெய் ஆலைகளில் ஆளில்லா விமானத் தாக்குதல் ....... 109
டிஜிட்டல் பொருளாதார அறிக்கை **2019** ....... 109
**CRPD (Convention on Rights of Persons with Disabilities)** தொடர்பான ஐ.நா. குழுவின் **22**வது பதிப்பு ....... 109
தடுப்பூசி மறுப்பு - உலகளாவிய ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தல் ....... 110
டாக்ஸிங் விமான நிலையம் – பெய்ஜிங்கின் மிகப்பெரிய விமான நிலையம் ....... 111
தாய்லாந்து நாட்டுக் கோவிலில் புலிகள் இறப்பு ....... 112
விண்வெளியில் முதலாவது அரேபியர் ....... 112
பாராளுமன்றத்தை முடக்கியது சட்டவிரோதம் என இங்கிலாந்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு ....... 113
ரோஹிங்காக்கள் மீதான முத்தரப்பு ஒப்பந்தம் ....... 113
**FAO-WHO**வின் ஆசியாவிற்கான **21**வது ஒருங்கிணைப்புக் கூட்டம் – **2019** ....... 114
**8**வது கண்டம் – கிரேட்டர் அட்ரியா ....... 114
**பொருளாதாரச் செய்திகள்** ....... 115
**5** வது கிழக்குப் பொருளாதார மன்றம் ....... 115
சுவிஸ் மற்றும் இந்தியா: தானியங்கித் தகவல் பரிமாற்றம் ....... 115
முக்கியமான **8** தொழிற் துறைகளின் செயல்பாடுகள் ....... 116
உணவு இழப்பு மற்றும் கழிவைக் குறைத்தல் – அறிக்கை ....... 116
**6**வது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான உத்தி சார்ந்த பொருளாதார உரையாடல் .. 117
ஆதாரால் செயல்படுத்தப்பட்ட கட்டண முறைமை சேவைகள்: இந்திய அஞ்சலக பண வழங்கீட்டு வங்கி 117
இந்தியாவின் தங்க இருப்பு ....... 118
உரிமம் பெறப்படுவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன - உற்பத்தித் துறை ....... 119
பெருநிறுவனங்களுக்கான வரிக் குறைப்பு ....... 119
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்** ....... 120
தோலில் புதிய வலி உணர்திறன் உறுப்பு கண்டுபிடிப்பு ....... 120
இணையங்களுக்கானப் பொருட்களின் **4**வது காங்கிரஸ்: பெங்களூரு ....... 120

அறிவியலின் ஆஸ்கார் விருது ....... 120
ஒடிசாவில் தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர் ....... 121
விக்ரம் லேண்டர் ....... 122
பம்பாய் இரத்த வகை ....... 122
வேற்று கிரகத்தில் நீராவி ....... 123
சீனாவின் புதிய செயற்கைக் கோள்கள் ....... 124
தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரிய சக்தி வளாகம் ....... 124
புதிய அறிவியல் சொற்கூறு: யாங்க் ....... 124
மனித விண்வெளித் திட்டம்: இஸ்ரோ மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு ....... 125
இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் திறன் மையம் ....... 125
**NaVIC** ஐ கைபேசிகளில் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது ....... 126
எலும்பு போன்ற பற்களைக் கொண்ட பறவைகள் - பெலகோர்னிதிட்ஸ் ....... 127
மிகவும் பெரிய நியூட்ரான் நட்சத்திரம் - **J0740 + 6620** ....... 128
உலகின் மிகப்பெரிய போக்குவரத்து விண்வெளிக் கப்பல் – சர்வதேச விண்வெளி நிலையம் ....... 129
இந்தியாவின் முதலாவது உள்நாட்டு எரிபொருள் மின்கலம் ....... 129
புதிய கனிமம் கண்டுபிடிப்பு ....... 129
வியாழன் போன்ற புதிய கிரகம் – **GJ 3512b** ....... 130
விண்மீன்களுக்கு நடுவே உள்ள இரண்டாவது பொருள் – **2I/**போரிசோவ் ....... 130
**சுற்றுச்சூழல் செய்திகள்** ....... 131
கேம்பா நிதி - காடு வளர்ப்புத் திட்டம் ....... 131
பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் ....... 131
பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்திகளின் **3**வது மேம்பட்ட மதிப்பீடு ....... 132
நீர் மாசுபாட்டிற்கு எதிராக சிப்பிகள் ....... 132
அதிஉயர் சுற்றுச்சூழல் நிலப் பகுதிகளில் புலிகள் ....... 133
தரம் தெரியாத மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நீர்ப் பிரச்சினை- அறிக்கை ....... 133
காலநிலை மாற்றம் மற்றும் வாழைப் பழங்கள் ....... 134
ஈரநிலங்கள் புனர்வாழ்விற்கான தேசிய முன்னெடுப்பு ....... 134
**2019** ஆம் ஆண்டின் மழைக் காலத்தினிடையேயான மின்னல் அறிக்கை ....... 135
**25** ஆண்டுகளில் அதிக ஈரப்பதம் மிக்க இந்தியா ....... 135
நீலச் சாலைத் திட்டம் – கத்தார் ....... 136
வறட்சி முன்கணிப்பு கருவிப்பெட்டி ....... 136
சட்டவிரோத நிலத்தடி நீர் சுரண்டலைத் தடுத்து நிறுத்துதல் – தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ....... 137
பாலைவனமாக்கல் குறித்த தில்லிப் பிரகடனம் ....... 137
கிளைபோசேட் களைக்கொள்ளி - ஜெர்மனி ....... 138
**WAWE** உச்சி மாநாடு **2019** - பெண்கள் தொழில்முனைவோர் ....... 138
இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான ஐந்தாண்டுகள்: **2014 – 19** ....... 139
உலகின் முதலாவது துகள்மப் பொருள்கள் வர்த்தகம் – குஜராத் ....... 139
தேசிய நீர்த் திட்ட விருதுகள் **-2019** ....... 140
பூனைப் பாம்புகளின் புதிய இனம் ....... 140

**மாநிலச் செய்திகள்** ......141
தேசிய குடிமக்கள் பதிவேடு: இறுதி வடிவம் – அசாம் ......141
மேற்கு வங்க (கும்பல் வன்முறைத் தடுப்பு) மசோதா, 2019 ......141
AB-MGRSBY சுகாதார காப்பீட்டு திட்டம் - ராஜஸ்தான் ......142
கட்டாய மத மாற்றத்திற்கு எதிரான மசோதா ......142
டெரகோட்டா (சுடுமண்) அரைக்கும் இயந்திரம் (கிரைண்டர்) - வாரணாசி, உத்தரப் பிரதேசம் ......143
ஒடிசாவில் அறுவடைத் திருவிழா: நுஹாய் ஜுஹார் ......143
10:10:10 - டெல்லி டெங்குப் பிரச்சாரம் ......143
ஹைதராபாத்-கர்நாடகா மறுபெயரிடப்பட்டது ......144
யுனெஸ்கோ மற்றும் ராஜஸ்தான் அரசு ......144
தெலுங்கானா - மிகப் பெரிய உணவுப் பூங்கா ......145
உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட மெட்ரோ இரயில் பெட்டி – மும்பை மெட்ரோ ......145
மரக்கோதுமை பற்றிய சர்வதேசக் கருத்தரங்கு – மேகாலயா ......146
சிறப்புப் புலிகள் படை – உத்தரகாண்ட் ......146
சாஹிப்கஞ்ச் பல்முனை சரக்கு முனையம், ஜார்க்கண்ட் ......147
வெளிநாட்டிற்குச் செல்வோர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறப்புப் பிரிவு – பஞ்சாப் ......147
முதலாவது பொதுத் தகவல் தளம் – ராஜஸ்தான் ......147
இந்தியாவின் முதல் சர்வதேச மகளிர் வர்த்தக மையம் - கேரளா ......148
புதிய காப்பீட்டுத் திட்டங்கள் - ஹரியானா ......148
முக்கிய மந்திரி தால் போஷித் யோஜனா - உத்தரகாண்ட் ......148
தெலுங்கானாவில் யுரேனியச் சுரங்கம் ......149
நேர வங்கிகள் - மத்தியப் பிரதேசம் ......149
இமாச்சலப் பிரதேசத்தில் 1100 என்ற உதவி எண் ......150
மோதி பாக் திரைப்படம் – உத்தரகாண்ட் ......150
தீக்சி நீர்மின் திட்டம் – அருணாச்சலப் பிரதேசம் ......150
DEET செயலி – தெலுங்கானா ......150
பெங்களூரில் கூகிள் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம் ......151
அடுக்குமாடி சொத்து விதிகள், மகாராஷ்டிரா ......151
செயற்கை நுண்ணறிவு ஆண்டு ......151
தத்பார் செயலி - தில்லி காவல் துறை ......152
விரைவு எதிர்வினை குறியீட்டைக் (QR code) கொண்ட பட்டாசுகள் – தில்லி ......152
சிறந்த சுற்றுலா விருதுகள் – ஆந்திரா ......153
விலங்குகள் பலியிடுதலுக்குத் தடை – திரிபுரா ......153
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்** ......153
பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவம் - கலிங்கா FCC விருதுகள் ......153
4 வது உலகளாவிய கோல்கீப்பர் விருது – மோடி ......154
நமஸ்தே பசிபிக் ......154
அக்வா அக்வாரியா இந்தியா 2019 ......154
கிரண் நாகர்கர் ......155

கௌசலாச்சார்யா விருதுகள் ....................................................................................156
ராம் ஜெத்மலானி மறைவு....................................................................................156
**19**வது வருடாந்திர ஆசியச் சாதனையாளர் விருதுகள் ....................................................................................157
பார்வையாளர் விருதுகள் ....................................................................................157
யுனெஸ்கோவின் சர்வதேச எழுத்தறிவு விருதுகள் **2019**....................................................................................158
**76**வது சர்வதேச திரைப்பட திருவிழா விருதுகள் **– 2019** ....................................................................................159
ஹ்ராண்ட் டிங்க் விருதுகள் ....................................................................................159
டாக்டர் கலாம் ஸ்மிருதி சர்வதேச சிறப்புத்துவ விருது **2019**....................................................................................159
கல்வி சிறப்புத்துவ விருது **2019** ....................................................................................160
தேசியப் புவி அறிவியல் விருது **– 2018** ....................................................................................160
பாயல் ஜாங்கிட் **–** கோல்கீப்பர்ஸ் குளோபல் கோல்ஸ் விருதுகள் **2019** ....................................................................................161
மாற்று நோபல் பரிசு - கிரெட்டா துன்பெர்க் ....................................................................................162
சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருதுகள் **2019**....................................................................................163
அமிதாப் பச்சன் - தாதா சாஹேப் பால்கே விருது....................................................................................164
இந்தியக் குடியரசுத் தலைவரின் வர்ண விருது ....................................................................................164
சாஸ்த்ரா ராமானுஜன் விருது **2019**....................................................................................164
**31**வது புண்ணியபூசன் விருது ....................................................................................165
வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருது **2019**....................................................................................165
**விளையாட்டுச் செய்திகள்** ....................................................................................166
சாம்பியன்ஸ் படகுப் போட்டி: பாம்புப் படகுப் பந்தயம் - கேரளா ....................................................................................166
பெரோஸ் ஷா கோட்லா மைதானம் மறுபெயரிடப்பட்டது: அருண் ஜெட்லி ....................................................................................167
மூத்த மகளிருக்கான தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் ....................................................................................167
**SAFF U-15** கால்பந்து....................................................................................168
அனுபமா ஸ்வைன் **–** தற்காப்புக் கலை ....................................................................................168
ஆப்கானிஸ்தானின் ரஷீத் கான் ....................................................................................169
அமெரிக்க ஓபன் **2019** ....................................................................................169
இந்தியாவின் பாரா ஒலிம்பிக் கமிட்டிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்டது....................................................................................170
**19** வயதுக்குட்பட்ட ஆசியக் கோப்பை வெற்றி **–** இந்தியா ....................................................................................170
**6** வது ட்ராக் ஆசிய கோப்பை சைக்கிள் ஓட்டுதல் போட்டி ....................................................................................170
**25** ஆவது ஜூனியர் மற்றும் கேடட் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்....................................................................................171
தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப்....................................................................................171
ஹீரோ மோட்டோகார்ப் மற்றும் கோல்ஃப் ....................................................................................171
தனுஷ் ஸ்ரீகாந்த் - செவித்திறன் குறைபாடு உள்ள இளம் துப்பாக்கி சுடும் வீரர் ....................................................................................172
மல்யுத்தம் - வினேஷ் போகாட் ....................................................................................172
**IBSF** உலக ஸ்னூக்கர் போட்டி ....................................................................................173
அமித் பங்கல் - இந்தியாவின் முதலாவது குத்துச் சண்டைப் பதக்கம் ....................................................................................173
**முக்கிய தினங்கள்** ....................................................................................173
தேசிய ஊட்டச்சத்து வாரம்: செப்டம்பர் **1 – 7**....................................................................................173
உலக தேங்காய் தினம் **–** செப்டம்பர் **2** ....................................................................................174

உலக அறக்கட்டளை தினம் – செப்டம்பர் 5 .......... 174
ஆசிரியர்கள் தினம் – செப்டம்பர் 5 .......... 174
உலக பிசியோதெரபி (உடல் சிகிச்சை) தினம் – செப்டம்பர் 8 .......... 175
சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 8 .......... 176
உலக தற்கொலை தடுப்பு தினம் – செப்டம்பர் 10 .......... 176
தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐ.நா தினம் – செப்டம்பர் 12 .......... 177
உலக முதலுதவி நாள் – செப்டம்பர் 14 .......... 177
பேரறிஞர் அண்ணா பிறந்த தினம் – செப்டம்பர் 15 .......... 178
தேசியப் பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15 .......... 178
சர்வதேச மக்களாட்சி தினம் – செப்டம்பர் 15 .......... 179
உலக ஓசோன் தினம் – செப்டம்பர் 16 .......... 180
உலக நோயாளி பாதுகாப்பு நாள் – செப்டம்பர் 17 .......... 180
ரயில்வே பாதுகாப்புப் படை நிறுவன தினம் – செப்டம்பர் 20 .......... 181
சர்வதேச சிவப்புப் பாண்டா தினம் – செப்டம்பர் 21 .......... 181
சுழிய உமிழ்வு தினம் - செப்டம்பர் 21 .......... 182
உலக அல்சைமர் நாள் – செப்டம்பர் 21 .......... 183
சர்வதேச அமைதி தினம் – செப்டம்பர் 21 .......... 183
உலக ரோஜா தினம் – செப்டம்பர் 22 .......... 184
சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23 .......... 185
உலக மருந்தாளுனர் தினம் 2019 - செப்டம்பர் 25 .......... 185
அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26 .......... 186
உலகக் கடல்சார் தினம் - செப்டம்பர் 26 .......... 186
உலகக் கருத்தடை தினம் - செப்டம்பர் 26 .......... 187
உலக சுற்றுச்சூழல் ஆரோக்கிய தினம் - செப்டம்பர் 26 .......... 188
உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27 .......... 188
உலக வெறிநாய்க்கடி (ரேபிஸ்) தினம் - செப்டம்பர் 28 .......... 189
உலகளவில் தகவல்களை அணுகுவதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 28 .......... 189
உலக இருதய தினம் - செப்டம்பர் 29 .......... 190
உலக நதிகள் தினம் – செப்டம்பர் 22 .......... 191
உலக காது கேளாதோர் தினம் – செப்டம்பர் 29 .......... 191
சர்வதேச மொழிபெயர்ப்பியல் தினம் – செப்டம்பர் 30 .......... 192
**இதரச் செய்திகள் .......... 193**
இந்திய ரயில்வேயின் குறுகிய வரலாறு .......... 193
உலகளாவிய மகிழ்ச்சி ஆய்வு .......... 193
இந்தியாவின் அதி உயர ஆகாய சைக்கிள் பூங்கா .......... 194
ரோஹித்4ரைனோஸ் (Rohit4Rhinos) பிரச்சாரம் .......... 194
76வது வெனிஸ் சர்வதேசத் திரைப்படத் திருவிழா .......... 195
உலகின் தலைசிறந்த 10 IB பள்ளிகள் .......... 195
IIFL செல்வ ஹுருன் இந்தியா - செல்வந்தர் பட்டியல் .......... 196

# TNPSC துளிகள்

- இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒடிசாவின் கோபால்பூர் கடற்கரை ஓரத்தில் இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தின் சதுப்பு நில உயிரியல் பிராந்திய மையத்தால் இரண்டு புதிய கடற்கரை விலாங்கு மீன் இனங்கள் கண்டறியப்பட்டு அவை ஆவணப் படுத்தப் பட்டிருக்கின்றன.
  - அவையாவன: ஜிம்னோதொராக்ஸ் அந்தமான்யென்சீசிஸ் மற்றும் ஜிம்னோதொராக்ஸ் ஸ்மிதி.
- நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கைக்காக வெள்ளை மாளிகையின் தலைமைப் பத்திரிக்கைத் தொடர்பாளரான பீட்டர் பேக்கர் எழுதிய ஒரு புத்தகமான "ஒபாமா : ஒரு வரலாற்றின் அமைப்பு" என்ற புத்தகம் வெளியிடப் பட்டிருக்கின்றது. இப்புத்தகம் ஒபாமாவின் அதிபர் பதவிக் காலங்களை வரிசைப் படுத்துகின்றது.
- நடைபெற்றுக் கொண்டிருக்கும் ISSF உலகத் துப்பாக்கிச் சுடுதல் கோப்பையில் அபிஷேக் வர்மாவும் சௌரப் சௌத்ரியும் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் வென்று இருக்கின்றனர்.
- "The La Ultra - The High" என்ற மராத்தான் போட்டியின் 10வது பதிப்பு லடாக்கில் 55, 111, 222, 333, 555 கிலோ மீட்டர் பிரிவுகளில் நடத்தப்பட்டது. மிக மோசமான பருவநிலை மற்றும் அதிக உயரம் காரணமாக இது கடினமான மராத்தான்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முழுவதும் ராஷ்டிரிய போஷன் மாதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டின் கருத்துரு "நிறைவை உண்டாக்குமாறு உணவளித்தல்" என்பதாகும்.
- சீன நகரமான ஹோல்டனில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விமானப் படைகளுக்கு இடையே ஷாஹீன் VIII என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 8 வது பதிப்பு தொடங்கப்பட்டுள்ளது. ஹோல்டன் ஆனது இந்திய எல்லையான லடாக்கிற்கு அருகே உள்ளது.
- விங் கமாண்டர் ஷாலிஜா தாமி ஒரு பறக்கும் பிரிவின் விமானத் தளபதியாக ஆன இந்திய விமானப் படையின் இந்தியாவின் முதல் பெண் அதிகாரியாக உருவெடுத்து வரலாறு படைத்துள்ளார்.
  - உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத்தில் உள்ள ஹிண்டன் விமானப் படைத்தளத்தில் ஒரு சேடக் வானூர்திப் பிரிவின் விமானத் தளபதியாக அவர் பொறுப்பேற்றார்.
- மூன்று நாள் சர்வதேச சிற்றுண்டித் திருவிழாவானது ஹைதராபாத்தில் "கலாச்சார மொழி இந்திய இணைப்பு" எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- ராகவேந்திர சிங் எழுதிய "இந்தியாவின் இழந்த எல்லைப் பகுதி – பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் கதை" என்ற புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் இருந்து அகர்பத்தி மற்றும் பிற அதனை ஒத்தப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.
  - இந்தப் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள் அரசாங்கத்திடமிருந்து உரிமம் பெற வேண்டும் என்று வெளிநாட்டு வர்த்தகப் பொது இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

- 2019-21 ஆம் ஆண்டு கால கட்டத்திற்கான உலகத் தேர்தல் அமைப்புகளின் சங்கத்தின் (Association of World Election Bodies : A-WEB) தலைவராக இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் சுனில் அரோரா பொறுப்பேற்றார். ருமேனியாவிடமிருந்து A-WEB சங்கத்தின் தலைவர் பொறுப்பை இந்தியா ஏற்கின்றது. இந்தியா இரண்டு வருட காலத்திற்கு இந்தச் சங்கத்தின் தலைவராக பணியாற்ற இருக்கின்றது.
- தேசியத் தலைநகரான புது தில்லியில் உள்ள குஜராத் அரசின் இரண்டாவது மாநில பவனான 'கார்வி குஜராத்' என்ற பவனை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
    - தேசியத் தலைநகரில் உள்ள 'சுற்றுச்சூழலுக்கு உகந்த' முதலாவது மாநில பவன் இதுவே ஆகும்.
- அசாமில் உள்ள இரண்டு கோயில்களின் குளங்களில் வளர்க்கப்படும் அரிய கருப்பு மென் ஓடு கொண்ட மற்றும் இந்திய மென் ஓடு கொண்ட சுமார் 70 ஆமைக் குஞ்சுகள் அசாமின் போபிடோரா வனவிலங்கு சரணாலயத்தில் விடுவிக்கப்பட்டன.
    - இதே போன்ற நிலப்பரப்பு மற்றும் இந்திய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் கணிசமான எண்ணிக்கைக் காரணமாக போபிடோரா வனவிலங்கு சரணாலயம் பெரும்பாலும் 'சிறிய காசிரங்கா' என்று அழைக்கப்படுகின்றது.
- அசோக் லேலண்ட் நிறுவனம் தனது அனைத்து கனரக வாகனங்களிலும் பிஎஸ் - ஆறாம் உமிழ்வு விதிமுறைகளைப் பூர்த்தி செய்த முதல் இந்திய அசல் உபகரண உற்பத்தியாளராக உருவெடுத்துள்ளது.
    - இது இந்திய தானியங்கி ஆராய்ச்சிச் சங்கத்திடமிருந்து (ARAI - Automotive Research Association of India) இணக்க சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.
- ஜப்பானிய எரிசக்தி நிறுவனமான புதிய சகாப்தத்திற்கான ஜப்பானின் எரிசக்தி நிறுவனத்துடன் (JERA - Japan's Energy For a New Era) ரிலையன்ஸ் பவர் நிறுவனம் ஒரு கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் கூட்டாக 750 மெகாவாட் எரிவாயு அடிப்படையிலான ஒருங்கிணைந்த சுழற்சி மின் திட்டத்தை வங்காள தேசத்தின் மேக்னாகாட்டில் அமைக்க விருக்கின்றன.
- ரிஷப் பந்த் என்பவர் 11 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 50 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்த இந்திய விக்கெட் கீப்பராக உருவெடுத்துள்ளார். இந்தியாவிற்காக எம்.எஸ்.தோனி வைத்திருந்த முந்தைய சாதனையை (16) அவர் முறியடித்தார்.
    - அவரது 50வது விக்கெட் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிரெய்க் பிராத்வைட் ஆகும்.
- தமிழ்நாட்டில் சேலம் ரயில்வே பிரிவின் கீழ் உள்ள ஐந்து ரயில் நிலையங்களான சேலம், கரூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய ரயில் நிலையங்கள் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புகள் மற்றும் செயல்திறனுக்காக ஐஎஸ்ஓ 14001: 2015 என்ற சான்றிதழைப் பெற்றுள்ளன.
- மத்தியப் புலனாய்வு அமைப்பின் இயக்குநரான ரிஷி குமார் சுக்லா இணைய வழிக் குற்ற விசாரணை மற்றும் இணைய வழித் தடயவியல் மீதான முதலாவது தேசிய மாநாட்டைப் புது தில்லியில் உள்ள மத்தியப் புலனாய்வு அமைப்பின் தலைமையகத்தில் தொடங்கி வைத்தார்.
- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகமானது அதன் பல்வேறு துறைகளிலும் இந்திய உணவுக் கழகம் உட்பட அதன் அனைத்து பொதுத் துறைப் பிரிவுகளிலும் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 முதல் "அனைத்து வகையான ஒற்றைப் பயன்பாடு கொண்ட நெகிழிப் பொருட்களுக்குத் தடை" விதித்துள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கியானது கருத்துகளைப் பெறுவதற்காகப் "பெருநிறுவன கடன்களுக்கான இரண்டாம் நிலைச் சந்தையின் வளர்ச்சி மீதான பணிக்குழுவின் அறிக்கையை" வெளியிட்டுள்ளது. இந்தக் குழுவிற்குக் கனரா வங்கியின் தலைவர் டி.என்.மனோகரன் தலைமை தாங்கினார்.
- கலிபோர்னியாவின் தெற்கு மாவட்டத்திற்கான அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக இந்திய-அமெரிக்கரான ஷிரீன் மேத்யூஸை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பரிந்துரைத்துள்ளார்.
    - இந்தியாவைப் போலல்லாமல், அமெரிக்க அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவானது "நீதிபதிகள் தங்கள் பதவியை நன்னடத்தைக் காலம் முழுக்க வகிக்கலாம்" என்று கூறுகின்றது. அதாவது சிலபல சூழ்நிலைகளைத் தவிர, அவர்கள் பதவி வாழ்நாள் பதவிக் காலம் கொண்டது.
- சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டப் பங்களித்ததற்காக வாடிகனால் வங்க தேசத்தைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற பேராசிரியரான முஹம்மது யூனுஸுக்கு "செயின்ட் பிரான்சிஸ்சின் அமைதி விளக்கு" என்ற விருது வழங்கப்பட்டது.
    - இந்த விருதானது மக்களிடையே அமைதியையும் விவாதங்களையும் ஊக்குவித்ததற்காக ஒரு தனிநபரின் சிறப்பான பணிக்கான அங்கீகாரமாகும்.
- மாட்ரிட்டில் நடைபெற்ற உலக வில்வித்தை இளைஞர் சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்ற மூன்றாவது இந்தியர் என்ற பெருமையை ஜார்க்கண்டின் 17 வயதான கோமலிகா பாரி பெற்றார்.
    - 2009 ஆம் ஆண்டில் பட்டத்தை வென்ற தீபிகா குமாரிக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது உலக சாம்பியன் (18 வயதுக்குட்பட்டவர்) இவராவார்.
- நெய்வேலியில் உள்ள செயின்ட் ஜோசப் ஆஃப் க்ளூனி மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியின் முதுகலை விலங்கியல் ஆசிரியரான சுதா பிரசாத் என்பவர் மதிப்புமிக்க "ஃபுல்பிரைட் கற்பித்தல் சிறப்புத்துவ மற்றும் சாதனை" என்ற நிகழ்ச்சிக்காகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
    - அமெரிக்காவில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று இந்தியர்களில் இவரும் ஒருவராவார். தமிழ்நாட்டிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஆசிரியர் இவராவார்.
- மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், தில்லிப் பல்கலைக் கழகம், பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம் மற்றும் ஹைதராபாத் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு மனித வள மேம்பாட்டு அமைச்சகம் சிறப்புமிகு கல்வி நிறுவனம் என்ற அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.
- ஒடிசா மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது பேரிடர் மேலாண்மைத் துறையில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி புதுமையான கருத்தாக்கத்தை ஏற்படுத்தியதற்காக 2019 ஆம் ஆண்டின் சிறப்புமிகு தகவல் தொழில்நுட்ப விருதை வென்றுள்ளது.
    - இந்த விருதுக்கு "SATARK" (சக்திவாய்ந்த பேரிடர் அறிவை அடிப்படையாகக் கொண்ட பேரிடர் தகவல்களை மதிப்பீடு செய்தல், கண்காணித்தல் மற்றும் எச்சரிக்கை செய்வதற்கான அமைப்பு) என்ற செயலி தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி அமெரிக்காவின் நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா. காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் பேரழிவைத் தடுக்கும் உள்கட்டமைப்புக்கான சர்வதேசக் கூட்டணியை (Coalition for Disaster Resilient Infrastructure - CDRI) பிரதமர் மோடி தொடங்கவுள்ளார்.

- இதன் சர்வதேசச் செயலக அலுவலகம் புது தில்லியில் அமைக்கப்படும்.

❖ தூர கிழக்கு ரஷ்யாவின் வளர்ச்சிக்காக 1 பில்லியன் டாலர் மதிப்புள்ள 'கடன்சார்பு நிதியை' இந்தியா தர இருக்கின்றது என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

- ஒரு நாட்டின் "ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு" இந்தியா கடன்சார்பு நிதியை வழங்குவது இதுவே முதல் முறையாகும்.

❖ முதல் முறையாக, மாகாண போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னர் ஒரு இந்துப் பெண் பாகிஸ்தானின் சிந்து மாகாணக் காவல் துறையில் சேர்க்கப்பட்டுள்ளார். புஷ்பா கோலி என்ற அந்த இந்துப் பெண் உதவி துணை ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்து சமூகத்தைச் சேர்ந்த பாகிஸ்தானியரான சுமன் பவன் போதானி என்பவர் உரிமையியல் மற்றும் நீதித்துறை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ ஆசியாவின் முதலாவது ஐந்தாம் தலைமுறையிலான மாயத் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட மேம்பட்ட ஓட்டுனர் பயிற்சி உருவக மையமானது சென்னையில் உள்ள தென்னிந்திய மையத்தின் தானியங்கி கூட்டமைப்பில் (Automobile Association of Southern India Centre - AASI) தொடங்கப்பட்டது.

- முதல் 6 மாதங்களில், AASI ஆனது 200 அவசர ஊர்தி ஓட்டுநர்களுக்கு ‘பாதுகாப்பான ஓட்டுநர் பிரச்சாரத்தின்’ கீழ் இலவசமாகப் பயிற்சி அளிக்கும்.

❖ நாட்டின் முதன்மைச் செய்தி நிறுவனமான இந்தியப் பத்திரிக்கை அமைப்பின் தலைவராக பஞ்சாப் கேசரி குழுமத்தின் தலைமை ஆசிரியர் விஜய் குமார் சோப்ரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தி இந்து பத்திரிக்கையின் வெளியீட்டாளரும் அதன் முன்னாள் தலைமை ஆசிரியருமான என். ரவி என்பவர் இப்பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- டைம்ஸ் ஆப் இந்தியா என்ற பத்திரிக்கையின் வெளியீட்டாளரும் பென்னட், கோல்மன் & நிறுவன லிமிடெட் என்பதின் நிர்வாக இயக்குனருமான வினீத் ஜெயின் இதன் துணைத் தலைவராக உள்ளார்.

❖ நாடு முழுவதும் உள்ள புலனாய்வாளர்களுடன் நிகழ்நேரத்தில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ரூபாய் 99 கோடி செலவில் ஒரு மையப்படுத்தப்பட்ட மேலிருந்து கீழான தொழில்நுட்பப் பிரிவை (Centralised Technology Vertical - CTV) அமைக்க மத்தியப் புலனாய்வு அமைப்பு (Central Bureau of Investigation - CBI) திட்டமிட்டுள்ளது.

❖ கனடாவுக்கான இந்திய உயர் ஆணையரான விகாஸ் ஸ்வரூப் என்பவர் இந்தியக் கலைக் கூடத்தை 44வது டொராண்டோ சர்வதேசத் திரைப்பட விழா - 2019இல் (Toronto International Film Festival - TIFF) திறந்து வைத்தார்.

- இந்திய சினிமாவின் உலகளாவிய வளர்ச்சிக்கும் இந்தியாவின் 50வது சர்வதேச திரைப்பட விழா 2019க்கும் ஒரு சிறந்த தளத்தை TIFF வழங்குகின்றது.

❖ ஜிம்பாபேவின் நிறுவனத் தந்தையும் முன்னாள் அதிபருமான ராபர்ட் கேப்ரியல் முகாபே சமீபத்தில் காலமானார்.

❖ வழக்கமான நீர்மூழ்கிக் கப்பல்களின் கூட்டு வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டை ரஷ்யா இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

- தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைக்கான முழு அணுகலுடன் கூடிய இந்திய கடற்படைத் தேவைகளுக்கு ஏற்ப காற்று இல்லாத நிலையில் உட்செலுத்து அமைப்புடன் (Air Independent Propulsion - AIP) ஒரு வழக்கமான நீர்மூழ்கிக் கப்பலின்

கூட்டு வடிவமைப்பு மற்றும் மேம்பாடு ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும்.

- மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரஹலாத் சிங் லேஹ் நகரில் உள்ள லடாக் பிராந்தியம் முழுவதிற்கும் பயணிக்கக் கூடிய முதலாவது பயண அறிவியல் கண்காட்சிப் பேருந்துகளைக் கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
    - மேலும் இவர் இந்தியாவின் இலட்சிய மாவட்டங்களுக்காக 25 புதிய பயண அறிவியல் கண்காட்சிப் பேருந்துகளையும் தொடங்கி வைத்தார்.
- தமிழ்நாட்டின் 14வது அரசு சட்டக் கல்லூரியை தேனியில் உள்ள உப்பார்பட்டியில் தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் திறந்து வைத்தார்.
- தமிழ்நாட்டின் முதல் ஆதார் சேவா கேந்திராவானது சென்னையில் உள்ள கோயம்பேட்டில் செயல்பாட்டுக்கு வந்தது.
    - இது ஆதார் தொடர்பான சேவைகளை பொது மக்களுக்கு விரிவுபடுத்துவதற்காக இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் அமைக்கப்பட்டுள்ளது.
- பிரிவு 370 மற்றும் 35 ஏ ஆகியவை ரத்து செய்யப்பட்ட பின்னர், ஜம்மு-காஷ்மீர் முதலீட்டாளர் உச்சி மாநாடு- 2019இன் முதல் சிறிய அளவிலான சந்திப்பு லேவில் நடத்தப் பட்டது.
- இந்திய ரயில்வேயில் இது போன்ற வகையில் முதன்முறையாக, ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் ரயில் நிலையத்தில் கட்டணம் செலுத்தி விளையாடும் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.
- ஹர்பஜன் சிங் மற்றும் இர்பான் பதானுக்குப் அடுத்ததாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்த மூன்றாவது இந்திய வீரராக ஜஸ்பிரீத் பும்ரா ஆகியுள்ளார்.
- புதுடில்லியில் நடைபெற்ற தேசிய இளைஞர் உச்சி மாநாட்டை இந்திய குடியரசுத் தலைவர் துவங்கி வைத்தார். இது இளைஞர் விழிப்புணர்வு இயக்கம் எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- ஒடிசாவில் மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட மால்கான்கிரி மாவட்டத்தைச் சேர்ந்த 27 வயது நிரம்பிய பழங்குடிப் பெண்ணான அனுப்பிரியா லக்ரா என்பவர் வணிக விமானத்தை ஓட்டிய இப்பகுதியைச் சேர்ந்த முதலாவது பெண் விமானியாக உருவெடுத்துள்ளார்.
    - அவர் சந்தால் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- உச்ச நீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரைகளின் படி, குஜராத் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நீதிபதி விக்ரம்நாத் நியமிக்கப் பட்டுள்ளார். தற்போது அவர் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றி வருகின்றார்.
- பிரபல ஒடியா மொழி எழுத்தாளரான பிரதீப் தாஷ் தனது கவிதைப் படைப்பான “சாரு சிபார் ஓ சார்ஜியாவுக்காக” மதிப்பு மிக்க சரலா புரஸ்கரின் 40வது பதிப்பு விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
    - 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சரலா புரஸ்கர் விருதானது ஒடிசாவின் முன்னணி இலக்கிய விருதுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- ஸ்ரீவில்லிபுத்தூர் ‘பால்கோவாவிற்கு’ புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடிக்கான முதன்மைச் செயலாளரான நிருபேந்திர மிஸ்ரா தனது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். முன்னாள் அமைச்சரவைச் செயலாளரான

பிரதீப் குமார் சின்ஹா பிரதமர் அலுவலகத்தில் சிறப்புப் பணி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- மேகாலயா முதல்வர் கான்ராட் கே சங்மா அம்மாநிலத்தில் "புதன்கிழமைகளில் வேலைக்கு நடந்து செல்லுதல் (WWW - Walk to Work on Wednesdays)" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கினார்.
    - இந்தப் பிரச்சாரமானது இந்தியாவில் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட நாடு தழுவிய "ஆரோக்கியமான இந்தியா" என்ற இயக்கத்தின் ஒரு பகுதியாகும்.
- தில்லியைச் சேர்ந்த யஷஸ்வினி சிங் தேஸ்வால் சமீபத்தில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற ISSF உலகக் கோப்பையில் பெண்களுக்கான 10 மீ ஏர் பிஸ்டல் (துப்பாக்கி சுடுதல்) போட்டியில் தங்கம் வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம், 2020 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பாக கலந்து கொள்வதற்கான தகுதியை அவர் பெற்றுள்ளார்.
    - தற்பொழுது வரை, 2020 டோக்கியோ விளையாட்டுப் போட்டிக்காக துப்பாக்கி சுடுதலில் தேர்வான 9வது வீரர் இவராவார்.
- 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவரும் அர்ஜுனா விருது பெற்றவருமான குண்டெறிதல் வீரர் தேஜீந்தர்பால் சிங் தூர் என்பவர் செக் குடியரசின் டெசினில் நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் 20.09 மீ தூரம் குண்டெறிந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- பிரதமரின் "முதன்மைச் செயலாளராக" P.K. மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மை ஆலோசகராக பி கே சின்ஹாவை நியமனம் செய்ய நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நியமனம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் கிராமப் புறங்களுக்குச் சிறந்த சாலை இணைப்பை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் மகாராஷ்டிராவின் 34 மாவட்டங்களில் கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (Asian Development Bank - ADB) ஆகியவை 200 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (Defence Research and Development Organisation - DRDO) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட குறைந்த எடை கொண்ட, ஏவிய பின் வழிகாட்ட முடியாத, மனிதனால் எடுத்துச் செல்லப்படக் கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணையை (Man Portable Antitank Guided Missile - MPATGM) ஆந்திராவில் உள்ள கர்னூல் பகுதியில் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
    - இந்த ஏவுகணையானது மனிதனால் எடுத்துச் செல்லப்படக் கூடிய ஒரு முக்காலிச் சட்டகத்திலிருந்து ஏவப்பட்டது.
- ஐக்கிய அரபு அமீரகத்திற்கான இந்தியாவின் தூதர் பதவியிலிருந்து வெளியேறவிருக்கும் நவ்தீப் சிங் சூரி என்பவருக்கு இரண்டாம் சயீத்தின் முதல் வகுப்பு ஆணை என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
    - இந்த விருதானது ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவரான ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யானால் வழங்கப்பட்டது. தனது பதவிக் காலத்தில் இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான நட்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தியதற்கும் வலுப்படுத்தியதற்கும் தனது பங்களிப்புகளை அளித்ததற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

- நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக “ஜல் ஜீவன் திட்டத்தின்” கீழ் மத்திய அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளில் 3.5 லட்சம் கோடி ரூபாயைச் செலவிடும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.
    - ஜல் ஜீவன் திட்டமானது தண்ணீரைச் சேமிப்பது மற்றும் ஒருவரின் வீட்டிலேயே தண்ணீரை வழங்குவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- அமேசான் மழைக்காடுகளில் “எலக்ட்ரோஃபோரஸ் வோல்டாய்” என்ற ஒரு புதிய மின்சார ஈல் (விலாங்கு மீன்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த உயிரினம் 860 வோல்ட் மின்சாரம் வரை வெளியேற்றும் திறன் கொண்டது.
    - இது இதுவரை அறியப்படாத ஒரு வலிமையான உயிரி மின்சாரமாகும். முதலாவது மின்சார பேட்டரியின் வடிவமைப்பிற்கு மின்சார ஈல்கள் உத்வேகம் அளித்தன.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் பல்கலைக்கழக மானியக் குழுவால் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கைத் திறன்களுக்கான பாடத் திட்டத்தை (ஜீவன் கௌசல்) அறிமுகப் படுத்தியுள்ளார்.
    - இந்த இளநிலைப் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக தகவல் தொடர்புத் திறன், தனிநபர் சார்ந்த திறன், நேர மேலாண்மை, பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், முடிவெடுக்கும் திறன், தலைமைத்துவத் திறன் மற்றும் ஒருமைப்பாடு போன்ற வாழ்க்கைத் திறன்கள் இருக்கின்றன.
- ஒரு பசுவைத் தத்தெடுக்க விரும்புவோருக்காக நிகழ்நேர (ஆன்லைன்) சேவையைத் தொடங்க மத்தியப் பிரதேச மாநில அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள கௌசாலாக்களில் (பசு முகாம்களில்) அந்தப் பசுக்களுக்கு இருப்பிடங்களை அளிக்கவும் அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.
    - நன்கொடையாளர்கள், மாநிலத்தில் ஒரு கௌசாலாவைத் தேர்ந்தெடுத்து பசுக்களின் உணவிற்கானத் தொகையைச் செலுத்தலாம்.
- இந்தியக் கான்கிரீட் நிறுவனமானது தெலுங்கானாவின் காலேஸ்வரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த கான்கிரீட் கட்டமைப்புச் சான்றிதழை வழங்கியதால் அது புதிய தனித்துவத்தைப் பெற்றுள்ளது.
    - இந்த விருதானது மேகா இன்ஜினியரிங் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தால் பெறப்பட்டது.
- பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட ஒரு குழுவானது பத்திரிகைத் தணிக்கையில் மோசமாக செயல்படும் 10 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் எரித்திரியா, வட கொரியா மற்றும் துருக்மெனிஸ்தான் ஆகியவை முதல் மூன்று இடங்களில் உள்ளன.
    - சவுதி அரேபியா, ஈரான், வியட்நாம் மற்றும் சீனா ஆகியவை இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இதர ஆசிய நாடுகளாகும்.
- தேஜாஸ் (கடற்படை விமானம்) என்ற இலகு ரகப் போர் விமானத்தின் முதலாவது “கட்டாயத் தரையிறக்கமானது" கோவாவில் உள்ள ஐ.என்.எஸ் ஹன்சா என்ற கடற்படைத் தளத்தில் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.
    - இந்தச் சோதனையானது இந்த விமானத்தை இந்திய கடற்படை விமானம் தாங்கிக் கப்பலான விக்ரமாதித்யாவில் தரையிறக்கம் செய்ய வழி வகுக்கும்.
- புகழ்பெற்ற இந்தி மொழியை இந்தியாவின் அலுவல் மொழியாகக் கொண்டாடும் விதமாக 1953 ஆம் ஆண்டு முதல் இந்தியா முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14 ஆம் தேதியன்று இந்தி திவாஸ் (அல்லது இந்தி நாள்) அனுசரிக்கப்படுகின்றது.

- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி அன்று இந்திய அரசியலமைப்புச் சபையானது தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப்பட்ட இந்தி மொழியை இந்தியக் குடியரசின் அலுவல்பூர்வ மொழியாக ஏற்றுக்கொண்டது.

❖ பெப்சிகோ இந்தியா நிறுவனம் தனது விளையாட்டின் போது அருந்தப்படும் குளிர்பானத்தின் பிரிவான கேடோரேட்டின் விளம்பரத் தூதராக இந்தியாவின் நட்சத்திர தடகள வீரரான ஹிமா தாஸை இணைத்துள்ளது.

- இதன் மூலம் நாட்டின் விளம்பரத் தூதர்களாக இருக்கும் இறகுப் பந்தாட்ட வீரரான பி.வி.சிந்து மற்றும் ஈட்டி எறியும் வீரரான நீரஜ் சோப்ரா ஆகியோருடன் 19 வயதான ஹிமா தாசும் இணைந்துள்ளார்.

❖ நடப்புக் கல்வியாண்டில் இருந்து 5 மற்றும் 8 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு பொதுத் தேர்வைக் கட்டாயமாக்கி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

- ஆரம்பத்தில் மூன்று ஆண்டுகளில் மட்டும், தோல்வியுற்ற மாணவர்கள் "அதே வகுப்பில் தடுத்து வைக்கப்பட மாட்டார்கள்".

❖ மத்திய சுகாதார நலத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் புது தில்லியில் உலக சுகாதார அமைப்பு - தென்கிழக்கு ஆசியாவிற்கான பிராந்திய அலுவலகத்தின் (Regional Office for South-East Asia - SEARO) 72வது அமர்வைத் தொடங்கி வைத்தார். அவர் இந்த அமர்வின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- பிராந்தியக் குழுக் கூட்டத்தை இந்தியா நடத்துவது இது 2வது முறையாகும்.

❖ போலந்திலிருந்து ஒரு உயர் மட்டத் தூதுக் குழுவானது மகாராஷ்டிராவின் கோல்ஹாப்பூருக்குப் பயணம் மேற்கொண்டது. இரண்டாம் உலகப் போரின் காரணமாக 1943-1947 காலப் பகுதியில் கோல்ஹாப்பூருக்கு அருகில் உள்ள வாலிவேட் முகாமிற்கு 5,000 போலந்து அகதிகள் தஞ்சமடைந்தனர்.

- வாலிவேடில் விரைவில் ஒரு அருங்காட்சியகம் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. குஜராத்தின் ஜாம்நகர் என்ற நகரமானது 5,000 போலந்து அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது.

❖ முழுவதுமாக மூன்றாம் வகுப்பு குளிர்சாதனப் பெட்டிகளால் ஆன உயர் தரம் கொண்ட ஹம்சபர் ரயில்களில் இருந்து நெகிழ்வு கட்டணத் திட்டத்தை ரயில்வே அமைச்சகம் நீக்கியுள்ளது.

- ஹம்சபர் விரைவு ரயில்கள் முதன்முதலில் கோரக்பூர் மற்றும் ஆனந்த் விஹார் (புது தில்லி) ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையே 2016 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

❖ IBSF உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டியில் மீண்டும் வென்றதன் மூலம் பங்கஜ் அத்வானி தனது உலகப் பட்டங்களை 22 ஆக உயர்த்தினார்.

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது உள்நாட்டில் உருவாக்கப்பட்ட வான்வழி முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு (AWAC) விமானமான நேத்ரா விமானத்தை இந்திய விமானப் படைக்கு வழங்கியுள்ளது.

❖ 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 7-15 தேதிகளில் கிரேக்கத்தில் உள்ள 2019 ஆம் ஆண்டிற்கான தெசலோனிகி சர்வதேசக் கண்காட்சியின் 84வது பதிப்பில் இந்தியா பங்கேற்றது.

❖ ஜப்பானின் டோக்கியோ பிராந்தியத்தை வலிமை மிகுந்த சூறாவளியான ஃபக்சாய் சூறாவளி சமீபத்தில் தாக்கியது.

- காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரான ஃபரூக் அப்துல்லா (81 வயது) கடுமையான ஜம்மு மற்றும் காஷ்மீரின் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் (1978) கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இது எந்தவொரு நபரையும் இரண்டு ஆண்டுகள் விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்க அதிகாரிகளுக்கு உதவுகின்றது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1000 அறிஞர்களுக்கு தனது 23 இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களில் முனைவர் படிப்பை வழங்குவதற்கான ஒரு முயற்சியை இந்தியா முறையாகத் தொடங்கியுள்ளது.
  - இது வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.
- சரக்கு மற்றும் சேவை வரியில் (Goods and Services Tax - GST) உள்ள முறைகேடுகளைச் சரிபார்க்க 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் GSTயில் புதிதாக இணையும் வணிகர்களுக்கு ஆதார் உறுதிப்படுத்துதலைக் கட்டாயமாக்க GST அமைப்பு முடிவு செய்துள்ளது. ஆதார் உறுதிப்படுத்துதலானது முன்பு விருப்பமானத் தேர்வாக இருந்தது.
- முன்னாள் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியான பி.லட்சுமண ரெட்டி என்பவர் அம்மாநிலத்தின் முதலாவது லோக் ஆயுக்தா அமைப்பின் நீதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.
  - விஜயவாடாவில் நடைபெற்ற ஒரு விழாவில் ஆந்திரப் பிரதேச ஆளுநரான பிஸ்வபூசன் ஹரிசந்தன் என்பவரால் இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- ஒடிசா கடற்கரையில் இருந்து "அஸ்திரா" என்ற ஏவுகணையை இந்திய விமானப் படை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது. இந்த ஏவுகணையானது சுகோய் சு - 30 எம்.கே.ஐ என்ற போர் விமானத்திலிருந்து ஏவப்பட்டது.
- மார்பகப் புற்று நோயிலிருந்து மீண்டு வந்தவரான அமெரிக்காவைச் சேர்ந்த சாரா தாமஸ் என்பவர் ஆங்கிலக் கால்வாயை நான்கு முறை 54 மணிநேரங்கள் இடைவிடாமல் நீந்திய முதலாவது நபராக உருவெடுத்துள்ளார்.
- உத்தரகாண்ட் மாநில அரசு 3 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் சமஸ்கிருத மொழியைக் கட்டாயமாக்க முடிவு செய்துள்ளது.
  - உத்தரகாண்ட் மாநிலத்தின் முக்கிய பிராந்திய மொழிகளான குமாவோனி மற்றும் கர்வாலி ஆகிய மொழிகளுக்கு யுனெஸ்கோவால் "அழிந்து வரும் நிலையில் உள்ள மொழிகள் " என்ற அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளது.
- ஹரியானா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி கிருஷ்ணா முராரி, இமாச்சலப் பிரதேச உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வி.ராமசுப்பிரமணியன், ராஜஸ்தான் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ரவீந்திர பட், கேரள உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஹிருஷிகேஷ் ராய் ஆகியோர் இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
  - உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 34 ஆகிறது. இது இன்று வரை அதிகபட்ச நியமனமாகும்.
- 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூமிஸ்பர்ஷா முத்ராவில் அமர்ந்த நிலையில் இருக்கும் புத்தரின் வெண்கல சிலை 1961 ஆகஸ்ட் 22 அன்று நாலந்தா அருங்காட்சியகத்தின் இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தில் இருந்து திருடப்பட்டது. அது தற்போது ஐக்கியப் பேரரசால் இந்தியாவிற்குத் திருப்பி அளிக்கப் பட்டது.

- அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக ராபர்ட் ஓ'பிரையன் நியமிக்கப்பட்டுள்ளார். ராபர்ட் ஓ'பிரையன் ஜான் போல்டனை அடுத்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்படுவார்.
- பெங்களூருவில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா ரெட் அணியானது இந்தியா கிரீன் அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 38 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து துலீப் டிராபி போட்டியின் 58வது சீசனை வென்றது.
  - இந்தியா ரெட் அணிக்காக 153 ரன்கள் எடுத்த அபிமன்யு ஈஸ்வரன் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.
- பெங்களூரில் உள்ள HAL விமான நிலையத்தில் இருந்து, உள்நாட்டில் கட்டப்பட்ட இலகுவான போர் விமானமான தேஜாஸில் பயணம் செய்த முதல் பாதுகாப்பு அமைச்சராக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆனார்.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் வார்தாவில் 'தூய்மை பாரத உலகப் பல்கலைக் கழகத்தை' அமைக்க மகாராஷ்டிரா அரசு முடிவு செய்துள்ளது.
  - சுகாதாரம், தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஆராய்ச்சி ஆய்வுகள் குறித்து இந்தப் பல்கலைக் கழகம் கவனம் செலுத்தும்.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு சாகித்ய அகாடமியின் பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற எழுத்தாளர் பரோ ஆனந்த் "காந்தியாக இருப்பது" என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.
- லண்டன் மிருகக்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ள தென் சீனாவின் மாபெரும் சாலமண்டர் (ஆண்ட்ரியாஸ் ஸ்லிகோய்) உலகின் மிகப்பெரிய இருவாழ்வி என்று நம்பப் படுகின்றது.
  - அவை ஐந்து அடிக்கு மேல் நீளமும் 100 பவுண்டுகளுக்கு மேல் எடையும் கொண்டவையாகும்.
- மாணவர்களிடையேப் பணத்தை சேமிக்கும் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக செப்டம்பர் 15 ஆம் தேதி இந்தியா முழுவதும் சஞ்சாயிகா (பள்ளி வங்கி) தினம் கொண்டாடப்படுகின்றது.
- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 18 அன்று உலக நீர்க் கண்காணிப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - உள்ளூர் நீர்நிலைகளின் அடிப்படைக் கண்காணிப்பை மேற்கொள்ள குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் உலகெங்கிலும் உள்ள நீர் வளங்களைப் பாதுகாப்பதில் பொது விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் உருவாக்குவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட, வருடாந்திர சர்வதேசப் பல்கலைக்கழக விளையாட்டு தினமானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
  - 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வருடாந்திர சர்வதேசப் பல்கலைக்கழக விளையாட்டு தினமானது விளையாட்டு, உடல் செயல்பாடு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை மூலம் பல்கலைக் கழகங்களுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் இடையே ஒரு இணைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேசத் தூய்மைப்படுத்தும் தினம் என்பது உலகளாவியத் திடக் கழிவுப் பிரச்சினையை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவிய சமூக

நடவடிக்கைத் திட்டமாகும். இந்தத் தினமானது 2019 ஆம் ஆண்டில் அமைதி நாள் மற்றும் உலகளாவிய காலநிலை எதிர்ப்பு நாள் (செப்டம்பர் 20 - 27) ஆகியவற்றுடன் ஒத்துப் போகின்றது.

- சர்வதேசத் தூய்மைப்படுத்தும் தினமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று முதன்முறையாகத் தொடங்கப்பட்டது.

❖ உலக மகிழுந்துகளற்ற தினமானது செப்டம்பர் 22 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இது வாகன ஓட்டிகள் தங்கள் மகிழுந்துகளை ஒரு நாளைக்குப் பயன்படுத்தாமல் இருப்பதை ஊக்குவிக்கின்றது.

❖ மாநிலங்களவை உறுப்பினரும் மாத்ருபூமி வெளியீட்டுக் குழுமத்தின் தலைவரும் மற்றும் அதன் மேலாண் இயக்குநருமான எம்.பி வீரேந்திர குமார் எழுதிய "இமயமலையின் நீண்ட நெடிய பயணம்" என்ற ஒரு புத்தகத்தை இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடு வெளியிட்டார்.

- "இமயமலையின் நீண்ட நெடிய பயணம்" என்ற புத்தகமானது குமாரின் மலையாளப் புத்தகமான ஹைமாவதாப் - ஹுவிலியின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும். இது கேந்திர சாகித்ய அகாடமி மற்றும் கேரள சாகித்ய அகாடமி ஆகிய விருதுகளை வென்றுள்ளது.

❖ குஜராத்தில் வத்நகரில் சிறுவனாக இருந்து புது தில்லியின் 7, லோக் கல்யாண் மார்க்கில் இந்தியாவின் 14வது பிரதமராக இருக்கும் நரேந்திர மோடியின் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தைக் குறிப்பிடும் ஒரு சித்திரம் சார்ந்த புத்தகமான 'கொந்தளிப்பு & வெற்றி: மோடியின் ஆண்டுகள்' என்ற ஒரு புத்தகம் வெளியிடப் பட்டுள்ளது.

- இந்தப் புத்தகம் ராகுல் அகர்வால் மற்றும் பாரதி எஸ் பிரதான் ஆகியோரால் எழுதப்பட்டது.

❖ ரூ 1.8 லட்சம் வரை வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு மருத்துவ காப்பீடு வழங்கக் கூடிய ஆயுஷ்மான் பாரத் அட்டையை வழங்க ஹரியானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கியா என்ற திட்டத்தின் கீழ், தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் ரூ 5 லட்சம் வரை இலவசமாக மருத்துவ சிகிச்சையைப் பெறலாம்.

❖ ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக்கில் நடத்தப்பட்ட 10வது ஆசிய-பசிபிக் இளைஞர் விளையாட்டு இறகுப் பந்து போட்டியில் இந்திய அணி தனது ஆதிக்கத்தைச் செலுத்தி, சாம்பியன்ஷிப் போட்டியின் தங்கப் பதக்கத்தை வென்றது.

- இறகுப் பந்து வீரர்களான பிரணவ் மற்றும் மேக்னா ஆகியோர் முறையே சிறுவர் மற்றும் சிறுமியருக்கான ஒற்றையர் பட்டங்களை வென்றெடுக்க ஒரு அற்புதமான விளையாட்டை வெளிப்படுத்தினர்.

❖ பெய்ஜிங்கில் 2022 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான ஒலிம்பிக் சின்னமாக பிங் டுவென் டுவென் என்று அழைக்கப் படும் ஒரு மகிழ்ச்சிகர பாண்டா தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஒலிம்பிக் சின்னமானது குளிர்கால விளையாட்டுகளுக்கான தூதராகப் பணியாற்ற இருக்கின்றது.

❖ 2015 ஆம் ஆண்டின் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தை ரஷ்யா முறையாக ஏற்றுக்கொண்டது. இந்த நாடு இப்போது காலநிலை மாற்றத்தை தடுத்தல் மற்றும் அவற்றை ஏற்றுக் கொள்வதற்காக வளரும் நாடுகளுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்க இருக்கின்றது.

- உலகின் முக்கியமான எரிசக்தி உற்பத்தியாளர் நாடுகளில் ஒன்றான ரஷ்யாவானது, பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஆனால் இதுவரை அதை அங்கீகரிக்கத் தவறிய, மிகப்பெரிய பொருளாதாரங்கள் மற்றும் மாசுபாடுகளை ஏற்படுத்தும் நாடுகளில் ஒன்றாக விளங்குகின்றது.

❖ தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறையானது மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் மற்றும் ஹார்வர்டு மருத்துவப் பள்ளி ஆகியவற்றுடன் முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட இருக்கின்றது.

- தமிழ்நாட்டில் தோண்டி எடுக்கப்பட்ட மற்றும் கீழடி, கோந்தகை மற்றும் ஆதிச்சநல்லூர் ஆகிய தளங்களில் இருந்து தோண்டி எடுக்கப்படும் மனித எலும்புகளில் டிஎன்ஏ ஆய்வை மேற்கொள்வதற்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் படுகின்றது.

❖ பல்கேரியப் பொருளாதார நிபுணர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- ஒரு வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரத்திலிருந்து 1 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள சொத்தைக் கொண்டுள்ள உலகளாவிய கடன் வழங்கும் அமைப்பின் முதலாவது தலைவராக இவர் உருவெடுத்திருக்கின்றார்.

❖ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை இந்திய சர்வதேச அறிவியல் திருவிழாவின் 65வது பதிப்பானது கொல்கத்தாவில் நடத்தப்பட இருக்கின்றது.

- இத்திருவிழாவின்போது பிஸ்லா பங்களா மாநாட்டு மையம் மற்றும் அறிவியல் நகரம் ஆகியவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட இருக்கின்றன.

❖ பஞ்சாப் தேசிய வங்கியானது (Punjab National Bank - PNB) சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காகவும் நடைமுறைச் சிக்கல்களைக் கண்காணிப்பதற்காகவும் தங்களின் பணியாளர்களுக்காக ஒரு தடுப்புக் கண்காணிப்புத் தளத்தைத் தொடங்கியுள்ளது.

- இதே வகையைச் சேர்ந்த ஒரு முதலாவது முன்னெடுப்பு இதுவாகும். இது “நேர்மை – வாழ்வின் ஒரு வழி” என்ற PNBயின் மையக் கருத்துருவை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ புனேவில் உள்ள இந்திய தேசிய திரைப்படக் காப்பகமானது மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் அவரது மரணத்திலிருந்து பல முக்கியமான நிகழ்வுகளை விவரிக்கும் பல மணி நேரம் ஓடக்கூடிய திருத்தப்படாத காட்சிகளின் 30 சுருள்களைப் பெற்றுள்ளது.

- பாராமவுண்ட், பாத்தே, வார்னர், யுனிவர்சல் மற்றும் பிரிட்டிஷ் மூவிடோன் மற்றும் இந்தியாவின் சொந்த இந்திய மூவிடோன் படப்பிடிப்புக் கூடம் போன்ற உலகின் புகழ்பெற்ற படப்பிடிப்புக் கூடங்களில் அவை படமாக்கப்பட்டன.

❖ தில்லி உயர் நீதிமன்றமானது தனது சேவைகளை டிஜிட்டல் முறையில் அனைவருக்கும் வழங்குவதற்காக ஒரு அதிகாரப்பூர்வ கைபேசி செயலியைத் தொடங்கியுள்ளது.

- இந்தச் செயலியானது வழக்குகளின் நிலை, உயர் நீதிமன்றத்தின் காட்சிப் பலகை மற்றும் உயர் நீதிமன்ற வலைதளத்தின் பிற முக்கிய இணைப்புகளுக்கான அணுகல் ஆகிய விவரங்களைக் கொண்டிருக்கும்.

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (Defence Research & Development Organisation - DRDO), பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஜம்மு மத்தியப் பல்கலைக் கழகம் ஆகியவை ஜம்மு பல்கலைக் கழகத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான

கலாம் மையத்தை நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- விமானப் படையின் உயர் பதவிகளின் மறுசீரமைப்பில், விமானப் படைத் தளபதி எச்.எஸ்.அரோரா இந்திய விமானப் படையின் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - செப்டம்பர் 30 ஆம் தேதியன்று விமானப் படைப் பணியாளர்களின் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் விமானப் படைத் தளபதி ஆர்.கே.எஸ்.படுரியாவுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- குஜராத்தின் வதோதராவைச் சேர்ந்த இல்லத்தரசியான திருமதி பூஜா தேசாய் என்பவர் "திருமதி இந்தியா (Mrs India) - தேசத்தின் பெருமை" என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்.
- இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியான பிபின் ராவத் தலைமைப் பாதுகாப்புப் படைப் பணியாளரின் தலைவராகப் (Chairman of Chiefs of Staff Committee - COSC) பொறுப்பேற்றுள்ளார்.
    - 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று ஓய்வு பெற இருக்கும் இந்திய விமானப் படையின் தலைமைத் தளபதியான பி.எஸ்.தனோவாவிடமிருந்து அவர் COSCயின் வாளைப் பெற்றார்.
- கனடாவில் நடைபெற்று வரும் 2019 ஆம் ஆண்டின் காமன்வெல்த் பளு தூக்குதல் (Powerlifting and Bench Press) சாம்பியன்ஷிப் போட்டிகளில் தற்போதைய ஆசிய பளு தூக்குதலில் தங்கப் பதக்கம் வென்ற மற்றும் தேசிய சாம்பியனான சென்னையைச் சேர்ந்த ஆர்த்தி அருண் என்பவர் ஐந்து தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
    - காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பிற்காக இந்திய அணியின் சார்பாக தமிழ்நாட்டிலிருந்து பங்கு பெற்ற ஒரே வீரர் இவராவார்.
- காஷ்மீர் குங்குமப்பூவானது புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் முதலாவது பெண் தலைவராக ரூபா குருநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்த நியமனத்தின் மூலம், நாட்டில் மாநில அளவிலான கிரிக்கெட் அமைப்புக்குத் தலைவரான முதலாவது பெண்மணி என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டு விழாக் கூட்டத்தின் 50வது பதிப்பு சுவிட்சர்லாந்தின் டேவோஸ்-குளோஸ்டர்ஸ் நகரில் 2020ம் ஆண்டு ஜனவரி 21-24 ஆகிய தேதிகளில் நடைபெறும்.
- ஒடிசாவின் பெண்கள் & குழந்தைகள் வளர்ச்சி மற்றும் மிஷன் சக்தி துறையானது ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்துடன் இணைந்து ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு நோக்கதிற்காக டிக்கி மவுசி என்ற சின்னத்தை வெளியிட்டிருக்கின்றது.
    - இந்த சின்னத்தின் பெயரான டிக்கி மவுசி ஒரு குழந்தையின் இரண்டாவது அன்னையாகக் குறிப்பிடப் படுகின்றது.
- சர்வதேச முட்டை ஆணையத்தின் புதிய தலைவராக இரண்டு ஆண்டு கொண்ட ஒரு பதவி காலத்திற்கு இந்திய முட்டை நிறுவனமான சீனிவாசா பண்ணைகள் என்ற நிறுவனத்தின் துணைத் தலைவரான சுரேஷ் சித்தூரி நியமிக்கப்பட்டிருக்கின்றார்.
    - இந்த நிறுவனத்திற்கு ஆசியப் பிராந்தியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தலைவர் இவர் ஆவார்.

# தமிழ்நாடு செய்திகள்

## விதை பதிக்கப்பட்ட விநாயகர் சிலைகள்

- தமிழ்நாடு தோட்டக் கலைத் துறை இந்த வருடம் விதை பதிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை அறிமுகம் செய்து இருக்கின்றது.



- இந்த விநாயகர் சிலைகள் கத்தரி, தக்காளி, மிளகாய் மற்றும் பச்சைக் காய்கறிகளின் விதைகளைக் கொண்டிருக்கின்றது.
- பூஜை முடிந்தவுடன் இச்சிலைகளைத் தாவரச் செடிகளாக மாற்ற முடியும்.
- இம்முயற்சி கடலிலும் நீர்நிலைகளிலும் சிலைகளை கரைக்கும் ஆபத்தைக் குறைக்க முயல்கின்றது.

## நீருக்கடியிலான தொல்பொருள் அகழாய்வுகள் - தமிழ்நாடு

- பண்டையத் தமிழர்களின் கடந்த கால வாணிபத் தொடர்பு முறையை வெளிக் கொண்டு வரும் முயற்சியில், மாநில தொல்பொருள் துறையானது நீருக்கடியிலான அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ளத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.
- இது சங்க காலம் மற்றும் இடைக் காலங்களில் பரவியிருந்த துறைமுக நகரங்கள் மற்றும் அவை சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும்.
- இதன் நோக்கம் - கிரேக்கம், ரோமானியர் மற்றும் அராபிய வியாபாரிகளுடன் மேற்கொண்டிருந்த வர்த்தக உறவுகளை ஆய்வு செய்வதாகும்.
- மாமல்லபுரம், பூம்புகார், கொற்கை மற்றும் அரிக்கமேடு ஆகிய நகரங்களின் அருகேயுள்ள கடற்கரைப் பகுதிகளில் பொதுவாக கவனம் செலுத்தப்படும்.
- கடைசியாக 1990களில் மாநில தொல்லியல் துறை மேற்கொண்ட நீருக்கடியிலான அகழாய்வுகள் பூம்புகாருக்கு அருகே மேற்கொள்ளப்பட்டதாகும்.

## கீழடியில் பழங்கால செங்கல் தொட்டி

- சிவகங்கை மாவட்டத்தின் கீழடியில் நடந்த ஐந்தாவது கட்ட அகழ்வாராய்ச்சியின் போது தொல்பொருள் ஆய்வாளர்களால் செங்கல் தொட்டி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த அகழ்வாராய்ச்சியானது மாநில தொல்பொருள் துறையால் நடத்தப்படுகிறது.
- 3 முதல் 4 அடி நீளமும் சுமார் 2.5 அடி அகலமும் இரண்டு மீட்டர் ஆழமும் கொண்ட இந்தத் தொட்டியானது செங்கல்லினால் ஆன தரையையும் கொண்டது.



- 2015 ஆம் ஆண்டில் இந்த இடத்தில் நடைபெற்ற இந்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொட்டியின் கட்டமைப்புகளையே இதுவும் கொண்டுள்ளது.
- இவற்றில் பல தொட்டிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு - அமெரிக்க முதலீடு: யாதும் ஊரே:

- அமெரிக்காவைச் சேர்ந்த 16 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 2,780 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்யவும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் உறுதியளித்துள்ளன.
- நியூயார்க்கில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோருடனான ஒரு உரையாடலில், தமிழ்நாடு முதலமைச்சர் "யாதும் ஊரே" என்ற திட்டத்தைப் பற்றித் தெரிவித்து, அதனைத் தொடங்கி வைத்தார்.
- இது தமிழ்நாட்டைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோரின் முதலீடுகளை ஈர்க்கும் ஒரு திட்டமாகும்.


## போக்சோ விரைவு நீதிமன்றங்கள்

- தமிழ்நாடு சமூக நலத் துறையானது மூன்று சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைப்பதற்கான யோசனையை எழுப்பி இருக்கின்றது.
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO - Protection of Children from Sexual Offences) சட்டம், 2012 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை இந்த நீதிமன்றங்கள் பிரத்தியேகமாகக் கையாளும்.

- முன்மொழியப்பட்ட நீதிமன்றங்கள் சென்னை, தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களுக்குரியவை ஆகும்.
- இதுபோன்ற 100க்கும் மேற்பட்ட போக்சோ வழக்குகள் நிலுவையில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் விரைந்து விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்காக சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் இதற்கு முன்பு பரிந்துரைத்திருந்தார்.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னையில் மட்டும் 300க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஒட்டுமொத்தமாக 2,000 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு: உயிரி மருத்துவக் கழிவுகளுக்கான விதிகள், 2016

- உயிரி மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது பல்வேறு அரசுத் துறைகளின் பிரதிநிதிகளுடன் சென்னை ஆட்சியர் தலைமையிலான 16 நபர்களைக் கொண்ட குழு ஆகும்.
- மாவட்ட சுற்றுச்சூழல் திட்டத்தை வரைவு செய்தல் மற்றும் தலைமைச் செயலாளருக்கு மாதாந்திரச் செயல்பாடுகளை அளித்தல் ஆகிய பணிகளை இக்குழு மேற்கொள்கின்றது.



## பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ: நாமக்கல், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள்

- 2014-15 ஆம் ஆண்டில் 918 புள்ளிகளாக இருந்த பாலின விகிதம் 2018-19 ஆம் ஆண்டில் 13 புள்ளிகள் அதிகரித்து 931 புள்ளிகளாக உள்ளது என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணி தெரிவித்துள்ளார்.
- பிறப்பின் போது பாலின விகிதத்தை மேம்படுத்தியதற்காக பத்து மாவட்டங்கள் கௌரவிக்கப்பட்டன.
    - இந்தப் பிரிவில் சிறப்பாகச் செயல்படும் மாவட்டங்களில் ஒன்றாக தமிழ்நாட்டைச் சேர்ந்த நாமக்கல் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ (Beti Bachao Beti Padhao - BBBP) திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை உருவாக்குவதில் சிறப்பாக செயல்பட்டதற்காகப் பத்து மாவட்டங்கள் கௌரவிக்கப்பட்டன.
    - இந்தப் பிரிவில் சிறப்பாகச் செயல்படும் மாவட்டங்களில் ஒன்றாக திருவள்ளூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## டிஜிட்டல் ஊக்கமளிப்புத் திட்டம்

- அமெரிக்காவிடமிருந்து பெறப்பட்ட வாக்குறுதி முதலீடுகள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு "டிஜிட்டல் ஊக்கமளிப்பு" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பும் அனைவருக்கும் நிதியுதவி அளிப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது அமெரிக்கத் தமிழ் தொழில்முனைவோர் கூட்டமைப்பின் உதவியுடன் செயல்படுத்தப்பட விருக்கின்றது.
- புதிய தொழிலைத் தொடங்குவதற்காக அமெரிக்காவில் இருக்கும் தமிழ் முதலீட்டாளர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி நிதியுதவியைப் பெற முடியும்.

## நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை உயர்வு

- மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பிராந்திய விலங்கான நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையில் கணிசமான உயர்வு பதிவாகியுள்ளது.
- முக்கூர்த்தி தேசியப் பூங்காவில் 2018இல் 568 ஆக இருந்த வரையாடுகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு 612 ஆக உயர்ந்துள்ளது.
- நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.

*முக்கூர்த்தி பூங்கா பற்றி*

- மேற்குத் தொடர்ச்சி மலையின் நீலகிரி பீடபூமியில் அமைந்துள்ள முக்கூர்த்தி தேசியப் பூங்காவானது 78.46 சதுர கிமீ (30.3 சதுர மைல்) பரப்பளவு கொண்ட ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாகும்.
- இந்த பூங்கா அதன் முக்கிய இனமான நீலகிரி வரையாட்டைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப் பட்டது.
- மேலும் இது வங்கப் புலி மற்றும் ஆசிய யானை போன்ற அருகி வரும் உயிரினங்களுக்கும் உறைவிடமாக உள்ளது.



## புதிய கடலோர காவல்படை ரோந்து கப்பல்

- இந்திய கடலோரக் காவல் படையின் கரையோர ரோந்து கப்பலான யார்ட் - 45005 ஆனது வடக்கு சென்னையில் உள்ள எண்ணூரில் தொடங்கப்பட்டது.
- தற்போது தொடங்கப்பட்ட ரோந்து கப்பலானது மொத்தமாக உள்ள ஏழு கப்பல்களின் வரிசையில் ஐந்தாவது ஆகும்.
- இந்தக் கப்பல்கள் இந்திய கடலோரக் காவல் படைக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு தனியார் கப்பல் கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன.



## இரண்டாவது "சிறந்த தூய்மையான இடம்" – மதுரை மீனாட்சி அம்மன்

- மதுரையில் உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் இந்தியாவின் இரண்டாவது "சிறந்த தூய்மையான இடமாக" (சுத்தமான இடம்) தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- மதுரை மாநகராட்சி ஆணையரான எஸ்.விசாகன் சமீபத்தில் புது டில்லியில் மத்திய ஜல் சக்தி அமைச்சரான கஜேந்திர சிங் செகாவத்திடமிருந்து இதற்கான விருதைப் பெற்றார்.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட "சிறந்த தூய்மையான இடங்கள்" என்ற முன்முயற்சியின் ஒரு பகுதியாக மத்திய அரசால் பத்து இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## மதராஸ் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி தஹில்ரமணி

- ஆகஸ்ட் 28ம் தேதியன்று, இந்தியாவின் தலைமை நீதிபதியின் தலைமையிலான ஐந்து மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றக் கொலிஜியமானது மதராஸ் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியான வி.கே. தஹில்ரமணியை மேகாலயா உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப் பரிந்துரைத்தது.
- இவருக்குப் பதிலாக மேகாலயா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான அஜய் குமார் மிட்டல் மதராஸ் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இதனை அடுத்து நீதிபதி தஹில்ரமணி தனது ராஜினாமாவை இந்தியக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளார்.
- இவர் 2001 ஆம் ஆண்டில் பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப் பட்டார்.
- இவர் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார். இவர் 2020 ஆம் ஆண்டு அக்டோபரில் பணியில் இருந்து ஓய்வு பெறவிருந்தார்.
- காந்த குமாரி பட்நாகர் (1992/93) மற்றும் இந்திரா பானர்ஜி (2017/18) ஆகியோருக்குப் பிறகு மதராஸ் உயர் நீதிமன்றத்தின் 3வது பெண் தலைமை நீதிபதி தஹில்ரமணி ஆவார்.



## அயோடின் கலக்கப்பட்ட உப்பின் மிகக் குறைந்த நுகர்வு – தமிழ்நாடு

- "அயோடின் கலந்த உப்பின்" அளவை அளவிடுவதற்காக நடத்தப்பட்ட ஒரு தேசியக் கணக்கெடுப்பின் படி, தமிழ்நாடு மாநிலமானது அயோடின் கலந்த உப்பின் குறைவான நுகர்வைக் கொண்டுள்ளது.
- ஆனால் இது நாட்டில் மூன்றாவது மிகப் பெரிய உப்பு உற்பத்தி மாநிலமாகும் (முதலாவது - குஜராத்).
- இந்த ஆய்வானது அயோடின் குறைபாட்டுப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான இந்திய கூட்டிணைவு மற்றும் தில்லியில் உள்ள எய்ம்ஸின் நியூட்ரிஷன் இன்டர்நேஷனல் ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்பட்டது.
- 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் அயோடின் கலக்கப்பட்ட உப்பின் அளவை மதிப்பிடுவதற்காக வீடுகளில் உள்ள சமைக்கப்படும் உப்பின் மாதிரிகளில் இருக்கும் அயோடின் அளவை இந்த ஆய்வு சோதித்தது.
- அயோடின் என்பது ஒரு முக்கியமான நுண் ஊட்டச்சத்து ஆகும். அயோடின் குறைபாடு பின்வருவனவற்றை ஏற்படுத்துகின்றது.

| | |
|---|---|
| முன்கழுத்துக் கழலை | தைராய்டு குறைவாக சுரத்தல் |
| குறை பிரசவங்கள் | மன வளர்ச்சி குன்றல் |
| உளவியல் தசை இயக்கப் பிரச்சினைகள் | கருக் கலைப்பு |

## பாம்பனில் பாசிப் பெருக்கம்

- பாம்பனில் உள்ள குந்துக்காலுக்கும், மன்னார் வளைகுடாவில் உள்ள வேதாளைக்கும் இடையில் உள்ள 10 கி.மீ தொலைவுள்ள கடற்கரையானது பச்சை நிறமாகி மிகப்பெரிய மீன் இறப்புகளைக் கண்டுள்ளது.
- மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனமானது அங்கு சோதனைகளை நடத்தி, அங்கு 'நாக்டிலுகா கடல் நுண்பாசிகள்' திடீரென பெருகியது இந்த நிகழ்விற்குக் காரணம் என்று முடிவு செய்தது.
- கடல் நீரில் உள்ள அதிக வெப்பநிலை மற்றும் நல்ல கரிம நிலைமைகள் ஆனது, 'பச்சைப் பாசிகள்' இனப்பெருக்கம் செய்வதற்கும் சிதல்களை விடுவிப்பதற்கும் உகந்த சூழலை வழங்கியிருந்தன.
- மீன்கள் 'செவுள் மூச்சுத் திணறல்' காரணமாக அங்கு இறந்துவிட்டன. மேலும் ஆக்ஸிஜன் பற்றாக்குறை மற்றும் மூச்சுத் திணறல் காரணமாக அவை இறந்துவிட்டன.



## தானியங்கு மழைமானி @ 1300 இடங்களில்

- தொலையளவியல் தானியங்கு மழைமானிகள், தானியங்கு வானிலை நிலையங்கள், தானியங்கு நீர் மட்டப் பதிவாக்கிகள் ஆகியவற்றை அமைக்க அரசாங்கம் ஒரு ஆலோசகரை நியமித்துள்ளது.
- அவை தமிழ்நாட்டின் வருவாய் துணை மண்டலங்கள் மற்றும் வட்டாரங்களில் உள்ள சுமார் 1,300 இடங்களில் அமைக்கப் படவிருக்கின்றன.
- நம்பகமான தரவைப் பெறுவதற்கு ஒரு விரிவான நிகழ்நேர நீர்/வானிலை தரவு சேகரிப்பு முறையைப் பல்வேறு கட்டங்களாக உருவாக்குவது இதன் நோக்கமாகும்.
- அதிக மழை அளவு அல்லது வறட்சியை நிர்வகிக்க இந்தத் தரவு பயன்படுத்தப்படும்.
- தற்போது, சுமார் 470 மழைமானிகள் வருவாய்த் துறை, வேளாண்மை, பொதுப் பணித் துறை மற்றும் வானிலை ஆய்வுத் துறை ஆகியவை மூலம் மாவட்ட தலைமையகத்தில் கிடைக்கின்றன.

## தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை

- மாநிலத்தில் மின்சார வாகனங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் முயற்சியாக, தமிழ்நாடு மாநிலமானது 2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கையை வெளியிட்டுள்ளது.

### Going electric

The Tamil Nadu Electric Vehicle Policy, 2019, provides for various concessions to manufacturers of e-vehicles

- EV-related and charging infrastructure manufacturing units will be provided 100% exemption on electricity tax till December 2025
- Units that obtain land by sale or lease shall be entitled to 100% exemption on stamp duty for transactions till December 2022
- Units that obtain land from SIPCOT, SIDCO or other governmental agencies will be provided a 15% subsidy on the cost, and will be provided 50% subsidy if the investment is in the southern districts
- Units will be provided an employment incentive in the form of the reimbursement of employer's contribution to EPFO for all new jobs created till December 2025
- The government will provide a higher capital subsidy of 20% of the eligible investment over 20 years in cases where units are engaged in making EV batteries
- Amendment to building and construction laws will be effected to ensure that charging infrastructure is integrated at the planning stage itself for all new constructions and apartments in cities

- இது மின்சார வாகனங்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் பயனர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதி வரை அவ்வாகனங்களுக்கு சாலை வரியில் 100 சதவிகிதம் விலக்கு அளிக்க வேண்டும் என்றும் மின்சார இரு சக்கர வாகனங்களுக்கான பதிவுக் கட்டணங்களை ரத்து செய்ய வேண்டும் என்றும் இக்கொள்கை கூறுகின்றது.
- 2030 ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற, விற்கப்படுகின்ற மற்றும் பதிவு செய்யப்படுகின்ற மின்சார வாகனங்களுக்கு 100 சதவிகித மாநில சரக்கு மற்றும் சேவை வரியானது "திருப்பித் தரப்படும்".
- சுற்றுலா மற்றும் வணிகம் சார்ந்த மின்சார வாகனங்களுக்கான அனுமதிக் கட்டணம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரத்து செய்யப்படும்.

***சிறப்பு எண் தகடுகள்***

- போக்குவரத்து வாகனங்களின் பதிவு எண் பச்சை நிறப் பின்புலத்துடன் மஞ்சள் நிறத்தில் காட்சிப் படுத்தப்படும்.
- மற்ற அனைத்து மின்சார வாகனங்களுக்கும் பதிவு எண்கள் பச்சை நிறப் பின்புலத்துடன் வெண்மையாகக் காட்சிப் படுத்தப்படும்.

## கீழடி தொல்பொருள் ஆய்வுத்தளம், சிவகங்கை

- சிவகங்கை மாவட்டத்தில் கீழடியில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட பழங்கால பொருட்களானது கி. மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 1 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியைச் சார்ந்தவை என்று தமிழ்நாடு தொல்பொருள் துறை (Tamil Nadu Archaeology Department-TNAD) தெரிவித்துள்ளது.
- 'கீழடி - வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை TNAD வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் முன்பு நம்பப்பட்டதை விட புதிய கண்டுபிடிப்புகள் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னரானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளன.
- முதல் மூன்று அகழ்வாராய்ச்சிகள் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டன, நான்காவது அகழ்வாராய்ச்சியானது TNAD-ஆல் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாட்டில் வைகை சமவெளிகளின் இரண்டாவது நகரமயமாக்கலானது கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் கங்கை சமவெளிகளில் நடந்ததைப் போலவே நடந்துள்ளது என்று இந்த முடிவுகள் தெரிவிக்கின்றன.
- இந்த அறிக்கையானது முன்னர் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட கீழடிக்கு என்பதற்குப் பதிலாக இந்தத் தளத்தை "கீலடி" என்று உச்சரிக்கிறது.
- பண்டைய சங்க கால கலாச்சார வரலாற்றில் இது ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.



***தமிழ் பிராமி எழுத்து வடிவம்***

- அகழ்வாராய்ச்சி நடந்த இடத்திலிருந்து ஐம்பத்தாறு தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த கீழடிக் கண்டுபிடிப்புகளானது தமிழ்-பிராமி எழுத்துக்கள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை நிர்ணயிக்கின்றன.
- கிமு. 6 ஆம் நூற்றாண்டில் இருந்தே உள்ளூர் மக்கள் கல்வியறிவைப் பெற்றிருக்கிறார்கள் அல்லது எழுதும் கலையைக் கற்றுக் கொண்டார்கள் என்பதை இது உறுதிபடுத்துகிறது.

***விலங்குகள்***

- அந்த இடத்தில் காணப்படும் பின்வரும் விலங்குகளின் எலும்புத் துண்டுகள் புனேவில் உள்ள டெக்கான் முதுகலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அவற்றின் வயது பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்டன.
    - மாடு / எருது, எருமை, செம்மறி, ஆடு, நீலான் (மான்), கலைமான், காட்டுப்பன்றி மற்றும் மயில்.
- இவற்றை கீழடியில் உள்ள சமூகம் விவசாய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியது.

***கார்பன் வயது கணக்கீடு***

- அகழ்வாராய்ச்சி நடந்த இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஆறு கார்பன் மாதிரிகள் அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தின் மியாமி என்ற இடத்தில் உள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு ஆசில்லரேட்டர் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Accelerator Mass Spectrometry) என்ற முறையின் மூலம், இந்த மாதிரிகளின் வயதைக் கணக்கிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.
- 353 செ.மீ ஆழத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட ஆறு மாதிரிகளில் ஒன்று அமெரிக்காவிற்கு கார்பன் வயது கணக்கீடு சோதனைக்கு அனுப்பப்பட்டது. அந்த முடிவில் இந்த மாதிரிகள் "கிமு 580க்குச் செல்கிறது" என்று கூறப்பட்டுள்ளது.
- கீழடியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட மாதிரிகள் வேலூர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் மூலம் இத்தாலியின் பிசா பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.


## கீழடி அகழ்வாய்வு

- சிவகங்கை மாவட்டத்தில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட கலாச்சார ஆதாரங்கள் கி.மு 6 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 1 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என்று தமிழ்நாடு தொல்பொருள் துறை (Tamil Nadu Archaeology Department - TNAD) தெரிவித்துள்ளது. அதாவது இந்தக் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் 2600 ஆண்டுகள் பழைமையானவை ஆகும்.
- TNADயினால் அதிகாரப் பூர்வமாக தேதி அறிவிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- மேலும் 2017 ஆம் ஆண்டில் இந்தத் தளத்தில் அகழ்வாராய்ச்சி தொடங்கிய பின்னர் கீழடி குறித்த புத்தகம் வெளிவருவது இதுவே முதல் முறையாகும்.
- 'கீழடி - வைகை நதிக்கரையில் சங்க காலத்தின் நகர்ப்புறக் குடியிருப்புகள்' என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையானது TNADயினால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையில் உள்ள புதிய கண்டுபிடிப்புகள் கீழடி தொல் பொருள்களை முன்பு நம்பப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டை விட சுமார் 300 ஆண்டுகள் பழமையானவை என்று கூறுகின்றது.
- சங்க காலமானது கி.மு 300 மற்றும் கி.பி 300க்கு இடைப்பட்ட காலமாகக் கருதப்படுகின்றது.
- ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை கரிமப் பகுப்பாய்வு என்ற காலக் கணிப்பு முறையின் மூலம் அதன் காலத்தை நிர்ணயித்த பின்னர் இந்த புதிய அறிக்கையானது சங்க காலம் என்பது கி.மு 600 மற்றும் கி.பி 100க்கு இடைப்பட்ட காலமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது.
- நான்காவது அகழ்வாராய்ச்சியின் முடிவுகள், "கங்கை சமவெளிகளில் நிகழ்ந்ததைப் போலவே கி.மு 6 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வைகை சமவெளிகளில் இரண்டாவது நகரமயமாக்கல் [முதலாம் நகர நாகரீகம் சிந்து நாகரிகம்] நிகழ்ந்துள்ளது" என்று கூறுகின்றது.
- கி.மு 600 முதல் கீழடியில் ஒரு மேம்பட்ட நகர்ப்புற வாழ்விடம் இருந்தது என்பதைப் புதிய கண்டுபிடிப்புகள் நிரூபிக்கின்றன.
- மேலும் சங்க காலத்தைச் சேர்ந்த தமிழர்கள் கி.மு 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிலிருந்தே கல்வியறிவு பெற்றிருந்தனர் என்றும் இந்த ஆய்வு கூறுகின்றது.
- கீழடியில் மேற்கொள்ளப்பட்ட நான்காவது அகழ்வாராய்ச்சியின் (2018) போது சேகரிக்கப்பட்ட ஆறு கார்பன் மாதிரிகள் விரைவுத் திரள் நிறமாலையியல் (Accelerator Mass Spectrometry - AMS) என்ற காலக் கணிப்பிற்காக அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள மியாமியில் அமைந்துள்ள பீட்டா அனலிட்டிக் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- 353 செ.மீ ஆழத்தில் சேகரிக்கப்பட்டு கார்பன் காலக் கணிப்பு சோதனைக்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட ஆறு மாதிரிகளில் ஒன்று "கி.மு 580" ஆம் கால கட்டத்தைச் சேர்ந்தவையாகும்.
- கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் புனேவில் உள்ள டெக்கான் முதுகலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டன. மேலும் அவை மாடு/ எருது, எருமை, செம்மறி ஆடு, ஆடு, நீலான் என்ற ஒரு மான் இனம், புல்வாய் வகை மான் இனம், காட்டுப்பன்றி மற்றும் மயில் போன்ற உயிரினங்களைச் சார்ந்தவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

- ஆனால் அங்கு யானை போன்ற பெரிய விலங்குகள் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.
- இந்தக் கண்டுபிடிப்பானது கீழடியில் உள்ள சமூகம் விவசாயப் பயன்பாட்டிற்காக இந்த விலங்குகளை முக்கியமாகப் பயன்படுத்தியது என்று கூறுகின்றது.
- TNADயினால் மட்டுமே நடத்தப்பட்ட கீழடி அகழ்வாராய்ச்சியிலிருந்து ஐம்பத்தாறு தமிழ் - பிராமி பொறிக்கப்பட்ட மட்கல உடைசல்கள் மீட்கப்பட்டுள்ளன.
- கீழடியிலிருந்து எடுக்கப்பட்ட மட்பாண்ட மாதிரிகள் கனிமப் பகுப்பாய்விற்காக வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் இத்தாலியின் பிசா பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்டன. இந்த ஆய்வின் மூலம் உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்களிலிருந்து நீர் கொள்கலன்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.
- முதல் மூன்று அகழ்வாராய்ச்சிகள் இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் மேற்கொள்ளப்பட்டாலும், நான்காவது அகழ்வாராய்ச்சியானது TNADயினால் மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் TNADயினால் ஐந்தாவது அகழ்வாராய்ச்சியானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- அகழ்வாராய்ச்சித் தளத்திலிருந்து பெறப்பட்ட கலைப் பொருட்களின் மீதான ஓவியக் குறிகள் சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்து வடிவம் மற்றும் தமிழ் - பிராமி எழுத்து வடிவம் ஆகியற்றிற்கிடையிலான தொடர்பைச் சுட்டிக் காட்டுகின்றன.
- கி.மு ஐந்தாம் நூற்றாண்டானது கொடுமணல், அழகன்குளம் மற்றும் பொருந்தல் போன்ற தொல்பொருள் தளங்களிலிருந்து மீட்கப்பட்ட பொருள்களின் கதிர்வீச்சுக் காலக் கணிப்பின் அடிப்படையில் தமிழ் – பிராமி காலமாகக் கருதப் படுகின்றது.
- கீழடி கண்டுபிடிப்புகளுக்காக பெறப்பட்ட சமீபத்திய தேதிகள் அதனை கி.மு 6 ஆம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்கின்றன.

***இதுபற்றி***

- கீழடி அகழ்வாராய்ச்சித் தளமானது ஒரு சங்க காலக் குடியிருப்புத் தளமாகும்.
- இந்த அகழ்வாராய்ச்சித் தளமானது தமிழ்நாட்டில் மதுரைக்கு தென்கிழக்கே 12 கி.மீ தொலைவில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி நகருக்கு அருகில் அமைந்துள்ளது.
- ஆதிச்சநல்லூர் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய அளவிலான அகழ்வாராய்ச்சி இதுவாகும்.
- இந்தக் குடியிருப்பானது வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இது தமிழர்களின் பண்டையக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றது.




## தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம்

- தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையின் படி, தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலை பல்கலைக் கழகமானது ஜெ.ஜெயலலிதா என்ற பெயருடன் சேர்க்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகச் சட்டம் 2013 ஆனது விரைவில் திருத்தப்படும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டில் ஜெயலலிதா அவர்களால் நிறுவப்பட்டது. மேலும் இவர் அதன் முதல் வேந்தராகவும் பணியாற்றினார். இது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் தனது கல்லூரிகளைக் கொண்டுள்ளது.

## தமிழ்நாடு - கேரள பரம்பிக்குளம் ஆழியார் திட்ட மறு ஆய்வு

- பரம்பிக்குளம் ஆழியார் திட்டத்தின் (Parambikulam Aliyar Project - PAP) ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய கேரளாவும் தமிழகமும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக இரு தரப்பிலிருந்தும் தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட செயலாளர் மட்டத்திலான குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.
- கூடுதலாக, இடமலையார் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆனைமலையாரில் இருந்து தண்ணீரைத் திருப்புவதற்கான தமிழகத்தின் கோரிக்கையை 10 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஆராய இருக்கின்றது.

- மேலும் தமிழ்நாட்டினால் நிர்வகிக்கப்படும் முல்லைப் பெரியார் அணைக்கு மின்சாரம் வழங்கவும் கேரள அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

*இதுபற்றி*

- PAP ஒப்பந்தமானது, 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி போடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி இத்திட்டமானது 1958 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- இது 30 ஆண்டுகளுக்குப் பிறகு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்றாலும், 1988 ஆம் ஆண்டில் இந்த இரு மாநிலங்களும் பல சுற்று சந்திப்புகளில் பங்கேற்ற போதிலும் இரு மாநிலங்களுக்கிடையே ஒருமித்த கருத்து ஒன்று எட்டப்பட வில்லை.

# தேசியச் செய்திகள்

## ஷாகுன் இணைய வாயில்

- மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் பள்ளிக் கல்விக்கான உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்நேர இணைப்புகளில் ஒன்றாக கருதப்படும் ஷாகுன் என்ற இணைய வாயிலை ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.
- இது பள்ளிக் கல்வி அமைப்பை மேம்படுத்தும் ஒரு முயற்சியாகும்.
- இந்த இணைய வாயில் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து நிகழ்நேர இணைய வாயில்களையும் இணைய தளங்களையும் இணைக்கும் ஒரு இணைப்பாகும்.
- இந்த இணைய வாயில் ஏறக்குறைய 92 லட்சம் ஆசிரியர்களையும் 26 கோடி மாணவர்களையும் இணைத்திட எண்ணுகின்றது.

## தேசிய ஆய்வக இயக்குநரகம்

- மத்திய நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சர் இராம் விலாஸ் பஸ்வான் தேசிய ஆய்வக இயக்குநரகத்தைத் துவக்கி வைத்தார்.
- இது இந்திய தேசிய தரங்களுக்கான அமைப்பாலும் இந்திய தரங்களுக்கான நிறுவனத்தாலும் இணைந்து உருவாக்கப்பட்ட ஒரு நிகழ்நேர இயங்குதளம் ஆகும்.
- அங்கீகாரம் மற்றும் சான்றளிக்கப்படத் தேவைப்படும் தொழிற்சாலைகள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இதர அனைத்துப் பங்குதாரர்களின் அனைத்து ஆய்வக தேவைகளுக்கும் ஒரே இடத்தில் தங்கள் ஆய்வு வசதிகளை அனைத்து வசதிகளுடன் கிடைக்கப் பெறும் ஒரு தளம் இதுவாகும்.
- இந்த இயக்குநரகத்தின் மூலமாக 4500 ஆய்வகங்கள் இணைக்கப் பட்டிருக்கின்றன. (ஆய்வு மூலம் அளவீட்டு சோதனைச் சாலைகளுக்கான தேசியச் சான்றளிப்பு மன்றம் சான்றளித்த ஆய்வகங்கள், பெருமைமிகு ஆய்வகங்கள், தனித்தன்மை வாய்ந்த ஆய்வகங்கள்).
- பல்வேறு ஆய்வகங்களுக்கான அனைத்து ஆய்வக வசதிகளையும் தயாரிப்புப் பொருட்கள், சர்வதேசத் தரங்கள் போன்றவற்றைக் கொண்டு இங்கு தேட முடியும்.

## இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டாவது முறைசாரா உச்சி மாநாடு – மாமல்லபுரம்

- இந்த ஆண்டின் அக்டோபரில் நடைபெறவுள்ள பிரதமர் மோடிக்கும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கிற்கும் இடையிலான இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டாவது முறைசாரா உச்சி மாநாடானது தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரத்தில் நடைபெற இருக்கின்றது.
- இவர்களுக்கு இடையேயான முதலாவது முறைசாரா உச்சி மாநாடானது சீனாவின் வுஹானில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்றது.
- இது தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம் ஆகும்.

## புதிய ஆளுநர்கள் நியமனம்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ஐந்து மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.

| | |
|---|---|
| **தெலுங்கானா** | டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் |
| **ராஜஸ்தான்** | கல்ராஜ் மிஸ்ரா |
| **மகாராஷ்டிரா** | பகத் சிங் கோஷ்யாரி |
| **இமாச்சலப் பிரதேசம்** | பண்டாரு தத்தாத்ரேயா |
| **கேரளா** | ஆரிஃப் முகமது கான் |

- 2010 ஆம் ஆண்டு முதல் பிரிக்கப்படாத ஆந்திராவின் ஆளுநராக இருந்த ஈ எஸ் எல் நரசிம்மன் ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகிய இரு மாநிலங்களின் ஆளுநர் பொறுப்பைக் கவனித்து வந்தார்.
- அவருக்குப் பதிலாக டாக்டர் தமிழிசை ஆளுநராக பதவி ஏற்க இருக்கின்றார்.
- தமிழ்நாட்டிலிருந்து ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் ஆவார்.




## டிஜிட்டல் இந்தியாவுக்கான கட்டமைப்பு - மின்னணு & தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் கூகிள்

- மின்னணு & தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் கூகிள் ஆகியவை 'டிஜிட்டல் இந்தியாவுக்கான கட்டமைப்பு' என்ற திட்டத்தை உருவாக்கும் நோக்கில் ஒரு ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- குறிக்கோள்: இந்தியாவின் முக்கியமான சமூகப் பிரச்சினைகளுக்குச் சில நல்ல தொழில்நுட்பத் தீர்வுகளைக் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக இந்தியா முழுவதும் உள்ள கல்லூரி மாணவர்களை ஊக்குவித்தல்.
- இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற மேம்பட்டத் தொழில்நுட்பங்கள் இன்று இந்தியா எதிர்கொள்ளும் சில கடினமான சமூக பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.

## இந்தியாவின் மிக நீளமான மின்மயமாக்கப்பட்ட ரயில் சுரங்கப் பாதை

- இந்தியாவின் மிக நீளமான மின்மயமாக்கப்பட்ட ரயில் சுரங்கப் பாதை சமீபத்தில் ஆந்திராவில் திறக்கப்பட்டது.
- 6.7 கி.மீ நீளமுள்ள இந்த சுரங்கப் பாதை ரூ 437 கோடி செலவில் கட்டப்பட்டு செர்லோபள்ளி மற்றும் ரபுரு ஆகிய நகரங்களை இணைக்கின்றது.
- இது இந்திய ரயில்வேயின் தென் மத்திய ரயில்வே மண்டலத்தால் அமைக்கப் பட்டது.
- புதிய பாதையானது தெற்குக் கடற்கரை ரயில்வே மற்றும் மேற்குக் கடற்கரை ரயில்வே ஆகியவற்றிற்கிடையே நேரடி மற்றும் சாத்தியமான இணைப்பிற்கு உதவுகின்றது.





## உலகத் தேர்தல் அமைப்புகளின் சங்கத்தின் 4 வது பொதுச் சபை

- இந்தியத் தேர்தல் ஆணையமானது (Election Commission of India - ECI) உலகத் தேர்தல் அமைப்புகளின் சங்கத்தின் (Assembly of Association of World Election Bodies: A-WEB) 4 வது பொதுச் சபையை 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் தேதி பெங்களூரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

- 2019-21 ஆம் காலகட்டத்திற்கான A-WEB இன் தலைவர் பொறுப்பை இந்தியா ஏற்க இருக்கின்றது.
- A-WEB என்பது உலகளவில் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் மிகப்பெரிய சங்கமாகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் நிரந்தரச் செயலகம்: சியோல், தென் கொரியா.

## வாக்காளர்கள் சரிபார்ப்புத் திட்டம்

- வாக்காளர்கள் சரிபார்ப்புத் திட்டம் என்பது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒரு முன்முயற்சியாகும்.
- வாக்காளர் பட்டியலைப் பிழையில்லாமல் கொண்டு வருவதே இதன் நோக்கமாகும்.
- இது அக்டோபர் 15 ஆம் தேதி வரை தொடரும்.
- இதில் குடிமக்கள் தங்களது சரிபார்க்கப்பட்ட ஆவணங்களை டிஜிலாக்கரிலிருந்து சமர்ப்பிக்கவும் அனுமதிக்கப் படுவர்.




## அங்கிகார் பிரச்சாரம்

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது அங்கிகார் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இது பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்) பயனாளிகளை மற்ற மத்திய அரசின் திட்டங்களான உஜ்ஜாவாலா மற்றும் ஆயுஷ்மான் பாரத் போன்ற திட்டங்களுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டது.

- அங்கிகார் ஆனது பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனாவின் (நகர்ப்புறம்) அனைத்துப் பயனாளிகளையும் படிப்படியாக அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- மேலும் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது இந்தியாவின் எளிதில் பாதிக்கப் படக்கூடிய பகுதிகளின் அட்லஸ் எனும் மின்னணு கல்வியையும் தொடங்கியுள்ளது.
- இது இயற்கைப் பேரிடர்கள் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் வழங்கும் ஒரு தனித்துவமான பாடமாகும். மேலும் இது பல்வேறு அபாயங்களினால் எளிதில் பாதிப்படையக் கூடிய பகுதிகளை அடையாளம் காண உதவுகிறது.

## இந்தியா – கானா வெளியுறவு அலுவலக ஆலோசனைகள்

- முதலாவது இந்தியா-கானா நாடுகளின் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள் கடந்த ஆகஸ்ட் 28 அன்று புதுடெல்லியில் நடைபெற்றது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் ஜுன் 2016ல் கானாவிற்கு பயணம் மேற்கொண்டார்.
- சர்வதேச சூரியஒளிக் கூட்டிணைவின் தொடக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கானா நாட்டின் குடியரசுத் தலைவர் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்.
- வர்த்தகம் மற்றும் முதலீடு, மேம்பாட்டுக் கூட்டாண்மை, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் மருத்துவ துறை, திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, மக்கள் தொடர்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்த இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

## மத்திய நேரடி வரி வாரியம் – சிறப்புப் பிரிவு

- ஏஞ்சல் வரி மற்றும் இதர வரி சம்பந்தபட்ட பிரச்சினைகள் தொடர்பான தொழில் தொடக்கங்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட சிறப்புப் பிரிவின் உருவாக்கத்தை மத்திய நேரடி வரி வாரியம் அறிவித்துள்ளது.
- இந்தப் பிரிவானது வருமான வரி மற்றும் கணினிமயமாக்கல் குழுவின் உறுப்பினர் தலைமையில் செயல்படும்.
- வருமான வரிச் சட்டம்-1961 இன் நிர்வாகம் தொடர்பாக தொழில் தொடக்கங்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் வரி தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் இந்த பிரிவு செயல்படும்.

## 8 அப்பாச்சி ஏ. எச் - 64இ தாக்குதல் ஹெலிகாப்டர்கள்

- பஞ்சாபின் பதான்கோட் விமானப் படை நிலையத்தில் 8 அப்பாச்சி ஏ. எச் - 64இ தாக்குதல் ஹெலிகாப்டர்களை இந்திய விமானப் படையானது பணியில் சேர்த்துள்ளது.
- அவை அமெரிக்க நிறுவனமான போயிங் நிறுவனத்தினால் தயாரிக்கப் படுகின்றன. மேலும் இந்திய விமானப் படையின் போர்த் திறன்களுக்கு இது ஒரு பெரிய ஊக்கத்தை அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தக் கையகப் படுத்துதலானது இந்தியாவும் அமெரிக்காவும் 2015 ஆம் ஆண்டில் கையெழுத்திட்ட 22 ஹெலிகாப்டர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.



## உலகளாவிய வாழ்வாதாரக் குறியீடு 2019

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவானது (Economic Intelligence Unit - EIU) 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வாழ்வாதாரக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- EIUஇன் குறியீடானது நகரங்களை ஐந்து தலைப்புகளின் கீழ் தரவரிசைப் படுத்துகின்றது:

- நிலைத் தன்மை மற்றும் கலாச்சாரம் & சுற்றுச்சூழல்
- சுகாதார மற்றும் உள்கட்டமைப்பு
- கல்வி


- இந்தக் குறியீட்டில் கடந்த ஆண்டு 112வது இடத்தில் இருந்த புது தில்லி தற்பொழுது ஆறு இடங்கள் பின்தங்கி 118வது இடத்தில் உள்ளது.
  - காரணங்கள்: சிறிய குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, உலகின் மோசமான காற்றுத் தரக் குறியீடு.
- இந்த ஆண்டின் குறியீட்டில் மும்பை இரண்டு இடங்கள் சரிந்து 119வது இடத்தில் உள்ளது. இக்குறியீட்டில் கடந்த ஆண்டில் மும்பை 117வது இடத்தில் இருந்தது.
  - காரணம்: அதன் கலாச்சாரப் பிரிவில் தரம் குறைதல்.
- இந்தக் குறியீட்டில் வியன்னா மற்றும் மெல்போர்ன் ஆகிய நகரங்கள் முதலிடங்களில் உள்ளன.

## தெற்காசிய சபாநாயகர்கள் மாநாடு

- தெற்காசிய சபாநாயகர்கள் மாநாடானது மாலத் தீவில் நடத்தப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டில் இந்தியாவின் சார்பில் மக்களவையின் சபாநாயகரான ஓம் பிர்லா தலைமையிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- இந்த மாநாட்டில் ஜம்மு-காஷ்மீர் தொடர்பான 370வது சட்டப் பிரிவை ரத்து செய்ததற்கானப் பிரச்சினையை எழுப்ப பாகிஸ்தான் சபாநாயகர் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

## சமுத்திரயான் திட்டம்

- நீரில் மூழ்கக் கூடிய வாகனத்தில் மனிதர்களை ஆழ்கடலுக்கு அனுப்ப வேண்டும் என்ற இந்தியாவின் கனவானது 2021-22ல் 'சமுத்திரயான்' திட்டத்தின் மூலம் நடைமுறைக்கு வர இருக்கின்றது.
- ஆழ்கடல் ஆய்வுகளை மேற்கொள்ள கடலில் சுமார் 6000 மீட்டர் ஆழத்தில் மூன்று நபர்களுடன் ஒரு நீரில் மூழ்கக் கூடிய வாகனத்தை அனுப்புவதற்கு இத்திட்டம் முன்மொழிகின்றது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த வாகனம் 72 மணி நேரம் கடற் படுக்கையில் ஊர்ந்து செல்லும் திறன் கொண்டது.
- 'சமுத்திரயான்' திட்டமானது புவி அறிவியல் அமைச்சகத்தின் ஒரு பகுதியாகும். இது சென்னையில் உள்ள தேசியக் கடல் தொழில்நுட்ப நிறுவனத்தால் (NIOT - National Institute of Ocean Technology) மேற்கொள்ளப் படுகின்றது.



## சாகர் அவனேஷிகா - ஆராய்ச்சிக் கப்பல்

- மேற்கு வங்காளத்தின் திதாகார்ஹ் மரைன்கள் என்ற நிறுவனம் சாகர் அன்வேஷிகா என்ற ஆராய்ச்சிக் கப்பலை வெற்றிகரமாக உருவாக்கி, அதை சென்னையில் உள்ள NIOTயிடம் ஒப்படைத்துள்ளது.
- இது பல்வேறு கடல்சார் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்.
- தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT - National Institute of Ocean Technology) புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- திதாகார்ஹ் நிறுவனம் இதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டில் கடலோர ஆராய்ச்சிக் கப்பலான “சாகர் தாரா” என்ற கப்பலை அறிமுகப்படுத்தியது.

## ஜப்பான்-இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான வருடாந்திரப் பாதுகாப்பு அமைச்சகங்களுக்கிடையேயான சந்திப்பு

- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 2 நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு அமைச்சகங்களுக்கிடையேயான வருடாந்திர சந்திப்பிற்காக ஜப்பானுக்குப் பயணம் செய்துள்ளார்.
- இந்த ஆண்டில் நடைபெற இருக்கும் ஜப்பான்-இந்தியா வருடாந்திர உச்சி மாநாட்டிற்கு முன்னதாக வெளியுறவு மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆகியவை அடங்கிய முதலாவது சந்திப்பை (2 + 2) நடத்துவதற்கான தங்களின் விருப்பத்தை அமைச்சர்கள் உறுதிப்படுத்தினர்.

## 20வது இந்தியா - ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாடு: சென்னை- விளாடிவோஸ்டாக் பயணப் பாதை

- 20வது இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையேயான வருடாந்திர உச்சி மாநாடானது விளாடிவோஸ்டோக்கில் நடத்தப்பட்டது. பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக 5வது கிழக்குப் பொருளாதார மன்றத்தில் பங்கேற்றார்.

- ரஷ்யாவின் தூரக் கிழக்கு பிராந்தியத்திற்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றார்.
- இந்த மாநாட்டில் 2025 ஆம் ஆண்டிற்குள் இருதரப்பு வர்த்தகத்தை 30 பில்லியன் டாலராக உயர்த்துவதற்கான திட்டங்கள் குறித்து அறிவிக்கப்பட்டன.
- சென்னை மற்றும் விளாடிவோஸ்டாக் ஆகிய நகரங்களுக்கிடையே ஒரு முழுமையான கடல் வழியைக் கொண்டிருப்பதற்கான நோக்கம் சார்ந்த ஒப்பந்தம் ஒன்று இந்த மாநாட்டில் கையெழுத்திடப்பட்டது.
- “தேசிய நாணயங்களில் பணவழங்கீடுகளை" மேற்கொள்வதற்கான பரஸ்பரத் தீர்வுகளை ஊக்குவிக்கும் பணி தொடரும் என்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

## “தனிப்பட்ட தீவிரவாதிகள்” என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது

- தாவூத் இப்ராஹிம், மசூத் அசார், ஹபீஸ் சயீத் மற்றும் ஜாக்கி-உர்-ரஹ்மான்-லக்வி ஆகியோர் ஒரு புதிய தீவிரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் "தனிப்பட்ட தீவிரவாதிகள் " என்று அறிவிக்கப்பட்டனர்.
- மத்திய அரசு சமீபத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967ல் திருத்தங்களைச் செய்து அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அறிவித்து, அவர்களின் பெயர்களை இச்சட்டத்தின் 4வது அட்டவணையில் சேர்த்துள்ளது.
- இதற்கு முன்பு தீவிரவாத அமைப்புகள் தடை செய்யப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நபர்கள் அந்த அமைப்புகளின் பெயர்களை மாற்றி தீவிரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர்.

## குழந்தைகளுக்கு காசநோய் மற்றும் தொழுநோய் ஆகியவற்றிற்கான முதல்நிலைப் பரிசோதனை

- 2019 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தொழுநோய் மற்றும் காசநோய்க்காக அனைத்து குழந்தைகளையும் முதல்நிலைப் பரிசோதனை செய்வதற்கான பெரிய அளவிலான திட்டத்தை இந்தியா மேற்கொண்டுள்ளது.
- இந்த இரண்டு தொற்று நோய்களுக்காக 18 வயதிற்குட்பட்ட 25 கோடி குழந்தைகள் பரிசோதிக்கப்பட இருக்கின்றார்கள்.
- ஒரு நபருக்கு இந்த இரண்டு நோய்களில் ஏதாவது ஒன்று இருப்பதாக சந்தேகிக்கப் பட்டால், அதை உறுதிப்படுத்த அந்த நபர் உயர் மையத்திற்கு அனுப்பப் படுவார்.
- தற்போதுள்ள ராஷ்டிரிய பால் ஸ்வஸ்திய காரியக்ரம் (Rashtriya Bal Swasthya Karyakram - RBSK) என்பதன் உள்கட்டமைப்பு முதல்நிலைப் பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும்.

## இந்திய - ஆப்பிரிக்க கூட்டாண்மை பற்றிய தேசியக் கருத்தரங்கு

- “மாறிவரும் உலகளாவிய சூழ்நிலையில் இந்திய - ஆப்பிரிக்க கூட்டாண்மை: முன்னுரிமைகள், வாய்ப்புகள் மற்றும் சவால்கள்” குறித்த தேசியக் கருத்தரங்கு புது தில்லியில் நடத்தப்பட்டது.

- இது உலக விவகாரங்களின் இந்திய ஆணையத்தால் ஒருங்கிணைக்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற 3வது இந்திய -ஆப்பிரிக்க மன்ற உச்சி மாநாட்டிலிருந்து ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 36க்கும் மேற்பட்ட தலைவர்களை இந்தியா வரவேற்று அவர்களுக்கு விருந்தளித்துள்ளது.
- இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்த 6 கூடுதல் இந்தியத் தூதரகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## பயணம், சுற்றுலா போட்டித்திறன் குறியீடு

- உலகப் பயண மற்றும் சுற்றுலா போட்டித்திறன் குறியீட்டில் இந்தியா ஆறு இடங்கள் முன்னேறி 34வது இடத்தைப் பிடித்துள்ளது.
- சாதகமான காரணிகள்: வளமான இயற்கை மற்றும் கலாச்சார வளங்கள் மற்றும் இந்தியாவில் வலுவான விலை சார்ந்த போட்டித் திறன்.
- தெற்காசியாவின் பயண மற்றும் சுற்றுலாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. மேலும் துணைப் பிராந்தியத்தின் மிகவும் போட்டி மிக்க பயண மற்றும் சுற்றுலாப் பொருளாதாரமாக இந்தியா உள்ளது.
- பயண மற்றும் சுற்றுலாப் போட்டித்திறன் குறியீடானது (Travel & Tourism Competitiveness Index - TTCI) உலகப் பொருளாதார மன்றத்தால் வெளியிடப்பட்டது.
- இந்தப் பட்டியலில் ஸ்பெயின் முதலிடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் இதற்கு அடுத்த இடங்களில் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.
- ஆசியாவின் மிகவும் போட்டிமிக்க பயண மற்றும் சுற்றுலாப் பொருளாதாரமாக ஜப்பான் விளங்குகின்றது.

### TOP TRAVEL DESTINATIONS

| | | | DIFFERENCE FROM 2017 | | SCORE DIFF. FROM BENCHMARK AVG. | |
|---|---|---|---|---|---|---|
| Global Rank | Economy | Score | Rank | Growth (%) | Regional (%) | Global (%) |
| 4 | Japan | 5.40 | 0.00 | 2.10 | 29.10 | 39.60 |
| 7 | Australia | 5.10 | 0.00 | 0.80 | 23.60 | 33.60 |
| 13 | China | 4.90 | 2.00 | 3.20 | 17.20 | 26.70 |
| 14 | Hong Kong SAR | 4.80 | -3.00 | -1.10 | 15.70 | 25.10 |
| 16 | Korea, Rep. | 4.80 | 3.00 | 4.70 | 14.90 | 24.30 |
| 17 | Singapore | 4.80 | -4.00 | -2.00 | 14.40 | 23.70 |
| 18 | New Zealand | 4.70 | -2.00 | 1.40 | 14.10 | 23.40 |
| 29 | Malaysia | 4.50 | -3.00 | 0.40 | 8.50 | 17.30 |
| 31 | Thailand | 4.50 | 3.00 | 2.60 | 8.10 | 16.90 |
| 34 | **India** | **4.40** | **6.00** | **5.70** | **6.30** | **14.90** |

Source: World Economic Forum, 2019 Compiled by BS Research Bureau

## டெல்லி விமான நிலையத்தில் முக அங்கீகாரம்

- விஸ்தாரா விமான நிறுவனத்தின் உள்நாட்டுப் பயணிகளுக்கான மூன்றாவது முனையத்தில் பயோமெட்ரிக் முக அங்கீகார நுழைவு முறையை 3 மாத காலத்திற்கு சோதனை அடிப்படையில் தொடங்கப் போவதாக தில்லி விமான நிலையம் அறிவித்துள்ளது.
- இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், நுழைவு, பாதுகாப்பு மற்றும் புறப்படும் இடம் என அனைத்து சோதனைச் சாவடிகளிலும் முக அங்கீகார முறையின் அடிப்படையில் பயணிகளின் நுழைவு தானாக செயலாக்கப்படும்.
- செல்லத்தக்க விமான பயணச் சீட்டு மற்றும் அரசு அடையாள அட்டைகளைக் கொண்ட பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்த தங்களைப் பதிவு செய்ய வேண்டும்.
- விமானம் புறப்பட்டதும், பதிவு செய்யப்பட்ட பயணிகளின் தரவுகள் அழிக்கப்படும்.

## யுத் அபியாஸ் 2019: இந்தியா மற்றும் அமெரிக்கா

- ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 2019 ஆம் ஆண்டின் யுத் அபியாஸ் பயிற்சியானது செப்டம்பர் 05 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள கூட்டுத் தளமான லூயிஸ் மெக் சோர்டில் நடத்தப் படுகின்றது.
- யுத் அபியாஸ் பயிற்சி என்பது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சி மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு முயற்சிகளில் ஒன்றாகும்.
- இது இரு நாடுகளுக்கும் இடையே மாறிமாறி நடத்தப்படும் கூட்டுப் பயிற்சியின் 15வது பதிப்பாகும்.
- இது படை அலுவலர் மட்டத்தில் கூட்டுத் திட்டத்துடனும் பட்டாலியன் (படைப் பிரிவு) மட்டத்தில் ஒருங்கிணைந்த முறையில் பயிற்சி அளித்திடவும் இரு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.




## கழுகுகள் பாதுகாப்பு - புதிய மருந்து ஃப்ளூனிக்சின்

- நாட்டில் கால்நடைகளுக்குப் புதிய மருந்துகள் அறிமுகப் படுத்துதலானது கழுகுப் பாதுகாப்பு ஆர்வலர்களிடையே கடுமையான கவலையை ஏற்படுத்தி வருகின்றது.
- இந்த மருந்துகளில் "ஃப்ளூனிக்சின்" என்ற மருந்து மிகவும் ஆபத்தான ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- மொத்தக் கால்நடை மருந்துகளில் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட புதிய மருந்தின் 1% அளவு மட்டுமே கழுகுகளின் சிறிய அளவிலான எண்ணிக்கையை எதிர்மறையாகப் பாதிக்கும்.
- இதன் பயன்பாட்டை நிறுத்துமாறு தமிழக கால்நடை வளர்ப்பு அதிகாரிகளை ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.
- முன்னதாக "கெட்டோப்ரோஃபென்" என்ற மருந்து கொள்முதலானது நிறுத்தப்பட்டது. மேலும் கழுகுகளின் எண்ணிக்கையைக் காப்பாற்றுவதற்காக "டிக்ளோஃபெனாக்" என்ற மருந்தின் பயன்பாடும் குறைக்கப்பட்டது.



## இந்தியா தன்னை "பறவைக் காய்ச்சல் அற்ற நாடாக" அறிவித்துள்ளது

- இந்தியா பறவைக் காய்ச்சல் அற்ற நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கால்நடை பராமரிப்புத் துறையின் கூற்றுப்படி, செப்டம்பர் 3 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், சர்வதேச விலங்கு சுகாதாரத்திற்கான அமைப்பு – OIE ஆனது இந்த வைரஸ் பாதிப்பு அற்ற நாடாக இந்தியாவை அறிவித்துள்ளது.
- பறவைக் காய்ச்சல் ஆனது முதன்முதலில் 1997 ஆம் ஆண்டில் ஹாங்காங்கிலிருந்து பதிவு செய்யப்பட்டது.
- இந்தியாவும் 2005 ஆம் ஆண்டு முதல் இந்த நோய் பாதிப்புகளைச் சந்தித்துள்ளது.
- இந்தியா கடைசியாக 2017 ஆம் ஆண்டில் இந்த நோயற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. அடுத்தடுத்த நிகழ்ந்த இந்த நோய் பாதிப்புகளுக்குப் பிறகு, இந்தியா இரண்டாவது முறையாக இந்த நோயற்ற நாடாக தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.




## மாலியில் 4வது இந்தியப் பெருங்கடல் மாநாடு

- 4வது இந்தியப் பெருங்கடல் மாநாடு 2019 ஆனது சமீபத்தில் மாலத் தீவின் தலைநகரான மாலியில் நடத்தப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் இந்தியப் பெருங்கடல் மாநாடு நிகழ்வில் பேசியவர்களில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான எஸ்.ஜெய்சங்கரும் ஒருவராவார்.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், “இந்தியப் பெருங்கடல் பகுதியைப் பாதுகாத்தல்: பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற சவால்கள்” என்பதாகும்.

## தென் கொரியாவிற்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் பயணம்

- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அரசு முறைப் பயணமாக தென் கொரியாவிற்குச் சென்றுள்ளார்.
- இராணுவத் தளவாட ஒப்பந்தம் ஒன்று அங்கு கையெழுத்திடப்பட்டது.
- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள தென் கொரியத் துறைமுகங்களில் இது செயல்படும் போது இந்தியாவிற்குத் தளவாட உதவியை அளித்திட இந்த ஒப்பந்தம் உறுதியளிக்கின்றது.
- “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற திட்டத்தின் கீழ் முக்கியமான ஆயுத அமைப்புகளில் பயன்படுத்தப்படும் பொருட்களைத் தயாரிப்பதற்காக தென் கொரியாவைச் சேர்ந்த தொழிற்சாலைகள் இந்தியாவிற்கு அழைக்கப்பட்டுள்ளன.
- தென் கொரியாவின் “புதிய தெற்குக் கொள்கை” மற்றும் இந்தியாவின் “கிழக்கு நோக்கிய செயல்பாட்டுக் கொள்கை” ஆகியவை இரு நாடுகளுக்கிடையே ஒரு சிறப்பு வாய்ந்த உத்தி சார்ந்த பங்குரிமையை ஏற்படுத்துவதற்கு உதவும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

## இராணுவ மருந்துகள் மீதான கருத்தரங்கு: SCO உறுப்பு நாடுகள்

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பைச் (Shanghai Co-operation Organisation - SCO) சேர்ந்த உறுப்பு நாடுகளுக்கான இராணுவ மருந்துகள் மீதான கருத்தரங்கானது புது தில்லியில் நடத்தப்பட இருக்கின்றது.
- SCO பாதுகாப்பு ஒத்துழைப்புத் திட்டம் 2019-20ன் கீழ் இந்தியாவினால் நடத்தப்பட விருக்கும் "முதலாவது இராணுவ ஒத்துழைப்புக் கருத்தரங்கு" இதுவாகும்.
- SCO உறுப்பு நாடுகள் மூத்த இராணுவ மருத்துவப் பயிற்சியாளர்களால் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விருக்கின்றன.
- 2017 ஆம் ஆண்டில் இந்தியா SCOல் உறுப்பு நாடாக இணைந்தது.
- இக்கருத்தரங்கானது ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்புப் பணியாளர் தலைமையகத்தின் கீழ் உள்ள இந்திய ஆயுதப் படையினால் நடத்தப்பட விருக்கின்றது.




## சிலிநெக்ஸ் 2019: இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற் பயிற்சி

- இலங்கைக் கடற்படையானது 2019 ஆம் ஆண்டின் சிலிநெக்ஸ் (SLINEX) என்ற கடற் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிற்கு 2 கப்பல்களை அனுப்புகின்றது.

- SLINEX 2019 என்பது இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்படும் இரு நாட்டுக் கடற் பயிற்சியாகும்.
- 2005 ஆம் ஆண்டு முதல் 6 சிலிநெக்ஸ் கடற் பயிற்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.
- இந்தப் பயிற்சியானது இரு நாடுகளின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் இப்பிராந்தியத்தில் கடற் பாதுகாப்பிற்குப் பங்களிப்பதற்கும் இரு நாட்டுக் கடற் படைகளுக்கும் உதவுகின்றது.

## கார்கில் முதல் கோஹிமா வரையிலான அல்ட்ரா மராத்தான்

- கார்கிலிலிருந்து கோஹிமா வரையிலான 4,500 கி.மீ தூரம் செல்லும் 'கார்கிலில் இருந்து கோஹிமா (கே 2 கே): புகழ்பெற்ற ஓட்டம் ' என்ற அல்ட்ரா மராத்தானை இந்திய விமானப் படையானது ஏற்பாடு செய்து வருகிறது.
- இது 'விஜய் திவாஸ்' அல்லது 'கார்கில் விஜய் திவாஸ்' என்ற நடவடிக்கையின் (வெற்றிகரமாக நடத்தப்பட்ட விஜய் நடவடிக்கையின் பெயர்) 20ஆம் ஆண்டை நினைவு கூறுதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதுடெல்லியில் வாயு பவனில் நடைபெற்ற விழாவில் விமானப்படை தலைமைத் தளபதியான B.S தனோவா இந்த மராத்தான் ஓட்டத்தை கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.
- இந்த தனித்துவமான கார்கில் முதல் கோஹிமா வரையிலான அல்ட்ரா மாராத்தான் பயணமானது வரும் செப்டம்பர் 21 அன்று தொடங்கி நவம்பர் 6 ஆம் தேதி நிறைவடையும்.
- இது ஜம்மு-காஷ்மீரில் உள்ள திராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவுச் சின்னம் மற்றும் நாகாலாந்தின் கோஹிமாவில் உள்ள கோஹிமா போர் கல்லறை ஆகியவற்றிலிருந்துத் தொடங்கும்.

## மேற்கு விமானப் படை கட்டுப்பாட்டக கமாண்டோக்கள் மாநாடு 2019

- 2019 ஆம் ஆண்டின் மேற்கு விமானப்படை கட்டுப்பாட்டக கமாண்டோக்களின் இரண்டு நாள் மாநாடு ஆனது புதுடில்லியில் நடத்தப் பட்டது.
- விமானப் படை தலைமைத் தளபதியான B.S தனோவா இம்மாநாட்டின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.
- செயல்பாட்டுத் தயார்நிலை மற்றும் போர் கருவிகளின் உயர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட பயிற்சிகளின் முக்கியமான பகுப்பாய்வு குறித்த விவாதங்கள் இம்மாநாட்டில் நடைபெற்றன.



## வட கிழக்கு மன்றத்தின் 68வது முழுமையான அமர்வு - 2019

- அசாமில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான வடகிழக்கு மன்றத்தின் 68வது முழுமையான 2 நாள் அமர்விற்கு மத்திய உள்துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- வடகிழக்குப் பிராந்தியத்தின் 8 மாநிலங்களைக் கொண்டுள்ள இது வடகிழக்கு மாநிலங்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்கான ஒரு முதன்மை அமைப்பாகும்.

***வட கிழக்கு மன்றம்***

- இது 1972 ஆம் ஆண்டின் வடகிழக்கு மன்றச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
- இதற்கு மத்திய உள்துறை அமைச்சர் தலைமை தாங்குகிறார்.
- வட கிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சர் இதன் துணைத் தலைவராக உள்ளார்.
- 8 வடகிழக்கு மாநிலங்களின் ஆளுநர்களும் முதலமைச்சர்களும் அதன் உறுப்பினர்களாக உள்ளனர்.

## பேரிடர் பதிலெதிர்ப்பிற்கான நேரு யுவ கேந்திரங்கள்

- நேரு யுவ கேந்திர சங்கதன் (NYKS – Nehru Yuva Kendra Sangathan) தேர்ந்தெடுக்கப்பட்ட பேரிடர் அபாயத்திற்கு உள்ளாகும் மாவட்டங்களில் வட்டார அளவில் பேரிடர் பதிலெதிர்ப்புக் குழுக்களை அமைக்க விருக்கின்றது.
- ஒரு பகுதியில் பேரிடர் ஏற்பட்டால் இந்தக் குழுக்கள் "முதலாவது பதிலெதிர்ப்பாளர்களாகச்" செயல்பட இருக்கின்றன.
- 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பேரிடர் அபாயத்திற்கு உள்ளாகும் 32 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் இந்தத் திட்டத்தை தேசிய பேரிடர் பதிலெதிர்ப்புப் படை (National Disaster Response Force - NDRF) ஒருங்கிணைக்கின்றது.

*இதுபற்றி*

- NYKS என்பது உலகின் மிகப்பெரிய கடைமட்ட அளவிலான ஒரு இளைஞர் அமைப்பாகும்.
- இது 1972 இல் உருவாக்கப்பட்டது.
- இது மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பு ஆகும்.

## பொதுவான உயர் நீதிமன்றம்: ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக்


- ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவை அக்டோபர் 31 ஆம் தேதி முதல் இரண்டு தனித்தனி ஒன்றியப் பிரதேசங்களாக செயல்பட இருக்கின்றன. ஆனால் இவை இரண்டும் ஒரு "பொதுவான உயர் நீதிமன்றத்தையே" கொண்டிருக்கும்.
- இது மாநில நீதித் துறை அமைப்பின் இயக்குநர் ராஜீவ் குப்தாவால் தெரிவிக்கப் பட்டது.
- மேலும் இந்த இரண்டு ஒன்றியப் பிரதேசங்களுக்கும் மத்திய அரசின் 108 சட்டங்களும் பொருந்தும் என்றும் அவர் கூறினார்.
- இங்கு 164 மாநில சட்டங்கள் ரத்து செய்யப்படும். மேலும் 166 மாநில சட்டங்கள் தொடர்ந்து இந்த இரண்டு ஒன்றியப் பிரதேசங்களுக்கும் பொருந்தும்.

## ஹெலிகாப்டர் உச்சி மாநாடு - 2019

- உத்தர காண்ட் மாநிலத்தின் தலைநகரான டேராடூனில் உள்ள சஹஸ்த்ரதாரா ஹெலிடிரோம் என்ற இடத்தில் நாட்டின் முதலாவது ஹெலிகாப்டர் உச்சி மாநாட்டை மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது.
- இந்த உச்சி மாநாடானது "ஹெலிகாப்டர்கள் மூலம் இணைப்பை விரிவுபடுத்துதல்" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப் பட்டது.
- மேலும் இந்த உச்சி மாநாட்டில் (Indian Air Force - IAF) 'மெடேவக்கில் (தேசிய அளவில் மருத்துவ முகாம்) இந்திய விமானப் படை ஹெலிகாப்டர்களின் பங்கு' குறித்து பேசுவதற்காக இந்திய விமானப் படையும் அழைக்கப்பட்டது.

## தரிசு நிலங்களை மீட்டெடுத்தல்: இலக்கு திருத்தியமைக்கப்பட்டது

- 2030 ஆம் ஆண்டிற்குள் 26 மில்லியன் ஹெக்டேர் தரிசு நிலங்களைப் புனரமைப்பதை இந்தியா இலக்காகக் கொள்ளும் என்று பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.
- முன்னதாக இந்த இலக்கு 21 மில்லியனாக இருந்தது. இப்போது அது திருத்தப்பட்டுள்ளது.
- புது தில்லியில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்கலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் (United Nations Convention to Combat Desertification - UNCCD) உறுப்பு நாடுகளின் 14வது (COP 14) அமர்வின் போது இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.




***UNCCD COP 14 இல் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள்***

- சில ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப் படி, இந்தியாவில் மூன்று விலங்கு இனங்கள் பாலைவனமாக்கல் காரணமாக அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன.
- அவை இந்தியச் சிறுத்தை, இளஞ் சிவப்பு தலை கொண்ட வாத்து மற்றும் கான மயில் ஆகும்.
- பூச்சிக் கொல்லிகள், விவசாய நிலமாக மாற்றுவது, தொழில்கள் மற்றும் ரசாயனங்கள் ஆகியவை காரணமாக பாலைவனமாக்கல் ஏற்படுகின்றது.

## ஜம்மு காஷ்மீர் மாநிலப் பிரிப்பு குறித்த சஞ்சய் மித்ரா குழு

- ஜம்மு காஷ்மீரை இரண்டு ஒன்றியப் பிரதேசங்களாகப் பிரிப்பதை மேற்பார்வையிட 3 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- ஜம்மு-காஷ்மீரின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை இரண்டு ஒன்றியப் பிரதேசங்களுக்கு இடையில் பகிர்ந்து கொடுப்பது குறித்து இந்தக் குழு ஆராய இருக்கின்றது.
- இக்குழுவின் தலைவர்: முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலாளர் சஞ்சய் மித்ரா.
- உறுப்பினர்கள்: ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி அருண் கோயல் மற்றும் ஓய்வு பெற்ற இந்தியக் குடிமை கணக்குச் சேவை அதிகாரி கிரிராஜ் பிரசாத் குப்தா.


## இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே பெட்ரோலியக் குழாய்

- பிரதமர் மோடியும் நேபாளத்தின் பிரதமரான கே பி ஷர்மா ஒலியும் காணொளி மூலம் மோதிகாரி மற்றும் அமேலக்கஞ்ச் ஆகியவற்றிற்கிடையே பெட்ரோலிய குழாய்ப் பாதையைத் (பைப்லைன்) திறந்து வைத்தனர்.
- இது தெற்காசியாவின் முதலாவது எல்லை தாண்டிய பெட்ரோலியப் பொருட்களை எடுத்துச் செல்லும் குழாய் ஆகும்.

- 69 கி.மீ தூரமுள்ள இந்த குழாயானது பீகாரின் பெகுசாராய் மாவட்டத்தில் உள்ள பரவுனி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தென்கிழக்கு நேபாளத்தின் அமேலக்கஞ்ச் வரை எரிபொருளைக் கொண்டு செல்லும்.
- இது இந்தியாவில் இருந்து நிலத்தால் சூழப்பட்ட நேபாளத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்வதற்கான செலவைக் குறைக்க விருக்கின்றது.

## பண்ணை இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பதற்காக பன்மொழிச் செயலி

- புது தில்லியில் பயிர்க் கழிவு மேலாண்மை குறித்த மாநாட்டின் போது மத்திய வேளாண் துறை இணையமைச்சர் பார்சோத்தம் ருபாலா "CHC பண்ணை இயந்திரம்" என்ற ஒரு பன்மொழிக் கைபேசிச் செயலியைத் தொடங்கி வைத்தார்.
- நோக்கம்: இந்தச் செயலியானது விவசாயிகளைத் தங்கள் பகுதியில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையங்களுடன் இணைக்கின்றது.
- இதன் மூலம் விவசாயிகள் தங்கள் வீடுகளில் அதிநவீன தொழில்நுட்பத்தைக் குறைந்த விலையில் பெற முடியும்.
- வாடகைக்கு எடுக்கப்படும் பெரும்பாலான பண்ணை உபகரணங்கள்: ரோட்டாவேட்டர், சுழிய உழவு இயந்திரங்கள், உருளை விதைப்புக் கருவி, பலபயிர் விதைப்புக் கருவி, களையெடுக்கும் கருவி மற்றும் தட்டு போன்ற வெட்டும் கருவி.




## ஆற்றல் திறனுள்ள கட்டிடங்கள் - ANGAN மாநாடு

- கட்டிடத் துறையில் ஆற்றல் திறன் குறித்த மூன்று நாள் நடைபெறக் கூடிய சர்வதேச மாநாடான ANGAN (பசுமை வாழத் தகுந்த புதிய வாழ்விடத்தின் மூலம் இயற்கையை மேம்படுத்துதல்) ஆனது புது தில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- இது ஜெர்மனியின் GIZ அமைப்பு, மத்திய மின் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் எரிசக்தித் திறன் அமைப்பினால் (BEE - Bureau of Energy Efficiency) ஒருங்கிணைக்கப்பட்டது.

- முன்மொழியப்பட்ட கருத்து: எரிசக்தித் திறன் நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு ரூ 2000 பில்லியன் முதலீடு செய்வதன் மூலம் அடுத்தப் பத்து ஆண்டுகளுக்கு 388 பில்லியன் யூனிட் மின்சாரத்தைச் சேமிக்க வழிவகுக்கும்.

## இந்தியத் திறன் மேம்பாட்டு பணி

- இந்தியத் திறன் மேம்பாட்டு பணியின் (Indian Skill Development Services - ISDS) முதலாவது பிரிவானது மைசூருவில் உள்ள நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தில் (Administrative Training Institute - ATI) தனது பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- ISDS என்பது ஒரு புதிய மத்திய அரசுப் பணியாகும்.
- நோக்கம்: இந்தப் பணியானது திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் பயிற்சி இயக்குநரகத்திற்காக உருவாக்கப்பட்டது. இது ஒரு குரூப் ‘ஏ’ நிலை கொண்ட பணியாகும்.
- யுபிஎஸ்சி அமைப்பால் நடத்தப்பட்ட இந்திய பொறியியல் பணித் தேர்விலிருந்து ISDS பிரிவில் சேரும் முதல் பணித் தொகுதி இதுவாகும்.

## ரஃபேலுக்காக கோல்டன் ஏரோஸ் படைப் பிரிவு மீண்டும் புத்துயிராக்கம்

- இந்திய விமானப் படையானது (Indian Air Force - IAF) அம்பாலா விமானப் படைத் தளத்தை அடிப்படையாகக் கொண்ட “கோல்டன் ஏரோஸ்” என்ற 17வது படைப் பிரிவைப் புத்துயிரூட்டி மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.
- ரஃபேல் போர் விமானங்களின் முதலாவது படைப் பிரிவை இயக்குவதற்குப் பயிற்சி பெற்ற முதலாவது பிரிவு இதுவாகும்.
- இந்தப் படைப் பிரிவை மீண்டும் பணியில் இணைக்கும் விழாவானது IAFன் தலைமைத் தளபதியான பி.எஸ் தனோவாவால் தலைமை தாங்கப் பட்டது.

### *கோல்டன் ஏரோஸ் படைப் பிரிவு பற்றி*

- 17வது படைப் பிரிவானது 1951 அக்டோபர் 01 ஆம் தேதி விமானப் படை அதிகாரியான டி.எல். ஸ்பிரிங்கெட் என்பவரின் தலைமையின் கீழ் அம்பாலாவில் ஏற்படுத்தப்பட்டது.
- ரஷ்யாவைச் சேர்ந்த மிக் - 21 ஜெட் விமானங்களின் செயல்பாடுகளை IAF படிப்படியாக நிறுத்தத் தொடங்கிய பின்னர் இது 2016 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது.
- மேலும் இது 1999 ஆண்டில் ஏற்பட்ட கார்கில் மோதலின் போது தற்போதைய விமானப் படைத் தலைமைத் தளபதியான தனோவா என்பவராலும் தலைமை தாங்கப்பட்டது.

### *அம்பாலா விமானப் படை தளம் பற்றி*

- 1948 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஹரியானாவில் இருக்கும் இந்த அம்பாலா விமானப் படைத் தளமானது இராணுவ மற்றும் அரசாங்க விமானங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது ஜாகுவார் போர் விமானத்தின் இரண்டு படைப் பிரிவுகளையும் மிக் - 21 பைசனின் ஒரு படைப் பிரிவையும் கொண்டுள்ளது.
- இந்தத் தளத்தின் முதலாவது தளபதி விமானப் படை அதிகாரி அர்ஜன் சிங் ஆவார்.




## காஷ்மீர் ஆப்பிள்கள் - சந்தை இடையீட்டுத் திட்டம்

- காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள ஆப்பிள் விவசாயிகள் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் தற்பொழுது இழப்பைச் சந்தித்து வருகின்றனர்.
- விவசாயிகளிடமிருந்து நேரடியாக ஆப்பிள்களை வாங்குவதாகவும் அதற்கான பணமானது நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தப்படும் என்றும் மத்திய அரசு தற்பொழுது அறிவித்துள்ளது.
- ஒரு சிறப்புச் சந்தை இடையீட்டுத் திட்டத்தின் (MIS - Market Intervention Scheme) கீழ், இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு நிறுவனமானது விவசாயிகளிடமிருந்து ஆப்பிள்களைக் கொள்முதல் செய்யும்.
- அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் காரணமாக விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல முடியவில்லை.

***இதுபற்றி***

- MIS ஆனது வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையால் செயல்படுத்தப் படுகின்றது.
- குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price - MSP) "நிர்ணயிக்கப்படாத" அனைத்து விவசாய மற்றும் தோட்டக் கலைப் பொருட்களும் பொதுவாக இயற்கையால் அழிந்து போகக் கூடிய பொருள்களும் MISன் கீழ் அடங்கும்.

## விலங்குகளுக்கு நோய் கட்டுப்பாடு மற்றும் செயற்கைக் கருவூட்டல்

- பிரதமர் மோடி தேசிய விலங்கு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் (National Animal Disease Control Programme - NADCP) மற்றும் தேசிய செயற்கைக் கருவூட்டல் திட்டத்தை மதுராவில் தொடங்கி வைத்தார்.




- NADCP ஆனது நாட்டில் உள்ள கால்நடைகளிடையே ஏற்படும் கோமாரி நோய் மற்றும் கருச் சிதைவு நோய் ஆகியவற்றை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேற்கண்ட 2 நோய்களுக்கு எதிராக 500 மில்லியன் கால்நடைகளுக்கு (கால்நடைகள், எருமை, செம்மறியாடுகள், வெள்ளாடுகள் மற்றும் பன்றிகள்) தடுப்பூசி போடப்பட இருக்கின்றன.
- கருச் சிதைவு நோய்க்கு எதிராக ஆண்டுதோறும் 36 மில்லியன் பெண் எருதுக் கன்றுகளுக்குத் தடுப்பூசி போடப்பட இருக்கின்றன.
- இந்தத் திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன
  - 2025 ஆம் ஆண்டிற்குள் நோய்களைக் கட்டுப்படுத்துதல்
  - 2030 ஆம் ஆண்டிற்குள் நோய்களை ஒழித்தல்.

## இஞ்சியின் 2 புதிய இனங்கள்

- இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனத்தைச் (Botanical Survey of India - BSI) சேர்ந்த விஞ்ஞானிகள் பொதுவாக இஞ்சி என்று குறிப்பிடப்படும் இரண்டு புதிய இஞ்சி இனங்களை நாகாலாந்தில் கண்டுபிடித்தனர்.
- அவையாவன
  - ஜிஞ்ஜிபர் பெரினென்ஸ்
  - ஜிஞ்ஜிபர் டிமாபுரென்ஸ்
- இஞ்சியின் 141 இனங்கள் ஆசியா முழுவதும் பரவியுள்ளன. இவற்றில் 20ற்கும் மேற்பட்ட இனங்கள் வடகிழக்கு இந்தியாவில் காணப்படுகின்றன.



## AEM மற்றும் இந்தியா ஆகியவற்றிற்கிடையேயான 16வது கலந்துரையாடல்: பேங்காக்

- ஆசியான் அமைப்பில் உள்ள பத்து உறுப்பு நாடுகளின் பொருளாதார அமைச்சர்களும் இந்திய வர்த்தகத் துறை அமைச்சரும் சமீபத்தில் AEM (Economic Ministers from ten ASEAN Member States) மற்றும் இந்தியா ஆகியவற்றிற்கிடையே 16வது கலந்துரையாடலுக்காக சமீபத்தில் பேங்காக்கில் (தாய்லாந்து) சந்தித்தனர்.
- இந்தச் சந்திப்பின் போது, இந்தியாவும் ஆசியானும் வர்த்தகத்திற்குச் சாதகமான சூழ்நிலையை மேலும் வலுப்படுத்த பொருள்களின் மீதான தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை (Free Trade Agreement - FTA) மறு ஆய்வு செய்ய ஒப்புக் கொண்டுள்ளன.
- இருவழி வர்த்தகமானது 2018 ஆம் ஆண்டில் 80.8 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- இந்தியா ஆசியானின் ஆறாவது பெரிய வர்த்தக பங்களிப்பு நாடாகவும் அந்நிய நேரடி முதலீட்டில் ஆறாவது பெரிய மூல ஆதார நாடாகவும் உள்ளது.
- இந்தியா மற்றும் ஆசியான் ஆகியவற்றிற்கிடையே பொருட்களின் மீதான FTA ஆனது 2009 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டு 2010 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வந்தது.

## அதிக எண்ணிக்கையிலான ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் – தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லி

- பெங்களூரைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனமான ஜின்னோவ் மற்றும் டை தில்லி ஆகியவை "டர்போசார்ஜிங் டெல்லி - தேசியத் தலைநகர்ப் பகுதியில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் (புதிய தொழில் தொடங்குதல்) சூழல் அமைப்பு" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- பெங்களூரு மற்றும் மும்பையை விட தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லியானது அதிகமான ஸ்டார்ட் அப் மற்றும் யூனிகார்ன் நிறுவனங்களைக் கொண்டுள்ளது என்று அந்த அறிக்கை கூறுகின்றது.
- யூனிகார்ன் என்பது குறைந்தபட்சம் 1 பில்லியன் டாலர் மதிப்புள்ள நிறுவனங்கள் ஆகும்.

- பொருத்தமான அரசு மற்றும் தனியார் துறை இடையீடுகளுடன் தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லியானது 2025 ஆம் ஆண்டில் முதல் 5 உலகளாவிய ஸ்டார்ட் அப் மையங்களில் ஒன்றாக உருவெடுக்கும்.

## மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பெரும் அபராதங்களைத் திருத்தியமைத்தல்

- புதிய மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் அபராதங்களைத் திருத்துவதற்கு மாநிலங்களுக்கு அதிகாரம் உள்ளது என்று சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.
- மோட்டார் வாகனச் சட்டம் பொதுப் பட்டியலில் உள்ளது. எனவே மாநிலங்களும் மத்திய அரசும் திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் விதிகளைத் திருத்தி வடிவமைக்க முடியும்.
- மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) சட்டம், 2019 ஆனது ஆகஸ்ட் 9 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- அபராத விதிகள் உட்பட சட்டத்தின் 63 உட்பிரிவுகள் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தன.
- 24 உட்பிரிவுகளுக்கு மாநிலங்கள் அபராதங்களைத் திருத்தியமைக்க முடியும்.
- புதிய மோட்டார் வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத் தொகையை குஜராத் மாநில அரசு ஏற்கனவே குறைத்துள்ளது.

## தேசிய மரபணுத் தொடர் (புற்றுநோய்) – இந்தியாவிற்கான குறிப்பிட்ட தீர்வுகள்

- புற்றுநோய்க்கான தேசிய மரபணுத் தொடரை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அஸ்வினி குமார் சவ்பே அறிவித்துள்ளார்.
- இந்த முயற்சி புற்றுநோய் ஆராய்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுச் சென்று பல்வேறு பொருளாதாரப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு சிகிச்சையை சாத்தியமாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தத் தேசிய மரபணுத் தொடர் இந்தியாவில் உள்ள புற்றுநோய் நோயாளிகளின் மாதிரிகளைச் சேகரித்து மரபணுத் தரவுகளை ஆய்வு செய்யும்.
- இந்திய மக்களுக்கு சரியான சிகிச்சை முறைகளை அடையாளம் காண இது பயன்படுத்தப்படும்.

## தூய்மை என்பது சேவை (ஸ்வச்தா ஹை சேவா) 2019 - நெகிழிப் பயன்பாடு

- ஸ்வச்தா ஹை சேவா 2019 ஆனது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள மதுராவில் தொடங்கப் பட்டது.
- இந்தப் பிரச்சாரத்தின் கருப்பொருள் ‘நெகிழிக் கழிவு குறித்த விழிப்புணர்வு மற்றும் மேலாண்மை’ என்பதாகும்.
- இது செப்டம்பர் 11 முதல் அக்டோபர் 1 வரை நெகிழிக் கழிவு மேலாண்மை குறித்த மிகப்பெரிய விழிப்புணர்வை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அக்டோபர் 2 ஆம் தேதியன்று நெகிழிக் கழிவுகளின் சேகரிப்பு மற்றும் அவற்றைப் பிரித்தெடுக்கப் படுவதற்கான ஒரு நாடு தழுவிய பிரச்சாரமும் நடைபெறும்.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 27 அன்று கொண்டாடப்படவிருக்கும் தீபாவளிக்கு முன் சேகரிக்கப்பட்ட நெகிழிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டு அவை திறம்பட அகற்றப்படும்.
- ஸ்வச்தா ஹை சேவா 2019ஐ அறிமுகப்படுத்திய பின்னர், பிரதமர் மோடி பசுதான் ஆரோக்கிய விக்யான் மேளாவைப் பார்வையிட்டார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், மாடுகளின் வயிற்றில் இருந்து நெகிழிக் கழிவுகளை அகற்றுவதற்காக அவைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டன.



## மலேரியா மற்றும் இந்தியா – 4வது இடம்

- சமீபத்தில் வெளியிடப்பட்ட லான்செட் ஆணையத்தின் அறிக்கையின்படி, உலகில் மலேரியா நோய்ப் பாதிப்புகளின் எண்ணிக்கையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 219 மில்லியன் மலேரிய நோய்ப் பாதிப்புகளில், 9.6 மில்லியன் நோய்ப் பாதிப்புகள் இந்தியாவில் நிகழ்ந்தன.
- இந்தப் பட்டியலில் இந்தியாவிற்கு முன்பு நைஜீரியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகள் உள்ளன.
- உலகின் பிற பகுதிகளில், மலேரியா ஒரு முதன்மையான கிராமப்புற நோயாக இருக்கின்றது. ஆனால் "நகர்ப்புற மலேரியா" நோய்ப் பாதிப்புகள் ஏற்பட்ட ஒரே நாடு இந்தியா ஆகும்.
- 2017 ஆம் ஆண்டில், 71 சதவீத மலேரியா நோய்ப் பாதிப்புகள் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நிகழ்ந்தன.
- இந்தியாவில் உள்ள ஒரு முக்கியமான மலேரியா நோய்ப் பரப்பியான ‘அனோபிலிஸ் ஸ்டீபன்சி’ இந்திய நகர்ப்புற சூழல்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றது.

## இந்தியத் திறன்கள் நிறுவனம் - 3 நகரங்கள்

- மத்தியத் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சகத்தின் இணையமைச்சர் ராஜ் குமார் சிங் மும்பையில் உள்ள இந்தியத் திறன்கள் நிறுவனத்திற்கு (Indian Institute of Skills - IIS) அடிக்கல் நாட்டினார்.
- குறிக்கோள்: பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த பின்னர் தொழில்நுட்பக் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த துறைகளில் திறன் பயிற்சிகளை அளித்தல்.
- ஒவ்வொரு ஆண்டும் 70% வேலைவாய்ப்புகளுடன் 5,000 பயிற்சியாளர்கள் தேர்ச்சி பெறுவார்கள் என்பதை உறுதிப்படுத்த IIS முயல்கின்றது.
- IIS ஆனது இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனம் ஆகியவற்றின் வரிசையில் செயல்பட இருக்கின்றது.
- ஆரம்பத்தில் மும்பை, அகமதாபாத் மற்றும் கான்பூர் ஆகிய 3 இடங்களில் IISகள் அமைக்கப்பட விருக்கின்றன.
- IISகள் தொடங்குவது இந்தியாவை உலகின் திறன்கள் தலைநகராக மாற்றுவதற்கான ஒரு படியாகும்.
- இந்த நிறுவனங்கள் ஒரு பொது - தனியார் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட விருக்கின்றன. மும்பையில் உள்ள டாடா கல்வி மேம்பாட்டு அறக்கட்டளையானது IISஇன் ஒரு தனியார் பங்காளர் நிறுவனமாகும்.

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குண்டு துளைக்காத கவச ஆடைகள்

- இந்தியா தனது சொந்தத் தரத்தின்படி குண்டு துளைக்காத கவச ஆடைகளை ஐரோப்பிய நாடுகள் உட்பட 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது.




- 360 கோண அளவில் பாதுகாப்பை வழங்கும் குண்டு துளைக்காத கவச ஆடைகளின் மீது தனது சொந்த தேசிய தரத்தை கொண்ட நான்காவது நாடு இந்தியா ஆகும். இதற்கு முன்பு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் குண்டு துளைக்காத கவச ஆடைகளின் மீது தனது சொந்த தேசியத் தரத்தைக் கொண்டுள்ளன.

- பிரதம மந்திரி அலுவலகம் மற்றும் நிதி ஆயோக் ஆகிய அமைப்புகளின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து, 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியத் தர நிர்ணய அமைப்பானது குண்டு துளைக்காத கவச ஆடைகளுக்கான தேசியத் தரத்தை உருவாக்கியது.
- இது மிதானி, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆவடியில் உள்ள பாதுகாப்பு தளவாடத் தொழிற்சாலை ஆகிய பாதுகாப்பு சார்ந்த 2 பொதுத் துறை நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டது.

## பிரதான் மந்திரி கிசான் மான் தன் திட்டம்

- பிரதமர் மோடி பிரதான் மந்திரி கிசான் மான் தன் யோஜனா (Pradhan Mantri Kisan Maan Dhan Yojana - PM-KMY) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினார்.
- PM-KMY என்பது நாட்டில் உள்ள நிலம் வைத்துள்ள அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான (Small and Marginal Farmers - SMFs) ஒரு முதியோர் ஓய்வூதியத் திட்டமாகும்.
- இது 18 வயது முதல் 40 வயது வரை உள்ள விவசாயிகளுக்கான ஒரு தன்னார்வ மற்றும் பங்களிப்புத் திட்டமாகும். இதில் விவசாயிகள் 60 வயதை எட்டும்போது மாத ஓய்வூதியமாக ரூ. 3000 வழங்கப்படும்.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஓய்வூதிய நிதி மேலாளராகவும் ஓய்வூதிய நிதி வழங்குதலுக்கு பொறுப்புமிக்க அமைப்பாகவும் இருக்கும்.

## வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டம்

- வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான தேசிய ஓய்வூதியத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கினார்.
- இது ஆண்டு வருமானம் ரூ 1.5 கோடிக்கு மிகாமல் இருக்கும் கடைக்காரர்கள் / சில்லறை வர்த்தகர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கான ஒரு தன்னார்வ மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமாகும்.
- இது 18 வயது முதல் 40 வயது வரையில் உள்ளவர்களுக்கான ஒரு திட்டமாகும். இவர்கள் 60 வயதை எட்டும்போது மாதந்தோறும் குறைந்தபட்ச உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியமாக ரூ 3,000 வழங்கப்படும்.
- மாதாந்திர ஓய்வூதியப் பங்களிப்பில் 50% நிதியை மத்திய அரசு வழங்கும். மீதமுள்ள 50% நிதியானது பயனாளியால் வழங்கப்படும்.

## ஏகலைவா மாதிரிப் பள்ளிகள் தொடக்கம்

- நாடு முழுவதும் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகளில் 462 ஏகலைவா மாதிரிக் குடியிருப்புப் பள்ளிகளை (Ekalavya Model Residential Schools - EMRS) பிரதமர் மோடி தொடங்கினார்.
- இந்தப் பள்ளிகள் இந்தப் பகுதிகளில் உள்ள பழங்குடியின மாணவர்களுக்குத் தரமான தொடக்க நிலை, இடை நிலை மற்றும் உயர் இடை நிலைக் கல்வியை வழங்குவதற்குக் கவனம் செலுத்துகின்றன.

- இது மத்திய பழங்குடி விவகார அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படுகின்றது.




***இதுபற்றி***

- EMRS என்பது இந்தியா முழுவதும் உள்ள இந்தியப் பழங்குடியினருக்கு (பட்டியல் பழங்குடியினர்) மாதிரிக் குடியிருப்புப் பள்ளிகளை ஏற்படுத்தும் இந்திய அரசின் ஒரு திட்டமாகும்.
- இது 1997-98 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அவை இந்திய அரசியலமைப்பின் சரத்து 275 (1) இன் கீழ் மானியங்களுடன் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

## தேசியப் புலனாய்வுத் தொடர் (NATGRID) திட்டம்

- NATGRID திட்டத்தின் கீழ், குடியேற்ற நுழைவு & வெளியேறுதல், வங்கி மற்றும் தொலைபேசி விவரங்கள் தொடர்பான பதிவுகளின் தரவுத் தளத்துடன் "சமூக ஊடகக் கணக்குகளை இணைக்க" மத்திய அரசாங்கம் முன்மொழிகின்றது.
- NATGRID தரவுத் தளமானது தொலைத் தொடர்பு, வரி தொடர்பான கோப்புகள், வங்கி, குடியேற்றம் போன்ற துறைகளில் உள்ள 20க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தகவல்களைத் தொகுக்கும்.
- நுண்ணறிவுப் பிரிவு, RAW உளவு அமைப்பு (Research and Analysis Wing) போன்ற குறைந்தது 10 மத்திய நிறுவனங்கள் பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைகளுக்காக இந்தப் பாதுகாக்கப்பட்ட தளத்தில் உள்ள தரவை அணுகும்.
- இந்தத் திட்டமானது 26/11 மும்பை பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- NATGRID தலைவர்: ஆஷிஷ் குப்தா இந்திய ஆட்சிப் பணி.

## ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்லோவேனியா - இந்தியக் குடியரசுத் தலைவர் பயணம்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்காவிக் நகரில் நடத்தப்பட்ட இந்தியா - ஐஸ்லாந்து வர்த்தக மன்றத்தில் உரையாற்றினார்.
- அவர் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை ஐஸ்லாந்தின் ரெய்காவிக் நகருக்கு 3 நாள் அரசு முறைப் பயணமாகச் சென்றுள்ளார்.
- இது ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்லோவேனியாவுக்கான இந்தியக் குடியரசுத் தலைவரின் அரசு முறைப் பயணத்தின் ஒரு பகுதியாகும்.
- 2005 ஆம் ஆண்டில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பயணம் செய்த பின்னர் ஐஸ்லாந்துக்கு ஒரு இந்திய குடியரசுத் தலைவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

## இந்திய மகளிர் காவல் துறை அதிகாரிகளுக்கு ஐ.நா. கௌரவ விருது

- தெற்கு சூடானில் உலக அமைப்பின் பணியில் காவல் துறை அதிகாரிகளின் பாராட்டத்தக்க சேவைகளுக்காக ஐந்து இந்தியப் பெண் காவல்துறை அதிகாரிகள் ஐக்கிய நாடுகள் சபையினால் கௌரவிக்கப்பட்டனர்.
- ஐ.நா. பதக்கம் வழங்கப்பட்ட பெண் அதிகாரிகள் பின்வருமாறு
  - ரீனா யாதவ் (சண்டிகர் காவல்துறை ஆய்வாளர்)
  - கோபிகா ஜாகிர்தார் (மகாராஷ்டிரா காவல்துறையின் துணைக் கண்காணிப்பாளர்)
  - பாரதி சமந்திரே (உள்துறை அமைச்சகத்தின் காவல்துறைக் துணைக் கண்காணிப்பாளர்)
  - ராகினி குமாரி (உள்துறை அமைச்சகத்தின் காவல்துறை ஆய்வாளர்)
  - கமல் சேகாவத் (ஏஎஸ்பி, ராஜஸ்தான் காவல்துறையின் உதவிக் கண்காணிப்பாளர்).





- தெற்கு சூடானின் ஜூபாவில் நடைபெற்ற ஐ.நா. திட்டத்தின் விருது வழங்கும் விழாவில் அவர்களுக்கு ஐ.நா. விருது வழங்கப்பட்டது.

## மத்திய கருவிகள் அடையாளப் பதிவு

- மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சரான ரவி சங்கர் பிரசாத் மத்திய கருவிகள் அடையாள பதிவேட்டைத் (Central Equipment Identity Register - CEIR) தொடங்கினார்.
- நாடு முழுவதும் பரவலாக நடைபெறும் கைபேசிகளின் திருட்டு மற்றும் அவற்றை நகலாக்கம் செய்தல் ஆகியவற்றைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CEIR என்பது ஒவ்வொரு கைபேசிச் சாதனத்திற்கும் தனித்துவ அடையாளமான 15 இலக்க எண்களைக் கொண்ட சர்வதேச கைபேசி கருவி அடையாளங்களின் (International Mobile Equipment Identities - IMEIs) தரவுத் தளமாகும்.
- இந்தத் திட்டம் மகாராஷ்டிராவில் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டுப் பின்னர் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட இருக்கின்றது.


## கடல்சார் தகவல் தொடர்புச் சேவைகள்

- மத்தியத் தகவல் தொடர்பு, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் கடல்சார் தகவல் தொடர்புச் சேவைகளை மும்பையில் தொடங்கினார்.
- இது இந்தியாவில் உள்ள பயணக் கப்பல்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பல்களில் பயணம் செய்யும் போது அந்தக் கப்பலில் உள்ளவர்களுக்கு குரல், தரவு மற்றும் காணொளிச் சேவைகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் கடலில் இருப்பவர்களுக்கு ஒரு உயர் நிலையிலான ஆதரவை வழங்கும்.
- விசாட் தீர்வுகள் வழங்கும் ஒரு டாடா நிறுவனமான ‘நெல்கோ’ ஆனது கடல்சார் துறைக்கு அகலக்கற்றைச் சேவைகளை வழங்கும் இந்தியாவின் முதலாவது நிறுவனமாக உருவெடுத்துள்ளது.



## LEADS அறிக்கை 2019

- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் புதுடெல்லியில் நடைபெற்ற பொருள்களின் இயக்கம் மற்றும் செயல்திறன் குறித்த கருத்து அடிப்படையிலான குறியீடு மீதான (LEADS – வெவ்வேறு மாநிலங்களுக்கு இடையிலான எளிய சரக்குப் போக்குவரத்து) இரண்டாவது பதிப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.
- இந்த அறிக்கையில் குஜராத் முதலிடத்திலும், பஞ்சாப் மற்றும் ஆந்திரப் பிரதேசம் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களிலும் உள்ளன.
- யூனியன் பிரதேசங்களில் சண்டிகர் முதலிடத்திலும், டெல்லி மற்றும் புதுச்சேரி முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களிலும் உள்ளன.
- மலைப்பாங்கான கிழக்கு மாநிலங்களில் திரிபுரா முதலிடத்திலும், இமாச்சலப் பிரதேசம் தர வரிசையில் கடைசியாக 22வது இடத்திலும் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு குறியீட்டு வரிசையில் முதல் மூன்று இடங்களில் உள்ள மாநிலங்கள் முந்தைய ஆண்டின் குறியீட்டிலும் அதே நிலையை வகித்தன.
- இந்த குறியீடு ஆனது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சத்தால் டிலோய்ட் டோஸ்ச் டோமஸ்சு லிமிடெட் கம்பெனியுடன் இணைந்து மேம்படுத்தப்பட்டது.




| Top 5 | Bottom 5 |
|---|---|
| 1 Gujarat | 18 Jammu & Kashmir |
| 2 Punjab | 19 Uttarakhand |
| 3 Andhra Pradesh | 20 Bihar |
| 4 Maharashtra | 21 Goa |
| 5 Tamil Nadu | 22 Himachal Pradesh |

## ஹிம்விஜய் – போர்ப் பயிற்சி

- இந்திய இராணுவமும், இந்திய விமானப் படையும் இணைந்து அருணாச்சலப் பிரதேசம் அருகிலுள்ள சீன எல்லையில் ஹிம்விஜய் – 2019 என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட ஒரு பெரிய போர்ப் பயிற்சியை நடத்தவுள்ளன.
- கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள போர்ப்படை வீரர்களால் நடத்தப்படும் முதலாவது மிகப்பெரிய போர்ப் பயிற்சி இதுவேயாகும்.
- முதன் முதலாக 17 மலைக்குழு படையினர் மற்றும் 2500க்கும் மேற்பட்ட படைவீரர்கள் இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்க உள்ளனர்.

## தூர்தர்ஷன் அலைவரிசை - 60 ஆண்டுகள் நிறைவு

- தூர்தர்ஷன் அலைவரிசைச் சேவையானது 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- தூர்தர்ஷன் ஆனது இந்திய அரசால் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி பொதுச் சேவை ஒளிபரப்பாகும். இது இந்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்திற்குச் சொந்தமானதாகும்.
- இது 1959 ஆம் ஆண்டில் தில்லியில் நிறுவப்பட்டது. பின்னர் இது மும்பை மற்றும் பிற நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்டது.
- 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று இது அகில இந்திய வானொலியில் இருந்து பிரிக்கப்பட்டு தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் ஒரு புதிய துறையாக உருவெடுத்தது.
- இதன் தலைமையகம் தில்லியில் உள்ளது. இதன் குறிக்கோள் "சத்யம் சிவம் சுந்தரம்" என்பதாகும்.

## நாட்டின் பகுதிகளை வரைபடமாக்குவதற்கு ஆளில்லா விமானங்கள்

- இந்தியக் கள ஆய்வு நிறுவனமானது (Survey of India - SoI) நாட்டின் பகுதிகளை வரைபடமாக்குவதற்கு முதன்முறையாக ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்த இருக்கின்றது.
- இந்தியப் புவியியலில் 75 சதவிகிதப் பகுதிகளை (2.4 மில்லியன் சதுர கி.மீ) வரைபடமாக்குவதற்கு ஏறத்தாழ 300 ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- இதற்காக முன்னோடியில்லாத விவரங்கள் சேகரிக்கப்பட இருக்கின்றன.
- கிராமங்களில் உள்ள நிலத்தின் உயர் தெளிவுத் திறன் கொண்ட வரைபடங்கள் கிராமங்களில் நிலப் பட்டாக்களை (நிலம் சார்ந்த விவரங்களை) டிஜிட்டல் மயமாக்க உதவும்.
- தற்போது சிறந்த SoI வரைபடங்கள் 1 : 250000 என்ற அளவில் தெளிவுத் திறன் கொண்டவையாகும். அதாவது வரைபடத்தில் 1 செ.மீ ஆனது நிலப்பரப்பில் 2500 செ.மீ. என்ற அளவைக் குறிக்கும்.
- இப்போது தயாரிக்கப்பட இருக்கும் வரைபடங்கள் 1: 500 என்ற அளவில் தெளிவுத்திறன் கொண்டதாக இருக்கும். அதாவது வரைபடத்தில் 1 செ.மீ ஆனது நிலப் பரப்பில் 500 செ.மீ. என்ற அளவைக் குறிக்கும்.

***இதுபற்றி***

- இந்தியக் கள ஆய்வு நிறுவனமானது நாட்டின் தேசியக் கணக்கெடுப்பு மற்றும் வரைபடம் ஆகியவற்றை மேற்கொள்ளும் ஒரு அமைப்பாகும்.
- இது இந்திய அரசின் மிகப் பழமையான ஒரு அறிவியல் துறை ஆகும்.
- இது 1767 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் உத்தரகாண்ட் மாநிலத்தின் டேராடூனில் உள்ளது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ளது.

## முதலாவது தனியார் ரயில்: தேஜாஸ் தில்லி – லக்னோ

- இந்தியாவின் முதலாவது தனியார் ரயிலான தில்லி - லக்னோ தேஜாஸ் விரைவு ரயிலானது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி முதல் இயங்க விருக்கின்றது.
- இது இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகத்தினால் (Indian Railway Catering and Tourism Corporation - IRCTC) முழுவதுமாக இயக்கப்படும் இந்திய ரயில்வேயின் முதலாவது ரயிலாகும்.
- முதன்முறையாக, ரயில் பெட்டிகளின் நுழைவு வாயில்களிலேயே கட்டணம் செலுத்தி எடைகளை எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோகச் சேவை ஆகியவை இதில் அறிமுகப்படுத்தப் படுகின்றது.
- இந்த ரயிலுக்கு முன்பதிவு மையங்களில் தட்கல் பயணச் சீட்டுகள் மற்றும் சாதாரண பயணச் சீட்டுகள் வழங்கப்படுவதில்லை.
- இந்த ரயில்களில் சலுகைகள் மற்றும் பணியாளர்கள் பணியில் இருக்கும் போது பயணித்தல் ஆகியவை அனுமதிக்கப்படாது.



## மாஸ்கோவிற்கு தூதரகப் பணிக்காகச் செல்லும் முதலாவது பெண் விங் கமாண்டர்

- போர் விமானங்களைக் கையாள்வதில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு வானியல் பொறியியலாளர் மற்றும் விங் கமாண்டரான அஞ்சலி சிங் என்பவர் மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகத்தில் துணை விமான இணைப்பு அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார்.
- வெளிநாட்டில் உள்ள ஒரு இந்தியத் திட்டத்தில் பாதுகாப்புப் பணியாளராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் அதிகாரி இவராவார்.
- வெளிநாடுகளில் உள்ள இந்தியப் பணிகளில் “ஏதேனும்” ஒரு இராணுவத் தூதராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் இந்திய ஆயுதப் படை அதிகாரி என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.
- உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் 100க்கும் மேற்பட்ட பாதுகாப்பு இணைப்பாளர்கள் அல்லது ஆலோசகர்களை இந்தியா கொண்டுள்ளது.

- அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ரஷ்யா போன்ற சில நாடுகளில் மட்டுமே ராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை ஆகிய மூன்று இந்தியப் படைகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

*இதுபற்றி*

- ஒரு இராணுவ இணைப்பாளர் என்பவர் பெரும்பாலும் தூதரகத்தில் இராஜதந்திரப் பணிக்காக இணைக்கப்பட்ட ஒரு இராணுவ நிபுணர் ஆவார்.
- அவர்கள் இராஜதந்திர நிலையையும் சலுகைகளையும் அனுபவிக்கின்றார்கள்.

## பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) திருத்த மசோதா, 2019

- கடந்த நிதிநிலைக் கூட்டத் தொடரின் போது (பட்ஜெட்) பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) திருத்த மசோதா, 2019 ஆனது நடைமுறைக்கு வந்துள்ளது.
- இந்த மசோதாவானது பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1971 இல் திருத்தம் செய்கின்றது.
- இது அரசாங்கக் குடியிருப்புகளில் இருந்து அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை சீராகவும் விரைவாகவும் வெளியேற்ற உதவ இருக்கின்றது.
- இது தகுதியான நபர்களுக்கான அரசாங்கக் குடியிருப்பு வசதிகள் கிடைக்கப் பெறுவதை அதிகரிக்கும் என்றும் அவர்கள் அந்த வசதிகளைப் பெறுவதற்கானக் காத்திருப்புக் காலத்தைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தூய்மையான நிலக்கரி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான தேசிய மையம்

- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் தூய்மையான நிலக்கரி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான தேசிய மையத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷவர்தன் திறந்து வைத்தார்.
- குறிக்கோள்
    - தூய்மையான நிலக்கரி தொழில்நுட்பங்களின் வளர்ச்சி
    - உய்ய மிகைநிலை மின் உற்பத்தி தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்.
- நாட்டின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய தூய்மையான நிலக்கரி குறித்த இந்த ஆராய்ச்சியானது உதவியாக இருக்கும்.

*இதுபற்றி*

- தூய்மையான நிலக்கரி தொழில்நுட்பம் என்பது நிலக்கரி எரிசக்தி உற்பத்தியின் எதிர்மறையான சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்கும் தொழில்நுட்பங்களின் தொகுப்பாகும்.

## சிட்மெக்ஸ் - 19 (SITMEX – 19)

- சிங்கப்பூர் கடற் படை, தாய்லாந்துக் கடற் படை மற்றும் இந்தியக் கடற் படை ஆகியவற்றை உள்ளடக்கிய சிட்மெக்ஸ் - 19 என்ற முதலாவது முத்தரப்பு கடற் பயிற்சியானது போர்ட் பிளேயரில் தொடங்கப் பட்டுள்ளது.
- ஐந்து நாள் நடைபெறும் இந்தக் கடற் படைப் பயிற்சியானது சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் கடற் படைகளுக்கு இடையேயான கடல்சார் உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பயிற்சியானது பிராந்தியத்தில் உள்ள ஒட்டுமொத்த கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.
- இந்தப் பயிற்சியில் சேர மலேசியா தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

## 5வது சர்வதேச ராமாயணத் திருவிழா

- இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றத்தால் (Indian Council for Cultural Relations - ICCR) ஏற்பாடு செய்யப்பட்ட 5வது சர்வதேச ராமாயணத் திருவிழாவானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதி முதல் செப்டம்பர் 19 ஆம் தேதி வரை புது தில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்திருவிழாவானது சர்வதேச ராமாயணத் திருவிழாவின் 5வது பதிப்பாகும்.
- இந்தத் திருவிழாவில் 17 நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்று ராமாயணத்தின் பதிப்புகளை வழங்கியுள்ளனர்.

***இதுபற்றி***

- ICCR ஆனது 1950 இல் இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சராகப் பதவி வகித்த மௌலானா அபுல் கலாம் ஆசாத் என்பவரால் நிறுவப்பட்டது.
- இந்தியக் கலாச்சாரத்தைப் பரப்புதல் மற்றும் இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு & கலாச்சார உறவுகளை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் ICCR ஆனது நிறுவப்பட்டது.

## பாரத் கட்டணம் செலுத்தும் முறை

- இந்திய ரிசர்வ் வங்கியானது நுகர்வோருக்குச் சாதகமான ஒரு முன்னெடுப்பாக, பாரத் கட்டணம் செலுத்தும் முறையின் (Bharat Bill Payment System – BBPS) நோக்கம் மற்றும் அதன் வரம்பெல்லையை விரிவுபடுத்தியுள்ளது.
- தன்னார்வ அடிப்படையில், தகுதியுள்ள பங்கேற்பாளர்களாக தொடர்ச்சியான கட்டணங்கள் மற்றும் பண வழங்கீடுகளைத் (முன்பணம் செலுத்துதல் தவிர) திரட்டும் அனைத்து வகைக் கட்டணதாரர்களும் இதில் அடங்குவர்.
- பள்ளிக் கட்டணம், காப்பீட்டுத் தொகை, மாதாந்திர தவணைத் தொகைகள் மற்றும் நகராட்சி வரி ஆகியவை BBPS மூலமாக செலுத்தலாம்.

***இதுபற்றி***

- BBPS என்பது ஒரு ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறையாகும். இது ஆன்லைன்

(நிகழ்நேரம்) மற்றும் பணியில் உள்ள முகவர்களின் அமைப்பு வழியாக செயல்படக் கூடிய கட்டணச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

- இது இந்திய தேசியப் பணவழங்கீட்டுக் கழகத்தின் (National Payments Corporation of India) கீழ் செயல்படுகின்றது.

## பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் வழங்கப்பட்ட போர் சார்ந்த மென்பொருள்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (Defence Research Development Organisation - DRDO) ஒரு புதிய தலைமுறை அடிப்படையிலான போர் சார்ந்த மென்பொருளை இந்தியக் கடற்படைக்கு வழங்கியுள்ளது.
- இந்த மென்பொருளானது சமீபத்திய தொழில்நுட்ப மற்றும் கணினி கருவிகளைப் பயன்படுத்தி, பயிற்சியளிக்கும் சூழலை உருவாக்குவதற்கு கடல்சார் போர் மையங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது புது தில்லியை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு சார்ந்த ஆய்வுகள் & பகுப்பாய்வு நிறுவனம் (Institute for Systems Studies and Analysis - ISSA) மற்றும் விசாகப்பட்டினத்தில் உள்ள கடல்சார் போர் மையங்கள் ஆகியவற்றால் மேம்படுத்தப்பட்டது.
- ISSA ஆனது ஒரு முதன்மையான DRDO ஆய்வகமாகும்.

## எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பு

- எஃகு இறக்குமதி கண்காணிப்பு அமைப்பைத் (Steel Import Monitoring System – SIMS) மத்திய வர்த்தக & தொழில் துறை மற்றும் ரயில்வே அமைச்சரான பியூஷ் கோயல் தொடங்கினார்.
- இது அமெரிக்க எஃகு இறக்குமதி கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு அமைப்பின் மாதிரியின் படி உருவாக்கப்பட்டுள்ளது.
- SIMS குறித்த அறிவிக்கை ஒன்று 2019 ஆம் ஆண்டு நவம்பர் 1 முதல் நடைமுறைக்கு வரவிருக்கின்றது.
- இது திறன் வாய்ந்த கொள்கை இடையீடுகளைக் கொண்டிருப்பதற்காக எஃகு இறக்குமதி குறித்த முன்கூட்டியத் தகவல்களை மத்திய அரசு மற்றும் தொழில் துறை பங்குதாரர்களுக்கு வழங்கும்.
- இந்தத் தரவுகள் எஃகு அமைச்சகத்தினால் கண்காணிக்கப்பட இருக்கின்றன.

## மின்னணு சிகரெட்டுகள் தடைசெய்யப்பட்டுள்ளன

- மின்னணு சிகரெட்டுகளைத் தடை செய்ய மத்திய அமைச்சரவை “ஒப்புதல்” அளித்துள்ளது.
- மின்னணு மூலம் உடலில் நிக்கோடினை செலுத்தும் முறையான ENDS (எலக்ட்ரானிக் நிகோடின் டெலிவரி சிஸ்டம்ஸ்/ Electronic Nicotine Delivery Systems) அல்லது மின்னணு சிகரெட்டுகள் தொடர்பான உற்பத்தி, இறக்குமதி/ஏற்றுமதி, போக்குவரத்து, விற்பனை, விநியோகம், சேமிப்பு மற்றும் விளம்பரம் ஆகியவை தடை செய்யப்பட்டு உள்ளன.


- தடைக்காக அவசர வழிச் சட்ட முறையை அரசாங்கம் எடுத்துள்ளது.
- பதினெட்டு மாநிலங்களும் இரண்டு யூனியன் பிரதேசங்களும் ஏற்கனவே மின்-சிகரெட்டுகள், மின்னணு ஹூக்கா மற்றும் ஆவியாக்குதல் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளன.




## உலகின் மிகப்பெரிய வம்சாவளியினர் - இந்தியர்கள்

- 17.5 மில்லியன் எண்ணிக்கையில், இந்திய வம்சாவளியினர் உலகின் மிகப்பெரிய வம்சாவளியினராக தொடர்கின்றனர்.
- இது 2019 ஆம் ஆண்டின் இடைக் காலத்தில் உலகின் ஒட்டுமொத்த புலம்பெயர்ந்த 272 மில்லியன் மக்களில் 6.4% ஆகும்.
- ஐக்கிய அரபு அமீரகம் (3.4 மில்லியன்), அமெரிக்கா (2.6 மில்லியன்) மற்றும் சவுதி அரேபியா (2.4 மில்லியன்) ஆகிய நாடுகள் இந்தியர்களுக்கான முதல் மூன்று புலம்பெயரும் இடங்களாகும்.
- கடந்த ஆண்டில் 50,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர்.
- சர்வதேச புலம்பெயர்ந்தோர் நிலை 2019 என்ற இந்த அறிக்கை ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் நிறுவனத்தின் மக்கள்தொகைப் பிரிவால் வெளியிடப் பட்டுள்ளது..
- இரண்டாவது மிகப்பெரிய வம்சாவளியினராக மெக்சிகோவைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் (11.8 மில்லியன்) கட்டமைக்கின்றனர். அதைத் தொடர்ந்து சீனா (10.7 மில்லியன்), ரஷ்யா (10.5 மில்லியன்), சிரியா (8.2 மில்லியன்), வங்கதேசம் (7.8 மில்லியன்), பாகிஸ்தான் (6.3 மில்லியன்), உக்ரைன் (5.9 மில்லியன்), பிலிப்பைன்ஸ் (5.4 மில்லியன்) மற்றும் ஆப்கானிஸ்தான் (5.1 மில்லியன்) ஆகிய நாட்டவர் உள்ளனர்.

- 2019 ஆம் ஆண்டில் மிக அதிகமான சர்வதேச புலம்பெயர்வாளர்களுக்கு (82 மில்லியன்) பிராந்திய ரீதியில் ஐரோப்பா அடைக்கலம் அளித்தது. அதனைத் தொடர்ந்து வடக்கு அமெரிக்கா (59 மில்லியன்), வடக்கு ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியப் பகுதி (49 மில்லியன்) ஆகியன உள்ளன.
- நாடுகள் மட்டத்தில், அமெரிக்கா உலகின் மொத்த புலம்பெயர்வாளர்களில் 19 சதவிகித அளவிற்குச் சமமாக மிக அதிக அளவிற்கு (51 மில்லியன்) சர்வதேச புலம்பெயர்வாளர்களுக்கு அடைக்கலம் அளித்துக் கொண்டிருக்கின்றது.
- அதனைத் தொடர்ந்து ஜெர்மனியும் சவுதி அரேபியாவும் தலா 13 மில்லியன் எண்களுடன் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் புலம்பெயர் ஆதரவளிக்கும் நாடாகவும், ரஷ்யா (12 மில்லியன்) ஐக்கியப் பேரரசு (10 மில்லியன்), ஐக்கிய அரபு அமீரகம் (4 மில்லியன்), பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா (தலா 8 மில்லியன் அளவிலும்), இத்தாலி (16 மில்லியன்) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.




## மேம்பட்ட தரையிறங்கும் மைதானம் @ விஜயநகர், அருணாச்சலப் பிரதேசம்


- அருணாச்சலப் பிரதேசத்தின் சாங்லாங் மாவட்டத்தில் உள்ள விஜயநகரில் மேம்பட்ட தரையிறங்கும் மைதானத்தை இந்தியா மீண்டும் திறந்துள்ளது.
- மே 1961 முதல் மூலோபாய காரணங்களுக்காக அங்கு குடியேறிய முன்னாள் அசாம் ரைபிள்ஸ் படையின் பணியாளர்களால் விஜயநகர் கட்டுப்படுத்தப் படுகிறது.
- இந்த இடம் மியான்மரின் எல்லையில் உள்ளது.
- உள்ளூர் லிசு பழங்குடி மக்கள் இந்த இடத்தை டவுடி என்று அழைக்கிறார்கள்.
- இந்திய விமானப் படை முதன்முதலில் விஜயநகரில் டகோட்டா மற்றும் ஓட்டர் விமானங்களுடன் 1962 இல் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது.
- அதிக எடையைத் தூக்கும் போக்குவரத்து விமானங்களான சி-130 ஜே மற்றும் சி-17 ஆகியன தரையிறங்குவதற்கான கூடுதல் ஏற்பாடுகளுடன் தற்போது ஒரு ஏ.என் 32 விமானம் ஆனது தரையிறங்கி உள்ளது.

## இந்திய ரயில்வே: ஹெட் ஆன் ஜெனரேஷன் (HOG) தொழில்நுட்பம்

- இந்த ஆண்டுக்குள் அனைத்து எல்.எச்.பி கோச் (Linke-Hofmann-Busch coach) ரயில்களிலும் ஹெட் ஆன் ஜெனரேஷன் தொழில்நுட்பத்தைப் பின்பற்ற ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இன்று வரை 342 ரயில்கள் ஏற்கனவே HOG ஆக மாற்றப் பட்டுள்ளன.
- மின்சாரத்தின் விலை ஒரு யூனிட்டுக்கு ₹ 22 என்ற விலையில் இயங்கும் என்ட்-ஆன்-ஜெனரேஷன் (EOG) முறையுடன் ஒப்பிடும் போது புதிய தொழில்நுட்பமான HOG ஆனது ஒரு யூனிட் ₹ 6 என்ற விலையில் கிடைக்கும்.

*எப்படி இது செயல்படுகிறது?*

- HOG தொழில்நுட்பத்தில், மேல்நிலை மின்சார விநியோகத்திலிருந்து மின்சாரம் எடுக்கப் படும்.
- பெரிய சத்தம் மற்றும் புகைகளை வெளியேற்றும் ஆற்றல் ஜெனரேட்டர் கார்கள் இனி அதில் இருக்காது.
- அத்தகைய இரண்டு ஜெனரேட்டர் கார்களுக்குப் பதிலாக
  - ஒரு அமைதியான காத்திருப்பு ஜெனரேட்டர் கார் அவசரநிலைக்கு பயன்படுத்தப் படும்.
  - மற்ற காரில் முழு ரயிலிலும் பயன்படுத்தப்பட வேண்டிய மேல்நிலை விநியோகத்திலிருந்து சக்தியை மாற்றும் திறன் இருக்கும்.




## பொது கட்டிடக் கலையில் வளர்ந்து வரும் போக்குகள்

- ‘பொது கட்டிடக் கலையில் வளர்ந்து வரும் போக்குகள்’ குறித்த தேசியக் கருத்தரங்கை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர விவகாரத் துறை அமைச்சர் ஹர்தீப் எஸ். புரி புதுதில்லியில் திறந்து வைத்தார்.
- ‘கட்டுமான தொழில்நுட்ப ஆண்டு - 2019-20’ என்ற நிகழ்ச்சியின் போது நாடு தழுவிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக மத்திய பொதுப்பணித் துறையால் இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது கட்டுமானத் துறையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புதிய விமானப்படைத் தலைமைத் தளபதி - ஆர்.கே.எஸ் பதௌரியா

- ஏர் மார்ஷல் ஆர்.கே.எஸ் பதௌரியா புதிய இந்திய விமானப்படைத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மிகவும் மதிப்புமிக்க அதிகாரியான, பதௌரியா பிரான்சு நாட்டுடனான ரஃபேல் ஜெட் ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகித்தார்.
- தற்போது விமானப் படையின் துணைத் தளபதியாக உள்ள இவர், தற்பொழுது தலைமைத் தளபதியாகப் பதவி வகிக்கும் பி.எஸ்.தனோவா செப்டம்பர் 30 ஆம் தேதி ஓய்வு பெற்ற பின்னர் விமானப் படையின் தலைமைத் தளபதி பதவியை ஏற்றுக் கொள்வார்.
- பி.எஸ்.தனோவா ஓய்வு பெறும் அதே நாளில் பதௌரியாவும் ஓய்வு பெறவிருந்தார்.
- ஆனால் அவர் இப்போது மறுமுறை நியமிக்கப்படுவதால், அவர் மேலும் மூன்று வருட காலத்திற்கோ அல்லது 62 வயதை அடையும் வரையோ இந்தப் பதவியை வகிப்பார்.

## கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு மதிப்பீடுகள்

- ஒவ்வொரு 11 விநாடிகளுக்கும் ஒருவர் அல்லது ஒவ்வொரு ஆண்டும் 2.8 மில்லியன் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகள் இறக்கின்றனர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- பெரும்பாலும் தடுக்கப்படக்கூடிய காரணங்களாலேயே இந்த உயிரிழப்புகள் நிகழ்கின்றன.
- இந்த இறப்பு மதிப்பீடானது யுனிசெஃப், உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை பிரிவு, ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் மற்றும் உலக வங்கிக் குழுமம் ஆகிய அமைப்புகளால் வெளியிடப் படுகின்றது.
- சமீபத்திய மதிப்பீடுகளின் படி, 2017 ஆம் ஆண்டில்
    - கர்ப்பம் மற்றும் பிரசவம் ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்களால் ஒவ்வொரு நாளும் 800க்கும் மேற்பட்ட பெண்கள் இறந்தனர்.
    - புதிதாகப் பிறந்த குழந்தைகள் 28 நாட்களுக்குள் நாளொன்றுக்கு 7,000 என்ற எண்ணிக்கையில் இறந்தனர்.
- மகப்பேறு கால ஆரோக்கியத்தையும் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிர்வாழ்வையும் உறுதி செய்ய அரசாங்கங்கள், தனியார் துறை மற்றும் பொது சமூகத்தை தனது "ஒவ்வொரு குழந்தையும் உயிர்வாழ்தல்" என்ற உலகளாவிய பிரச்சாரத்தின் மூலம் யுனிசெஃப் வலியுறுத்துகிறது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான கைப்பேசிகள்

- மாற்றுத் திறனாளிகளுக்கு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் அணுகலை அதிகரிப்பதற்கானத் தொடர் நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் தொலைத் தொடர்பு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.
- 5 அல்லது அதற்கு மேற்பட்ட வகை கைப்பேசிகளை உற்பத்தி செய்யும் அனைத்து முக்கிய கைப்பேசி உற்பத்தியாளர்களையும், மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக குறைந்தது ஒரு வகையையாவது தயாரிக்குமாறு இந்த ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

- ❖ மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டம் (2016) ஆனது அவர்களின் 21 குறைபாடுகளை அங்கீகரிக்கிறது.
- ❖ குறைபாடுகளை கொண்ட அனைவருக்கும் ICTயின் நன்மைகளை வழங்க கைப்பேசி தயாரிப்பாளர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்கள்.
- ❖ சாம்சங் நிறுவனம் சமீபத்தில் மாற்றுத் திறனாளிகளை மையமாகக் கொண்ட 2 கைப்பேசி வகைகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

## கனிம ஆய்வு

- ❖ அடுத்த ஏழு ஆண்டுகளில் இந்தியாவின் கனிம உற்பத்தியை 200 சதவீதம் உயர்த்த நிலக்கரித் தொழிற்துறைக்கு சுரங்க மற்றும் நிலக்கரி அமைச்சர் பிரஹ்லாத் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.
- ❖ அவர் தேசியக் கனிம ஆய்வு அறக்கட்டளையின் செலவிடப்படாத ரூ.1500 கோடியைப் பயன்படுத்த அவர்களை அழைத்தார்.
- ❖ இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தில் சுரங்கத் துறை ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது.
- ❖ தேசியக் கனிம கொள்கை 2019 ஆனது நிதி தொகுப்பு, ஏலத்தின் போது முதல் முறை மறுக்கும் உரிமை போன்ற பல்வேறு சலுகைகள் மூலம் தனியார் முதலீட்டை ஈர்க்க முன்மொழிகிறது.

## இணையத்தை அணுகுவதற்கான உரிமை - கேரள உயர் நீதிமன்ற உத்தரவு

- ❖ கேரள உயர் நீதிமன்றமானது, இணையத்தை அணுகுவதற்கான உரிமையானது பின்வரும் இரண்டின் ஒரு பகுதியாகும் எனக் கூறியுள்ளது.
    - ○ கல்விக்கான அடிப்படை உரிமை
    - ○ அரசியலமைப்பின் 21 வது பிரிவின் கீழ் தனியுரிமை
- ❖ கேரள மாநிலத்துக்கு எதிராக ஆர்.கே.பஹீமா ஷிரின், 2019 ஆம் ஆண்டு தொடர்ந்த வழக்கின் மிக முக்கியத் தீர்ப்பாக இது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இடைநீக்கம் செய்யப்பட்ட மாணவி பஹீமா ஷிரினை மீண்டும் அனுமதிக்குமாறு கோழிக்கோடு ஸ்ரீ நாராயணகுரு கல்லூரியின் முதல்வருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- ❖ குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கைப்பேசியைப் பயன்படுத்தியதற்காக ஷிரின் இடைநீக்கம் செய்யப்பட்டார்.
- ❖ 2016 ஆம் ஆண்டில், அரசாங்கங்கள் இணைய அணுகலை வேண்டுமென்றே சீர்குலைப்பதைக் கண்டித்து ஒரு கட்டுப்படுத்தாத தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மன்றம் வெளியிட்டது.
- ❖ இணையத்தை அணுகுவதற்கான உரிமை என்பது ஒரு அடிப்படை சுதந்திரம் மற்றும் கல்விக்கான உரிமையை உறுதி செய்வதற்கான ஒரு கருவியாகும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ பி. ஜக்ஜீவன் ராமிற்கு எதிரான எஸ். ரெங்கராஜன் மற்றும் பிறர் தொடர்ந்த உச்சநீதிமன்ற வழக்கு (1989) ஆனது அடிப்படை சுதந்திரத்திற்கானக் கட்டுப்பாடுகளை நியாயப்படுத்த முடியும் என்பதை நிலைநாட்டியுள்ளது .

- ஆனால் இதனைத் கட்டாயத் தேவையின் போது மட்டுமே நியாயப்படுத்த முடியும் என்றும் வசதிக்காகவோ அல்லது சூழ்நிலைக்கு ஏற்பவோ நியாயப்படுத்த முடியாது என்றும் இந்த வழக்கு உறுதிபடுத்தியுள்ளது.




## தடுப்பூசிகளை உருவாக்க புதிய மாதிரி – உயிரித் தொழில்நுட்பத் துறை

- கட்டுப்படுத்தப்பட்ட மனித நோய்த் தொற்று மாதிரியைப் (Controlled Human Infection Model - CHIM) பயன்படுத்தி புதிய இன்ஃப்ளுயன்ஸா (குளிர் காய்ச்சல்) தடுப்பூசிகளை உயிரித் தொழில்நுட்பத் துறை உருவாக்க இருக்கின்றது.
- CHIMஇன் கீழ், இந்தச் சோதனைகளில் பங்கேற்கும் தன்னார்வலர்கள் தொற்று வைரஸ்கள் அல்லது பாக்டீரியாக்களால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் அவர்கள் இந்த பாதிப்புக்கு உள்ளாக இருக்கின்றனர்.
- இந்த அணுகுமுறையானது செயல்முறையைத் துரிதப்படுத்தும். இதன் மூலம் திறனுள்ள தடுப்பூசியானது மக்களுக்குப் பயனுள்ளதா என்பதை விஞ்ஞானிகள் கண்டறிய முடியும்.
- மேலும் இது தடுப்பூசி போடப்பட்ட சிலர் ஏன் நோய்வாய்ப்படுகிறார்கள் ஆனால் மற்றவர்கள் ஏன் நோய்வாய்ப்படவில்லை என்பதைத் தீர்மானிக்கும் காரணிகளையும் அடையாளம் காணுகின்றது.

***குறிக்கோள்***

- காலரா அல்லது குடற் காய்ச்சல் போன்ற பாக்டீரியா அல்லது நுரையீரல் வைரஸ்களை (குடலில் இருக்கும்) ஆய்வு செய்வதற்கு CHIM நெறிமுறைகளைப் பயன்படுத்துதல்.
- இது வெற்றி பெற்றால், தற்போதுள்ள காலரா மற்றும் டைபாய்டு தடுப்பூசிகளுக்கு காப்புத் தடுப்பூசிகளை உருவாக்க உதவும்.

## மீன்வளப் புள்ளிவிவரங்கள் குறித்த கையேடு – 2018

- மீன்வளப் புள்ளி விவரம் குறித்த கையேடு - 2018 ஆனது இந்திய அரசின் மத்திய மீன்வளத் துறை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சகத்தின் மீன்வளத் துறையால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது குறித்த கையேடானது (12வது பதிப்பு) கடைசியாக 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

- தற்போது உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தியாளராக இந்தியா விளங்குகின்றது.
- மீன் வளர்ப்பு உற்பத்தியிலும் உள்நாட்டு மீன் பிடிப்புத் தொழிலிலும் உலகின் இரண்டாவது நாடாக இந்தியா விளங்குகின்றது.
- உள்நாட்டு மீன்களின் அதிக அளவிலான உற்பத்தியானது (34.50 லட்சம் டன்) ஆந்திராவில் பதிவாகியுள்ளது.
- நாட்டின் கடல் மீன்களின் உற்பத்தியில் (7.01 லட்சம் டன்) குஜராத் மாநிலம் முன்னணியில் உள்ளது.

## நீட் (NEAT) திட்டம் 2019 - உயர் கல்வியில் செயற்கை நுண்ணறிவு

- உயர் கல்வியில் சிறந்த கற்றல் விளைவுகளைப் பெற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக "நீட்" (NEAT) என்ற ஒரு புதிய திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- கற்பவரின் தேவைகளுக்கு ஏற்ப கற்றலை மேலும் தனிப்பயனாக்கவும் திருத்தியமைக்கவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதை தொழில்நுட்பத்திற்கான தேசிய கல்வி கூட்டிணைவானது (National Educational Alliance for Technology - NEAT) நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீட் திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமாக AICTE விளங்கும்.
- இந்தத் திட்டம் பொது தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தில் கல்வித் தொழில்நுட்ப நிறுவனங்கள் பங்காளர்களாக இணைக்கப்படும்.
- இவை NEAT தளத்தின் மூலம் கற்பவர்களின் பதிவுகளை நிர்வகிப்பதற்கும் தீர்வுகளை வளர்ப்பதற்கும் பொறுப்பாளர்களாக விளங்கும்.

## கந்தேரி நீர்மூழ்கிக் கப்பல்கள்

- மாசகான் கப்பல் கட்டும் நிறுவனமானது மும்பையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் இரண்டாவது ஸ்கார்பியன் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பலான "ஐஎன்எஸ் கந்தேரியை" இந்திய கடற் படைக்கு வழங்கியது.
- முழுவதும் தானியங்கி முறையில் செயல்படும் இந்த நீர்மூழ்கிக் கப்பலானது செப்டம்பர் 28 அன்று கடற்படைத் தளத்தில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கால் இந்திய கடற்படையில் இணைக்கப்பட இருக்கின்றது.
- பரந்த இந்தியப் பெருங்கடலில் உள்ள கொடிய கடல் இரைபிடித்துண்ணியான பெரிய முகம் கொண்ட சா மீனின் நினைவாக இந்த நீர்மூழ்கி கப்பலுக்குக் 'கந்தேரி' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- கந்தேரி நீர்மூழ்கிக் கப்பலின் முந்தையப் பதிப்பானது இந்தியக் கடற்படையில் 1968 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு பணியில் இருந்து விலக்கப்பட்டது.

### *தொழில்நுட்பப் பங்காளர்*

- மாசகான் கப்பல் கட்டும் நிறுவனமானது பிரான்சு கடற்படைக் குழுவுடன் தொழில்நுட்ப ஒப்பந்தத்தின் பரிமாற்றத்தின் கீழ் நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்குகின்றது.

## NCG விஸ்வாம் புற்றுநோய் பராமரிப்பு இணைப்புத் திட்டம்

- சர்வதேச அணுசக்தி அமைப்பின் 63வது பொதுக் கருத்தரங்கின் ஒரு பகுதியாக NCG விஸ்வாம் புற்றுநோய் பராமரிப்பு இணைப்புத் திட்டமானது (NCG Vishwam Cancer Care Connect - NCG - Vishwam 3C) இந்திய அணுசக்தி ஆணையத்தின் தலைவரும் அணுசக்தித் துறையின் செயலாளருமான கே.என் வியாஸ் என்பவரால் வியன்னாவில் தொடங்கப்பட்டது.
- NCG - Vishwam 3C ஆனது இந்தியாவின் தேசியப் புற்றுநோய் தொடருடன் பங்காளர் நாடுகளிலிருந்து மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய் பராமரிப்பு தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைக்கத் திட்டமிட்டுள்ளது.

***இதுபற்றி***

- NCG ஆனது 2012 ஆம் ஆண்டில் டாடா நினைவு அறக்கட்டளையால் நிறுவப்பட்டது. இது இந்திய அரசாங்கத்தின் அணுசக்தித் துறையால் (DAE - Department of Atomic Energy) நிதியளிக்கப்படுகின்றது.
- இது புற்றுநோயைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் அவற்றிற்கு சிகிச்சையளிப்பதற்கான நோயாளிப் பராமரிப்பின் சீரான தரங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மங்கோலியாவில் புத்தர் சிலை திறப்பு

- இந்தியப் பிரதமர் மோடி மற்றும் மங்கோலிய அதிபர் கல்ட்மகின் பட்டுல்கா ஆகியோர் உலான் பாட்டரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க காந்தன் டெக்சென்லிங் மடாலயத்தில் புத்தர் சிலையைக் காணொளி மூலம் திறந்து வைத்தனர்.
- இந்தச் சிலையானது புத்தர், அவரது இரண்டு சீடர்களுடன் அமர்ந்திருக்கும் நிலையில் சமாதானம் மற்றும் சகவாழ்வு ஆகியவற்றுடன் கருணைச் செய்தியை வெளிப்படுத்துவதாக தெரிவிக்கின்றது.



- இந்த மாத தொடக்கத்தில் உலான் பாட்டரில் நடைபெற்ற "சாம்வாட்" என்ற கலந்துரையாடலின் மூன்றாம் பதிப்பின் போது இது கந்தன் மடாலயத்தில் நிறுவப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டது.

- 3வது சாம்வாட் என்பது உலக புத்த அறிஞர்கள் மற்றும் துறவிகளால் சமகால புத்தத்தைப் பற்றிய விவாதமாகும்.
- மங்கோலிய அதிபர் 5 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

## டிஜிட்டல் பணவழங்கீட்டு அபியான்

- மத்தியத் தகவல் தொடர்பு மற்றும் மின்னணுவியல் & தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் "இந்தியாவிற்கான கூகுள்" என்ற நிகழ்ச்சியில் 'டிஜிட்டல் பணவழங்கீட்டு அபியானைத்' தொடங்கினார்.
- ஒத்துழைப்பாளர்கள்: நாஸ்காமின் இந்தியத் தரவு பாதுகாப்பு ஆணையம், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் மற்றும் கூகுள் இந்தியா.
- இது பணமில்லா பணவழங்கீடு மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகளைச் செய்வதன் நன்மைகள் குறித்து இறுதிப் பயனர்களுக்கு அறிவுறுத்துதல் ஆகியவை குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது ஆன்லைன் (நிகழ்நேர) நிதிப் பாதுகாப்பையும் ஊக்குவிக்கின்றது. இது சிறந்த பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற குடிமக்களை வலியுறுத்துகின்றது.
- இது ஏழு மொழிகளில் இந்தியா முழுவதும் நடத்தப்படும் ஒரு பிரச்சாரமாகும். அந்த மொழிகளாவன
    - ஆங்கிலம்
    - தமிழ்
    - தெலுங்கு
    - கன்னடம்
    - வங்காள மொழி
    - மராத்தி
    - இந்தி

## லடாக்கில் சாங் தாங் ஒருங்கிணைந்த உடற்பயிற்சி

- சீனாவின் எல்லையில் கிழக்கு லடாக் பிராந்தியத்தில் இந்திய இராணுவம் ஒரு அனைத்து ஆயுதப் படை ஒருங்கிணைந்த பயிற்சியை 'சாங் தாங் பிரஹார்' என்னுமிடத்தில் நடத்தியது.
- கடுமையான நிலப் பரப்பு மற்றும் அதிக உயரத்தில் போராடும் இராணுவத்தின் திறனை வெளிப்படுத்தவும் சோதிக்கவும் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.
- இத்தகையப் பயிற்சியானது முதல் முறையாக இப்பகுதியில் நடந்துள்ளது.
- லடாக்கில் உள்ள பாங்கோங் சோவின் வட கரையில் (சோ என்றால் ஏரி) இந்திய மற்றும் சீனப் படைகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் பின்னணியில் இந்தப் பயிற்சியானது நடைபெறுகின்றது.
- இந்தப் பயிற்சியில் இராணுவத்தின் விமானப் படையின் சொத்துக்கள் பயன்படுத்தப்

பட்டன. மேலும் இந்தப் பயிற்சியில் விமானப் படையும் பங்கேற்றது.





## நெகிழிப் புட்டிகளை நொறுக்கும் இயந்திரம் - மும்பை

- மேற்கு ரயில்வே முதன்முறையாக மும்பை ராஜதானி விரைவு ரயிலில் பாலி எத்திலீன் டெரிப்தாலேட் புட்டிகளை நொறுக்கும் இயந்திரத்தை நிறுவியுள்ளது.
- இந்த இயந்திரத்தால் ஒரு நாளைக்கு 3,000 புட்டிகளை நொறுக்க முடியும்.
- இந்த இயந்திரம் இந்திய ரயில்வேயின் “தூய்மை பாரதம்” மற்றும் “பசுமை வழியில் செல்” ஆகிய திட்டங்களின் ஒரு பகுதியாக இந்த ரயிலில் நிறுவப் பட்டுள்ளது.
- 100 சதவீதம் மறுசுழற்சி செய்வதன் மூலம் கரிமத் தடங்களைக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும் புட்டிக் கழிவுகளிலிருந்து ஏற்படும் குப்பைகளை நிலப் பரப்பில் கொட்டுவதையும் இதன் மூலம் தவிர்க்க முடியும்.
- மும்பை ராஜதானி ரயிலானது மத்திய மும்பை மற்றும் புது தில்லி ஆகியவற்றிற்கு இடையே இயங்கும் அதிவேக விரைவு ரயில் ஆகும்.




## தேசியக் காவல் துறைப் பல்கலைக் கழகம்

- நாட்டின் முதலாவது மத்திய காவல் துறைப் பல்கலைக் கழகம் கிரேட்டர் நொய்டாவில் உள்ள யமுனை அதிவேக நெடுஞ்சாலையில் மத்திய உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட இருக்கிறது.
- காவல் துறை, உள்பாதுகாப்பு, இணைய வழிக் குற்றங்கள் மற்றும் தடய அறிவியல் தொடர்பான இளங்கலை மற்றும் முதுகலைப் படிப்புகளை இந்தப் பல்கலைக் கழகம் வழங்கும்.
- இந்த மத்திய பல்கலைக் கழகமானது காவல் துறையில் உள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் அதிலும் குறிப்பாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் உள்ள பிரிவுகளுக்குப் பயனளிக்கும் வகையில் அமையும்.
- இந்தப் பல்கலைக் கழகத்தில் நடத்தை அறிவியல் தொடர்பான அறிவுத் தளம் உருவாக்கப்படும்.



## MIS தளம் – "எளிதில் அணுகக்கூடிய இந்தியா" என்ற பிரச்சாரம்

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெஹ்லோட் ஒரு மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System-MIS) தளத்தைத் தொடங்கினார்.
- இந்த MIS தளமானது மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளித்தல் துறையினரால் அணுகக்கூடிய இந்தியா என்ற பிரச்சாரத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.
- இது அணுகக்கூடிய இந்தியா என்ற பிரச்சாரத்தின் ஒவ்வொரு இலக்குகளையும் அடைவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அனைத்து அமைச்சகங்கள், மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றை ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

*இது பற்றி*

- சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 3 அன்று அணுகக்கூடிய இந்தியா என்ற பிரச்சாரம் தொடங்கப்பட்டது.
- இது சுகமியா பாரத் அபியான் என்றும் அழைக்கப்படுகிறது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான உலகளாவிய அணுகலை அடைவதற்கான நாடு தழுவிய பிரச்சாரமாக இது தொடங்கப்பட்டது.
- பள்ளிகள், மருத்துவ வசதிகள், பணியிடங்கள் மற்றும் போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட உட்புற மற்றும் வெளிப்புற வசதிகளில் உள்ள தடைகள்/இடையூறுகளை நீக்குவது இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## சமூகப் பங்கு பரிவர்த்தனைகள் - இஷாத் உசேன் குழு

- 'சமூகப் பங்குச் சந்தைகளை' உருவாக்குவதற்கு சாத்தியமான கட்டமைப்புகள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் பரிந்துரைக்க இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (Securities and Exchange Board of India - SEBI) ஆனது ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்துள்ளது.
- இந்த உயர் மட்டக் குழுவிற்கு இஷாத் உசேன் தலைமை தாங்குவார்.
- இந்த சமூகப் பங்குச் சந்தைகள் சமூக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் பட்டியலிடப்படுவதற்கும் அதன் மூலம் நிதியைத் திரட்டுவதற்கும் உதவும்.
- இவை மூலதனச் சந்தைகளை மக்களிடம் நெருக்கமாகக் கொண்டு சேர்ப்பதையும் பல்வேறு சமூக நல நோக்கங்களைப் பூர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## BLEU கூட்டுப் பொருளாதார ஆணையக் கூட்டம்

- இந்தியா - பெல்ஜியம் லக்செம்பர்க் பொருளாதார ஒன்றியத்தின் (India-Belgium Luxembourg Economic Union - BLEU) கூட்டுப் பொருளாதார ஆணையத்தின் (Joint Economic Commission - JEC) 16வது அமர்வு சமீபத்தில் நடத்தப்பட்டது.
- BLEU ஆனது 1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- ஐரோப்பிய ஒன்றியமானது இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளர் அமைப்பாகும்.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 28 உறுப்பு நாடுகளில், பெல்ஜியம் இந்தியாவுடன் மூன்றாவது மிகப்பெரிய வர்த்தகத்தைக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் இந்த நாடு இந்தியாவுடன் வைரங்கள், மருந்துகள், ரசாயனங்கள், உணவுப் பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 12.8 பில்லியன் யூரோ மதிப்புள்ள வர்த்தகத்தைக் கொண்டிருந்தது.
- ஆதார் போன்ற ஒரு மின்னணு அடையாள அட்டையைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்த உலகின் முதலாவது நாடு பெல்ஜியம் ஆகும்.

## கரோ சம்பவ் - பொதி கட்டுதலின் கழிவு மேலாண்மை

- சந்தையில் முன்னணியில் உள்ள நுகர்வோர் தயாரிப்பு நிறுவனங்களான கோகோ கோலா இந்தியா, பெப்சிகோ இந்தியா மற்றும் பிஸ்லெரி போன்ற நிறுவனங்கள் நாட்டில் இதே வகையைச் சேர்ந்த முதன்முறையாக பொதி கட்டுதலின் கழிவு மேலாண்மை என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- இந்தத் திட்டம் கரோ சம்பவ் என்று அழைக்கப்படுகின்றது.
- நுகர்வோர்கள் பொதியில் உள்ள பொருள்களைப் பயன்படுத்திய பின்னர் அந்த கழிவுப் பொதிகளைச் சேகரிப்பதற்கும் பொருள்களின் மறுசுழற்சி செயல்முறைகளை மேம்படுத்துவதற்கும் முறையான ஒரு சூழல் அமைப்பை உருவாக்குவதில் இது கவனம் செலுத்த இருக்கின்றது.
- கரோ சம்பவ் என்பது ஒரு தயாரிப்பாளர் தலைமையிலான மற்றும் அந்தத் தயாரிப்பு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இது 2025 ஆம் ஆண்டிற்குள் மறுசுழற்சி செய்யக்கூடிய பொதிகளின் கழிவுப் பொருட்கள் நிலப்பரப்பில் கொட்டப்படாமல் இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏறத்தாழ 90 சதவீத பாலி எத்திலீன் டெரிப்தாலேட் புட்டிகள் மறுசுழற்சி செய்யப்படுவதாகவும் 200 மில்லி லிட்டர் அளவுள்ள புட்டிகளைத் தடை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்தக் குளிர்பானத் தயாரிப்பு நிறுவனங்கள் கூறுகின்றன.

## இந்தியா @ ஐ.நா காலநிலை நடவடிக்கை உச்சி மாநாடு

- ஐக்கிய நாடுகளின் காலநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில், இந்தியா தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் இலக்கை 450 ஜிகாவாட்டாக அதிகரிக்க ஒப்புக் கொண்டுள்ளது.
- பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் இலக்கு 2022 ஆம் ஆண்டிற்குள் 175 ஜிகாவாட்டாக இருந்தது.
- தண்ணீரைப் பாதுகாப்பதற்கும் மழைநீரைச் சேகரிப்பதற்கும் நீர்வளங்களை மேம்படுத்துவதற்கும் ஜல் ஜீவன் திட்டத்திற்காக சுமார் 50 பில்லியன் டாலர் நிதியை "அடுத்த சில ஆண்டுகளில்" செலவழிக்க இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- இந்தியா தொடங்கிய சர்வதேச சூரிய சக்திக் கூட்டிணைவில் (International Solar Alliance) 80 நாடுகள் ஏற்கனவே இணைந்துள்ளன.

***உச்சி மாநாடு பற்றி***

- 2019 ஆம் ஆண்டின் ஐ.நா. காலநிலை நடவடிக்கை உச்சி மாநாடானது ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸால் நியூயார்க்கில் நடத்தப்பட்டது.
- இளம் வயது காலநிலை மாற்ற ஆர்வலரான ஸ்வீடனைச் சேர்ந்த கிரெட்டா துன்பெர்க் என்பவர் இந்த உச்சி மாநாட்டைத் திறந்து வைத்தார்.
- இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சுமார் 63 நாடுகள் அழைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் சார்பாக பிரதமர் மோடி தலைமையிலான இந்தியக் குழுவினர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- இதில் கலந்து கொண்ட நாடுகள் 2015 ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அந்த நாடுகளின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை அல்லது அந்த நாடுகளின் காலநிலை செயல் திட்டத்தை மேம்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

***இந்த மாநாடு ஏன் முக்கியமானதாக விளங்குகின்றது?***

- ஐ.நா. மதிப்பீடுகளின் படி, காலநிலை மாற்றத்தை 1.5°C என்ற அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்கு உலக நாடுகள் தங்களுடைய முயற்சிகளை ஐந்து மடங்கு அதிகரிக்க வேண்டும்.
- இந்த அளவிற்கு மேலான வெப்பநிலை உயர்வானது மிகப்பெரிய மற்றும் மீளமுடியாத சேதத்திற்கு வழிவகுக்கும்.

CLIMATE ACTION SUMMIT 2019

A RACE WE CAN WIN

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2021 - ஜங்கனானா பவன்

- மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தும் இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை புது தில்லியில் கட்டுவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அடிக்கல் நாட்டினார்.
- இதற்கு "ஜங்கனானா பவன்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- தேசிய மக்கள் தொகைப் பதிவு (National Population Register - NPR) மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றைத் தயாரிக்க 12,000 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கின்றது.

*இதுபற்றி*

- NPR ஆனது எந்தவொரு சாதாரண குடியிருப்பாளரின் உயிர்த்தரவு மற்றும் மக்கள் தொகை விவரங்களை இணைக்கின்றது. இது குடியிருப்பாளர்களின் விரிவான தரவுத்தளமாக அவற்றை மாற்றுகின்றது.
- ஒரு சாதாரண குடியிருப்பாளர் என்பவர்
    - கடந்த ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு உள்ளூர் பகுதியில் வசித்த நபராக வரையறுக்கப் படுகின்றார். (அல்லது)
    - அடுத்த ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அந்தப் பகுதியில் வசிக்க விரும்பும் ஒருவராக வரையறுக்கப் படுகின்றார்.
- NPR நடவடிக்கையானது மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து வேறுபட்டது. இது தேசிய குடிமக்களின் பதிவேட்டில் (NRC - National Register of Citizens) இணைக்கப்படவில்லை.

## இஸ்பதி இராடா - எஃகுத் தொழில் துறை

- மத்திய எஃகுத் துறை அமைச்சகமானது "சிந்தன் சிவிர்: ஒரு துடிப்பான, திறமையான மற்றும் உலகளவில் போட்டிமிக்க இந்திய எஃகுத் துறையை நோக்கி" என்ற நிகழ்வை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வு இந்திய எஃகுத் துறையை மிகவும் துடிப்பான, திறமையான மற்றும் உலகளவில் போட்டிமிக்கதாக அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வில் எஃகுத் தொழில் துறைக்கான புதிய இலச்சினை ஒன்று வெளியிடப்பட்டது. இது “இஸ்பதி இராடா” என்று அழைக்கப்படுகின்றது.
- இந்தக் கருப்பொருளில் பணியாற்றும் நிறுவனங்கள் மட்டுமே “இஸ்பதி இராடா” என்ற இலச்சினையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.
- நாட்டில் எஃகுப் பயன்பாட்டை அதிகரிப்பது மற்றும் சமூகத்திற்கு அதிக பலத்தை அளிப்பது ஆகியவை இந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

## மோச்சி ஸ்வாபிமான் முன்னெடுப்பு - தோல் துறை

- மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது “மோச்சி ஸ்வாபிமான்” என்ற ஒரு முன்னெடுப்பை அறிவித்துள்ளது.
- தோல் துறைக்கான திறன் ஆணையமானது (Leather Sector Skill Council - LSSC) ஒருங்கிணைக்கும் நிறுவனமாக செயல்படுகின்றது.
- இதன் கீழ், LSSC ஆனது இந்தியாவில் உள்ள தோலை அடிப்படையாகக் கொண்ட காலணிகளைத் தைக்கும் சமூக மக்களின் பணிகளுக்கு உதவ இருக்கின்றது. மேலும் இது பணிபுரிவதற்கான சிறந்த சூழ்நிலைகளை அளிக்க இருக்கின்றது.
- LSSC ஆனது பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனாவை (Pradhan Mantri Kaushal Vikas Yojana - PMKVY) ஒருங்கிணைக்கின்றது.
- திறன் பயிற்சியை ஊக்குவிப்பதன் மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கானத் திறன் மேம்பாட்டை PMKVY ஊக்குவிக்கின்றது.

- இந்தியாவின் தோல் துறையானது உலகளவில் இரண்டாவது பெரிய தோல் ஆடை உற்பத்தியாளர் மற்றும் காலணி உற்பத்தியாளராக விளங்குகின்றது.
- உலகளவில் மொத்தத் தோல் உற்பத்தியில் 13% பங்களிப்பை இது கொண்டுள்ளது.
- இது இந்தியாவில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றது.

***LSSC பற்றி***

- LSSC ஆனது தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.
- இது இந்தியாவில் உள்ள தோல் துறையில் பணியாற்றும் திறமையான பணியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## லடாக்கி ஷொண்டோல் நடனம் - கின்னஸ் சாதனை

- லடாக்கி ஷொண்டோல் நடனமானது உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.
- வருடாந்திர நரோபா விழாவின் போது 408 பெண் கலைஞர்கள் ஷொண்டோல் நடனத்தை நிகழ்த்தினர்.
- நரோபா திருவிழா என்பது லடாக்கில் உள்ள 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற ஹெமிஸ் மடாலயத்திற்கு அருகில் நடந்து வரும் ஒரு புத்த மதத் திருவிழாவாகும்.
- ஷொண்டோல் என்பது லடாக்கின் அரசர் கால பாரம்பரிய நடனம் ஆகும்.
- சிறப்பு நிகழ்வுகளின் போது லடாக் மன்னரைப் புகழ்வதற்காக தக்ஷோமா அல்லது பெண் நடனக் கலைஞர்களால் இந்த நடனம் நிகழ்த்தப்படுகின்றது.

## அகில இந்திய உயர் கல்வி ஆய்வு 2018-19

- மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது அகில இந்திய உயர் கல்விக் கணக்கெடுப்பின் (All India Survey on Higher Education - AISHE) கீழ் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பிற உயர் கல்வி நிறுவனங்கள் குறித்த ஆன்லைன் (நிகழ்நேர) தகவல்களைச் சேகரிக்கின்றது.

***மொத்தப் பதிவு விகிதம்***

- உயர் கல்வியில் மொத்தப் பதிவு விகிதமானது (Gross Enrolment Ratio - GER) 2017-18ல் 25.8 சதவீதத்திலிருந்து 2018-19ல் 26.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- GER ஆனது 18-23 வயதுக்குட்பட்டவர்களுக்குக் கணக்கிடப்படுகின்றது.

| GER | விகிதம் |
|---|---|
| ஆண்கள் | 26.3% |
| பெண்கள் | 26.4% |
| பட்டியல் வகுப்பினர் | 23% |
| பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் | 17.2% |

- இதில் அதிக எண்ணிக்கையிலான மாணவர் சேர்க்கையுடன் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இந்தப் பட்டியலில் மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.

***கல்லூரிகளின் எண்ணிக்கை***

- கல்லூரி (எண்ணிக்கை) அடர்த்தி என்பது தகுதியான ஒரு லட்சம் மாணவர்களுக்கு (18-23 வயதுக்குட்பட்ட மாணவர்கள்) இருக்கும் கல்லூரிகளின் எண்ணிக்கையாகும்.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், ஹரியாணா, தமிழ்நாடு, குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளைக் கொண்ட முதல் 8 மாநிலங்கள் ஆகும்.
- கல்லூரிகளின் அகில இந்திய சராசரி எண்ணிக்கையான 28 உடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கையானது பீகாரில் 7 கல்லூரிகள் முதல் கர்நாடகாவில் 53 கல்லூரிகள் வரை வேறுபடுகின்றது.
- கல்லூரிகளின் எண்ணிக்கையில் 880 கல்லூரிகளுடன் பெங்களூர் நகரம் முதலிடத்தில் உள்ளது.
- 60.53% கல்லூரிகள் கிராமப் புறத்தில் அமைந்துள்ளன.
- 11.04% கல்லூரிகள் பெண்களுக்கு மட்டுமே உரியவையாகும்.
- உயர் கல்வியில் மொத்த சேர்க்கையானது 37.4 மில்லியனாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- உயர் கல்வியில் மொத்த சேர்க்கையில் பெண்கள் 48.6% ஆவர்.

***வெளிநாட்டு மாணவர்கள்***

- அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு மாணவர்கள் அண்டை நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து கல்வி பயிலுகின்றனர். இந்தியாவில் வந்து கல்வி பயிலும் மொத்த வெளிநாட்டு மாணவர்களில் நேபாளம் 26.88% ஐக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் (9.8%), வங்க தேசம் (4.38%), சூடான் (4.02%), பூட்டான் (3.82%), நைஜீரியா (3.4%) ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்தியாவிற்கு வந்து கல்வி பயிலுகின்றனர்.

***மாணவர் ஆசிரியர் விகிதம்***

- வழக்கமான முறையில் செயல்படும் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் மாணவர் ஆசிரியர் விகிதமானது 29 ஆக இருக்கின்றது.

## ஐ.நா தலைமையகத்தில் காந்தி சூரிய ஒளிப் பூங்கா

- பிரதமர் நரேந்திர மோடி தனது அமெரிக்கப் பயணத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் அமைக்கப்பட்ட 50 கிலோவாட் திறனுள்ள "காந்தி சூரிய ஒளிப் பூங்காவைத்" திறந்து வைத்தார்.
- பிரதமர் மோடியுடன் வங்க தேசப் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் தென் கொரியாவின் தலைவர் மூன்-ஜே-இன் ஆகியோர் இணைந்து மகாத்மா காந்தியின் ஐக்கிய நாடுகள் அஞ்சல் தலையை வெளியிட்டனர்.
- மேலும் லாங் தீவில் உள்ள நியூயார்க் மாநிலப் பல்கலைக்கழக வளாகத்தில் காந்தி அமைதித் தோட்டத்தையும் பிரதமர் திறந்து வைத்தார்.

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு 150 மரக் கன்றுகளும் நடப்பட்டுள்ளன.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.




***மோடி நலமா!***

- டெக்சாஸின் ஹூஸ்டனில் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர்களிடையே உரையாற்றும் ஒரு மிகப் பெரிய "மோடி நலமா!" என்ற நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் மோடி பங்கேற்றுள்ளார்.
- இந்த நிகழ்வில் அமெரிக்க அதிபர் டிரம்பும் கலந்து கொண்டார்.
- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பால் மோடிக்கு உலகளாவிய கோல்கீப்பர் விருது வழங்கப்பட்டது.

## சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது

- சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கு தங்களது துறைகளில் பங்களிப்பை ஆற்றியோரை கௌரவிக்கும் ஒரு உயரிய குடிமக்கள் விருதாகும்.
- சர்தார் படேலின் பிறந்த நாளான அக்டோபர் 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு இந்த விருது அறிவிக்கப்பட இருக்கின்றது.

***நோக்கம்***

- இந்த விருதானது தேசிய ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கான காரணத்தை மேம்படுத்துவதற்கும் வலுவான மற்றும் ஒன்றுபட்ட இந்தியாவின் மதிப்பை வலுப்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க மற்றும் ஊக்கமளிக்கும் பங்களிப்புகளை அங்கீகரிக்க முயல்கின்றது.

- இந்த விருதானது பத்ம விருதுகளுடன் இணைந்து இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட இருக்கின்றது.




*இந்த விருது பற்றி*

- இந்த விருதானது ஒரு பதக்கம் மற்றும் சான்றிதழைக் கொண்டிருக்கும். இந்த விருதானது ஊக்கமளிப்புத் தொகை எதையும் (நிதி) கொண்டிருக்காது.
- இந்த விருது ஒரு வருடத்தில் மூன்று நபர்களுக்கு மேல் வழங்கப் படமாட்டாது.
- நாட்டில் உள்ள எந்தவொரு இந்தியர் அல்லது எந்தவொரு இந்திய நிறுவனமும் இந்த விருதைப் பெறுவதற்காக ஒரு நபரைப் பரிந்துரைக்கலாம்.
- இந்த விருதானது அரிதான மற்றும் மிகவும் தகுதியான சூழ்நிலைகளைத் தவிர, மரணத்திற்குப் பின் யாருக்கும் வழங்கப்பட மாட்டாது.

## காசநோய் எதிர்ப்புப் பிரச்சாரம் : காசநோய் ஹரிகா தேஷ் ஜீடிகா

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ வர்தன் "காசநோய் ஹரிகா தேஷ் ஜீடிகா" என்ற ஒரு பிரச்சாரத்தை சமீபத்தில் தொடங்கினார்.
- இந்தப் பிரச்சாரமானது இந்தியாவிலிருந்து காசநோயை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இவர் அடுத்த 6 மாதங்களில் நாடு முழுவதும் ஒரு ஆய்வை நடத்துவதற்காக 25 தேசிய காச நோய் ஆய்வு வாகனங்களையும் தொடங்கி வைத்தார்.
- இந்தியா 2025 ஆம் ஆண்டிற்குள் காச நோயை ஒழிப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது. ஐக்கிய நாடுகள் 2030 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.

## பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு மீளமைப்பு

- இந்தியப் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவை (Economic Advisory Council to the Prime Minister - PMEAC) மத்திய அரசு திருத்தியமைத்துள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதி முதல் அடுத்த இரண்டு ஆண்டு காலத்திற்கு செயல்பட இருக்கின்றது.
- திருத்தியமைக்கப்பட்ட PMEACன் தலைவராக டாக்டர் பிபெக் தெப்ராயும் உறுப்பினர் செயலாளராக ரத்தன் பி வாட்டலும் தொடர்ந்து நீடிப்பர்.
- இக்குழுவில் உள்ள 2 பகுதி நேர உறுப்பினர்களான ரத்தின் ராய் மற்றும் ஷாமிகா ரவி ஆகியோர் வெளியேற்றப்பட்டனர்.

*இதுபற்றி*

- PMEAC என்பது இந்திய அரசிற்கு அதிலும் குறிப்பாக இந்தியப் பிரதமருக்கு பொருளாதார ஆலோசனைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியலமைப்புச் சாராத நிரந்தரமற்ற ஒரு தனிச் சுதந்திர அமைப்பாகும்.
- PMEAC ஆனது ஒரு தலைவரால் தலைமை தாங்கப்படுகின்றது. இது புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.
- PMEACன் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை குறித்து எந்தவொரு வரையறையும் வரையறுக்கப் படவில்லை.




## 16வது குறு, நடுத்தர நிறுவனங்கள் மாநாடு, புது தில்லி

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை (Micro, Small and Medium Enterprises - MSME) அமைச்சர் நிதின் கட்காரி 2019 ஆம் ஆண்டின் 16வது குறு, நடுத்தர நிறுவனங்கள் மாநாட்டைப் புது தில்லியில் தொடங்கி வைத்தார்.

- இந்த மாநாடானது ஒவ்வொரு ஆண்டும் மத்திய MSME அமைச்சகம் மற்றும் இந்தியத் தொழிற் துறைக் கூட்டமைப்பு ஆகியவற்றினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இந்த மாநாட்டின் கருத்துரு, "இந்திய MSMEகளை உலகளவில் போட்டிமிக்கதாக அமைத்தல்" என்பதாகும்.
- MSME அமைச்சகமானது விரைவில் "பாரத் மார்ட்" என்ற ஒரு புதிய மின் வணிகம் தொடர்பான வலை தளத்தை அறிமுகப்படுத்த வாக்குறுதி அளித்துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் MSMEன் பங்கு = 29%.
- ஏற்றுமதியில் MSMEன் பங்கு = 49%.

## முதலாவது இந்தியா - கேரிகாம் சந்திப்பு

- அமெரிக்காவில் நடைபெற்ற முதல் இந்தியா - கேரிகாம் தலைவர்களின் உச்சி மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி கரீபியன் சமூகம் மற்றும் பொதுச் சந்தைக் குழுவின் (Caribbean Community and Common Market - CARICOM) தலைவர்களைச் சந்தித்தார்.
- இந்தச் சந்திப்பானது காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதிலும் அந்தக் குழுவுடன் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தியது.
- அண்மையில் டோரெய்ன் சூறாவளியின் போது பஹாமாஸுக்கு இந்தியா 1 மில்லியன் டாலரை உடனடி உதவியாக வழங்கியது.

***இதுபற்றி***

- CARICOM குழுவில் 15 உறுப்பினர் நாடுகள் மற்றும் ஐந்து இணை உறுப்பு நாடுகள் உள்ளன.
- இது 1973 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- பிராந்தியத்திற்கான கொள்கைகளை வடிவமைப்பதற்கும் பொருளாதார வளர்ச்சி மற்றும் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கும் கூட்டாக இணைந்து செயல்படும் ஒரு பொருளாதார மற்றும் அரசியல் சமூகமாக இது நிறுவப்பட்டது.
- CARICOM உறுப்பு நாடுகள்
  - ஆன்டிகுவா & பார்புடா, பஹாமாஸ், பார்படாஸ், பெலிஸ், டொமினிகா, கிரெனடா, கயானா, ஹைட்டி, ஜமைக்கா, செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ், செயிண்ட் லூசியா, செயிண்ட் வின்சென்ட் & கிரெனடைன்ஸ், சுரினாம், டிரினிடாட் மற்றும் டொபாகோ.

## குப்பைகள் அகற்றம் @ சியாச்சின்

- 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சியாச்சின் பனிப் பாறையில் இருந்து கிட்டத்தட்ட 130 டன் எடையுள்ள கழிவுகளை இந்திய இராணுவம் அப்புறப்படுத்தியுள்ளது.
- பனிப் பாறை மீதான கழிவு மேலாண்மை குறித்த 2018 ஆம் ஆண்டு கருத்துக் குறிப்பின் அடிப்படையில், பனிப் பாறைகளிலிருந்து கழிவுகளைக் கீழே கொண்டு வருவதை துருப்புக்களுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையின் (Standard Operating Procedure - SOP) ஒரு பகுதியாக இந்திய இராணுவம் இணைத்துள்ளது.
- சியாச்சின் பனிப் பாறையில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 236 டன் கழிவுகள் உருவாகின்றன.

*இதுபற்றி*

- 1984 ஆம் ஆண்டில் 'மேக்தூத் நடவடிக்கையின்' கீழ் இந்த உயர்ந்த பனிப் பாறையை இந்தியா கைப்பற்றியது.
- பனா சோதனைச் சாவடியானது இந்தப் பனிப் பாறையின் மீது ஏறத்தாழ 22,000 அடி உயரத்தில் அமைந்துள்ள உயரமான சோதனைச் சாவடியாகும்.
- 18,000-19,000 அடி உயரத்தில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் சோதனைச் சாவடிகள் ஒன்றுக்கொன்று நேர் – எதிராக அமைந்துள்ளன.
- 22,000 அடிக்கு அப்பால் இந்திய ராணுவம் மட்டுமே அங்கு உள்ளது.




## நேத்ரா திட்டம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது (Indian Space Research Organisation - ISRO) "நேத்ரா" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- நேத்ரா (விண்வெளிப் பொருள் கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்விற்கான அமைப்பு) என்பது இந்திய செயற்கைக்கோள்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விண்வெளிக் கழிவுகள் மற்றும் பிற ஆபத்துக்களைக் கண்டறிவதற்காக விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு முன்னெச்சரிக்கை அமைப்பாகும்.
- இது விண்வெளியின் சூழ்நிலை விழிப்புணர்வில் (space situational awareness - SSA) இந்தியாவுக்கு அதன் சொந்தத் திறனை வழங்குகின்றது.
- நேத்ரா ஆனது 3,400 கி.மீ தொலைவு வரை, 10 செ.மீ என்ற சிறிய அளவிலான விண்வெளிக் கழிவுகளைக் கூட கண்டறிந்து அவற்றைக் கண்காணிக்கும். இதன் வரம்பெல்லையானது சுமார் 2,000 கி.மீ தூரமுள்ள விண்வெளிச் சுற்றுப்பாதைக்கு சமமாக இருக்கும்.
- நேத்ரா பின்வருவனவற்றினால் ஆதரிக்கப்படுகின்றது
    - ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் அமைந்துள்ள பல்பொருள் கண்காணிப்பு ரேடார் (Multi-Object Tracking Radar - MOTR).
    - தமிழ்நாட்டில் உள்ள பொன்முடி மற்றும் ராஜஸ்தானில் உள்ள மவுண்ட் அபு ஆகிய இடங்களில் உள்ள தொலைநோக்கிகள்.

*பாதுகாப்புப் பயன்பாடுகள்*

- பிற செயற்கைக் கோள்களின் சந்தேகத்திற்கிடமான சுற்றுவட்டப்பாதை மாற்றங்களுக்குப் பின்னால் உள்ள நோக்கங்களைப் புரிந்து கொள்ளவும் அவை தங்கள் விண்கலத்தை உளவு பார்க்கிறதா அல்லது தீங்கு செய்கிறதா என்பதை அறியவும் SSA உதவும்.

## மிகப்பெரிய வறண்ட கப்பல் கட்டும் கூடம், மும்பை

- மும்பையில் உள்ள கடற்படையின் கப்பல் கட்டும் தளத்திற்கு உள்ளே இந்திய கடற் படை தனது மிகப்பெரிய வறண்ட கப்பல் கட்டும் கூடத்தைப் பெற்றுள்ளது.
- இது 44,500 டன்கள் எடை கொண்ட இந்தியாவின் ஒரே விமானம் தாங்கிக் கப்பலான ஐ.என்.எஸ் விக்ரமாதித்யா மற்றும் கொச்சியில் கட்டப்பட்டு வரும் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் விமானம் தாங்கிக் கப்பலான விக்ராந்த் ஆகியவற்றிற்குச் சேவை செய்யும்.
- நாட்டின் மூன்று பக்கங்களிலிலும் கடலால் சூழப்பட்ட ஒரே வறண்ட கப்பல் கட்டும் கூடம் இதுவாகும்.
- பழுது பார்ப்பு மற்றும் பரிசோதனை ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, ஒரு கப்பலானது இந்தக் கூடத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, அந்தக் கூடத்திலிருந்து தண்ணீர் வெளியேற்றப் படுகின்றது.
- கப்பல் தண்ணீரில் இருக்கும்போது செய்ய முடியாத பழுதுபார்ப்புப் பணிகள் இந்த வறண்ட கூடத்தில் நடைபெறுகின்றது.

*இதுபற்றி*

- பம்பாய் கப்பல் கட்டும் தளமானது 1732 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- மும்பையில் உள்ள கடற் படையின் கப்பல் கட்டும் தளமானது பம்பாய் கப்பல் கட்டும் கூடம், டங்கன் கப்பல் கட்டும் கூடம் மற்றும் குரூசர் கிரேவிங் கப்பல் கட்டும் கூடம் ஆகிய மூன்று வறண்ட கப்பல் கட்டும் கூடங்களைக் கொண்டுள்ளது.



## ICGS வராஹா - புதிய ரோந்துக் கப்பல்

- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடலோர காவல் படையின் ரோந்துக் கப்பலான 'ICGS வராஹாவை' சென்னை துறைமுகத்தில் முறையாக இணைத்தார்.
- ICGS வராஹா என்ற ரோந்துக் கப்பலானது இந்துஸ்தான் வானூர்தியியல் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரட்டை என்ஜின் கொண்ட ஏ.எல்.எச் ஹெலிகாப்டர்களை இயக்கும் திறன்களைக் கொண்டுள்ளது.
- இந்தக் கப்பலானது படைத்தலைவரான துஷ்யந்த் குமார் என்பவரால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.
- இது கடலோர காவல் படை கட்டுப்பாட்டுப் (மேற்கு) பிராந்தியத்தின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் புதிய மங்களூரில் அமையவிருக்கிறது.

## உலகளாவிய டிஜிட்டல் போட்டித் திறன் தரவரிசை

- ஐஎம்டி உலகப் போட்டி மையத்தால் தயாரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஐஎம்டி உலக டிஜிட்டல் போட்டித் திறன் தரவரிசையில் இந்தியா 44வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் உலகின் மிகவும் டிஜிட்டல் போட்டிமிக்க பொருளாதாரமாக அமெரிக்கா தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் சிங்கப்பூரும் மூன்றாவது இடத்தில் சுவீடனும் உள்ளன.
- டிஜிட்டல் அறிவு, தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால தயார்நிலை ஆகிய மூன்று காரணிகளில் ஒட்டுமொத்த முன்னேற்றம் காரணமாக இந்தியா 2018 ஆம் ஆண்டின் தரவரிசையில் இருந்து நான்கு இடங்கள் முன்னேறியுள்ளது.

## 23வது மலபார் பயிற்சி

- 2019 ஆம் ஆண்டின் மலபார் பயிற்சியானது இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படைகளுக்கு இடையிலான முத்தரப்பு கடற்பயிற்சியாக ஜப்பான் கடற்கரையில் தொடங்கியது.
- இது மலபார் பயிற்சியின் 23வது பதிப்பாகும்.
- இந்தப் பயிற்சியானது இந்தியா-ஜப்பான்-அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படை ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முயல்கின்றது.
- இந்தியாவின் சார்பாகப் பங்குபெற்ற கப்பல்கள் மற்றும் விமானங்கள்
    - ஐ.என்.எஸ் சஹாயத்ரி - உள்நாட்டிலேயே கட்டப்பட்ட பல்நோக்கு வழிகாட்டு-ஏவுகணைப் போர்க் கப்பல்
    - ஐ.என்.எஸ் கில்டன் - உள்நாட்டிலேயே கட்டப்பட்ட நீர்மூழ்கிப் போர் எதிர்ப்பு வழித்துணைக் கப்பல்.
    - P8I (போஸிடான் 8 இந்தியா) - நீண்ட தூர கடல்சார் ரோந்து விமானம்.

## பெருங்கடல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் பற்றிய IPCC அறிக்கை

- காலநிலை மாற்றம் மீதான அரசாங்கங்களுக்கு இடையேயான குழுவானது (Intergovernmental Panel on Climate Change - IPCC) மாறி வரும் காலநிலைச் சூழலில் பெருங்கடல் மற்றும் தாழ்வெப்ப மண்டலம் பற்றிய ஒரு சிறப்பு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

***முக்கியமான கண்டுபிடிப்புகள்***

- 1902 மற்றும் 2015க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் உலகளாவிய சராசரி கடல் மட்ட உயர்வானது 16 செ.மீ அதிகரித்துள்ளது. கடந்த ஒரு தசாப்தத்தில் கடல் மட்ட உயர்வு விகிதம் இரட்டிப்பாகியுள்ளது.
- வெப்பநிலை அதிகரிப்பு, பனிப் பாறைகள் உருகுதல் மற்றும் துருவ பனி உருகுதல் ஆகியவற்றினால் கடல் நீரின் வெப்ப விரிவாக்கம் காரணமாக கடல் மட்டங்கள் உயர்ந்து கொண்டிருந்தன.
- எடுத்துக்காட்டுகள்
  - கிரீன்லாந்து பனிப் படலம் - 2006 மற்றும் 2015ற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 278 பில்லியன் டன் வீதத்தில் பனிப் பாறைகளை இழந்துள்ளது.
  - அண்டார்டிக் பனிப் படலம் - 2006 முதல் 2015ற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 155 பில்லியன் டன் அளவிலான பனிப் பாறைகளை இழந்துள்ளது.

## ஐஎன்எஸ் நீலகிரி - எதிரிகளின் கண்ணில் புலப்படாத பீரங்கிப் போர்க் கப்பல்

- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் எதிரிகளின் கண்ணில் புலப்படாத பீரங்கிப் போர்க் கப்பலான ஐஎன்எஸ் 'நீலகிரி' என்பதனை மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தில் அறிமுகப் படுத்தியுள்ளார்.



- திட்டம் 17ஏ என்ற திட்டத்தின் கீழ் கடற்படையின் ஏழு புதிய "எதிரிகளின் கண்ணில் புலப்படாத பீரங்கிப் போர்க் கப்பல்களின்" வரிசையில் முதலாவது கப்பல் இதுவாகும்.
- திட்டம் 17ஏ பீரங்கிப் போர்க் கப்பல்கள் என்பது சிவாலிக் வகுப்பைச் சேர்ந்த எதிரிகளின் கண்ணில் புலப்படாத பீரங்கிப் போர்க் கப்பல்களின் வரிசையில் அமைந்த வடிவமைப்பாகும்.

- இவை எதிரிகளின் கண்ணில் புலப்படாமல் இருப்பதற்கான மிகவும் மேம்படுத்தப்பட்ட அம்சங்கள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் உணர்விகளைக் கொண்டுள்ளன.

## 10 ஆண்டு கால கிராமப்புற துப்புரவு உத்தி (2019-2029)

- மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள குடிநீர் மற்றும் துப்புரவுத் துறையானது 10 ஆண்டு கால கிராமப்புற துப்புரவு உத்தியை (2019-2029) தொடங்கியுள்ளது.
- இந்த உத்தியானது தூய்மை இந்தியா திட்டம் – கிராமப் புறம் என்பதின் கீழ் அடையப்பட்ட துப்புரவு குறித்த நடத்தை மாற்றத்தை நிலை நிறுத்துவதில் கவனம் செலுத்துகின்றது.

***திறந்தவெளிக் கழிப்பிடமற்றது – பிளஸ்***

- திறந்தவெளிக் கழிப்பிடமற்றது – பிளஸ் (Open Defecation Free - ODF) என்பதற்கான திட்டமிடலில் உள்ளூர் அரசாங்கங்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், அதனைச் செயல்படுத்துபவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு வழிகாட்டும் வகையிலான கட்டமைப்பை இந்த 10 ஆண்டு உத்தி வகுக்கின்றது.
- ODF பிளஸ் ஆனது அனைவருக்குமான கழிப்பறையின் பயன்பாடு மற்றும் ஒவ்வொரு கிராமத்திற்கும் திட & திரவக் கழிவு மேலாண்மைக்கான அணுகல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## தபால் துறையில் CPGRAMS சீர்திருத்தங்கள்

- தபால் துறையில் மையப்படுத்தப்பட்ட பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பை (Centralised Public Grievances Redress and Monitoring System - CPGRAMS) பணியாளர், பொது மக்கள் குறைபாடு மற்றும் ஓய்வூதியங்கள் துறையின் இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வெளியிட்டுள்ளார்.
- நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறைபாட்டுத் துறையின் புதிய CPGRAMS 7.0 என்ற பதிப்பை www.pgportal.nic.in என்ற இணைய வாயிலின் மூலம் அணுக முடியும்.
- பொது மக்களிடம் இருந்து குறைகளைப் பெற்று, நிவர்த்தி செய்து அதனைக் கண்காணிக்கும் ஒரு இணையதள நடைமுறை இதுவாகும்.
- இது தபால் துறையின் செயலாக்க நேரத்தில் 50 சதவிகிதத்தைக் குறைக்கும்.



## 7வது உலக இந்துப் பொருளாதார மன்றம் 2019

- ஒரு மூன்று நாள் நிகழ்வான 2019 ஆம் ஆண்டின் 7வது உலக இந்துப் பொருளாதார மன்றத்தின் மாநாடு மும்பையில் நடைபெற்றது.
- இதன் கருத்துரு, "வளமான சமூகம் : பலமான சமூகம்" என்பதாகும்.
- இது இந்துச் சமூகத்தில் நிதியியல் ரீதியில் வெற்றிகரமான நபர்களான வர்த்தகர்கள், வங்கியாளர்கள், முதலீட்டாளர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து அவர்கள் தங்கள் சக வெற்றியாளர்களுடன் வியாபார அறிவு, நுணுக்கம் மற்றும் மூலங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்திடச் செய்ய எண்ணுகின்றது.




## நெகிழி ஏற்றுமதியில் முதல் இடம்

- குஜராத் மாநிலமானது இந்தியாவில் நெகிழி ஏற்றுமதியில் தேசிய அளவிலான ஏற்றுமதியில் 45 சதவிகிதம் என்ற கணிசமான அளவுடன் முதன்மையாளராக உருவெடுத்திருக்கின்றது.
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 60 சதவிகிதம் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் இருந்து மேற்கொள்ளப் படுகின்றது. அதனைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஒன்றியப் பிரதேசங்களான டாமன், டையூ, மற்றும் தாத்ரா நகர் ஹவேலி ஆகியன உள்ளன.
- உலகில் 17வது மிகப்பெரிய நெகிழி ஏற்றுமதியாளராக இருக்கும் இந்தியா 2019 ஆம் நிதியாண்டில் 8 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய நெகிழிப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.



STATE-WISE PLASTIC EXPORTS

| State | Exports (USD/bn) | Annual growth (%) |
|---|---|---|
| **Gujarat** | **3.6** | **33** |
| Maharashtra | 1.3 | 8 |
| West Bengal | 0.60 | 39 |
| Tamil Nadu | 0.26 | 4 |

Source: Drip Capital

# சர்வதேசச் செய்திகள்

## மிகப்பெரிய நகரும் இரும்புக் கூண்டு - செர்னோபில்

- உக்ரைன் அதன் புகழிழந்த செர்னோபில் அணு உலைக் கூடத்தில் அழிக்கப்பட்ட அணு உலையைச் சுற்றி உறையிடும் ஒரு புதிய இரும்புக் கூண்டை வெளியிட்டு இருக்கின்றது.
- இது புதிய பாதுகாப்பு கவசம் என பெயரிடப்பட்டு இருக்கின்றது.



- இது உலகின் மிகப்பெரிய நகரும் இரும்புக் கூண்டு ஆகும்.
- சோவியத் ரஷ்யாவில் செர்னோபில் அணு உலைக் கூடம் 1986ம் ஆண்டு ஏப்ரல் 26ம் தேதி உலகின் மிக மோசமான ராணுவம் அல்லாத அணு உலை விபத்தைச் சந்தித்தது.
- அதில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். மேலும் 3,50,000 மக்கள் காப்பாற்றப்பட்டு மீட்கப்பட்டனர்.

## பாதுகாப்பான நகரங்கள் பட்டியல்

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவால் 2019ம் ஆண்டிற்கான பாதுகாப்பான நகரங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- இது உலகளவில் ஐந்து கண்டங்களில் இருக்கும் 60 நாடுகளைப் தரவரிசைப் படுத்துகின்றது. இது நகரப் பாதுகாப்பில் டிஜிட்டல், உள்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு என்று பிரிக்கப்பட்ட குறியீடுகளுடன் பல்பரிமாணத் தன்மையை அளவிடுகின்றது.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் நகரங்கள் முதல் 10 பாதுகாப்பான நகரங்களில் 6 இடங்களைப் பிடித்திருக்கின்றது. இதில் டோக்கியோ முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இப்பட்டியலில் மும்பை 45வது பாதுகாப்பான நகரமாகவும் டெல்லி 52வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டிருக்கின்றன.



**Tokyo safest city, Delhi at 52nd: study**

Tokyo is the safest city on the planet for the third year in a row, and six of the world's top 10 safest cities in the world are located in the Asia-Pacific, according to the Economist Intelligence Unit's Safe Cities Index released on Thursday. Mumbai and Delhi rank low in the index even as the study points out that India and China will see the fastest rise in population—of 1.4%—over the next decade. The index ranks 60 countries across five continents and measures on urban safety indicators such as digital, infrastructure, health and personal security.

**OVERALL SCORE**

| RANK | 1 | 2 | 45 | 52 | 59 | 60 |
|---|---|---|---|---|---|---|
| City | Tokyo | Singapore | Mumbai | New Delhi | Caracas | Lagos |

| DIGITAL SECURITY | | HEALTH SECURITY | | INFRA SECURITY | | PERSONAL SECURITY | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Tokyo | 1 | Osaka | 1 | Singapore | 1 | Singapore |
| 2 | Singapore | 2 | Tokyo | 2 | Osaka | 2 | Copenhagen |
| 47 | Mumbai | 50 | Mumbai | 50 | Mumbai | 37 | Mumbai |
| 47 | New Delhi | 51 | New Delhi | 57 | New Delhi | 41 | New Delhi |
| 59 | Ho Chi Minh City | 59 | Karachi | 59 | Dhaka | 59 | Caracas |
| 60 | Yangon | 60 | Lagos | 60 | Caracas | 60 | Lagos |

## போலியோவை அகற்றும் விளிம்பில் ஆப்பிரிக்கா

- உலக சுகாதார அமைப்பின்படி (WHO - World Health Organization), ஆப்பிரிக்கா போலியோ இல்லாததாக அறிவிக்கப் படுவதற்கான முனைப்பில் உள்ளது.
- கடந்த மூன்று ஆண்டுகளாக (2016 முதல்) இந்த நோய் அங்கு எதுவும் பதிவு செய்யப் படவில்லை.
- மேலும் அடுத்த சில மாதங்களில் இந்த நோய் குறித்த எந்தவிதமான பதிவுகளும் பதிவு செய்யப் படாவிட்டால், ஆப்பிரிக்கா 2020 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக போலியோ இல்லாததாக அறிவிக்கப்படும்.
- பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் போலியோ இன்னும் பரவலாக உள்ளது. எனவே உலகம் போலியோ இல்லாததாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் அங்கு அந்நோய் ஒழிக்கப்பட வேண்டும்.

## அமெரிக்க விண்வெளி போர்க் கட்டுப்பாட்டகம்

- அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் டிரம்ப் உலகின் முதலாவது விண்வெளிக் கட்டுப்பாட்டகத்தைத் தொடங்கியுள்ளார்.
- இந்தக் கட்டுப்பாட்டகமானது அமெரிக்க செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளிச் சொத்துக்களை எதிரி நாடுகளால் தாக்கவோ அழிக்கவோ முடியாமல் அவற்றைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜெனரல் ஜான் டபிள்யூ ரேமண்ட் என்பவர் அமெரிக்க விண்வெளி கட்டுப்பாட்டகத்தின் தளபதியாக உள்ளார்.

## இந்தோனேசியாவின் தலைநகரம் மாற்றப்பட்டது


- இந்தோனேசியாவின் அதிபர் ஜோகோ விடோடோ, தனது நாட்டின் தேசியத் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து (ஜாவா தீவில்) கிழக்கு கலிமந்தன் மாகாணத்திற்கு (போர்னியோ தீவில்) மாற இருக்கின்றது என்று அறிவித்துள்ளார்.
- இதற்கு மேற்கோள் காட்டப்பட்ட காரணங்கள்: 10 மில்லியன் மக்கள் தொகை, காற்று மாசுபாடு, போக்குவரத்து நெரிசல், மோசமான நகரத் திட்டமிடல். இங்கு 40% நகரம் கடல் மட்டத்திற்குக் கீழே உள்ளது.
- இந்தோனேசியாவின் 17,000 தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டத்தில் கலிமந்தன் மிகவும் மையத்தில் உள்ளது.
- உலகின் மூன்றாவது பெரிய தீவு மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய தீவு போர்னியோ ஆகும்.
- இந்தத் தீவு மலேசியா, புருனே மற்றும் இந்தோனேசியா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே அரசியல் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- கலிமந்தன் போர்னியோ தீவின் இந்தோனேசியப் பகுதியில் உள்ளது. இது அத்தீவின் பரப்பளவில் 73% கொண்டுள்ளது.




The Economist

## ஆசியான் - அமெரிக்க கடல்சார் பயிற்சி

- முதன்முறையாக, எட்டு போர்க் கப்பல்கள், நான்கு விமானங்கள் மற்றும் அமெரிக்கா & 10 தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட வீரர்கள் ஆகியோர் ஆசியான் - அமெரிக்க கடல்சார் பயிற்சிக்காக (AUMX - ASEAN-US Maritime Exercise) இணைய இருக்கின்றன.
- 5 நாள் நடைபெறும் இப்பயிற்சியானது தாய்லாந்தின் சத்தாஹிப் கடற்படைத் தளத்தில் தொடங்கி சிங்கப்பூரில் முடிவடைய இருக்கின்றது.
- சூழல்: சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே (புருனே, மலேசியா, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ்) தென் சீனக் கடலில் பதற்றம் அதிகரித்து வரும் நேரத்தில் இந்தப் பயிற்சி நடைபெற இருக்கின்றது.




## எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றிற்கான உலகளாவிய நிதி

- 6வது நிதி கொடுத்தல் சுழற்சி முறைக்காக (2020-22 ஆம் ஆண்டு) எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றிற்கான உலகளாவிய நிதிக்கு (Global Fund for AIDS, TB and Malaria - GFTAM) இந்தியா 22 மில்லியன் டாலர் பங்களிப்பை அறிவித்துள்ளது.
- எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றின் தடுத்தல், சிகிச்சை மற்றும் பராமரிப்புத் திட்டங்களின் உலகின் மிகப்பெரிய நிதியாளர் அமைப்பு உலகளாவிய நிதி ஆகும்.
- 2002 ஆம் ஆண்டு முதல் உலகளாவிய நிதியத்துடன் ஒரு நிலையான பங்குரிமையை இந்தியா பகிர்ந்து வருகின்றது. அந்த அமைப்பில் இந்தியா பெறுநராகவும் நன்கொடையாளராகவும் உள்ளது.
- இதன் தலைமையகம்: சுவிட்சர்லாந்து.

## ஹாங்காங்: நாடு கடத்தல் மசோதா திரும்பப் பெறப்பட்டது

- சர்ச்சைக்குரிய "நாடு கடத்தல் மசோதாவை" திரும்பப் பெறுவதாக ஹாங்காங்கின் தலைமை நிர்வாகி கேரி லாம் தெரிவித்துள்ளார்.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் அறிமுகமான இந்த மசோதாவானது கடந்த மூன்று மாதங்களாக நாட்டில் முன் எப்பொழுதும் இல்லாத வகையில் "ஜனநாயக சார்பு" தொடர்பான பேரணிகளைத் தூண்டியது.
- முன்மொழியப்பட்ட இந்த மசோதாவானது குற்றவியல் தொடர்பான சந்தேக நபர்களை சீனாவின் முக்கிய நிலப்பகுதிக்கு நாடு கடத்த அனுமதிக்கும்.




*இதுபற்றி*

- 1842 ஆம் ஆண்டில் முதல் அபின் போரின் முடிவில் சீனாவின் குயிங் வம்சம் ஹாங்காங் தீவை "விட்டுக் கொடுத்த" பின்னர் ஹாங்காங் ஆங்கிலப் பேரரசின் காலனியாக அது மாறியது.
- சிலபல கூடுதல் பிரதேசங்களுடன், பிரிட்டன் 1898 ஆம் ஆண்டில் புதிய பிரதேசங்களை 99 ஆண்டுக் குத்தகைக்குப் பெற்றது.
- 1997 ஆம் ஆண்டில் இந்தப் பகுதி சீனாவுக்கு மாற்றப்பட்டது.
- ஹாங்காங்கின் சிறப்பு நிர்வாகப் பகுதி சீனாவின் பிரதான நிலப் பகுதியிலிருந்து "ஒரு நாடு, இரண்டு நிர்வாகங்கள்" என்பதின் கீழ் தனித்தனி நிர்வாக மற்றும் பொருளாதார அமைப்புகளைப் பராமரிக்கின்றது.

## பாகிஸ்தானின் கஸ்னவி ஏவுகணை – இரவில் சோதனை

- கராச்சிக்கு அருகிலுள்ள சோன்மியானி சோதனை நிலையத்திலிருந்து அணுசக்தித் திறன் கொண்ட ஒரு நிலப்பரப்பிலிருந்து மற்றொரு நிலப்பரப்பில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணையான கஸ்னவியைப் பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- மேலும் பாகிஸ்தான் நாடானது ஒரு நிலப்பரப்பிலிருந்து மற்றொரு நிலப்பரப்பில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணையின் இரவு நேரச் சோதனையையும் மேற்கொண்டுள்ளது.
- கஸ்னவி ஒரு குறுகிய வரம்பு கொண்ட ஒரு நிலப்பரப்பிலிருந்து மற்றொரு நிலப்பரப்பில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் திறன் கொண்ட பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும்.
- இது அணுசக்தி மற்றும் வழக்கமான 290 கி.மீ தூரத்திற்குப் பல்வேறு வகையான ஆயுதங்களை எடுத்துச் சென்று அழிக்க வல்லது.

## TSENTR 2019 - ரஷ்யாவில் போர் விளையாட்டுகள்

- ரஷ்யாவில் நடைபெறவிருக்கும் "TSENTR 2019" என்ற பல நாடுகள் கலந்து கொள்ளும் பெரிய அளவிலான போர்ப் பயிற்சியில் இந்திய ராணுவம் பங்கேற்க இருக்கின்றது.
- இந்தப் பயிற்சியானது செப்டம்பர் 9 முதல் 23 வரை ரஷ்யாவின் ஓரன்பேர்க்கில் உள்ள டோங்குஸ் பயிற்சித் தளத்தில் நடைபெற உள்ளது.
- பாகிஸ்தான், சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைகளும் இந்த பயிற்சியில் பங்கேற்க விருக்கின்றன.
- இந்தியப் படைகள் நடத்திய பாலகோட் வான்வழித் தாக்குதல்களுக்குப் பின்னர் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த படைகள் ஒரு பன்னாட்டுப் பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.



## போலிச் செய்திகளைக் கட்டுப்படுத்துதல்

- BBC மற்றும் பிற பெரும் வெளியீட்டாளர்களான கூகுள், சுட்டுரை, முகநூல் என அனைத்து நிறுவனங்களும் ஒருங்கிணைந்து போலிச் செய்திகளைக் கையாள்வது தொடர்பாக ஒரு நடவடிக்கைகளின் தொகுப்பை அறிவித்துள்ளனர்.
- போலிச் செய்திகளானது, செய்திகளாக வழங்கப்படும். ஆனால் இவை உண்மையில் ஆதாரம் அல்லாத தகவல்களாகும்.
- முக்கிய நிகழ்வுகளான தேர்தல்கள் போன்ற பல நிகழ்வுகள் பற்றிய தவறான தகவல்களில் இருந்து பார்வையாளர்கள் மற்றும் பயனாளர்களைப் பாதுகாப்பதற்காக செய்திகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து இவ்வாறு செயல்படுகின்றன.




## 2019 தெற்காசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு

- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் அவசரக் கால நிதியமானது (யுனிசெப்) இலங்கை நாடாளுமன்றத்துடன் இணைந்து இரண்டு நாள்கள் நடைபெறும் 2019 ஆம் ஆண்டின் யுனிசெப் குழந்தைகள் உரிமைகள் ஒப்பந்தம் மீதான தெற்காசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டை நடத்தியது.
- இது கொழும்பு நகரில் நடத்தப் பட்டது.
- குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குழந்தைகள் உரிமைகளை மேம்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து விவாதிப்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- இது குழந்தையின் உரிமைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட 30வது ஆண்டு நிறைவையும் கொண்டாடுகிறது.
- நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து குழந்தைகளுக்காக யுனிசெப் நடத்திய 3வது மாநாடு இதுவாகும்.



## டோரியன் சூறாவளி: பஹாமாஸுக்கு உதவுதல்

- டோரியன் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பஹாமாஸில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காக இந்தியா 1 மில்லியன் டாலரை உடனடி மனிதாபிமான உதவியாக அறிவித்துள்ளது.
- இது மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் அழிவுகரமான 5 ஆம் பிரிவைச் சேர்ந்த சூறாவளி ஆகும்.
- இது 2019 ஆம் ஆண்டு அட்லாண்டிக் சூறாவளி பருவத்தின் முதலாவது பெரிய சூறாவளி ஆகும்.

*இதுபற்றி*

- பஹாமாஸ் முன்னர் ஒரு பிரிட்டிஷ் காலனியாக இருந்தது. இது 1973 ஆம் ஆண்டில் காமன்வெல்த் நாடுகளுக்குள் ஒரு சுதந்திர நாடாக உருவெடுத்தது.

## 24வது உலக எரிசக்தி மாநாடு - அபுதாபி

- ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவரான ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யானின் ஆதரவின் கீழ் 24வது உலக எரிசக்தி மாநாடானது அபுதாபியில் தொடங்கியது.
- மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த மாநாட்டில் 150 நாடுகள் பங்கேற்றுள்ளன.
- இது 1924 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது ஆற்றல் தொடர்பாக அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் அதிகாரம் மிக்க எரிசக்தி நிகழ்ச்சியாகும்.
- இந்த 2019 ஆம் ஆண்டின் உலக எரிசக்தி மாநாட்டின் கருப்பொருள் "செழிப்புக்கான எரிசக்தி" என்பதாகும்.

## ஆசியாவின் அமைச்சரவைகளுக்கிடையேயான எரிசக்தித் தொடர்பான 8வது வட்டமேசை மாநாடு

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 அன்று ஆசியாவின் அமைச்சரவைகளுக்கு இடையேயான எரிசக்தி தொடர்பான 8வது வட்டமேசை மாநாட்டை (Asian Ministerial Energy Roundtable - AMER8) ஐக்கிய அரபு அமீரகம் நடத்தியது.
- AMER8 நிகழ்வில் ஐக்கிய அரபு அமீரகத்துடன் இந்தியா இணை தொகுப்பாளராக உள்ளது.
- இந்தியாவை மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்.
- இந்தச் சந்திப்பு பின்வருவனவற்றை விவாதிக்கின்றது:
  - மிகவும் போட்டிமிக்க மற்றும் உலக ஆற்றல் உற்பத்தி கலவைக்குப் புதிய தொழில் நுட்பங்களின் பங்கு.
  - பாதுகாப்பான, விலை குறைந்த மற்றும் நிலையான எரிசக்தி சேவைகளுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய அணுகலை மேம்படுத்துதல்.

## படங்களற்ற (வெற்று) சிகரெட் பொதிகள் – தாய்லாந்து

- படங்களற்ற (வெற்று) சிகரெட் பொதிகளை வெளியிட்ட முதலாவது ஆசிய நாடாக தாய்லாந்து உருவெடுத்துள்ளது.
- இத்தகையப் பொதிகள்
  - புகையிலைப் பொருட்களின் மீதான நாட்டத்தைக் குறைக்கின்றது.
  - புகையிலைப் பொதிகளையே ஒரு வகை விளம்பரமாகப் பயன்படுத்துவதை ஒழிக்கின்றது.
  - படம் சார்ந்த சுகாதார எச்சரிக்கைகளின் குறிப்பிடத்தக்க தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிக்கின்றது.




- 2012 ஆம் ஆண்டில் வண்ணமயமான வர்த்தக இலச்சினைகள் இல்லாமல் புகையிலைப் பொருட்களை விற்கச் செய்த முதலாவது நாடாக ஆஸ்திரேலியா உருவெடுத்துள்ளது.

## உலகளாவிய நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம்: இந்தியா

- இந்தியா ஒரு புதிய உறுப்பினராக உலகளாவிய நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு (Global Antimicrobial Resistance - AMR) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி (Research and Development - R&D) மையத்தில் இணைந்துள்ளது.
- AMR R&D ஆனது 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற உலக சுகாதாரச் சபையின் 71வது அமர்வின் முடிவில் தொடங்கப்பட்டது.
- இது நுண்ணுயிர்க் கொல்லிக்கு எதிரான தாங்கும் திறனை எதிர்ப்பதற்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும்.
- இது முக்கியமாக ஜெர்மன் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகின்றது. இதன் செயலகம் பெர்லினில் உள்ளது.

## சவுதி எண்ணெய் ஆலைகளில் ஆளில்லா விமானத் தாக்குதல்

- ஏமனைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சவுதி அரேபியாவின் அப்காய்க்கில் உள்ள சவுதி அராம்கோ எண்ணெய் நிலையங்கள் மற்றும் ஹிஜ்ரத் குரைஸ் ஆகிய இரு முக்கிய எண்ணெய் ஆலைகளின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தினர்.
- சவூதி அரேபியாவின் புக்கியாக்கில் உள்ள சவுதி அரம்கோவால் செயல்படுத்தப்படும் அப்காய்க் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமானது உலகின் ஒரு மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஆகும்.
- இந்தத் தாக்குதலின் காரணமாக, சவுதி அரேபியா அதன் எண்ணெய் உற்பத்தியில் கிட்டத்தட்ட 50 சதவிகித உற்பத்தியைக் குறைத்துள்ளது.

## டிஜிட்டல் பொருளாதார அறிக்கை 2019

- வர்த்தக மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD) ‘டிஜிட்டல் பொருளாதார அறிக்கை (DER) 2019’ என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- DER இதற்கு முன்னர் தகவல் பொருளாதார அறிக்கை என்று அழைக்கப்பட்டது.
- வளரும் நாடுகளால் டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஏற்படும் மதிப்பு உருவாக்கம் மற்றும் பிடிப்புக்கான நோக்கத்தை இது ஆராய்கிறது.

*அறிக்கையின் சிறப்பம்சங்கள்*

- சீனாவின் தைவான் மாகாணம், அயர்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் துறை மிகப்பெரியது.
- உலகளாவிய கணினி சேவைகள் துறையில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது.
- வளரும் நாடுகளில் இந்தியா கணினி சேவைத் துறையில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது.
- மேலும், 2010 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையின் மதிப்பு கூட்டப்பட்ட பங்கின் வளர்ச்சி அடிப்படையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- “மொத்தச் சேவை ஏற்றுமதியில் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப சேவைகளின் பங்கு: சிறந்த 20 நாடுகள், 2017” இல், இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது. இதில் அயர்லாந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியா இத்தகைய சேவைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் மிகப்பெரியது ஆகும்.
- தொலைத் தொடர்பு சேவைகளின் மிகப்பெரிய மூன்று உற்பத்தியாளர்கள் வளரும் நாடுகளான சீனா, இந்தியா மற்றும் பிரேசில் ஆகியவை ஆகும்.

## CRPD (Convention on Rights of Persons with Disabilities) தொடர்பான ஐ.நா. குழுவின் 22வது பதிப்பு

- மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐ.நா சபையின் 22வது பதிப்பு ஜெனிவாவில் உள்ள UNHRCல் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 மற்றும் 3 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது.
- இந்த அமர்வில், மாற்றுத் திறனாளிகளின் உரிமை தொடர்பான ஐ.நா சபை “இந்தியாவின் இயலாமை நிலை” குறித்த அறிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

- இந்திய தூதுக் குழு திருமதி.சகுந்தலா D. காம்லின் (PWD துறைச் செயலர்) அவர்களால் தலைமை தாங்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் 35வது பிரிவைத் தொடர்ந்து, இந்தியா 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்று இந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்தது.




## தடுப்பூசி மறுப்பு - உலகளாவிய ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தல்

- உலக சுகாதார அமைப்பு (WHO) 2019 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய ஆரோக்கியத்திற்கான 10 அச்சுறுத்தல்களில் ஒன்றாக 'தடுப்பூசி மறுப்பை' சேர்த்திருக்கிறது.
- தடுப்பூசி மறுப்பு என்பது தடுப்பூசிகள் கிடைத்தாலும் தடுப்பூசி போட தயக்கம் அல்லது மறுப்பு தெரிவித்தல் ஆகும்.
- தடுப்பூசி போடுவதற்குத் தயங்குவது தடுப்பூசியால் தடுக்கக்கூடிய நோய்களைக் கையாள்வதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை மாற்றியமைக்க அச்சுறுத்துகிறது.
- எடுத்துக்காட்டு: 2018 ஆம் ஆண்டில் உலகளவில் தட்டம்மை 30% அதிகரித்துள்ளது.
- WHO இன் படி 2019 இல் உலக சுகாதாரத்திற்கான பத்து அச்சுறுத்தல்கள்:
    - காற்று மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றம்
    - தொற்று அல்லாத நோய்கள்
    - உலகளாவிய காய்ச்சல் பரவல்
    - பலவீனமான மற்றும் பாதிக்கப்படக்கூடிய அமைப்புகள்
    - நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு
    - எபோலா மற்றும் பிற உயர் அச்சுறுத்தல் நோய்க் கிருமிகள்
    - பலவீனமான ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலை

- தடுப்பூசி மறுப்பு
- டெங்கு
- எச்.ஐ.வி

## டாக்ஸிங் விமான நிலையம் – பெய்ஜிங்கின் மிகப்பெரிய விமான நிலையம்

- கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியின் 70வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சீனாவானது புதிய பெரிய விமான நிலையத்தை திறக்கவுள்ளது.
- பெய்ஜிங் டாக்ஸிங் சர்வதேச விமான நிலையம் ஏற்கனவே இருக்கும் உலகின் இரண்டாவது பரபரப்பான பெய்ஜிங் விமான நிலையத்தோடுச் சேர்த்து கூடுதலாக அமைக்கப்பட உள்ளது.
- பெய்ஜிங் கேபிடல் சர்வதேச விமான நிலையம் ஆனது 2018 இல் 100 மில்லியன் பயணிகளைக் கையாண்டது.
- உலகின் பரபரப்பான விமான நிலையங்களில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவின் ஹார்ட்ஸ்ஃபீல்ட்-ஜாக்சன் விமான நிலையம் அட்லாண்டாவில் உள்ளது.
- டாக்ஸிங் விமான நிலையத்தின் வடிவத்திற்கு ‘ஸ்டார்ஃபிஷ்’ என்று புனைப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பானது பாதுகாப்பு சோதனைகள் மற்றும் வாயில்களுக்கு இடையிலான தூரத்தைக் குறைக்கிறது.
- பூகம்பத்தால் பாதிக்கப்படாத இந்த விமான நிலையத்தின் அடியில் ஒரு ரயில் நிலையமும் அமைந்துள்ளது.



## தாய்லாந்து நாட்டுக் கோவிலில் புலிகள் இறப்பு

- மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தாய்லாந்தில் உள்ள ஒரு புத்தக் கோவிலில் இருந்து மீட்கப்பட்ட பாதிக்கும் மேற்பட்ட புலிகள் நோயின் காரணமாக இறந்துள்ளன.
- புலிக் கோயில் அல்லது வாட் பா லுவாங் தா புவா யானசம்பன்னோ ஆனது தாய்லாந்தில் உள்ள ஒரு தேரவாத புத்தக் கோவிலாகும்.

## விண்வெளியில் முதலாவது அரேபியர்

- கஜகஸ்தானின் பைக்கோனூர் விண்வெளி மையத்திலிருந்து ஒரு சோயுஸ் விண்கலமானது ஒரு அமீரக விண்வெளி வீரரை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (International Space Station - ISS) சுமந்து சென்றது.
- அவர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்ற முதலாவது அரேபியராக சாதனை படைக்க இருக்கின்றார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் ஹஸ்ஸா அல் – மன்சூரி என்பவர் தனது விண்கலத்தில் ரஷ்யாவின் ஒலெக் ஸ்க்ரிபோச்ச்கா மற்றும் நாசா விண்வெளி வீரர் ஜெசிகா மீர் ஆகியோருடன் இணைந்து ISSக்குச் சென்றுள்ளார்.
- ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பிற்கு ISS ஒரு அரிய எடுத்துக்காட்டு ஆகும்.
- ISS 1998 ஆம் ஆண்டு முதல் ஒரு மணி நேரத்திற்குச் சுமார் 28,000 கிலோமீட்டர் வேகத்தில் (17,000 மைல்) பூமியைச் சுற்றுகின்றது.



## பாராளுமன்றத்தை முடக்கியது சட்டவிரோதம் என இங்கிலாந்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

- ஒருமித்த முடிவாக, இங்கிலாந்து உச்ச நீதிமன்றமானது "பிரிட்டனின் நாடாளுமன்றத்தை முடக்கியது" சட்ட விரோதமானது என்று தீர்ப்பளித்துள்ளது.
- முன்னதாக பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் பிரெக்சிட்டிற்கு (அக்டோபர் 31) முன்னதாக ஐந்து வாரங்களுக்கு நாடாளுமன்றத்தை முடக்க முடிவு செய்திருந்தார்.
- பிரிட்டனின் பாராளுமன்றத்தின் கீழ் சபையான பொது மக்கள் சபையில் தனது அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துவிட்டதால் அவர் இந்த முடக்கத்தை அறிவித்தார்.
- செப்டம்பர் 10 முதல் அக்டோபர் 14 வரை பிரதமர் போரிஸ் ஜான்சனின் ஆலோசனையின் பேரில் அந்நாட்டு ராணியால் இங்கிலாந்து பாராளுமன்றம் முடக்கப்பட்டது.
- இது இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. பிரெக்சிட் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாடாளுமன்ற சபாநாயகரும் மேல் சபை அல்லது பிரபுக்கள் சபையும் தீர்மானிக்க இருக்கின்றனர்.

## ரோஹியங்காக்கள் மீதான முத்தரப்பு ஒப்பந்தம்

- இடம் பெயர்ந்த ரோஹிங்கியா மக்கள் தங்களின் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகவும் மதிப்பிடுவதற்காகவும் முத்தரப்பு நடைமுறை ஒன்றை ஏற்படுத்த மூன்று நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.
- அந்த நாடுகளாவன
  - வங்க தேசம்
  - சீனா
  - மியான்மர்.
- ரோஹிங்கியா மக்கள் தங்களது சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கான இரண்டு முயற்சிகளும் தோல்வியுற்றன.
- நாடு திரும்புவதற்கு உகந்த சூழ்நிலை ரகைன் மாகாணத்தில் ஏற்படாத காரணத்தினால் ரோஹிங்கியா மக்கள் தங்களது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை.

***இதுபற்றி***

- ரோஹிங்கியா மக்கள் என்பவர்கள் மியான்மரின் ரகைன் மாகாணத்தில் குடியிருக்கும் ஒரு நாடற்ற இந்தோ-ஆரிய இனக் குழுவைச் சேர்ந்தவர்களாவர்.
- இவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். அதில் சிலர் இந்து மதத்தைப் பின்பற்றுகின்றனர்.
- இவர்கள் மியான்மர் அரசாங்கத்தினால் துன்புறுத்தப்பட்டனர். இவர்கள் வங்க தேசம், சீனா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.
- 2013 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது மிகவும் துன்புறுத்தப்பட்ட சிறுபான்மையினர்களில் ஒருவராக ரோஹிங்கியா மக்களை அறிவித்தது.

## FAO-WHOவின் ஆசியாவிற்கான 21வது ஒருங்கிணைப்புக் கூட்டம் – 2019

- 2019 ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் விவசாய அமைப்பு (Food and Agriculture Organisation - FAO) மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organisation - WHO) ஆசியாவிற்கான ஒருங்கிணைப்புக் குழுவின் 21வது கூட்டம் கோவாவில் நடத்தப்பட்டது.
- இது ஆசியாவிற்கான ஒருங்கிணைப்புக் குழுவின் இரண்டாவது அமர்வாகும்.
- இந்த அமர்வின் நோக்கமானது இப்பிராந்தியத்தில் உணவுப் பொருள் உற்பத்தியில் உணவுப் பாதுகாப்பிற்காக சிறந்த நடைமுறைகளை ஆராய்ந்து அதில் உள்ள விவகாரங்களை அடையாளம் காண்பதாகும். இந்த அமர்வில் 18 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- இது ஐக்கிய நாடுகளின் உணவு & விவசாய நிறுவனம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டதாகும்.




## 8வது கண்டம் – கிரேட்டர் அட்ரியா

- நெதர்லாந்தைச் சேர்ந்த புவியியல் வல்லுநர்கள் ஐரோப்பாவின் அடியில் மத்தியத் தரைக் கடல் பிராந்தியத்தில் கிரேட்டர் அட்ரியா எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய கண்டத்தைக் கண்டறிந்து இருக்கின்றனர்.
- இந்த கிரேட்டர் அட்ரியா தீவு என்பது கிரீன்லாந்தின் அளவைக் கொண்ட கண்டத் தகட்டின் ஒரு பகுதியாகும்.
- இது ஒரு காலத்தில் வடக்கு ஆப்பிரிக்காவில் இருந்து பிரிந்து தெற்கு ஐரோப்பாவின் கீழ் பூமியின் மேலோட்டின் கீழ்ப்பகுதியில் சரிந்தது.
- மனித இனத்தால் கிரேட்டர் அட்ரியா கண்டறியப்படுவதற்கு அது 120 மில்லியன் வருடங்களை எடுத்துக் கொண்டது.
- இந்தக் கண்டத்தின் மீதமிருக்கும் ஒரே பகுதியானது இத்தாலிய தீபகற்பத்தில் அட்ரியாட்டிக் கடல் வழியாக இத்தாலியின் துரின் பகுதியிலிருந்து நீளும் ஒரு பட்டைப் பகுதி இதுவாகும். எனவே இதன் பெயர் கிரேட்டர் அட்ரியா என்பதாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## 5 வது கிழக்குப் பொருளாதார மன்றம்

- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினால் விளாடிவோஸ்டாக்கில் நடைபெற இருக்கும் 5வது கிழக்கு பொருளாதார மன்றத்தின் (செப்டம்பர் 4 - 6) விருந்தினராக பிரதமர் நரேந்திர மோடி அழைக்கப்பட்டுள்ளார்.
- இது ரஷ்யாவால் 2015 இல் நிறுவப் பட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் விளாடிவோஸ்டோக்கில் நடைபெறுகின்றது.
- இந்த சர்வதேச மன்றமானது தொலைதூர கிழக்கில் இருக்கும் வளம் மிக்க ரஷ்யாவில் அந்நிய முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக நடத்தப் படுகின்றது.

## சுவிஸ் மற்றும் இந்தியா: தானியங்கித் தகவல் பரிமாற்றம்


- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 முதல் சுவிட்சர்லாந்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் தானியங்கித் தகவல் பரிமாற்றம் (AEOI - The automatic exchange of information) தொடங்கியது.
- இதன் மூலம், சுவிட்சர்லாந்தில் கணக்கு வைத்துள்ள இந்தியர்களின் வங்கி விவரங்கள் இந்திய வரித் துறை அதிகாரிகளுக்கு கிடைக்கும்.
- 2018 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் உள்ள இந்தியக் குடியிருப்பாளர்களால் வைக்கப் பட்டிருக்கும் (அல்லது மூடப்பட்ட) நிதிக் கணக்குகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் இந்தியா பெறும்.
- AEOI என்பது நாடுகளுக்கிடையில் கோரிக்கை ஏதும் வைக்காமல் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதாகும்.
- இந்தியாவும் சுவிட்சர்லாந்தும் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 22 அன்று AEOI இல் கையெழுத்திட்டுள்ளன.

## முக்கியமான 8 தொழிற் துறைகளின் செயல்பாடுகள்

- அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அதிகாரப் பூர்வ தகவல்களின்படி, நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் சுத்திகரிப்பு பொருட்களின் மந்தநிலை காரணமாக எட்டு முக்கிய தொழில்களின் வளர்ச்சியானது ஜூலை மாதத்தில் 2.1% ஆக குறைந்தது.
- 8 தொழிற் துறைகள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலக்கரி | 5. | கச்சா எண்ணெய் |
| 2. | சிமெண்ட் | 6. | எஃகு |
| 3. | உரங்கள் | 7. | மின்சாரம் |
| 4. | இயற்கை எரிவாயு | 8. | சுத்திகரிப்புப் பொருள்கள் |


- இவைகள் தொழில் துறை உற்பத்திக் குறியீட்டில் (Index of Industrial Production - IIP) 40.27% என்ற அளவைக் கொண்டுள்ளன.
- IIP என்பது பொருளாதார உற்பத்தித் துறையின் முக்கியமான பொருளாதார குறி காட்டியாகும்.
- IIP தரவானது ஒவ்வொரு மாதமும் மத்தியப் புள்ளிவிவர அமைப்பால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.




## உணவு இழப்பு மற்றும் கழிவைக் குறைத்தல் – அறிக்கை

- ராக்ஃபெல்லர் அறக்கட்டளையின் ஆதரவுடன் உலக வள நிறுவனம் (WRI - World Resources Institute) “உணவு இழப்பு மற்றும் கழிவுகளைக் குறைத்தல்” என்ற புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது உலகளவில் உணவு வீணாதலை “அளவீடு” செய்துள்ளது.

- ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் உற்பத்தி செய்யப்படும் உணவுகளில் மூன்றில் ஒரு பங்கு சாப்பிடப்படாமல் வீணாகின்றது (செலவு: 940 பில்லியன் டாலர்).
- 8% பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்திற்கு இந்த சாப்பிடப் படாத உணவு ஒரு காரணமாகும்.



*Source: WRI analysis based on FAO (2011).*

## 6வது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான உத்தி சார்ந்த பொருளாதார உரையாடல்

- 6வது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான உத்தி சார்ந்த பொருளாதார உரையாடலானது புது தில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- இந்தியாவின் சார்பில் நிதி ஆயோக்கின் துணைத் தலைவரின் தலைமையிலான குழுவினரும் சீனாவின் சார்பில் தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணையத்தின் தலைவரின் தலைமையிலான குழுவினரும் கலந்து கொள்கின்றனர்.
- 2018-19 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகமானது 87 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- வர்த்தகப் பற்றாக்குறை சீனாவுக்குச் சாதகமாக 50 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

## ஆதாரால் செயல்படுத்தப்பட்ட கட்டண முறைமை சேவைகள்: இந்திய அஞ்சலக பண வழங்கீட்டு வங்கி

- இந்திய அஞ்சலக பண வழங்கீட்டு வங்கியால் (India Post Payments Bank - IPPB) நடைமுறைப் படுத்தப்படுகின்ற ஆதாரால் செயல்படுத்தப்பட்ட கட்டண முறைமை சேவைகளை அதிகாரப் பூர்வமாக வெளியிடுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

- ❖ எந்தவொரு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கும் வங்கிச் சேவைகளை வங்கிகளுக்கு இடையே மாற்றி அளிக்கக் கூடிய வகையில் வழங்குவதற்கான நாட்டின் மிகப்பெரிய ஒற்றைத் தளமாக IPPB உருவெடுத்துள்ளது.
- ❖ தபால் நிலையங்களின் விரிவான தொலைதூர இணைப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

*இதுபற்றி*

- ❖ IPPB என்பது மத்திய தகவல் தொடர்பு அமைச்சகத்தின் அஞ்சல் துறையின் கீழ் செயல்படும் 100% அரசுக்கு சொந்தமான பண வழங்கீட்டு வங்கி ஆகும்.
- ❖ இது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று நிறுவப்பட்டது.

## இந்தியாவின் தங்க இருப்பு

- ❖ மொத்தத் தங்க இருப்பின் அடிப்படையில் இந்தியா நெதர்லாந்தைப் பின்னுக்குத் தள்ளி முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.
- ❖ உலக தங்க ஆணையத்தின் கூற்றுப்படி, இந்தியாவில் மொத்தம் 618.2 டன்கள் தங்கம் இருப்பு உள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் 8,133.5 டன்கள் தங்க இருப்புடன் அமெரிக்கா முதலிடத்திலும் 3,366.8 டன்கள் தங்க இருப்புடன் ஜெர்மனி இரண்டாம் இடத்திலும் உள்ளன.
- ❖ சர்வதேச நாணய நிதியமானது 2,451.8 டன்கள் தங்கத்துடன் இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

TOP 10 COUNTRIES WITH LARGEST GOLD RESERVES, 2019

CEOWORLD Magazine

| RANK | COUNTRY | GOLD RESERVES (IN US$) | (IN METRIC TONNES) |
|---|---|---|---|
| 1 | UNITED STATES | $334.5 BILLION | 8,133 |
| 2 | GERMANY | $138.6 BILLION | 3,370 |
| 3 | ITALY | $100.8 BILLION | 2,452 |
| 4 | FRANCE | $100.2 BILLION | 2,436 |
| 5 | RUSSIA | $86.9 BILLION | 2,113 |
| 6 | CHINA | $76.2 BILLION | 1,853 |
| 7 | SWITZERLAND | $42.8 BILLION | 1,040 |
| 8 | JAPAN | $31.5 BILLION | 765 |
| 9 | NETHERLANDS | $25.2 BILLION | 612 |
| 10 | INDIA | $24.7 BILLION | 600 |

Source: CEOWORLD magazine

## உரிமம் பெறப்படுவதற்கான விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன - உற்பத்தித் துறை

- பின்வரும் நான்கு பிரிவுகளைத் தவிர மற்ற பொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் கட்டாய உரிமங்களைப் பெற வேண்டியதில்லை என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
    - புகையிலையின் சுருட்டுகள் & சிகரெட்டுகள் மற்றும் புகையிலைக்கு மாற்றாகத் தயாரிக்கப்பட்ட பொருட்கள்
    - மின்னணு விண்வெளி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்
    - தொழில்துறை வெடிபொருட்கள்
    - தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்கள்
- மேலும் பாதுகாப்புத் துறையில் உரிமங்கள் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைத் தவிர எந்தவொரு பாகங்கள் அல்லது பொருள்களைத் தயாரிப்பவர் தொழில்துறை / ஆயுத உரிமங்களைப் பெறத் தேவையில்லை.
- உரிமங்களின் ஆட்சியை அகற்றுவதற்கும் வணிகத்தை எளிதாக்குவதற்கும் அரசு எடுத்துள்ள முயற்சியின் ஒரு பகுதியாக உற்பத்தியாளர்களுக்கான உரிம விதிகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

## பெருநிறுவனங்களுக்கான வரிக் குறைப்பு

- பெருநிறுவன வரி விகிதங்களில் அதிக அளவிலான வரிக் குறைப்புகளை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.
- தனியார் முதலீட்டை புதுப்பிப்பதையும் கடந்த ஆறு ஆண்டு காலமாக நிலவி வரும் குறைவான வளர்ச்சியை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு ரூ 1.45 லட்சம் கோடி மதிப்பிலான ஊக்கத் தொகையை அவர் அறிவித்துள்ளார்.


| நிறுவனத்தின் வகை | விகிதம் |
|---|---|
| எந்தவொரு வரி விலக்கையும் / ஊக்கத்தையும் பெறாத உள்நாட்டு நிறுவனங்களுக்கான அடிப்படை பெரு நிறுவன வரி விகிதம். | 30% இலிருந்து 22% ஆகக் குறைக்கப்பட்டது.<br><br>திறனுள்ள வரி விகிதம்: 25.17% |
| உற்பத்தித் துறையில் புதிய முதலீடு செய்யும் வகையில் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அல்லது அதற்குப் பிறகு பதிவு செய்யப் படும் உள்நாட்டு நிறுவனங்கள். | 25% இலிருந்து 15% ஆகக் குறைக்கப்பட்டது |

- குறைந்தபட்ச மாற்று வரி ஆனது 18% இலிருந்து 15% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- மூலதன ஆதாயங்களுக்கான கூடுதல் கட்டணம் திரும்பப் பெறப்படுகின்றது.
- பெருநிறுவன வரி விகிதக் குறைப்பு மற்றும் பிற ஊக்கத் தொகைகளுக்கான மொத்த வருவாய் 1.45 லட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தோலில் புதிய வலி உணர்திறன் உறுப்பு கண்டுபிடிப்பு

- தோலில் ஒரு புதிய உணர்ச்சி உறுப்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது துளைகள் மற்றும் தாக்கங்கள் போன்ற வலி மிகுந்த உடலில் ஏற்பட்ட சேதங்களைக் கண்டறியும்.
- வலிக்கு காரணமான உறுப்பு: இணைப்பு உயிரணு.
- இது ஒரு மேம்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பாகும். இது புதிய வலி நிவாரணி மருந்துகளை உருவாக்க உதவும்.
- இந்தக் கண்டுபிடிப்பு 'அறிவியல்' இதழில் வெளியிடப்பட்டது.





## இணையங்களுக்கானப் பொருட்களின் 4வது காங்கிரஸ்: பெங்களூரு

- 2019 ஆம் ஆண்டில் இணையங்களுக்கான பொருட்களின் காங்கிரஸின் 4வது பதிப்பானது கர்நாடகாவின் பெங்களூருவில் நடத்தப்பட்டது.
- இந்தப் பதிப்பின் கருப்பொருள் “இணையங்களுக்கான பொருட்களை மையமாக்குதல்” என்பதாகும்.
- இது இந்தியாவின் டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கான மிகப்பெரிய சங்கமமாகும்.

## அறிவியலின் ஆஸ்கார் விருது

- உலகின் முதலாவது கருந்துளையின் உருவப் படத்தை உருவாக்கிய 347 விஞ்ஞானிகளைக் கொண்ட ஈவன்ட் ஹாரிசன் தொலைநோக்கிக் குழுவுக்கு அடிப்படை இயற்பியலில் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இந்தப் பரிசானது "அறிவியலின் ஆஸ்கார்" என்று அழைக்கப்படுகின்றது. இது 3 மில்லியன் டாலர் நிதித் தொகையைக் கொண்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதி மெஸ்ஸியர் 87 விண்மீன் மீது வெள்ளை நிறம் கொண்ட வெப்பமான பிளாஸ்மாவின் சுடர்-ஆரஞ்சு ஒளிவட்டம் மூலம் வட்டமிடப்பட்ட கருந்துளையின் படத்தை இக்குழு வெளியிட்டது.



## ஒடிசாவில் தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர்

- இந்தியாவில் தில்லி எய்ம்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் ஒடிசாவைச் சேர்ந்த தலை ஒட்டிப் பிறந்த இரட்டையர்களான ஜக்கா மற்றும் பனியா ஆகியோருக்கு அறுவை சிகிச்சை செய்து வெற்றிகரமாக மறுவாழ்வு அளித்துள்ளனர்.
- இரு குழந்தைகளும் மூளை மற்றும் மண்டை ஓடு இணைந்து காணப்பட்டனர்.
- 2017 ஆம் ஆண்டு அறுவை சிகிச்சை செய்து தொடர்ந்து அவர்கள் கண்காணிக்கப் பட்டனர்.
- கடந்த 50 ஆண்டு காலங்களில் உலக அளவில் 10-15 குழந்தைகள் மட்டுமே இத்தகு அறுவை சிகிச்சைக்குப் பிறகு உயிர் வாழ்கின்றனர். இந்தியாவில் இப்படிப்பட்ட சிகிச்சைக்குப் பின் உயிர் வாழும் ஒரே இரட்டையர் இவர்களேயாவர்.



## விக்ரம் லேண்டர்

- திருவனந்தபுரத்தில் உள்ள விண்வெளி இயற்பியல் ஆய்வகத்தின் (Space Physics Laboratory - SPL) விஞ்ஞானிகள் சந்திரயான் 2இன் விக்ரம் என்ற பெயர் கொண்ட லேண்டருடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.
- சந்திரயன் 2ல் மொத்தம் உள்ள 14 விண்வெளி ஆய்வுக் கருவிகளில் நான்கு விண்வெளி ஆய்வுக் கருவிகள் விண்வெளி இயற்பியல் ஆய்வகத்தைச் சேர்ந்தவையாகும்.

*இதுபற்றி*

- SPL என்பது விக்ரம் சாரபாய் விண்வெளி ஆய்வு மையத்தின் முதன்மை அறிவியல் ஆய்வகமாகும்.
- இது புவியின் வளிமண்டலத்தின் கீழ் மற்றும் மேல் அடுக்கு, அயன மண்டலங்கள் & காந்த மண்டலங்கள் மற்றும் பிற சூரிய மண்டல அமைப்புகளில் ஆராய்ச்சி மேற்கொள்கின்றது.

## பம்பாய் இரத்த வகை

- சமீபத்தில் மும்பையில் உள்ள மருத்துவமனைகளில் "பம்பாய் இரத்த வகையின்" தேவையானது தற்செயலாக அதிகரித்துள்ளது. ஆனால் அதன் விநியோகமானது குறைந்துள்ளது.
- அரிய பம்பாய் இரத்த வகையானது 1952 ஆம் ஆண்டில் பம்பாயில் டாக்டர் ஒய் எம் பெண்டே என்பவரால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.
- மேலும் இது "hh" இரத்த வகை என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது ஆன்டிஜென் (நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி) Hஐ வெளிப்படுத்துவதில் குறைபாடுடையதாக உள்ளது. அதாவது இதன் RBC ஆனது ஆன்டிஜென் Hஐக் கொண்டிருக்கவில்லை.

**Blood Groups (Antigens and Antibodies)**

| Blood Group | Antigens | Antibodies |
|---|---|---|
| **A** | A,H | B |
| **B** | B,H | A |
| **AB** | A,B,H | - |
| **O** | H | A,B |
| **Bombay Blood Group** | - | A,B,H |


- இந்த இரத்த வகையைக் கொண்ட நபர்கள் பம்பாய் HH தோற்ற வகைமை அல்லது பினோடைப்பைக் கொண்ட தனிநபர்களிடமிருந்து தன்னியக்க இரத்தம் அல்லது அவர்களின் இரத்தத்துடன் மட்டுமே அதனை மாற்ற முடியும். இந்த இரத்த வகை மிகவும் அரிதானது ஆகும்.
- இந்த இரத்தமானது 40,00,000 லட்சம் நபர்களில் 1 நபருக்கு மட்டுமே இருப்பதால் இது மிகவும் அரிதானதாக விளங்குகின்றது.

***பாம்பே இரத்த வகை ஏன் தனித்துவமானது?***

- அனைத்து இரத்த வகைகளும் (O, A, B, AB) இரத்தத்தில் ஆன்டிஜென் hஐக் கொண்டுள்ளன.
- ஆனால் மிகச் சில நபர்கள் ஆன்டிஜென் hஐக் கொண்டிருக்கவில்லை.
- அதற்குப் பதிலாக அவர்களிடம் "நோய் எதிர்ப் பொருள்" h உள்ளது. இதன் காரணமாக அவர்களுக்கு வேறு எந்த இரத்தமும் கொடுக்க முடியாது.

## வேற்று கிரகத்தில் நீராவி

- வானியலாளர்கள் முதன்முறையாக K2-18b எனப்படும் ஒரு தொலைதூரக் கிரகத்தின் வளிமண்டலத்தில் "நீராவியைக்" கண்டுபிடித்துள்ளனர்.




- நாசாவின் ஹப்பிள் விண்வெளித் தொலைநோக்கியின் தரவு இந்தக் கண்டுபிடிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது.

- K2-18b ஆனது வளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. மேலும் அக்கிரகத்தில் தண்ணீரும் உள்ளது. இதனால் மனிதர்கள் வாழ்வதற்கு உகந்த நீர் மற்றும் வெப்பநிலை ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும் ஒரேயொரு வெளிக்கோள் இதுவாகும்.
- இது பால்வீதியின் லியோ விண்மீன் மண்டலத்தில் பூமியிலிருந்து 110 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு சிவப்பு குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றது.
- இது பூமியின் நிறையை விட 8 மடங்கு நிறை கொண்டது. இது பூமியை விட இரண்டு மடங்கு பெரியது.
- இது பூமி மற்றும் நெப்டியூன் ஆகியவற்றின் நிறைகளுக்கிடையேயான வெளிக் கோள்கள் அல்லது சூப்பர் எர்த் என்று அழைக்கப்படுகின்றது.

## சீனாவின் புதிய செயற்கைக் கோள்கள்


- சீனா 3 செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக ஏவியுள்ளது. அதாவது ஒரு ரிசோர்ஸ் செயற்கைக்கோள் ZY-102D மற்றும் இரண்டு சிறிய செயற்கைக் கோள்களாகும.
- இவை லாங் மார்ச் 4B செலுத்து ராக்கெட் மூலம் ஏவப்பட்டன.
- இயற்கை வள சொத்து மேலாண்மை, சுற்றுச்சூழல் கண்காணிப்பு, பேரிடர் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நகர்ப்புறக் கட்டுமானம், போக்குவரத்து மற்றும் தற்செயல் மேலாண்மை ஆகியவற்றைக் கண்காணிப்பதன் மூலம் ரிசோர்ஸ் செயற்கைக்கோள் தரவை வழங்கும்.
- 2 சிறிய செயற்கைக் கோள்களில் BNU - 1 எனப்படும் செயற்கைக் கோள் ஒன்று துருவப் பகுதியின் காலநிலையை முதன்மையாகக் கண்காணிக்கும்.

## தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரிய சக்தி வளாகம்

- வியட்நாம் தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய சூரிய ஆற்றல் ஆலையாகக் கருதப்படும் "டௌ டியாங் சூரிய ஆற்றல் வளாகத்தை" துவங்கியிருக்கிறது.
- இது டெய்னின் மாகாணத்தில் 540 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளது மற்றும் இது ஆண்டுதோறும் 688 மில்லியன் கிலோவாட் (கிலோவாட் மணிநேர) மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.
- இந்த சூரிய ஆற்றல் வளாகம் மிகப்பெரிய செயற்கை ஏரியான டௌ டியாங் நீர்த்தேக்கத்தில் கட்டப்படுகிறது.
- இது ஒவ்வொரு ஆண்டும் வளிமண்டலத்தில் 595,000 டன்கள் அளவுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு வெளியேறுவதைத் தவிர்க்கும்.

## புதிய அறிவியல் சொற்கூறு: யாங்க்

- உயிரியலாளர்கள் மற்றும் உயிரி மருத்துவப் பொறியியலாளர்கள் காலப்போக்கில் எந்தவொரு மாற்றத்தையும் அளவிடக் கூடிய "யாங்க்" என்று அழைக்கப்படும் ஒரு புதிய சொல்லை வரையறுக்க பரிந்துரைத்துள்ளனர்.




- ❖ மனிதனின் தசை செயல்பாடுகளைப் பற்றி நன்கு அறிய "யாங்க்" என்பதை வரையறுப்பது பயனுள்ளதாக இருக்கும்.
- ❖ தசை கடினமாதல், முதுகெலும்புக் காயம், பக்கவாதம் மற்றும் பெருமூளை வாதம் ஆகியவற்றின் ஒரு பொதுவான தசைக் குறைபாடான இசிப்பு நிலையை (spasticity) நன்கு புரிந்துகொள்ள 'யாங்க்' பயனுள்ளதாக இருக்கும்.

## மனித விண்வெளித் திட்டம்: இஸ்ரோ மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு


- ❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது (Indian Space Research Organisation - ISRO) மனித விண்வெளித் திட்டத்திற்கு, மனிதர்களை மையமாகக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்புடன் (Defence Research and Development Organisation - DRDO) இணைந்துள்ளது.
- ❖ ISRO மனிதர்களின் விண்வெளிப் பயணத்திற்கானத் திறன்கள் குறித்து செயல் நிலை விளக்கம் அளிப்பதற்காக DRDO உடன் இணைந்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் 75வது சுதந்திர தினத்திற்கு முன்னதாகவே அவை மனித விண்வெளிப் பயணத்திற்கானத் திறன்களை நிரூபிக்க இருக்கின்றன.

## இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் திறன் மையம்

- ❖ இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் திறன் மையத்தை (Digital Capability Centre - DCC) அமைக்க இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய நிறுவனமானது (National Institution for Transforming India - NITI Aayog) மெக்கின்சி & நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- இது மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் காண்பிக்கும். இது வளர்ந்து வரும் கண்டுபிடிப்புகளுக்கு ஒரு சோதனைத் தளத்தை வழங்கும்.
- DCC என்பது ஒரு தனித்துவமான டிஜிட்டல் உற்பத்திக் கற்றல் மையமாகும்.
- இது அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தில் நிறுவனத்தின் தலைவர்களுக்கும் அவர்களின் பணியாளர்களுக்கும் அனுபவங்களையும் மற்றும் அது குறித்த பட்டறைகளையும் வழங்க இருக்கின்றது.
- ஆச்சென், சிகாகோ, சிங்கப்பூர், வெனிஸ் மற்றும் பெய்ஜிங் போன்ற உலகெங்கிலும் உள்ள இது போன்ற ஐந்து டிஜிட்டல் திறன் மையங்களுக்கு மட்டுமே மெக்கின்சி ஆதரவு அளிக்கின்றது.

## NaVIC ஐ கைபேசிகளில் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது





- கைபேசி தொலைபேசிக்கான நெறிமுறைகளை உருவாக்கும் உலகளாவிய தரங்கள் அமைப்பான 3 ஜிபிபி ஆனது இந்தியாவின் பிராந்திய வழிசெலுத்தல் அமைப்பான நேவிக் (இந்திய செயற்கைக் கோள்களின் தொகுப்பு) என்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- NaVIC (Navigation with Indian Constellation) ஆனது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பால் உருவாக்கப்பட்டது.

- இந்தியப் பகுதிக்கான இடஞ்சுட்டி செயற்கைக்கோள் அமைப்பு (Indian Regional Navigation Satellite System - IRNSS) அல்லது NaVIC ஆனது இந்தியா மற்றும் அதனைச் சுற்றி 1,500 கி.மீ வரையில் உள்ள பிராந்தியத்தில் பயனர்களுக்கு இடம் குறித்தத் தகவலைத் துல்லியமாக வழங்க வல்லது.
- 3GPP ஆல் NavIC ஏற்றுக் கொள்ளப் படுதலானது 4G, 5G மற்றும் இணையங்களுக்கான பொருள்கள் (IoT) ஆகியவற்றில் NavICஐ பயன்படுத்துவதற்காக NavIC தொழில்நுட்பத்தை வணிகச் சந்தைக்கு கொண்டு வர இருக்கின்றது.
- உற்பத்தியாளர்கள் இப்போது NaVIC உடன் இணக்கமான வழிசெலுத்தல் சாதனங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும். இதனால் இந்த சாதனங்களின் பயனர்கள் புவி இடங்காட்டி அல்லது NaVIC சமிக்கைகளை எளிதாக அணுக முடியும்.
- 3GPP ஆனது தற்போது செல்லுலார் நிலைப்படுத்து அமைப்புகளுக்காக BDS (சீனா), கலிலியோ (ஐரோப்பா), GLONASS (ரஷ்யா) மற்றும் GPS எனப்படும் புவியிடங்காட்டி (அமெரிக்கா) ஆகியவற்றிலிருந்து உலகளாவிய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பின் ஆதரவைக் கொண்டுள்ளது.

## எலும்பு போன்ற பற்களைக் கொண்ட பறவைகள் - பெலகோர்னிதிட்ஸ்

- உலகின் பழமையான பறவை இனங்களில் ஒன்றின் புதைபடிவங்களை விஞ்ஞானிகள் நியூசிலாந்தில் கண்டுபிடித்துள்ளனர்.
- இது சுமார் 62 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக டைனோசர்கள் இறந்த காலத்தையடுத்து வாழ்ந்திருந்தது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கடற்பறவை புதைபடிவத்திற்கு புரோட்டோடோன்டோபடெரிக்ஸ் ருத்தே என்று பெயரிடப்பட்டுள்ளது.
- முன்னதாக எலும்பு போன்ற பற்களைக் கொண்ட பறவைகள் வடக்கு அரைக் கோளத்திலிருந்து தோன்றியதாகக் கருதப்பட்டன.
- நியூசிலாந்திலிருந்து வந்த இந்த புதைபடிவத்தின் காரணமாக இது இப்போது தவறு என்று நிரூபிக்கப் பட்டுள்ளது.




## மிகவும் பெரிய நியூட்ரான் நட்சத்திரம் - J0740 + 6620

- தொலைதூர நட்சத்திர அமைப்பை ஆராயும் வானியலாளர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய நியூட்ரான் நட்சத்திரம் எது என்பதை அடையாளம் கண்டுள்ளனர்.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட J0740 + 6620 போன்ற நியூட்ரான் நட்சத்திரங்கள் இறந்த நட்சத்திரங்களின் மீதமுள்ளவைகளாகும்.
- நட்சத்திரங்கள் மில்லியன் அல்லது பில்லியன் ஆண்டுகளாக இருக்கின்றன. ஆனால் அவை இறுதியில் எரிசக்தி இல்லாமல் போய் விடுகின்றன.
- பின்னர் அவை பின்வரும் மூன்றில் ஒன்றாக மாறுகின்றன.
  - சிறிய நட்சத்திரங்கள் வெள்ளை நிறம் கொண்ட குள்ளக் கோள்களாக (சூரியனைப் போல) மாறுகின்றன.
  - பெரிய நட்சத்திரங்கள் கருந்துளைகளில் கலந்து விடுகின்றன.
  - 8 மற்றும் 29 என்ற சூரிய நிறைகளுக்குச் சமமான நிறைகளைக் கொண்ட நட்சத்திரங்கள் நியூட்ரான் நட்சத்திரங்களாகின்றன.

***J0740 + 6620 பற்றி***

- MSP J0740 + 6620 ஆனது சூரியனை விட 2.14 மடங்கு பெரியது ஆகும்.
- ஆனால் இதன் விட்டம் 15 மைல்களுக்கும் குறைவானது ஆகும்.
- "ஷாபிரோ நேர தாமதம்" என்ற கொள்கையைப் பயன்படுத்தி இதன் நிறை தீர்மானிக்கப் படுகின்றது.
- MSP J0740 + 6620இன் தீவிர அடர்த்தி காரணமாக அது விரைவில் கருந்துளைக்குள் விழக்கூடும்.



## உலகின் மிகப்பெரிய போக்குவரத்து விண்வெளிக் கப்பல் – சர்வதேச விண்வெளி நிலையம்

- ஜப்பான் நாடானது சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கி ஒரு ஆளில்லா விண்வெளிக் கலனை வெற்றிகரமாகச் செலுத்தியுள்ளது.
- ஜக்சாவின் (ஜப்பான் – விண்வெளி ஆய்வு நிறுவனம்) H – 2B என்ற விண்கலனானது கௌனோடோரி 8 என்ற சரக்கு விண்வெளிக் கப்பலுடன் விண்ணுக்குப் பாய்ந்தது.
- கௌனோடோரி 8 (HTV-8 என்றும் அழைக்கப்படுகின்றது) உலகின் மிகப்பெரிய போக்குவரத்து சரக்குக் கப்பல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது உள்நாட்டு எரிபொருள் மின்கலம்


- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உயர் வெப்பநிலை எரிபொருள் மின்கல அமைப்பை வெளியிட்டார்.
- இது தொலைத் தொடர்பு கோபுரங்கள், தொலைதூர இடங்கள் மற்றும் உத்தி சார்ந்த பயன்பாடுகள் ஆகியவற்றிற்கான திறனுள்ள, சுத்தமான மற்றும் நம்பகமான காப்பு மின்சக்தி உற்பத்தி அமைப்பின் தேவையைப் பூர்த்தி செய்யும்.
- இந்த 5.0 கிலோவாட் திறனுள்ள எரிபொருள் மின்கல அமைப்பானது மெத்தனால்/உயிரி மீத்தேன் ஆகியவற்றைப் பயன்படுத்தி பசுமை முறையில் மின் சக்தியை உற்பத்தி செய்கின்றது.
- டீசலால் இயங்கும் மின் உற்பத்தி சாதனங்களை உருவாக்கும் அமைப்புகளை மாற்றுவதற்கும் காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கும் இது உதவுகின்றது.
- இது 3 தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அறிவியல்சார் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி மன்றம் - தேசிய வேதியியல் ஆய்வகம், புனே; CSIR – தேசிய இயற்பியல் ஆய்வகம், புது தில்லி & CSIR - மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம், காரைக்குடி ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டது.
- பயன்பாடுகள்: சிறிய அலுவலகங்கள், வணிக அலகுகள் மற்றும் தரவு மையங்கள்.

## புதிய கனிமம் கண்டுபிடிப்பு

- கனடாவில் உள்ள அல்பர்டா பல்கலைக் கழகத்தின் வைரங்கள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பள்ளியைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் கோல்ட்சிமிடைட் - 03 என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய கனிமத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இது தென்னாப்பிரிக்காவில் டீ பியர்ஸ் நிறுவனத்தால் நிர்வகிக்கப் படுகின்ற கோபியோன்டைன் குழாய் என்ற சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு வைரத்தின் உள்ளே கண்டறியப் பட்டது.
- நவீனப் புவி வேதியியலின் நிறுவனர் விக்டர் மோரிட்ஸ் கோல்ட்ஸ்கிமிட்டின் நினைவாக இது கோல்ட்சிமிடைட் என்று பெயரிடப்பட்டது.
- இது பூமிக்கடியில் 170 கிலோ மீட்டர் ஆழத்தில் ஏறக்குறைய 1200° செல்சியஸ் வெப்ப நிலையில் இந்தக் கனிமம் உருவாக்கப்பட்டதாக மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

## வியாழன் போன்ற புதிய கிரகம் – GJ 3512b

- வானியல் நிபுணர்கள் வியாழன் போன்ற ஒரு வாயு நிறைந்த கோளான "GJ 3512b" என்று பெயரிடப்பட்ட ஒரு கோளைக் கண்டறிந்துள்ளனர்.
- இது வியாழனின் நிறையில் பாதியைக் கொண்டுள்ள நிறையுடன் கூடிய ஒரு மிகப்பெரிய கோளாகும்.
- இது சூரியனிடமிருந்து 30 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்திருக்கும் ஒரு சிறிய அல்லது குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றது.
- அந்த சிவப்புக் குள்ள நட்சத்திரம் சூரியனின் நிறையில் 12 சதவிகித அளவைக் கொண்டிருக்கின்றது.
- தற்போதைய கருத்தியலாளர்கள் படி, இந்த கோள் கண்டிப்பாக நிலைத்திருக்கக் கூடாது.





## விண்மீன்களுக்கு நடுவே உள்ள இரண்டாவது பொருள் – 2I/போரிசோவ்

- சர்வதேச வானியல் சங்கத்தின்படி (International Astronomical Union - IAU), விண்மீன்களுக்கு நடுவே உள்ள ஒரு இரண்டாவது பொருள் என்ற வகையில் 2I/போரிசோவ் எனப் பெயரிடப்பட்ட ஒரு பொருள் சூரியக் குடும்பத்தில் கண்டறியப் பட்டிருக்கின்றது.
- இது கிரீமியாவின் மார்கோ கண்காணிப்பு ஆய்வகத்திலிருந்து வானியல் நிபுணரான கென்னடி போரிசோவ் என்பவரால் கண்டறியப்பட்டதாகும்.
- இது அவராலேயே தயாரிக்கப்பட்ட 0.65 மீட்டர் அளவுடைய ஒரு தொலை நோக்கியிலிருந்து கண்டறியப்பட்ட ஒரு வால் நட்சத்திரத்தைப் போல் உள்ளது.
- இது ஒரு பெரிதுபடுத்தப்பட்ட வட்டப் பாதையை தனது சுற்றுப் பாதையாக கொண்டிருக்கின்றது.
- இது முன்னதாக C/2019 Q4 என அறியப்பட்டதாகும்.
- விண்மீன்களுக்கு நடுவேயான முதலாவது பொருள் 1I/ஒமுவாமுவா என்பதாகும்.
- விண்மீன்களுக்கு நடுவில் உள்ள ஒரு பொருள் என்பது குறுங்கோள், வால் நட்சத்திரம் அல்லது கிரகம் போன்ற ஒரு வானியல் பொருளாகும். ஆனால் இது கண்டிப்பாக விண்மீன்களுக்கு நடுவில் அமைந்திருக்கும் நட்சத்திரத்தைப் போன்றோ அல்லது துணை நட்சத்திரத்தைப் போன்றோ இருக்காது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கேம்பா நிதி - காடு வளர்ப்புத் திட்டம்

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் பல்வேறு மாநிலங்களின் காடு வளர்ப்புத் திட்டங்களுக்கு 47,436 கோடி ரூபாயை கேம்பா நிதியிலிருந்து விடுவித்திருக்கின்றது.
- உச்ச நீதிமன்றம 2001ம் ஆண்டில் காடு வளர்ப்பு நிவாரண நிதியையும் காடு வளர்ப்பு நிவாரண நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம் ஆகியவற்றையும் உருவாக்கிட ஆணையிட்டது.
- மாநிலங்களுக்கான இந்நிதி காடு வளர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்திடவும் காடு மற்றும் மரங்களின் பரப்பை அதிகரித்திடவும் எண்ணுகின்றது.
- காடு மற்றும் மரங்களின் பரப்பு அதிகரிப்பானது 2030ம் ஆண்டிற்குள்ளாக 2.5 முதல் 3 பில்லியன் டன்கள் கரியமில வாயுவின் அளவிற்கு ஒரு கூடுதல் கரிமச் சேமிப்பை உருவாக்கிடும்.




## பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம்

- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் (UN Convention to Combat Desertification - UNCCD) உள்ள உறுப்பு நாடுகளின் 14வது மாநாடு கிரேட்டர் நொய்டாவில் தொடங்கியது.
- இந்த மாநாடு இந்த மாதம் 13 ஆம் தேதி வரை நடைபெறும். COP14 இல் உலகம் முழுவதிலுமிருந்து 3000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ள விருக்கின்றார்கள்.
- UNCCD என்பது பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்காகவும் வறட்சி மற்றும் பாலைவனமாக்கலின் விளைவுகளைத் தணிப்பதற்காகவும் அமைக்கப்பட்ட முதல் மற்றும் ஒரே சர்வதேச அளவிலான சட்டப்பூர்வமாக அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு கட்டமைப்பாகும்.
- இந்தியா 1994 இல் UNCCDல் கையெழுத்திட்டது. பின்னர் 1996 இல் அதை உறுதி செய்தது.

## பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்திகளின் 3வது மேம்பட்ட மதிப்பீடு

- ❖ வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் வேளாண் ஒத்துழைப்பு மற்றும் உழவர் நலத் துறையானது, பல்வேறு தோட்டக் கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்திகளின் 3வது மேம்பட்ட மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.
- ❖ இது பல்வேறு மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற மூல நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, தோட்டக்கலைப் பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவு அதே அளவில் உள்ளது.

**Flat performance** *(in million tonnes)*

| Veg crops | 2017-18 (Final) | 2018-19 (3rd Estimates) | Fruit crops | 2017-18 (Final) | 2018-19 (3rd Estimates) | Plantation and spices crops | 2017-18 (Final) | 2018-19 (3rd Estimates) |
|---|---|---|---|---|---|---|---|---|
| Potato | 51.31 | 53.03 | Banana | 30.81 | 31.75 | Coconut | 16.41 | 14.75 |
| Onions | 23.26 | 23.49 | Mango | 21.82 | 20.8 | Arecanut | 0.83 | 0.85 |
| Tomato | 19.76 | 19.40 | Citrus crops | 12.55 | 13.2 | Cashewnut | 0.82 | 0.74 |
| Brinjal | 12.8 | 12.66 | Papaya | 5.99 | 5.98 | Turmeric | 1.13 | 0.93* |
| Cabbage | 9.04 | 9.10 | Pomegranate | 2.85 | 3.03 | Ginger | 1.12 | 1.85** |
| Cauliflower | 8.67 | 9.10 | Apple | 2.33 | 2.50 | Garlic | 1.61 | 2.84 |
| Okra | 6.10 | 6.17 | | | | Cardamom | 0.028 | 0.022 |
| **Total^** | **184.39** | **185.88** | **Total^** | **97.36** | **98.58** | **Total horticultural production** | **311.71** | **313.85** |

^Including others *Dry turmeric ** Fresh ginger

## நீர் மாசுபாட்டிற்கு எதிராக சிப்பிகள்

- ❖ நீர் மாசுபாட்டிற்கு எதிரான போராட்டத்தில் நுண் நெகிழிகள் மற்றும் பிற மாசுபடுத்திகளை உறிஞ்சுவதற்கு விஞ்ஞானிகள் பெருங் கடல்களில் "சிப்பிகளைப்" பயன்படுத்துகின்றனர்.
- ❖ சிப்பிகள் ஒரு 'சிறந்த வடிகட்டிகளாகச்' செயல்படுகின்றன. இது நுண் நெகிழிகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பிற மாசுபடுத்தல்களுடன் ஊட்டச்சத்துக்காக தாவர மிதவை உயிரிகளை எடுத்துக் கொள்கின்றன.
- ❖ கடினமான வெளிப்புற ஓட்டைக் கொண்டுள்ள சிப்பிகள் முக்கியமான கடல் அல்லது நன்னீர் உயிரினங்கள் ஆகும்.



## அதிஉயர் சுற்றுச்சூழல் நிலப் பகுதிகளில் புலிகள்

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் 'உயரமான சுற்றுச்சூழல் நிலப் பகுதிகளில் புலி வாழ்விடங்களின் நிலை' குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
- இந்த ஆய்வானது உலகளாவியப் புலிகள் மன்றம் (GTF - Global Tiger Forum), இயற்கைக்கான உலகளாவிய நிதியம், பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (International Union for Conservation of Nature - IUCN) புலிகளுக்கான ஒருங்கிணைந்த வாழ்விடப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் இந்தியா, நேபாளம் & பூடான் ஆகிய அரசாங்கங்கள் ஆகியவற்றினால் மேற்கொள்ளப் பட்டன.
- அதிஉயர சுற்றுச் சூழல் அமைப்பு கூட புலிகளின் வளர்ச்சிக்கு ஒத்துப் போகும் என்று இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.



*GTF பற்றி*

- உலகில் புலிகளைக் கொண்டுள்ள 13 நாடுகளில் பரவியிருக்கும் புலிகளின் மீதமுள்ள 5 துணை இனங்களைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய பிரச்சாரம் மீதான அரசாங்கங்களுக்கிடையேயான ஒரே சர்வதேச அமைப்பு GTF ஆகும்.
- GTF 1993 இல் உருவாக்கப்பட்டது. 1997 இல் இது ஒரு சுயாதீன அமைப்பாக உருவெடுத்தது.
- அதன் செயலகம் புது தில்லியில் உள்ளது.

## தரம் தெரியாத மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நீர்ப் பிரச்சினை- அறிக்கை

- உலக வங்கியானது "தரம் தெரியாத மற்றும் கண்ணுக்குப் புலப்படாத நீர்ப் பிரச்சினை" என்ற புதிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- நீரின் தரம் எவ்வாறு மோசமடைகிறது என்பது ஒரு "கண்ணுக்கு புலப்படாத நீர்ப் பிரச்சினை" என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இது அதிக மாசுபட்ட பகுதிகளில் பொருளாதார வளர்ச்சித் திறனில் மூன்றில் ஒரு பகுதியை அழித்து விட்டது.
- பாக்டீரியா, கழிவு நீர், ரசாயனங்கள் மற்றும் நெகிழி ஆகியவற்றின் கலவையானது நீரிலிருந்து ஆக்ஸிஜனை அகற்றி, அதை "மக்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் ஒரு விஷமாக" மாற்றும் என்று அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

***நைட்ரஜன்***

- நீரின் மோசமான தரத்திற்கு நைட்ரஜன் முக்கியமாகப் பங்களித்துள்ளது என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.
- விவசாயத்தில் உரமாகப் பயன்படுத்தப்படும் நைட்ரஜன் ஆறுகள், ஏரிகள் மற்றும் பெருங்கடல்களில் நுழைந்து, அங்கு அது தீங்கு விளைவிக்கும் நைட்ரேட்டுகளாக மாறி உணவுச் சங்கிலியில் நுழைகின்றது.

***உயிரியல் ஆக்ஸிஜன் தேவை (Biological Oxygen Demand - BOD)***

- BOD ஆனது ஒரு லிட்டருக்கு 8 மில்லி கிராம் என்ற அளவைக் கடக்கும்போது, அந்தப் பிராந்தியங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 0.83 சதவீத புள்ளிகள் அளவில் குறையும் என்று அந்த அறிக்கை கூறுகின்றது.
- BOD என்பது தண்ணீரில் எவ்வளவு கரிம மாசுபாடு உள்ளது என்பதற்கான அளவீடு ஆகும்.

## காலநிலை மாற்றம் மற்றும் வாழைப் பழங்கள்

- இயற்கைக் காலநிலை மாற்றம் என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, காலநிலை மாற்றமானது வாழைப் பழங்களின் வளர்ச்சி நிலைகளுக்கு மிகவும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.
- ஆனால் இந்தப் போக்கு தலைகீழாக மாற இருக்கின்றது. காலநிலை மாற்றம் 2050 ஆம் ஆண்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- வாழைப் பழங்கள் வெப்பமான காலநிலையில் செழித்து வளர்கின்றன. பழம் சார்ந்த பயிர்களின் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோராக இந்தியா விளங்குகின்றது.
- தேசிய தோட்டக் கலை வாரியமானது 2011-17 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் (34 டன்/ஹெக்டேர்) வாழைப் பழத்தின் தொடர்ச்சியான மற்றும் அதிகப்படியான மகசூலைப் பதிவு செய்துள்ளது.

**BANANA YIELD IN INDIA (TONNES/HECTARE)**



| | |
|---|---|
| 2011-12 | 35.7 |
| 2012-13 | 34.2 |
| 2013-14 | 37.0 |
| 2014-15 | 35.5 |
| 2015-16 | 34.6 |
| 2016-17* | 34.0 |

*Provisional
Source: National Horticulture Board

## ஈரநிலங்கள் புனர்வாழ்விற்கான தேசிய முன்னெடுப்பு

- ஈரநில புனர்வாழ்வு தொடர்பான அதன் தேசிய முன்னெடுப்பின் கீழ், மத்திய அரசு புனர்வாழ்விற்காக இந்தியா முழுவதும் 100 ஈரநிலங்களை அடையாளம் கண்டுள்ளது.
- பள்ளிக்கரணை, கோடியக்கரை, புலிகாட் மற்றும் கூந்தன்குளம் ஆகியவை தமிழ்நாட்டிலிருந்து இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஈரநிலங்கள் ஆகும்.


- “ஈரநிலங்களின் நண்பர்கள்” அல்லது பக்சி மித்ராஸ் என்ற குழுவை உருவாக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.
- இந்தக் குழுக்கள் பங்குதாரர்களின் ஒரு பகுதியாக இருப்பார்கள். இந்த ஈரநிலங்களைப் பாதுகாப்பதில் தீவிரமாக அவர்கள் பங்கேற்பார்கள்.
- தமிழ்நாட்டில், 1991 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் உள்ள SACON இன் ஆய்வின்படி, 1,175 ஈரநிலங்கள் உள்ளன. இது மாநிலத்தின் மொத்தப் பரப்பளவில் 1.24 சதவிகிதப் பரப்பைக் கொண்டுள்ளன.

## 2019 ஆம் ஆண்டின் மழைக் காலத்தினிடையேயான மின்னல் அறிக்கை

- இந்திய வானிலை ஆய்வுத் துறையுடன் (India Meteorological Department - IMD) நெருக்கமாகச் செயல்படும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பான காலநிலை மீள் கண்காணிப்பு அமைப்புகள் ஊக்குவிப்பு அமைப்பானது 2019 ஆம் ஆண்டின் மழைக் காலத்தினிடையேயான மின்னல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஒடிசாவில் அதிகபட்ச மின்னல் நிகழ்வுகளும் ஏப்ரல் - ஜூலை மாதங்களில் மின்னல் காரணமாக உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்ச இறப்புகளும் ஏற்பட்டுள்ளன.
- இந்தியாவில் முதல்முறையாக நாடு முழுவதும் நிகழ்ந்த மின்னல் தாக்குதல்களையும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் இது கணக்கிட்டுள்ளது.
- மின்னல், அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலமான இறப்புகளைத் தடுத்தல் ஆகியவற்றிற்கான முன் எச்சரிக்கை முறையை உருவாக்க இது போன்ற ஒரு தரவுத் தளம் பயன்படுத்தப்படும்.


## 25 ஆண்டுகளில் அதிக ஈரப்பதம் மிக்க இந்தியா

- முக்கியமான பருவமழை மாதங்களான இந்த ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய மாதங்கள், கடந்த 25 ஆண்டுகளில் இந்தியா கண்ட மிகவும் ஈரப்பதம் மிக்க மாதங்களாகும்.
- இந்த இரண்டு மாதங்களில் நாடு முழுவதும் பெய்த மழைப் பொழிவானது இயல்பை விட 10% அதிகமாக உள்ளது. இது 1994க்குப் பிறகு பெய்த மிக அதிக மழைப் பொழிவாகும்.
- 2010க்குப் பிறகு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இந்தியா முழுவதும் மழை பெய்தது இதுவே முதல் முறையாகும். கடந்த 25 ஆண்டுகளில் இவ்வாறு மழை பெய்தது இது இரண்டாவது முறையாகும்.



## நீலச் சாலைத் திட்டம் – கத்தார்

- கத்தாரில் உள்ள பொதுப் பணித் துறை ஆணையமானது தோஹாவில் ஒரு முன்னோடித் திட்டமான "குளிர்ப் பாதை" என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது.
- சாலைகளில் உள்ள தாரின் வெப்பநிலையைக் குறைக்க ஒரு கிரையோஜெனிக் பொருளைப் பயன்படுத்துவது இத்திட்டத்தில் அடங்கும்.
- சூரிய ஒளியில் 50 சதவிகிதத்தைப் பிரதிபலிக்கும் இந்த 'குளிர்ப் பாதையானது' ஒரு முதன்மை பொருளின் நான்கு அடுக்குகளைக் கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து உள்ள பொருள்களின் மூன்று அடுக்குகள் சூரியக் கதிர்வீச்சினால் உறிஞ்சப்படும் வெப்பத்தைக் குறைக்கின்றன.




## வறட்சி முன்கணிப்பு கருவிப்பெட்டி

- புது தில்லியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்கலுக்கு எதிரான ஒப்பந்தத்தில் (United Nations Convention to Combat Desertification - UNCCD) உள்ள உறுப்பு நாடுகளின் 14வது மாநாட்டின் போது வறட்சிக் கருவிப் பெட்டி அதிகாரப் பூர்வமாகத் தொடங்கப்பட்டது.
- நாடுகளால் தங்கள் பிராந்தியங்களில் ஏற்படும் வறட்சி அபாயங்களை முன்கூட்டியே மதிப்பிடுவதற்கு இதைப் பயன்படுத்த முடியும்.
- இது வெவ்வேறு புவியியல் பகுதிகளில் வறட்சியினால் ஏற்படும் பாதிப்புகளைத் துல்லியமாக மதிப்பிடும் திறன் கொண்டது.
- இந்தக் கருவிப் பெட்டியானது மண்ணின் ஈரப்பதம், மழை பற்றிய தரவு மற்றும் தற்போதைய & கடந்த கால வெப்பநிலை குறித்தத் தரவு உள்ளிட்ட 30 அளவுருக்களைப் பயன்படுத்துகின்றது.
- உலக வங்கி ஆய்வின்படி, பொதுவாக வறட்சியைக் கணிப்பது கடினமான செயலாகும். இது வெள்ளத்தை விட நான்கு மடங்கு பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தும்.




## சட்டவிரோத நிலத்தடி நீர் சுரண்டலைத் தடுத்து நிறுத்துதல் – தேசிய பசுமைத் தீர்ப்பாயம்

- சட்டவிரோதமாக நிலத்தடி நீரை எடுப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை வகுக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயம் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இந்தக் குழுவின் நோக்கம் பின்வருமாறு:
  - சட்டவிரோதமாக நிலத்தடி நீர் எடுக்கப்படவில்லை என்பதை உறுதிப் படுத்துதல்
  - மத்திய நிலத்தடி நீர் ஆணையத்தின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளைக் கண்காணித்தல்
- இந்தக் குழுவானது பின்வரும் அமைப்புகளைக் கொண்டிருக்கும்
  - மத்திய சுற்றுச்சூழல் & வனத் துறை அமைச்சகம் மற்றும் நீர்வள அமைச்சகத்தின் இணை செயலாளர்கள்
  - மத்திய நிலத்தடி நீர் வாரியம்
  - தேசிய நீர்வள நிறுவனம் (ரூர்கி)
  - தேசிய தொலைநிலை உணர்வி மையம் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்.

## பாலைவனமாக்கல் குறித்த தில்லிப் பிரகடனம்

- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தில் (UN Convention to Combat Desertification - UNCCD) உள்ள உறுப்பு நாடுகளின் 14வது மாநாடானது (Conference of Parties - COP14) கிரேட்டர் நொய்டாவில் முடிவடைந்தது. இந்த மாநாட்டில் உறுப்பு நாடுகள் தில்லிப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.




- UNCCDயின் COP14 ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் நிலச் சீரழிவில் நடுநிலைமையை (Land Degradation Neutrality - LDN) அடைவதற்கான உறுதிப்பாட்டுடன் முடிவடைந்தது.
- இத்தகைய நடுநிலைமையானது ஒரு நிலையான எதிர்காலத்தை உறுதிப்படுத்த உலகம் முழுவதும் போதுமான நிலம் இருப்பதை உறுதி செய்கிறது என்று ஐ.நாவால் வரையறுக்கப் படுகின்றது.
- தில்லிப் பிரகடனம் என்பது ஒவ்வொரு நாடும் நிலச் சீரழிவில் நடுநிலைமையை எவ்வாறு அடைவது என்பது குறித்த உலகளாவிய நடவடிக்கையின் ஒரு அறிக்கையாகும்.
- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவடேகர் UNCCDயின் தலைவராக 2 ஆண்டு காலத்திற்கு நீடிப்பார்.

## கிளைபோசேட் களைக்கொள்ளி - ஜெர்மனி

- சர்ச்சைக்குரிய களைக்கொள்ளியான கிளைபோசேட்டை 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒழிக்க ஜெர்மனி முடிவு செய்துள்ளது.
- சுற்றுச்சூழல் அமைப்புகளிலும் உணவுப் பயிர்களின் மகரந்தச் சேர்க்கையிலும் முக்கியப் பங்கு வகிக்கும் பூச்சி இனங்களைப் பாதுகாப்பதற்காகவே இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த ரசாயனம் மனிதர்களுக்குப் புற்றுநோயை ஏற்படுத்தும் என்றும் சந்தேகிக்கப் படுகிறது.
- கிளைபோசேட் இந்தியாவிலும் பிரபலமானது.
- முன்னதாக, ஜூலை 2019 இல் கிளைபோசேட் பயன்பாட்டைத் தடை செய்த முதல் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடு ஆஸ்திரியா ஆகும்.

## WAWE உச்சி மாநாடு 2019 - பெண்கள் தொழில்முனைவோர்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் என்பவர் ஆர்வமுள்ள பெண்கள் தொழில்முனைவோருக்கான கழிவு மேலாண்மை விரைவுத்

திட்டத்தைத் (Waste Management Accelerator for Aspiring Women Entrepreneurs - WAWE Summit 2019) தொடங்கினார்.

- WAWE உச்சி மாநாடானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் ஆகிய மாதங்களில் நடைபெற இருக்கின்றது.
- இது கழிவு மேலாண்மையில் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும் ஒற்றைப் பயன்பாடு கொண்ட நெகிழிப் பைகளுக்கு மாற்றீடுகளை வழங்குவதற்கும் ஒன்று சேர்ந்த இளம் மாணவிகளின் மிகப்பெரிய கூட்டமாகும்.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "உங்கள் சொந்தப் பையை நீங்களே உருவாக்குங்கள்" என்பதாகும்.
- இந்தக் கருத்தாக்கத்திலிருந்து ஒரு வணிகத்தை உருவாக்குவதன் மூலம் வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் மற்றும் கழிவு நிர்வாகத்தில் தொழில்முனைவு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ள பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான ஐந்தாண்டுகள்: 2014 – 19

- உலக வானிலை அமைப்பால் (World Meteorological Organization - WMO) தொகுக்கப்பட்ட ஒரு புதிய ஐ.நா. அறிக்கையின்படி, 2019 உடன் முடிவடையும் கடந்த ஐந்தாண்டுக் காலமானது இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான காலமாக மாறி இருக்கின்றது.
- இந்தக் காலமானது தொழில்துறை வளர்ச்சிக்கு முந்தைய (1850-1900) கால கட்டத்தில் இருந்த வெப்பநிலையை விட 1.1 டிகிரி செல்சியஸ் அதிக வெப்பநிலை கொண்டதாகவும் 2011-2015 ஆம் ஆண்டுகளின் வெப்பநிலையை விட 0.2 டிகிரி செல்சியஸ் அதிக வெப்பநிலை கொண்டதாகவும் இருக்கும் என்று தற்போது மதிப்பிடப் பட்டுள்ளது.
- 1850 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து கடந்த நான்கு ஆண்டுகள் ஏற்கனவே வெப்பமானவையாக இருந்தன.
- கார்பன் டை ஆக்சைடின் அளவானது 37 பில்லியன் டன்கள் என்ற மிக அதிக அளவை எட்டியுள்ளது.

## உலகின் முதலாவது துகள்மப் பொருள்கள் வர்த்தகம் – குஜராத்

- துகள்மப் பொருள் உமிழ்வுகளை வர்த்தகம் செய்வதற்காக "உலகின் முதலாவது சந்தை" என்று கூறப்படும் ஒரு திட்டத்தை குஜராத் அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- இந்தத் துகள்மப் பொருள் உமிழ்வு வர்த்தகத் திட்டம் (emission trading scheme - ETS) சூரத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- ETS ஆனது பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
    - ஒரு பகுதியில் மாசுபாட்டின் அளவைக் குறைத்தல்
    - தொழில் துறைக்கான இணக்க செலவைக் குறைத்தல்.
- குஜராத் மாசு கட்டுப்பாட்டு வாரியமானது (Gujarat Pollution Control Board - GPCB) அனைத்துத் தொழில் துறைகளிலிருந்தும் வெளியேறும் மொத்த உமிழ்வின் உச்சபட்ச அளவை நிர்ணயிக்கின்றது.

- இந்த உச்சபட்ச அளவின் கீழ், வர்த்தக அனுமதிகள் மூலம் (கிலோகிராமில்) பல்வேறு தொழிற்சாலைகள் இந்தத் துகள்களை வெளியேற்றும் திறனை வாங்கலாம் மற்றும் விற்கலாம்.
- இந்தக் காரணத்திற்காக, ETS ஆனது ஒரு உச்சபட்ச மற்றும் வர்த்தக சந்தை என்றும் அழைக்கப்படுகின்றது.

## தேசிய நீர்த் திட்ட விருதுகள் -2019

- மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சகத்திற்கான மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் 2019 ஆம் ஆண்டின் தேசிய நீர்த் திட்ட விருதுகளை வழங்கினார்.
- 'தேசிய நீர்த் திட்ட விருதுகள்' என்பது தேசிய நீர்த் திட்டம் (NWM - National Water Mission), நீர் வளத் துறை, நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு, ஜல் சக்தித் துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஒரு முயற்சியாகும்.
- இந்த விருதானது நீர்ப் பாதுகாப்பு, திறனுள்ள நீர்ப் பயன்பாடு மற்றும் நிலையான நீர் மேலாண்மை நடைமுறைகள் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

***NWM பற்றி***

- NWM என்பது காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டத்தின் (NAPCC - National Action Plan on Climate Change) கீழ் உள்ள 8 திட்டங்களில் ஒன்றாகும்.
- இதன் நோக்கங்கள்
  - நீர்ப் பாதுகாப்பு
  - நீர் வீணாவதைக் குறைத்தல்
  - ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை ஆகியவற்றின் மூலம் மாநிலங்களுக்குள்ளும் மாநில எல்லைகளிலும் சமச்சீரான நீர் விநியோகத்தை உறுதி செய்தல்.

## பூனைப் பாம்புகளின் புதிய இனம்

- 125 ஆண்டுகளுக்குப் பிறகு மகாராஷ்டிராவின் கொய்னா பகுதியில் உள்ள சஹயாத்ரி புலிகள் காப்பகத்தில் தாக்கரேவின் பூனைப் பாம்பு என்று அழைக்கப்படும் (அறிவியல் பெயர் பொய்கா தாக்கரே) ஒரு புதிய பாம்பு வகை உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளன.



- இந்த உயிரினங்கள் பொதுவாக பூனைப் பாம்பு அல்லது பூனைக் கண் கொண்ட பாம்புகள் என்ற பிரிவில் வகைப்படுத்தப்படுவதால் இது பொய்கா என்ற மரபணு கொண்ட இனத்தைக் சார்ந்ததாகும்
- இந்த மரபணுவைக் கொண்ட இவ்வகை பாம்புகள் இந்தியா முழுக்க தென்பட்டாலும் சில வகை இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படுகின்றன.
- இது உத்தவ் தாக்கரேவின் மகனான தேஜாஸ் தாக்கரே என்ற ஆராய்ச்சியாளரின் கொண்டு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தேசிய குடிமக்கள் பதிவேடு: இறுதி வடிவம் – அசாம்

- தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (National Register of Citizens - NRC) இறுதிப் பட்டியலை அசாம் வெளியிட்டு இருக்கின்றது.
- 3,30,27,661 விண்ணப்பதாரர்களில் 3,11,21,004 மக்கள் இந்த இறுதி NRC பட்டியலில் சேர்த்திட தகுதி உள்ளவர்கள் எனக் கண்டறியப் பட்டிருக்கின்றனர்.
- 19 லட்சம் மக்கள் இப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.
- அரசு இப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதிமன்றத்தில் முறையிட வேண்டி 120 நாட்கள் அவகாசம் அளித்துள்ளது.
- அவர்கள் இப்பட்டியலுக்கு எதிராக ஒரு பகுதி நீதிசார் அமைப்பான வெளிநாட்டவர் தீர்ப்பாயத்திலும் அதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் ஆகியவற்றிலும் முறையிடலாம்.

*இது பற்றி*

- தேசிய குடிமக்கள் பதிவேடு என்பது பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவின் அண்டை நாடான வங்க தேசம் தனது சுதந்திரத்தை அறிவித்த நாளான 1971 ஆம் ஆண்டின் மார்ச் 24ம் தேதிக்கு முன்பு அசாமிற்குள் குடியேறிய மக்கள் என்று நிரூபிக்க முயலும் மக்களின் பட்டியலாகும்.
- முதல் தேசிய குடிமக்கள் பதிவேடு 1951ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இது அவ்வருடத்திய அசாம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த 34 வருடங்களில் இவ்வகையிலான தேசிய குடிமக்கள் பதிவேடு அசாமில் வெளியிடப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

## மேற்கு வங்க (கும்பல் வன்முறைத் தடுப்பு) மசோதா, 2019

- மேற்கு வங்க சட்டசபையானது கும்பல் வன்முறைகளையும் கும்பல் கொலைகளையும் தடுத்து மற்றும் அவற்றிற்கு தண்டனை வழங்கும் நோக்கில் மேற்கு வங்க (கும்பல் கொலை தடுப்பு) மசோதா 2019 என்ற மசோதாவை நிறைவேற்றி இருக்கின்றது.
- ஒரு நபரைத் தாக்கி காயப்படுத்தும் செயலில் ஈடுபடுபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை சிறைத் தண்டனை அளித்திட இம்மசோதா

முன்மொழிகின்றது.


- கால்நடைக் கடத்தல் மற்றும் குழந்தைத் திருட்டு போன்ற வதந்திகளின் காரணமாக மக்கள் சாகும் வரை தாக்கப்படும் சம்பவங்கள் அதிகப்படியாக நடந்ததன் காரணமாக இம்மசோதா நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.
- ராஜஸ்தானும் இம்மாதிரியான மசோதா ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக உள்ளது.

## AB-MGRSBY சுகாதார காப்பீட்டு திட்டம் - ராஜஸ்தான்

- ராஜஸ்தான் அரசானது 'ஆயுஷ்மான் பாரத்-மகாத்மா காந்தி ராஜஸ்தான் ஸ்வஸ்திய பீமா யோஜ்னா' (AB-MGRSBY/ Ayushman Bharat Mahatma Gandhi Rajasthan Swasthya Bima Yojana) என்ற புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது செப்டம்பர் 1 ஆம் தேதி தொடங்கப்பட்டது.
- இது மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா மற்றும் மாநில அரசின் பாமாஷா ஸ்வஸ்திய பீமா யோஜ்னா ஆகியவற்றை இணைத்த பின்னர் செயல்படுத்தப்படும்.

## கட்டாய மத மாற்றத்திற்கு எதிரான மசோதா

- ஒரு புதிய மதத்தை ஏற்றுக் கொள்வது எனும் "ஒரே நோக்கத்திற்காக" கட்டாயமாகவோ, தூண்டுதலின் பேரிலோ திருமணங்களின் மூலமாகவோ மதம் மாற்றுவதைத் தடுப்பதற்கான ஒரு மசோதாவை இமாச்சலப் பிரதேச சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.




- இந்த மசோதா இமாச்சலப் பிரதேச மத சுதந்திரச் சட்டம் - 2006 என்ற சட்டத்தை ரத்து செய்தது.
- இந்தப் புதிய மசோதாவின் படி, தலித்துகள், பெண்கள் அல்லது சிறார்களை மதமாற்றம் செய்தால் இரண்டு முதல் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும்.

## டெரகோட்டா (சுடுமண்) அரைக்கும் இயந்திரம் (கிரைண்டர்) - வாரணாசி, உத்தரப் பிரதேசம்

- காதி மற்றும் கிராம தொழிற் துறை ஆணையமானது (Khadi and Village Industries Commission - KVIC) முதன்முறையாக 'டெரகோட்டா கிரைண்டரை' உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள சேவாபுரியில் வெளியிட்டது.
- இந்த இயந்திரமானது மட்பாண்டத் தயாரிப்பில் பொருள்களை மீண்டும் பயன்படுத்துவதற்காக வீணான மற்றும் உடைந்த மட்பாண்டப் பொருட்களை அரைக்கும்.
- இது டெரகோட்டாப் பொருட்களின் உற்பத்தி செலவைக் குறைக்கும் என்றும் குயவர்களின் வருமானத்தை ஈடு செய்யும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.




## ஒடிசாவில் அறுவடைத் திருவிழா: நுஹாய் ஜுஹார்

- பருவ காலத்தின் போது புதிதாக அறுவடை செய்யப்பட இருக்கும் பயிர்களை வரவேற்கும் அறுவடைத் திருவிழாவான நுஹாய் ஜுஹார் என்ற ஒரு திருவிழாவை ஒடிசா மாநிலம் கொண்டாடியது.
- இது ஒடிசாவில் கொண்டாடப்படும் மிகப் பழமையான திருவிழாக்களில் ஒன்றாகும். இது விவசாய விழாவாகும்.
- விவசாயிகள் தங்களது நிலங்களிலிருந்து விளையும் முதலாவது விளை பொருட்களை ஒடிசாவின் சம்பல்பூர் மாவட்டத்தின் பெண் தெய்வமான சாமலேஸ்வரி தேவிக்கு வழங்குகிறார்கள்.
- இந்த திருவிழா மேற்கு ஒடிசாவில் மிகவும் பிரபலமாகக் கொண்டாடப் படுகின்றது.

## 10:10:10 - டெல்லி டெங்குப் பிரச்சாரம்

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் தில்லி அரசு "டெங்கு மற்றும் சிக்குன்குனியா" ஆகியவற்றிற்கு எதிராக 10 வார கால அளவுள்ள மிகப் பெரிய கொசு எதிர்ப்புப் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது.

- இந்தப் பிரச்சாரம் கொசுக்களின் பரவலைத் தடுப்பதில் குடியிருப்பாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது '10 ஹப்தே, 10 பாஜே, 10 நிமிடம் - ஹர் ரவிவர், டெங்கு பார் வார் 'என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, டெங்குக் கொசுக்களை ஒழிப்பதற்காக தில்லி மக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு 10 நிமிடங்கள் தங்கள் வீடுகளில் தேங்கி இருக்கும் அனைத்து நீர் ஆதாரங்களையும் சரி பார்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.
- டெங்கு கொசுக்கள் சுத்தமான நீரில் மட்டுமே உற்பத்தியாகின்றன.

## ஹைதராபாத்-கர்நாடகா மறுபெயரிடப்பட்டது

- கர்நாடகா மாநிலத்தின் ஹைதராபாத்-கர்நாடகா என்ற பகுதியை கல்யாண கர்நாடகா என்று பெயரை மாற்றுவதற்கு அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஹைதராபாத்-கர்நாடகா என்பது காலனித்துவ காலத்துப் பெயரிடலாகும். இந்தப் பெயரானது இப்பகுதியை முந்தைய ஹைதராபாத் நிஜாம்களுடன் தொடர்பு படுத்துகின்றது.




- இது கர்நாடகாவில் உள்ள பிடார், பெல்லாரி, கலபுர்கி, கொப்பல், ராய்ச்சூர் மற்றும் யாத்கீர் ஆகிய 6 மாவட்டங்களை உள்ளடக்கியது.
- இந்த மாவட்டங்கள் நிஜாமின் ஆட்சிப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தன. 1956 ஆம் ஆண்டில் இந்தியாவில் மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்ட போது இந்த மாவட்டங்கள் கர்நாடகாவின் கீழ் கொண்டு வரப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டில் 98வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட 371(j) என்ற சட்டப் பிரிவானது இந்தப் பிராந்தியத்திற்குச் சிறப்பு தகுதிநிலையை அளிக்கின்றது. இவை நாட்டில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறன.

## யுனெஸ்கோ மற்றும் ராஜஸ்தான் அரசு

- இராஜஸ்தான் மாநிலத்தின் இசை, கலை & கைவினை வடிவங்கள் மற்றும் பிற புலப்படாத கலாச்சாரப் பாரம்பரியங்களை மேம்படுத்துவதற்காக யுனெஸ்கோ மற்றும் ராஜஸ்தான் அரசாங்கம் ஆகியவை இணைந்துள்ளன.

- இது ராஜஸ்தானின் வளமிக்க புலப்படாத கலாச்சாரப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அடிப்படையிலான பொறுப்பான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஒரு கூட்டு ஒப்பந்தம் ஆகும்.
- இந்தத் திட்டம் ஜோத்பூர், பார்மர், ஜெய்சால்மர் மற்றும் பிகானிர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

## தெலுங்கானா - மிகப் பெரிய உணவுப் பூங்கா

- மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் ஹர்சிம்ரத் பாதல் தெலுங்கானாவின் நிசாமாபாத் மாவட்டத்தில் உள்ள லக்கம்பள்ளியில் அம்மாநிலத்தின் முதலாவது மிகப் பெரிய உணவுப் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- குறிப்பாக அழுகிப் போகும் பொருள்களின் மீது கவனம் செலுத்துவதுடன் விநியோகச் சங்கிலியின் ஒவ்வொரு நிலையிலும் மதிப்பு கூட்டப்படுதல் மற்றும் உணவு வீணாகுதலைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் உணவுப் பதப்படுத்துதல் துறைக்கு ஊக்கமளிப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது போன்ற மிகப்பெரிய உணவுப் பூங்காக்கள் நவீன உணவுப் பதப்படுத்துதல் அலகுகளை விவசாய / தோட்டக் கலை மண்டலத்துடன் இணைக்கின்றன.




## உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட மெட்ரோ இரயில் பெட்டி – மும்பை மெட்ரோ

- மும்பையின் "இந்தியாவில் தயாரிப்போம்" என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட முதலாவது மெட்ரோ இரயில் பெட்டியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இது அரசினால் செயல்படுத்தப்படும் நிறுவனமான BEMLயினால் தயாரிக்கப்பட்டது.
- இது BEMLன் பெங்களூருப் பிரிவில் 75 நாட்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்படும் 500ற்கும் மேற்பட்ட மெட்ரோ இரயில் பெட்டிகள் இங்கு தயாரிக்கப்பட விருக்கின்றன.

***இதுபற்றி***

- BEML நிறுவனமானது (இதற்கு முன்பு பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது இந்திய அரசின் "மினிரத்னா பிரிவு 1-ல் உள்ள ஒரு பொதுத் துறை நிறுவனமாகும்."

## மரக்கோதுமை பற்றிய சர்வதேசக் கருத்தரங்கு – மேகாலயா

- மரக்கோதுமை பற்றிய நான்கு நாள் நடைபெறக் கூடிய சர்வதேசக் கருத்தரங்கானது மேகாலயாவில் நடத்தப்பட்டது.
- இக்கருத்தரங்கின் கருப்பொருள் "உடல்நலம் மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்பிற்கான உணவு முறைகளை பல்வகைப்படுத்துதல்" என்பதாகும்.

*இதுபற்றி*

- மரக்கோதுமை ஒரு குறைந்த உள்ளீட்டுப் பயிராகும். இது குறைசத்து கொண்ட மண்ணில் (தரம் குறைந்த மண்ணில்) கூட அதிக மகசூலைத் தருகின்றது.
- இது மண்ணிற்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை சேர்க்கின்றது. எனவே இது ஒரு நல்ல நிலவளங் காப்புப் பயிர் அல்லது சுழற்சிப் பயிராக இருக்கின்றது.
- இது பெரும்பாலான தானிய வகை நிலவளங் காப்புப் பயிர்களை விட சிறந்த முறையில் மண்ணிலிருந்துப் பாஸ்பரஸைப் பிரித்தெடுக்கின்றது.



## சிறப்புப் புலிகள் படை – உத்தரகாண்ட்

- கார்பெட் புலிகள் காப்பகத்திற்காக சிறப்புப் புலிகள் படையை (Special Tiger Force - STF) அமைக்க உத்தரகாண்ட் மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தப் படையானது 85 பணியாளர்களைக் கொண்டிருக்கும். கார்பெட் புலிகள் காப்பகத்தில் பாதுகாப்பின் இரண்டாவது நிலை அடுக்காகச் செயல்பட இப்படை உதவும்.
- STPF ஆனது காப்பகத்தின் எல்லைகளில் அமைந்துள்ள கிராமங்கள் வழியாக வனப் பகுதிக்குள் சட்டவிரோத மனித ஊடுருவலைத் தடுப்பதற்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- இந்த முடிவானது காப்பகங்களில் இருக்கும் புலிகளுக்கு 3 அடுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கான மத்திய அரசின் வழிகாட்டுதல்களின் படி அமைந்திருக்கின்றது.

| | |
|---|---|
| முதல் நிலை | வனப் பாதுகாவலர்களினால் மேற்கொள்ளப்படும் வழக்கமான ரோந்துப் பணி |
| இரண்டாம் நிலை | STPF |
| மூன்றாம் நிலை | வேட்டையாடுவதைத் தடுப்பதற்காகத் தகவல் சேகரிப்பு நடைமுறைகள் |

## சாஹிப்கஞ்ச் பல்முனை சரக்கு முனையம், ஜார்க்கண்ட்

- ஜார்க்கண்டின் சாஹிப்கஞ்சில் கட்டப்பட்ட பல்முனை சரக்கு முனையமானது (Multi-Modal Terminal - MMT) செயல்பாட்டிற்கு வருகின்றது.
- இது தேசிய நீர்வழிப் பாதை -1 (கங்கை நதி) இல் உள்ள இரண்டாவது பல்முனை சரக்கு முனையம் ஆகும்.
- ராஜ்மஹாலில் உள்ள உள்ளூர்ச் சுரங்கங்களில் இருந்து உள்நாட்டு நிலக்கரியை கொண்டு செல்வதில் இது முக்கியப் பங்கு வகிக்கும்.
- இணைப்பு:
    - நீர்வழிப் பாதை வழியாக இந்தியா - நேபாளம் ஆகியவற்றிற்கு இடையே சரக்குப் போக்குவரத்து.
    - வங்க தேசம் வழியாக நதி மற்றும் கடல் வழி ஆகியவற்றின் மூலம் வடகிழக்கு மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.
    - இது கடல் பகுதிக்கு அப்பால் உள்ள பகுதியை கொல்கத்தா, ஹால்டியா மற்றும் வங்காள விரிகுடாவுடன் இணைத்துள்ளது.
- முதலாவது MMT ஆனது 2018 ஆண்டு நவம்பர் அன்று வாரணாசியில் செயல்பாட்டுக்கு வந்தது.
- பெரிய கப்பல்களின் பயணத்திற்காக, உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி மற்றும் மேற்கு வங்காளத்தின் ஹால்டியா ஆகியவற்றிற்கிடையே இருக்கும் கங்கை நதியின் பாதையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஜல் மார்க் விகாஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக MMTகள் கட்டப்படுகின்றன.

## வெளிநாட்டிற்குச் செல்வோர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறப்புப் பிரிவு – பஞ்சாப்

- பஞ்சாப் வேலைவாய்ப்பு உருவாக்கத் துறையானது வேலைக்காக “வெளிநாடு செல்ல விரும்பும்” இளைஞர்களுக்கான ஆட்சேர்ப்பு முகமையில் பங்காற்ற முடிவு செய்துள்ளது.
- இந்தத் துறையானது படிப்பிற்காக வெளிநாடுகளுக்கு இளைஞர்களை அனுப்ப ஒரு சிறப்புப் பிரிவையும் அமைக்க இருக்கின்றது.
- பயண முகவர்கள் மோசடி செய்ததாகப் புகார்கள் வந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சிறப்புப் பிரிவானது நியாயமான கட்டணத்தில் கல்வியை வழங்கும் வெளிநாட்டுப் பொதுப் பல்கலைக் கழகங்களுடன் இணையவிருக்கின்றது.
- இந்த வசதியானது ஏற்கனவே ஆந்திரா, கேரளா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் இருக்கின்றது.

## முதலாவது பொதுத் தகவல் தளம் – ராஜஸ்தான்

- ஒரு முன்னோடி நடவடிக்கையாக, ராஜஸ்தானில் “ஜன் சோச்னா” எனப்படும் முதலாவது பொதுத் தகவல் தளம் ஒன்று தொடங்கப்பட்டது.

- இது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 4 (2) உடன் (தகவல்களை திறனுடன் வெளிப்படுத்துதல்) இணங்கிப் பொருந்துகின்றது.
- இந்தப் பிரிவின் படி, இந்தத் தளமானது அரசு அதிகாரிகள் மற்றும் துறைகள் பற்றிய தகவல்களைத் தானாகவே பொதுமக்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கின்றது.
- இது ஆரம்பத்தில் 13 துறைகள் தொடர்பான தகவல்களை வழங்கும்.
- 1990களில் தகவல் அறியும் உரிமை இயக்கத்தைத் தொடங்கிய ராஜஸ்தானுக்கு இந்தத் தளமானது மற்றொரு தனித்துவத்தைக் கொண்டு வருகின்றது.

## இந்தியாவின் முதல் சர்வதேச மகளிர் வர்த்தக மையம் - கேரளா

- இந்தியாவின் முதல் சர்வதேச மகளிர் வர்த்தக மையத்தை கேரள அரசு கோழிக்கோட்டில் அமைக்க உள்ளது.
- இது பெண்களின் தொழில் முனைவோர் மற்றும் பாலின விகிதத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இது கேரள அரசாங்கத்தின் சமூக நீதித் துறையின் கீழ் உள்ள ஒரு முக்கியமான பாலினப் பூங்காவாகும்.
- இந்த முதல் சர்வதேச மகளிர் வர்த்தக மையத்தின் முதல் கட்டம் 2021 ஆம் ஆண்டு முடிவடைய உள்ளது. இது பாலினப் பூங்காவின் தொலைநோக்குப் பார்வை 2020 என்பதின் கீழ் செயல்படுத்தப் படுகிறது.

## புதிய காப்பீட்டுத் திட்டங்கள் - ஹரியானா

- ஹரியானாவின் முதலமைச்சர் மனோகர் லால் கட்டார் "முக்கிய மந்திரி வியாபாரி சமூஹிக் நிஜி துர்காத்னா பீமா யோஜனா" மற்றும் "முக்கிய மந்திரி வியாபாரி க்ஷதிபூந்தி பீமா யோஜனா ஆகியவற்றைத் தொடங்கினார்.
- முக்கிய மந்திரி வியாபாரி சமூஹிக் நிஜி துர்காத்னா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 3.75 லட்சம் வர்த்தகர்களுக்கு ரூ.5 லட்சம் விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலம் ஹரியானா ஆகும்.

## முக்கிய மந்திரி தால் போஷித் யோஜனா - உத்தரகாண்ட்


- உத்தரகாண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத் "முக்கிய மந்திரி தால் போஷித் யோஜனா" என்ற திட்டத்தைத் தொடங்கினார்.
- ஒவ்வோரு ரேசன் அட்டையாளர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 2 கிலோகிராம் அளவுள்ள பருப்பு வகைககளை மானிய விலையில் பெறுவார்கள்.

## தெலுங்கானாவில் யுரேனியச் சுரங்கம்

- தெலுங்கானா மாநிலத்தின் நல்லமலா வனப்பகுதியில் அமைந்துள்ள அமராபாத் புலிகள் காப்பகத்தில் முன்மொழியப்பட்ட யுரேனியச் சுரங்கத்திற்கு எதிராக மாநில சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- இந்தச் சுரங்கத் திட்டம் காரணமாக காற்று மற்றும் நீர் மாசுபாடு குறித்த பொது மக்களின் அச்சங்கள் தவிர, நல்லமலா மற்றும் அதனைச் சுற்றியுள்ள வாழ்விடங்களுக்கும் பல்லுயிர் பெருக்கத்திற்கும் இது அச்சுறுத்தலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- மேலும் இது பூர்வீக செஞ்சுப் பழங்குடியினரையும் இடம்பெயரச் செய்யும்.

## நேர வங்கிகள் - மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச அரசாங்கத்தின் மகிழ்ச்சித் துறையானது “நேர வங்கியை” அமைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- இது “நேர அலகுகளை” நிதியாகப் பயன்படுத்தக் கூடிய ஒரு பரஸ்பர சேவைப் பரிமாற்றமாகும்.
- தன்னார்வலர்களின் பட்டியலுடன் சமூக அளவிலான வங்கிகள் உருவாக்கப்பட இருக்கின்றன.
- அவர்கள் வழங்கக்கூடிய “திறன்கள்” அல்லது “அவர்கள் வழங்கக்கூடிய சேவைகள்” ஆகியவற்றின் பட்டியல் இதில் குறிப்பிடப்பட இருக்கின்றன.




- ஒரு வங்கி உறுப்பினருக்கு ஒரு சேவை தேவைப்படும் போதோ அல்லது ஒரு புதிய திறனைப் பெற விரும்பும் போதோ (எ.கா: ஒரு கிதார் வாசித்தல்), அவள் / அவன் அந்த திறனைக் கொண்டுள்ள மற்றொரு நபருடன் ஒரு மணி நேரம் மதிப்புள்ள நிதியைப் பரிமாறிக் கொள்ளலாம்.
- இந்தக் கருத்தானது முதன்முதலில் 1827 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சின்சினாட்டி நேர மையத்தில் முன்மொழியப்பட்டது.
- முதல் நேர வங்கி 1973 இல் ஜப்பானில் அமைக்கப்பட்டது.

## இமாச்சலப் பிரதேசத்தில் 1100 என்ற உதவி எண்

- இமாச்சலப் பிரதேச அரசானது முக்கிய மந்திரி சேவா சங்கல்ப் உதவி எண்ணான "1100" (முதலமைச்சரின் சேவைத் தீர்வுகள் உதவி எண்) என்ற உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த சேவையானது நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களின் குறைகளை விரைவாகவும் தக்க நேரத்திலும் தீர்ப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- முக்கிய மந்திரி சேவா சங்கல்ப் உதவி எண் தொடங்கப்பட்டதன் மூலம் இந்த வசதியை வழங்கும் இந்தியாவின் 4வது மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- இதுவரை, இந்த சேவையானது உத்தரகாண்ட், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருக்கின்றது.

## மோதி பாக் திரைப்படம் – உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் மாநிலத்தின் எளிதில் அணுக முடியாத கிராமத்தில் உள்ள ஒரு விவசாயியின் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மோதி பாக் என்ற ஆவணப் படமானது ஆஸ்கார் விருதுக்குப் "பரிந்துரைக்கப் பட்டுள்ளது".
- இது பவுரி கார்வால் பகுதியில் வசிக்கும் வித்யாதத் சர்மா என்ற விவசாயியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட படமாகும்.
- இந்த ஆவணப் படமானது நிர்மல் சந்திரா டான்ட்ரியால் என்பவரால் இயக்கப்பட்டுள்ளது.
- மேலும், ஒரு நபரை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆவணப் படமானது கேரளாவில் நடைபெற்ற சர்வதேச குறும்பட விழாவில் முதலாவது பரிசையும் வென்றுள்ளது.

## தீக்சி நீர்மின் திட்டம் – அருணாச்சலப் பிரதேசம்

- அருணாச்சலப் பிரதேச முதல்வரான பெமா காண்டு தீக்சி நீர்மின் திட்டத்தை அம்மாநில மக்களுக்கு அர்ப்பணித்தார்.
- மேற்கு காமெங் மாவட்டத்தில் உள்ள தீக்சி கிராமத்தில் 24 மெகா வாட் திறன் கொண்ட நீர்மின் திட்டம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.
- இது புடுங் என்ற நதியில் கட்டப்பட்ட ஒரு நதி சார்ந்த நீர்மின் திட்டமாகும்.
- இது நான்கு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது.
- இந்தத் திட்டத்திலிருந்து தயாரிக்கப்படும் மின் உற்பத்தியின் ஒரே பயனாளி மாநிலம் அருணாச்சலப் பிரதேசம் ஆகும்.

## DEET செயலி – தெலுங்கானா

- தெலுங்கானா மாநில அரசு வேலையற்ற இளைஞர்களுக்காக ஒரு பிரத்தியேக செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தெலுங்கானாவின் டிஜிட்டல் வேலைவாய்ப்பு பரிமாற்றம் (DEET - Digital Employment Exchange of Telangana) என்ற செயலியானது நாட்டில் இது போன்ற முயற்சிகளில் முதல் முயற்சியாகும்.

- DEET இயங்குதளம் தற்போது மாநிலம் மற்றும் நாடு முழுவதும் உள்ள நிறுவனங்களிலிருந்து 40,000க்கும் மேற்பட்ட காலியிடங்களைக் கொண்டுள்ளது.
- வேலை தேடுபவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதை DEET நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் வேலை அளிக்கும் முதலாளிகளின் வரம்பு நிலைகளை அவர்களுக்குத் தெரிவு செய்ய ஏராளமான விருப்பங்கள் அவர்களுக்கு அளிப்பதன் மூலம் இந்தத் தளம் விரிவுபடுத்துகின்றது.

## பெங்களூரில் கூகிள் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம்

- உலக சந்தைக்கானத் தயாரிப்புகளை உருவாக்க கூகிள் நிறுவனம் பெங்களூரில் ஒரு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி ஆய்வகத்தைத் தொடங்கியிருக்கிறது.
- இந்த ஆய்வகத்திற்கு இயந்திரவியல் பரிசோதனைக்கான சமூகம் (Society for Experimental Mechanics) என்ற அமைப்பின் சக உறுப்பினரான மனீஷ் குப்தா தலைமை தாங்குவார்.
- இது குஜராத், பீகார் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள கிராமங்களில் வைஃபை ஹாட்ஸ்பாட்களை விரிவுபடுத்துவதற்காக அரசு நடத்தும் பிஎஸ்என்எல் நிறுவனத்துடன் இணைகிறது.
- இதற்காக அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்த கூகிள் திட்டமிட்டுள்ளது.
- உண்மையான பற்று அட்டை அல்லது கடன் அட்டை எண்ணைக் காட்டிலும் "தொலைபேசியில் டிஜிட்டல் அடையாள வில்லைகளைப்" பயன்படுத்தி கட்டணம் செலுத்த இது உதவுகிறது.

## அடுக்குமாடி சொத்து விதிகள், மகாராஷ்டிரா

- அடுக்குமாடி சொத்து விதிகளை வகுக்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா உருவெடுத்துள்ளது.
- அடுக்குமாடி வீடுகள், வீட்டுக் குடியிருப்புகள் அல்லது வணிகக் கட்டிடங்கள் போன்ற அடுக்குமாடி சொத்துக்களின் உரிமையை நிலைநாட்டுவதை இந்த விதிகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இது அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவதிலும் விற்பதிலும் பிரச்சனை அல்லாத வகையில் குறைவான ஆபத்துகள் கொண்ட சொத்துப் பட்டாக்களைப் பெறுவதற்கான ஒரு நகர்வு ஆகும்.

## செயற்கை நுண்ணறிவு ஆண்டு

- 2020 ஆம் ஆண்டை செயற்கை நுண்ணறிவு ஆண்டாகக் கொண்டாட தெலுங்கானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- தெலுங்கானாவில் முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு 'செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய உத்தியைக்' கொண்டு வந்த நிதி ஆயோக் உடன் மாநில அரசு ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது.
- 'அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு' என்ற ஆவணத்தைத் தயாரிக்கும் போது நிதி

ஆயோக் உடன் கையெழுத்திட்ட முதலாவது மாநிலமாக தெலுங்கானா உருவெடுத்தது.

- சமீபத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைப்பான நாஸ்காம் ஆனது ஹைதராபாத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியலின் சிறப்புமிகு மையத்தை அமைப்பதாக அறிவித்தது.

## தத்பார் செயலி - தில்லி காவல் துறை

- தில்லி காவல் துறையானது 'தத்பார்' என்ற செயலியைத் தொடங்கியுள்ளது.
- குடிமக்களை மையமாகக் கொண்ட 50க்கும் மேற்பட்ட சேவைகளை அணுகுவதற்கான ஒரே இடமாக இது விளங்குகின்றது. இது தில்லி காவல் துறையின் அனைத்து வலை தளங்களையும் கைபேசிச் செயலிகளையும் ஒருங்கிணைக்கின்றது.
- இந்தச் செயலியில் மின்னணு முறையிலான முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தல், போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துதல், காணாமல் போன கைபேசி குறித்து புகார் அளித்தல், காவல் துறை அனுமதியளிப்புச் சான்றிதழ்களைப் பெறுதல் போன்றவற்றை மக்கள் மேற்கொள்ள முடியும்.
- விருப்பமான அவசரத் தொடர்பு எண்ணிற்கு அழைப்பு விடுக்க அல்லது 100ஐ விரைவாக அழுத்தி காவல்துறைக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொள்ள இது ஒரு SOS பொத்தானைக் கொண்டுள்ளது.

## விரைவு எதிர்வினை குறியீட்டைக் (QR code) கொண்ட பட்டாசுகள் – தில்லி

- தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லியில் 2019 ஆம் ஆண்டின் தீபாவளிக்கான பட்டாசுப் பெட்டிகளில் தனித்துவமான இலச்சினை மற்றும் விரைவு எதிர்வினைக் குறியீடு ஆகியவற்றுடன் பட்டாசுகள் விற்பனை செய்யப்பட இருக்கின்றன.
    - பட்டாசுப் பெட்டிகளில் இருக்கும் இந்த தனித்துவமான இலச்சினையானது மக்கள் குறைந்த உமிழ்வு கொண்ட பசுமையான பட்டாசுகளை வாங்குகின்றார்களா அல்லது வழக்கமாக அதிக மாசுபடுத்துகின்ற பட்டாசுகளை வாங்குகின்றார்களா என்பதை அடையாளம் காண உதவுகின்றது.
    - QR குறியீடுகளில் பட்டாசுகளின் உற்பத்தி மற்றும் உமிழ்வுச் சோதனை போன்ற விவரங்கள் இருக்கும்.
- இந்தப் பசுமையான பட்டாசுகள் ஒலி மற்றும் ஒளி ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.
- தேசியத் தலைநகர்ப் பகுதியான தில்லியில் பசுமையான பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் முன்பு அறிவுறுத்தி இருந்தது.

### *பசுமையான பட்டாசுகள்*

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் கூற்றுப்படி பின்வரும் பட்டாசுகள் "பசுமையான பட்டாசுகளாகும்".
    - 30-35% வரை குறைந்த உமிழ்வை ஏற்படுத்தும் நுண் துகள்களைக் (PM10 மற்றும் PM2.5) கொண்ட பட்டாசுகள்.
    - 35-40% வரையிலான குறைந்த உமிழ்வைக் கொண்ட சல்பர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு ஆகியவற்றைக் கொண்ட பட்டாசுகள்.
- இவை குறைந்த அளவிலான அலுமினியத்தைக் கொண்டுள்ளன. பேரியம் உப்புகள்

மற்றும் உலர்த்தும் பொருளாகப் பயன்படுத்தப்படும் சாம்பல் ஆகியவை இந்த பட்டாசுகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

### சிறந்த சுற்றுலா விருதுகள் – ஆந்திரா

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான வெங்கையா நாயுடுவால் வழங்கப்பட்ட 2017-18 ஆம் ஆண்டிற்கான தேசிய சுற்றுலா விருதுகளில் ஆந்திரா மாநிலம் சிறந்த இடத்தை (முதல் இடம்) பிடித்துள்ளது.
- இது சுற்றுலாப் பிரிவில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான சிறந்த மாநில விருதைப் பெற்றுள்ளது.
- சாகச சுற்றுலாப் பிரிவில் கோவா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இணைந்து வெற்றி பெற்றுள்ளன.
- சிறந்த திரைப்பட ஊக்குவிப்பிற்கு உகந்த மாநிலத்திற்கான விருதை உத்தரகாண்ட் மாநிலம் வென்றுள்ளது.
- தகவல் தொழில்நுட்பத் துறையின் புதுமையான பயன்பாட்டிற்காக சிறந்த மாநிலத்திற்கான விருதை தெலுங்கானா மாநிலம் வென்றுள்ளது.

### விலங்குகள் பலியிடுதலுக்குத் தடை – திரிபுரா

- மாநிலம் முழுவதும் மதம் தொடர்பான இடங்களில் விலங்குகளைப் பலியிடுவதற்குத் தடை விதிக்குமாறு திரிபுரா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- திரிபுரா மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு கோயில்களிலும் எந்தவொரு விலங்கையோ அல்லது பறவையையோ பலியிட அரசு உட்பட எந்தவொரு நபரும் அனுமதிக்கப்படக் கூடாது என்று அம்மாநில உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 21வது சரத்தின் கீழ் விலங்குகளுக்கும் வாழ்வதற்கான அடிப்படை உரிமை உண்டு என்று அந்நீதிமன்றம் கூறியுள்ளது.
- திரிபுராவின் பின்வரும் புகழ்பெற்ற கோவில்களில் விலங்குகளைப் பலியிடுவதற்கு எதிராக ஓய்வு பெற்ற நீதித் துறை அதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட பொது நல மனுவின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
    - மாதா திரிபுரேஸ்வரி தேவி கோயில் மற்றும் சதுர் தாஸ் தேவதா கோயில்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவம் - கலிங்கா FCC விருதுகள்

- இந்தியாவில் பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவத்திற்கான கலிங்கா FCC விருதுகள் இம்மாதிரி வகையிலான ஒரு முதலாவது விருதாகும்.
- இது இந்தியா மற்றும் 7 சார்க் நாடுகளை உலகளாவிய ஊடக அளவில் பெரிதாக்கப்பட்ட மற்றும் நம்பகமான செய்திப் பரப்பை அதிகரிக்க எண்ணுகின்றது.
- இந்த விருதானது புவனேஸ்வரியில் உள்ள கலிங்கா தொழிற் துறை தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தாலும், புது டெல்லியை மையமாகக் கொண்ட வெளிநாட்டுப்

பத்திரிக்கையாளர் மன்றத்தாலும் இணைந்து இவ்வருடம் ஏற்படுத்தப் பட்டதாகும்.

- ரியூட்டர் செய்தி நிறுவனத்தின் பத்திரிக்கையாளர் அமைப்பு முதல் இரண்டு விருதுகளை வென்றுள்ளது.
- ஐக்கியப் பேரரசின் பிபிசி, ஜெர்மனியை மையமாகக் கொண்ட ஐரோப்பிய பத்திரிக்கைப் புகைப்பட நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் PBS செய்தி நேரம் ஆகியன மற்ற மூன்று விருதுகளைப் பகிர்ந்து கொண்டன.

## 4 வது உலகளாவிய கோல்கீப்பர் விருது – மோடி

- பிரதமர் நரேந்திர மோடிக்கு அக்டோபர் மாதத்தில் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையால் மதிப்புமிக்க 'உலகளாவிய கோல்கீப்பர் விருது' வழங்கப்பட இருக்கின்றது.
- 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று தொடங்கப்பட்ட ஸ்வச் பாரத் அபியான் மீதான அவரது தலைமை மற்றும் அர்ப்பணிப்புக்காக அவர் இதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இந்த வருடாந்திர விருதுகள், ஐந்து பிரிவுகளாக, நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals - SDGs) அடைவதற்கான முயற்சிகளுக்காக தலைவர்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கு வழங்கப் படுகின்றன.
- வகைகள்: முன்னேற்றம், மாற்றத்தை ஏற்படுத்துபவர், பிரச்சாரம், கோல்கீப்பரின் முயற்சி மற்றும் உலகளாவிய கோல்கீப்பர்.

## நமஸ்தே பசிபிக்

- நமஸ்தே பசிபிக் என்பது நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, பிஜி மற்றும் பப்புவா நியூ கினியாவின் உயர் ஆணையர்களால் கூட்டாக இணைந்து நடத்தப்படும் ஒரு நிகழ்வாகும்.
- நமஸ்தே பசிபிக்கின் இரண்டாம் பதிப்பு நியூசிலாந்து உயர் ஆணையரின் இல்லத்தில் நடத்தப்பட்டது.
- இந்நிகழ்வானது நியூசிலாந்தின் உயர் ஆணையரான ஜோனா கெம்ப்கெர்ஸின் சிந்தனையால் உருவானதாகும்.
- நமஸ்தே பசிபிக் நிகழ்வானது பசிபிக் கலாச்சாரத்தை இந்தியாவுக்கு வழங்கியது.

## அக்வா அக்வாரியா இந்தியா 2019

- அக்வா அக்வாரியா இந்தியா 2019 ஐ (நீர்வாழ் உயிரின கண்காட்சி ) ஹைதராபாத்தில் துணைக் குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்.
- இதைக் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்திருந்தது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்வாகும்.
- இதன் கருத்துரு : "இந்தியாவின் உள்நாட்டிற்குள் நீலப் புரட்சியை எடுத்துச் செல்லுதல்" என்பதாகும்.
- மேலும் உள்நாட்டு "முத்து" வகையான ஆர்ட்டெமியாவையும் துணைக் குடியரசுத்

தலைவர் அறிமுகப்படுத்தினார்

- இதை இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பிற்கான ராஜீவ் காந்தி மையம் உருவாக்கியுள்ளது.
- இந்த நிகழ்வின் போது புலி இறால் வளர்ப்பு மற்றும் அதன் ஏற்றுமதி ஆகியன ஊக்குவிக்கப்பட்டது.
- இந்தியாவின் கடல் உணவுத் தொழில் துறையானது உலகின் இரண்டாவது மிகப்பெரிய மீன் உற்பத்தித் துறையாகும்.
- இந்தியாவானது அமெரிக்காவிற்கு அதிக அளவில் இறால்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதலிடத்திலும் ஐரோப்பாவிற்கு இறால் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இரண்டாவது இடத்திலும் ஜப்பானுக்கு இறால் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- இந்தியாவின் மொத்த கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி வருவாயில் 52 சதவீத அளவிற்கு மீன் வளர்ப்பு பங்களிக்கிறது.



***ராஜீவ் காந்தி மீன் வளர்ப்பு மையம் (ஆர்.ஜி.சி.ஏ)***

- ராஜீவ் காந்தி மீன்வளர்ப்பு மையமானது கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு ஆகும்.
- கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- இது நீடித்த கலாச்சார தொழில்நுட்பங்கள் மூலம் இந்திய கடல்சார் உணவு ஏற்றுமதியை அதிகரிக்க அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

## கிரண் நாகர்கர்

- மராத்தியிலும் ஆங்கிலத்திலும் சிறப்பு பெற்று விளங்கிய இந்திய நாவலாசிரியர், நாடக ஆசிரியர், திரைப்பட மற்றும் நாடக விமர்சகர் & திரைக்கதை எழுத்தாளர் மற்றும் பிந்தைய காலனித்துவ இந்தியாவின் மிக முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான கிரண் நகர்கர் (1942 - 5 செப்டம்பர், 2019) சமீபத்தில் காலமானார்.
- அவரது படைப்புகளில் சாட் சக்கம் ட்ரெச்சலிஸ் (ஏழு ஆறுகள் சேர்ந்து நாற்பத்து மூன்று - 1974), ராவண் மற்றும் எடி (1994) மற்றும் காவிய நாவலான நடத்தை கெட்ட பெண்ணின்

கணவன் (1997) ஆகியவை அடங்கும்.

- நடத்தை கெட்ட பெண்ணின் கணவன் என்ற நாவலுக்காக, அவருக்கு இந்தியாவின் தேசிய எழுத்துகள் நிறுவனமான சாகித்ய நிறுவனத்தினால் ஆங்கில மொழியில் 2001 ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.



## கௌசலாச்சார்யா விருதுகள்

- 2019 ஆம் ஆண்டின் கௌசலாச்சார்யா விருதுகளை மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த விருதானது எதிர்காலத்தில் தயாராக இருக்கக் கூடிய மற்றும் திறமையான பணியாளர்களை உருவாக்குவதில் தனித்துவப் பங்களிப்புகளை ஆற்றிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த பயிற்சியாளர்களைப் பாராட்டுவதற்காக வழங்கப் படுகின்றது.
- தொழில் பயிற்சி சூழல் அமைப்பில் திறன் பயிற்சியாளர்கள் அளித்த பங்களிப்பை இது அங்கீகரிக்கின்றது.
- உலகத் திறன் போட்டியின் வெற்றியாளர்கள், தேசிய திறன் பயிற்சி நிறுவனங்களின் (National Skill Training Institutes - NSTIs) பயிற்சியாளர்கள், தொழில் துறை பயிற்சி மையங்கள் (Industrial Training Centres - ITI) ஜன் சிக்சன் சன்ஸ்தன்ஸ் மற்றும் பெருநிறுவனங்களின் பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

## ராம் ஜெத்மலானி மறைவு

- நீதித்துறையில் புகழ் பெற்றவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தியாவின் சிறந்த குற்றவியல் வழக்கறிஞருமான ராம் ஜெத்மலானி சமீபத்தில் காலமானார்.
- இவர் வடமேற்கு மும்பை மக்களவை தொகுதியில் 1977 மற்றும் 1980 ஆண்டுகளில் போட்டியிட்டு வென்றுள்ளார்.
- இவர் 1988 ஆம் ஆண்டில் முதன் முறையாக மாநிலங்களவை உறுப்பினரானார். பின்னர் 1996 ஆம் ஆண்டில் மத்திய சட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.
- மேலும் இவர் 2010 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கூட்டமைப்பின் தலைவராகவும் பணியாற்றினார்.




## 19வது வருடாந்திர ஆசியச் சாதனையாளர் விருதுகள்

- 19வது வருடாந்திர ஆசியச் சாதனையாளர் விருதுகள் வழங்கும் விழா லண்டனில் நடைபெற்றது.
- வேதாந்த வளத்தின் நிறுவனத் தலைவர் அனில் அகர்வாலுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- 19வது வருடாந்திர ஆசிய சாதனையாளர் விருதுகளுக்கான கருத்துரு, 'உள்ளடக்கம்' என்பதாகும்.

| Category | Winner |
|---|---|
| Achievement in Community Services | Onkardeep Singh MBE |
| Editor's Award for Contribution to Thoracic Surgery | Dr. Nilesh U Patel MD |
| Businessperson of the Year | Vipul Vadera |
| Entrepreneur of the Year | Kush Kanodia |
| Professional of the Year | Krishna Omkar |
| Sports Personality of the Year | Harjit Singh Bhania |
| Uniformed, Civil and Public Services Neeta Patel Woman of the Year | Hafsa Qureshi |
| Editor's Choice Award for Community service, Philanthropy and Entrepreneurship | Pradip Dhamecha |

## பார்வையாளர் விருதுகள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் மத்திய பல்கலைக் கழகங்களின் பார்வையாளராக இருப்பதன் காரணமாக ஆண்டுதோறும் மத்திய பல்கலைக் கழகங்களின் செயல்பாட்டாளர்களுக்குப் பார்வையாளர் விருதுகளை வழங்குகின்றார்.
- இந்த விருது மத்திய பல்கலைக் கழகங்களிடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உலகெங்கிலும் உள்ள சிறந்த நடைமுறைகளை பின்பற்ற இப்பல்கலைக் கழகங்களை ஊக்குவிக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டின் வெற்றியாளர்கள் மற்றும் பிரிவுகள் பின்வருமாறு

| பிரிவு | வெற்றியாளர் |
|---|---|
| மனித நேயம், கலை மற்றும் சமூக அறிவியல் | **பேராசிரியர் சிப்நாத் தெப், பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்** |
| இயற்பியல் அறிவியல் | **பேராசிரியர் சஞ்சய் புரி, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்** |
| உயிரியல் அறிவியல் | **பேராசிரியர் ஆசாத் உல்லாஹ் கான், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம்; டாக்டர் பாத்திமா ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம்** |
| தொழில்நுட்ப வளர்ச்சி | **டாக்டர் ஷோன் ராய் சவுத்திரி, திரிபுரா பல்கலைக்கழகம்** |

## யுனெஸ்கோவின் சர்வதேச எழுத்தறிவு விருதுகள் 2019

- யுனெஸ்கோவின் சர்வதேச எழுத்தறிவு விருதுகள் 2019 ஆனது அதன் பொது இயக்குநரான ஆட்ரி அசோலே என்பவரால் அறிவிக்கப்பட்டது.
- கிங் செஜோங் எழுத்தறிவு விருது: தென் கொரியாவின் உதவியுடன் 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
  - இது தாய்மொழிக் கல்வி மற்றும் பயிற்சியின் பயன்பாட்டிற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் வழங்கப்படுகின்றது.

| விருது பெறும் நிறுவனம் | திட்டம் |
|---|---|
| அல்ஜீரியாவின் வயது வந்தவர்களுக்கான எழுத்தறிவு மற்றும் கல்விக்கான தேசிய அலுவலகம் | பன்மொழி எழுத்தறிவுக்கான தேசிய உத்தி |
| ஜவுளி இழைகள் மற்றும் வளர்ச்சி நிறுவனம், செனெகல் | தெற்கு செனகலில் உள்ள விவசாயிகளுக்கு தேசிய மொழிகளில் செயல்பாட்டுக் கல்வியறிவு மற்றும் அவற்றைத் தொடர்ந்து தொழில் பயிற்சி அளித்தல் |

- எழுத்தறிவிற்கான கன்பூசியஸ் விருது: சீனாவின் உதவியுடன் 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
  - இது கிராமப் புறங்களில் உள்ள வயது வந்தவர்கள் மற்றும் பள்ளிக்குச் செல்லாத இளைஞர்கள், அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் மத்தியில் எழுத்தறிவின் மீது சிறப்புக் கவனம் செலுத்துகின்றது.

| Awardee | Programme |
|---|---|
| Camacol Antioquia, Colombia | Obras Escuala |
| BASAbali, Indonesia | BASAbali Wiki |
| Nuovo Comitato il Nobel per I Disabili, Italy | TELL ME – Theatre for Education and Literacy Learning of Migrants in Europe |

## 76வது சர்வதேச திரைப்பட திருவிழா விருதுகள் – 2019

- ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் சர்வதேச திரைப்பட திருவிழா விருதுகள்-2019 என்ற நிகழ்ச்சியின் 76வது பதிப்பு இத்தாலியில் உள்ள வெனிஸ் லிடோ எனும் இடத்தில் நடத்தப்பட்டது.
- இந்நிகழ்ச்சி லா பையன்னலே டி வெனிசிலியாவால் ஏற்பாடு செய்யப்பட்டது. திரைப்படத் தயாரிப்பாளர் அமைப்பின் சர்வதேச கூட்டமைப்பினால் இந்நிகழ்ச்சி அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

| Award | Winner |
|---|---|
| **Golden Lion for Best Film** | Joker |
| **Volpi Cup for Best Actress** | Ariane Ascaride |
| **Volpi Cup for Best Actor** | Luca Marinelli |

## ஹ்ராண்ட் டிங்க் விருதுகள்

- ஆண் வன்முறைக்கு எதிராகப் போராடும் துருக்கிய ஆர்வலரான நேபாஹத் அக்கோவுடன் இணைந்து மேகாலயாவைச் சேர்ந்த உரிமை ஆர்வலர் ஆக்னஸ் கார்ஷிங் 11வது சர்வதேச ஹ்ராண்ட் டிங்க் விருதைப் பெற்றுள்ளார்.
- இந்த சர்வதேச விருதானது 2007 ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட துருக்கிய - ஆர்மீனிய பத்திரிகையாளரான ஹ்ராண்ட் டிங்கை நினைவு கூர்கின்றது.
- மேகாலயாவில் சட்ட விரோத நிலக்கரிச் சுரங்கத்திற்கு எதிராகப் போராடுவதில் ஆக்னஸ் கார்ஷிங் முன்னணியில் விளங்குகின்றார்.

## டாக்டர் கலாம் ஸ்மிருதி சர்வதேச சிறப்புத்துவ விருது 2019

- வங்காள தேசத்தின் பிரதமரான ஷேக் ஹசீனாவுக்கு டாக்காவில் 2019 ஆம் ஆண்டின் டாக்டர் கலாம் ஸ்மிருதி சர்வதேச சிறப்புத்துவ விருது வழங்கப்பட்டது.
- அமைதியான & வளமான தெற்காசியாவைப் பற்றிய அவருடைய பார்வை மற்றும் இந்தியாவிற்கும் வங்காள தேசத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதானது முன்னாள் இந்திய குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்

கலாமின் நினைவாக நிறுவப்பட்டுள்ளது.

- தங்களது நாடு சிறந்து விளங்குவதற்காக, தங்களது துறைகளில் சிறப்புத்துவத்தை வெளிப்படுத்தும் அரசியல் தலைவர்கள் அல்லது தலைவர்களைக் கௌரவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப்படுகின்றது.
- இந்த விருதானது டேல் வியூ என்ற அமைப்பால் வழங்கப்படுகின்றது. இந்த அமைப்பானது அறக்கட்டளை சமூகச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு அரசு சாரா அமைப்பாகும்.

## கல்வி சிறப்புத்துவ விருது 2019

- சூப்பர் 30 என்ற அமைப்பின் நிறுவனர் மற்றும் பிரபல கணிதவியலாளர் ஆனந்த் குமார் அமெரிக்காவில் மதிப்புமிக்க கற்பித்தல் விருது வழங்கப்பட்டுப் பாராட்டப்பட்டார்.
- அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சான் ஜோஸில் உள்ள ஃபவுண்டேஷன் ஃபார் எக்ஸலன்ஸ் என்ற நிறுவனம் வழங்கிய கல்வி சிறப்புத்துவ விருது 2019ஐ இவர் பெற்றார்.
- ஆனந்த் கடந்த 18 ஆண்டுகளாக சூப்பர் 30 என்ற புதுமையானத் திட்டத்தை இயக்குகிறார்.
- 30 மாணவர்களுக்கு இலவசக் கட்டணத்தில் இந்தியாவின் பிரீமியர் ஐஐடி-ஜேஇஇ என்ற தேர்வுக்கு ஒரு வருட கால விடுதி வசதியுடன் கூடிய பயிற்சியின் மூலம் அவர் வழிகாட்டுகிறார்.

## தேசியப் புவி அறிவியல் விருது – 2018

- இந்தியாவில் புவி அறிவியல், சுரங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் சிறப்பாகப் பங்காற்றியதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 22 விஞ்ஞானிகளுக்கு 2018 ஆம் ஆண்டின் தேசியப் புவி அறிவியல் விருதுகள் வழங்கப்பட்டன.
- நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி புது தில்லியில் இந்த விருதுகளை அவர்களுக்கு வழங்கினார்.
- இந்த விருதுகள் 10 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டன.
- முக்கியமான 2 விருதுகள்
    - நீர்வாழ் உயிர் புவி வேதியியல் ஆராய்ச்சித் துறையில் தனது குறிப்பிடத்தக்க உலகளாவியப் பங்களிப்புகளுக்காக பேராசிரியர் சையத் வாஜி அஹ்மண்ட் நக்வி என்பவருக்கு 2018 ஆம் ஆண்டின் தேசியப் புவி அறிவியல் விருது வழங்கப் பட்டுள்ளது.
    - எரிமலை, புவி வேதியியல் மற்றும் பாறையியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்கப் பணிகளை ஆற்றியதற்காக கோவா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சோஹினி கங்குலிக்கு 2018 ஆம் ஆண்டின் இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டுள்ளது.

| Category | Area | Awardees |
|---|---|---|
| **National Geoscience Award For Excellence** | Aquatic biogeochemical research | Prof. Syed Wajih Ahmad Naqvi |
| **National Geoscience Awards** | Mineral Discovery & Exploration category | **Individual:**<br>Dr. Yamuna Singh<br>**Team:**<br>Dr.Debjani Sarkar<br>Mr. Prabhakar Keshorao Raut<br>Mr. Pradipta Sur |
| | Groundwater Exploration | Dr. Janardhana Raju Nandimandalam |
| | Mining Technology | **Individual:**<br>Dr. Ashim Kumar Sinha<br>Dr. Arun Kumar Singh<br>Dr. Danda Srinivas Rao<br>Dr. Raj Shekhar Singh |
| | Basic Geosciences | **Individual:**<br>Dr. Paramjeet Kaur<br>Professor Jyotisankar Ray |
| | Applied Geosciences | **Individual:**<br>Dr. Tajdarul Hassan Syed<br>Dr. Vikrant Jain |
| | Geophysics/Applied Geophysics | **Individual:**<br>Dr. Nittala Satyavani<br>Mr. H.C. Gouda<br>**Team:**<br>Mr. H.C. Gouda<br>Mr. H. Rajaram<br>Dr. R.K. Singh<br>Mr. Ramesh Kesavan |
| | Geo-Environmental Studies | Dr. Bahadur Singh Kotlia |
| | Natural Hazard Investigations | Dr. R. Jayangonda Perumal |
| **Young Scientist Award** | Petrology, volcanology and geochemistry | Dr. Sohini Ganguly |

## பாயல் ஜாங்கிட் – கோல்கீப்பர்ஸ் குளோபல் கோல்ஸ் விருதுகள் 2019

- நியூயார்க்கில் நடைபெற்ற 2019 ஆண்டின் கோல்கீப்பர்ஸ் குளோபல் கோல்ஸ் விருதுகள் வழங்கும் விழாவில் 'மாற்றத்தை ஏற்படுத்துபவருக்கான விருதைப்' பெற்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையை ராஜஸ்தானின் ஆல்வாரைச் சேர்ந்த 17 வயதான பாயல் ஜாங்கிட் பெற்றார்.
- தனது சொந்த ஹின்ஸ்லா கிராமம் மற்றும் பிற அண்டை கிராமங்களில் குழந்தைத் திருமண நடைமுறையை ஒழிப்பதில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- இவர் ஹின்ஸ்லாவில் உள்ள பாலர் பஞ்சாயத்தின் (குழந்தைகளின் பாராளுமன்றம்) சார்பாஞ்சாகப் (தலைவர்) பணியாற்றுகின்றார். இது பால் மித்ரா கிராமம் (குழந்தைகளுக்கு உகந்த கிராமம்) ஆகும்.
- இந்தப் பரிசு வழங்கும் கருத்தானது நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்தியார்த்தி என்பவரால் நிறுவப்பட்டது ஆகும்.



## மாற்று நோபல் பரிசு - கிரெட்டா துன்பெர்க்

- வாழ்வாதார உரிமைகள் விருதை வென்றவர்களாக அறிவிக்கப்பட்ட நான்கு நபர்களில் ஸ்வீடனின் காலநிலை ஆர்வலரான கிரெட்டா துன்பெர்க் என்பவரும் ஒருவராவார்.
- இந்த விருதானது "மாற்று நோபல் பரிசு" என்றும் அழைக்கப்படுகின்றது.
- விஞ்ஞான உண்மைகளைப் பிரதிபலிக்கும் அவசர காலநிலை நடவடிக்கைகளுக்கான அரசியல் சார்ந்த தேவைகளை ஊக்குவிப்பதற்கும் பெருக்கிக் கொள்வதற்கும் துன்பெர்க் அங்கீகரிக்கப்படுகின்றார்.
- இதர வெற்றியாளர்கள் பின்வருமாறு

| வெற்றியாளர் | பங்களிப்பு |
|---|---|
| **டேவி கோபெனாவா மற்றும் ஹுட்டுகாரா யனோமாமி கூட்டமைப்பு** | பிரேசிலியப் பழங்குடியினரைப் பிரதிநிதித்துவப் படுத்தியதற்காகவும் அமேசான் வனத்தையும் அதன் மக்களையும் பாதுகாத்ததற்காகவும் |
| **சஹாராவி காந்தி என்றும் அழைக்கப்படும் மொராக்கோ ஆர்வலர் அமினாடு ஹைதர்** | ஒரு மனித உரிமை வழக்குரைஞர் மற்றும் மேற்கு சஹாராவின் சுதந்திரத்திற்கு அவரது வன்முறையற்ற போராட்டத்திற்காக இந்த விருது வழங்கப்பட்டது |
| **சீனாவின் வழக்குரைஞரான ஜியோ ஜெயின்மெய்** | சீனாவில் பெண்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்ததற்காக |

*இந்த விருது பற்றி*

- இந்த விருதானது 1980 ஆம் ஆண்டில் ஸ்வீடன்-ஜெர்மனியரான கொடையாளர் ஜகோப் வான் யுஎக்ஸ் என்பவரால் நிறுவப்பட்டது.

- இந்தப் பரிசின் நிறுவனர் அதிக நற்செயல்களைச் செய்தார். ஆனால் அது நோபல் பரிசுகளால் புறக்கணிக்கப்படுவதாக அவர் உணர்ந்தார். இந்த வருடாந்திர வாழ்வாதார உரிமைகள் விருதானது அந்த முயற்சிகளை கௌரவிக்கின்றது.
- இந்தப் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு வெற்றியாளர்களும் தலா 1 மில்லியன் குரோனரை (103,000 டாலர்) பெற இருக்கின்றனர்.




## சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருதுகள் 2019

- சாந்தி ஸ்வரூப் பட்னாகர் விருதுகளை இந்தியக் குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார்.
- இந்த விருதுகள் இந்தியாவின் மிக உயர்ந்த பன்முக அறிவியல் விருதுகளாகும்.
- இது ஒரு வருடாந்திர விருதாகும்.
- இந்த விருதுகள் அறிவியல்சார் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி மன்றத்தினால் (Council of Scientific and Industrial Research - CSIR) வழங்கப் படுகின்றன.
- இந்த விருதைப் பெறுபவர்களின் பெயர்கள் வழக்கமாக CSIRன் நிறுவன தினமான செப்டம்பர் 26 அன்று அதன் தலைமை இயக்குநரால் அறிவிக்கப் படுகின்றன.
- இந்த விருது ஏழு பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றது. அந்தப் பிரிவுகளாவன
    - இயற்பியல் அறிவியல்
    - வேதியியல் அறிவியல்
    - உயிரியல் அறிவியல்
    - மருத்துவ அறிவியல்
    - கணித அறிவியல்
    - பொறியியல் அறிவியல்
    - பூமி, வளிமண்டலம், பெருங்கடல் மற்றும் கிரக அறிவியல்.
- CSIRன் முதலாவது தலைமை இயக்குநரும் பல்கலைக்கழக மானியக் குழுவின் முதலாவது தலைவருமான சாந்தி ஸ்வரூப் பட்னாகரின் (1894 - 1955) நினைவாக இந்த விருது வழங்கப்படுகின்றது.

- இவருக்கு 1954 ஆம் ஆண்டில் பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.

## அமிதாப் பச்சன் - தாதா சாஹேப் பால்கே விருது

- அமிதாப் பச்சனுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான தாதா சாஹேப் பால்கே விருது வழங்கப்படும் என்று மத்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவ்டேகர் தெரிவித்துள்ளார்.
- புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குனரான தாதசாகேப் பால்கேவின் நினைவாக தாதாசாகேப் பால்கே விருது ஏற்படுத்தப்பட்டது.
- இது சினிமாத் துறையில் இந்தியாவின் மிக உயர்ந்த விருதாகும். இது 1969 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த விருதை முதன்முதலில் பெற்றவர் தேவிகா ராணி ஆவார்.

## இந்தியக் குடியரசுத் தலைவரின் வர்ண விருது

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மதிப்பு மிக்க குடியரசுத் தலைவரின் வர்ண விருதுகளை இராணுவ வான் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கினார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் வர்ண விருது என்பது ஒரு விழாவின் போது இந்தியக் குடியரசுத் தலைவரால் ஒரு படைப் பிரிவிற்கு வழங்கப்படும் படைப்பிரிவுக் கொடிகளாகும்.
- அமைதி மற்றும் போரின் போது, தேசத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பான சேவைகளை அங்கீகரிப்பதற்காக ஆயுதப் படைப் பிரிவிற்கு வழங்கப்படும் மிகப்பெரிய கௌரவ விருதுகளில் இதுவும் ஒன்றாகும்.

### *இதுபற்றி*

- இராணுவ வான் பாதுகாப்பு படைகள் ஆனது இராணுவத்தின் இளம் படைப் பிரிவுகளில் ஒன்றாகும்.
- இது 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- பீரங்கிப் படைப் பிரிவானது 1989 ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர் இராணுவ விமானப் பாதுகாப்புக் கல்லூரி (Army Air Defence College - AADC) நிறுவப்பட்டது.
- AADC என்பது வான் பாதுகாப்புப் படையில் உள்ள பணியாளர்களுக்கான ஒரு பயிற்சிப் பள்ளியாகும்.

## சாஸ்த்ரா ராமானுஜன் விருது 2019

- 2019 ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா ராமானுஜன் விருதானது இங்கிலாந்தில் உள்ள வார்விக் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக இருக்கும் கணிதவியலாளரான ஆடம் ஹார்ப்பருக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- இந்த விருதானது பகுப்பாய்வு மற்றும் நிகழ்தகவு எண் கோட்பாடு ஆகியவற்றிற்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்புகளுக்காக அவருக்கு வழங்கப் படுகின்றது.

- இந்த விருதானது தமிழ்நாட்டில் உள்ள ஒரு தனியார்ப் பல்கலைக் கழகமான சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தினால் 2005 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- தகுதி: சீனிவாச ராமானுஜனால் ஈர்க்கப்பட்டு அந்த துறையில் பணிபுரியும் 32 வயதிற்குக் குறைவான உலகம் முழுவதும் உள்ள கணிதவியலாளர்கள்.
- வயது வரம்பு 32 ஆனது இந்தக் குறுகிய காலத்தில் ராமானுஜன் ஒரு தனித்துவமான பணியை நிறைவேற்றியுள்ளார் என்பதை நினைவுபடுத்துகின்றது.

## 31வது புண்ணியபூசன் விருது


- புகழ்பெற்ற அகழ்வாராய்ச்சியாளரான டாக்டர் G.B. தெக்லுர்கர் என்பவருக்கு 2019 ஆம் ஆண்டிற்கான 31வது புண்ணியபூசன் விருதினை துணைக் குடியரசுத் தலைவர் வழங்கினார்.
- அகழ்வாராய்ச்சித் துறையில் அவரது மிகச்சிறந்த பங்களிப்பிற்காக இது அவருக்கு அங்கீகாரத்தை வழங்கியது.
- இந்த நிகழ்ச்சி புனேவைச் சேர்ந்த புண்ணியபூசன் பவுண்டேசன் எனும் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.
- இந்த விருதானது ஒவ்வொரு வருடமும் கலை, இசை, கலாச்சாரம், அறிவியல், தொழில், சமூக சேவை மற்றும் விளையாட்டு ஆகிய துறையில் ஒரு புகழ்பெற்ற பிரபலத்திற்கு வழங்கப்படுகின்றது.
- இது முதல்முறையாக 1989ம் ஆண்டில் வழங்கப்பட்டதாகும்.



## வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருது 2019

- தனது புதினமான நிரேஷ்வரன் என்ற புதினத்திற்காக 43வது வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருதிற்கு எழுத்தாளர் V.J.ஜேம்ஸ் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார்.

- இந்த பெருமைமிகு விருது, வயலார் ராமவர்மா நினைவு அறக்கட்டளையால் அந்த மதிப்புமிக்க கவிஞரின் நினைவாக ஏற்படுத்தப் பட்டதாகும்.
- இது மலையாளத்தில் சிறந்த இலக்கியப் படைப்பிற்காக வழங்கப்படுகின்றது.
- இந்த விருது 1977 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டதாகும்.



# விளையாட்டுச் செய்திகள்

## சாம்பியன்ஸ் படகுப் போட்டி: பாம்புப் படகுப் பந்தயம் - கேரளா

- ஆலப்புழாவில் புன்னமடா ஏரியில் நடைபெற்ற பெருமைமிகு நேரு டிராபியின் 67வது பதிப்பை பல்லதுருத்தி படகு மன்றத்தின் பாம்புப் படகான நடுபாகம் சுந்தன் வென்றது.
- சம்பக்குளம் சுந்தன் மற்றும் கரிச்சல் சுந்தன் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்தன.
- 1952ம் ஆண்டில் இந்தியாவின் முதல் பிரதமர் ஆலப்புழைக்கு வருகை தந்து நடுபாகம் சுந்தன் (பாம்புப் படகு) படகில் பயணித்தார்.

***இதுபற்றி***


- இந்தப் பந்தயம் கேரளாவில் மிகப்பெரிய அளவில் இங்கொன்றும் அங்கொன்றுமாக பரவி இருக்கும் பாம்புப் படகுப் பந்தயங்களை தொழில்நுட்பப் படுத்துவதிலும், அவர்களின் பாரம்பரிய தன்மையை அழிக்காமல் அவற்றை வர்த்தகப் படுத்துவதிலும் கவனத்தைச் செலுத்துகின்றது.
- கேரளாவின் சுற்றுலாத் துறையால் நடத்தப்படும் இப்பந்தயம் ஐபிஎல் பந்தயத்தின் மாதிரியில் நாட்டில் நடத்தப்படும் முதலாவது படகுப் பந்தயமாகும்.
- இப்போட்டியில் மொத்தம் 12 பந்தயங்கள் இருக்கும்.
- இது நேரு டிராபியுடன் துவங்கி நவம்பர் 23 தேதியன்று கொல்லத்தில் குடியரசுத் தலைவர் படகுப் பந்தயக் கோப்பையுடன் முடிவடைகின்றது.



## பெரோஸ் ஷா கோட்லா மைதானம் மறுபெயரிடப்பட்டது: அருண் ஜெட்லி

- ❖ டெல்லியின் பெரோஸ் ஷா கோட்லா மைதானம் கடந்த மாதம் காலமான முன்னாள் நிதியமைச்சரின் நினைவாக அருண் ஜெட்லி மைதானம் என மறுபெயரிடப்பட உள்ளது.
- ❖ பெரோஸ் ஷாவால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தற்பொழுது மறுபெயரிடப்படுகின்றது.
- ❖ யமுனா நதிக் கரைக்கு அருகே ஒரு கோட்டையைக் கட்டிய முதல் ஆட்சியாளர் இவராவார்.
- ❖ அவர் பல மொழி, பல கலாச்சாரம் என்ற தன்மையை உருவாக்கினார். அவரின் சுயசரிதை: ஃபுத்துஹத்-இ-பெரோஸ்ஷா.
- ❖ டெல்லி கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவராக அருண் ஜெட்லி இருந்தார்.





## மூத்த மகளிருக்கான தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப்

- ❖ 25 வது மூத்த மகளிருக்கான தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியானது முதல் முறையாக அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.
- ❖ கிழக்கு சியாங் மாவட்டத்தில் உள்ள மாநிலத்தின் பழமையான நகரமான பசிகாட்டில் இந்த போட்டி நடைபெறும்.

## SAFF U-15 கால்பந்து

- இந்தியாவின் 15 வயதிற்குட்பட்டோர் அணியானது நேபாள அணியை 7-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி SAFF U-15 பட்டத்தை வென்றது.
- 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முந்தைய வெற்றிகளுக்குப் பிறகு இந்தியா மூன்றாவது முறையாக இந்தப் பட்டத்தை வென்று சாதனை புரிந்துள்ளது.
- முந்தைய இரண்டு வெற்றிகளும் நேபாளத்திற்கு எதிரானவையே ஆகும்.
- இப்போட்டியில் ஸ்ரீதர்த் நோங்மெய்கபம் ஹாட்ரிக் கோல்கள் அடித்தார்.



## அனுபமா ஸ்வைன் – தற்காப்புக் கலை

- சமீபத்தில் முடிவடைந்த 2019 ஆம் ஆண்டின் உலக தற்காப்புக் கலை முதுநிலை ஜியு-ஜிட்சு போட்டியில் ஒடிசாவைச் சேர்ந்த அனுபமா ஸ்வைன் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்தப் போட்டி தென் கொரியாவின் சுங்ஜூவில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் பங்கேற்ற ஒரே இந்தியர் இவராவார்.
- இந்த வெண்கலப் பதக்கத்தின் மூலம், அவர் 2022 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் ஆசிய விளையாட்டுக்குத் தகுதி பெற்றுள்ளார்.
- ஜியு-ஜிட்சு என்பது தற்காப்புக் கலை மற்றும் போர் விளையாட்டின் ஒரு வடிவமாகும். மேலும் இது குறிப்பாகத் தரையில் நடைபெறும் சண்டைக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மீது முழு கவனத்தையும் செலுத்துகின்றது.




## ஆப்கானிஸ்தானின் ரஷீத் கான்

- ஆப்கானிஸ்தானின் இடது கை சுழல் பந்து வீச்சாளரான ரஷீத் கான் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஒரு புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
- டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மிக இளம் வயதில் டெஸ்ட் அணித் தலைவராக ஆனதன் மூலம் 15 ஆண்டு காலச் சாதனையை இவர் முறியடித்துள்ளார். (வயது 20 வயது 350 நாட்கள்).
- முன்னதாக, ஜிம்பாபேயின் முன்னாள் விக்கெட் கீப்பர் தடெண்டா தைபு 20 வயது 358 நாட்களில் அணித் தலைவராக பொறுப்பேற்றுச் சாதனை படைத்திருந்தார்.

## அமெரிக்க ஓபன் 2019

***மகளிர் பிரிவு***

- 2019 ஆம் ஆண்டின் அமெரிக்க ஓபன் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் 19 வயதான பியான்கா வனேசா ஆண்ட்ரெஸ்கு என்பவர் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற முதல் கனடிய வீராங்கனையாக உருவெடுத்துள்ளார்.
- 1968 ஆம் ஆண்டிலிருந்து, ஓபன் போட்டி சகாப்தத்தில் அறிமுகப் போட்டியில் அமெரிக்க ஓபனை வென்ற முதல் பெண்மணி ஆண்ட்ரெஸ்கு ஆவார்.
- இது அவரது முதல் கிராண்ட்ஸ்லாம் வெற்றியாகும்.

***ஆடவர் பிரிவு***

- ஸ்பானிய வீரரான ரஃபேல் நடால் ரஷ்யாவின் டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி தனது நான்காவது அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றார்.
- இது அவரது 19வது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும்.
- சுவிட்சர்லாந்து வீரரான ரோஜர் பெடரர் அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை (20) வைத்துள்ளார்.

## இந்தியாவின் பாரா ஒலிம்பிக் கமிட்டிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்டது

- இந்திய தேசிய விளையாட்டு மேம்பாட்டு விதிமுறைகள், 2011ஐ மீறியதற்காக மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகமானது இந்திய பாராலிம்பிக் குழுவின் (Paralympic Committee of India - PCI) அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுள்ளது.
- இந்த நடவடிக்கையானது PCIன் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பானதாகும்.

***இதுபற்றி***

- PCI ஆனது 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதற்கு முன்னர் இது 'இந்திய உடல் ஊனமுற்றோர் விளையாட்டுக் கூட்டமைப்பு' என்று பெயரிடப்பட்டது.
- இது பாராலிம்பிக் விளையாட்டுக்கள் (அல்லது பாராலிம்பிக்ஸ்) மற்றும் பிற சர்வதேசத் தடகள போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்த விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒரு தேசிய அமைப்பாகும்.

## 19 வயதுக்குட்பட்ட ஆசியக் கோப்பை வெற்றி – இந்தியா

- கொழும்பில் ஆர். பிரேமதாசா அரங்கத்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட ஆசியக் கோப்பையின் இறுதிப் போட்டியில் இந்தியா வங்காள தேசத்தைத் தோற்கடித்தது.




- இடது கை சுழற்பந்து வீச்சாளரான அதர்வா அங்கோலேகர் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவின் வெற்றிக்கு உதவினார்.
- இது இந்தியாவின் 7வது 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை வெற்றியாகும்.

## 6 வது ட்ராக் ஆசிய கோப்பை சைக்கிள் ஓட்டுதல் போட்டி

- இந்திய சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு (CFI - Cycling Federation of India) நடத்திய 6வது ட்ராக் ஆசியக் கோப்பை சைக்கிள் ஓட்டுதல் போட்டி 2019 இன் மூன்று நாள் நிகழ்ச்சி புது தில்லியில் நடத்தப்பட்டது.
- இந்தியா 10 தங்கம், 8 வெள்ளி மற்றும் 7 வெண்கலம் என மொத்தமாக 25 பதக்கங்கள் பெற்று இந்தப் போட்டியின் தரவரிசையில் முதலிடம் பெற்றது.

- இந்தியாவைத் தொடர்ந்து உஸ்பெகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றிருந்தன.

| Rank | Country | gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | India | 10 | 8 | 7 | 25 |
| 2 | Uzbekistan | 4 | 3 | 0 | 7 |
| 3 | Malaysia | 4 | 1 | 0 | 5 |

## 25 ஆவது ஜூனியர் மற்றும் கேடட் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்

- 2019 ஆம் ஆண்டிற்கான ஏசியன் ஜூனியர் மற்றும் கேடட் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் 25 ஆவது பதிப்பானது மங்கோலியாவில் நடத்தப்பட்டது.
- இது ஏசியன் டேபிள் டென்னிஸ் யூனியன் அமைப்பின் அதிகாரத்தின் கீழ் செயல்படும் மங்கோலியன் டேபிள் டென்னிஸ் அசோஷியேஷனால் நடத்தப்பட்டது.
- பின்வரும் இந்திய வீரர்கள் அதில் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.
  - புது தில்லியின் பயாஸ் ஜெயின்
  - இந்திய ஆடவர் அணி.

## தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப்

- ஸ்ரீஹரி நடராஜ் 73வது க்ளென்மார்க் மூத்தோர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப்பில் ஆண்களுக்கான 100 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பட்டத்தையும், 50 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் பதக்கத்தையும் வென்றுள்ளார்.
- ஆண்களின் 50 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் போட்டியில் 25.58 வினாடிகளில் நீந்தி தேசிய சாதனையையும் இவர் படைத்துள்ளார்.
- ஹரியானாவைச் சேர்ந்த சிவானி கட்டாரியா சிறந்த பெண் நீச்சல் வீரராக தேர்வு செய்யப்பட்டார்.
- ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் மற்றும் ஆண்கள் அணி பட்டத்தை கர்நாடகா வென்றது.
- பெண்கள் அணி கோப்பையை மகாராஷ்டிரா கைப்பற்றியது.

## ஹீரோ மோட்டோகார்ப் மற்றும் கோல்ஃப்

- ஹீரோ மோட்டோகார்ப் தலைவரும் நிர்வாக இயக்குநருமான பவன் முஞ்சல் 2019 ஆம் ஆண்டு ஆசிய பசிபிக் கோல்ஃப் வாழ்த்தரங்கத்தில் (Hall of Fame) சேர்க்கப்படுவார்.
- இந்தியாவிலும் உலகெங்கிலும் விளையாட்டுத் துறைக்கு அவர் அளித்த ஆதரவுக்காக அவர் அங்கீகரிக்கப் படுகிறார்.
- துவக்க விழாவானது நவம்பர் மாதம் குருகிராமில் உள்ள டி.எல்.எஃப் கோல்ஃப் & கன்ட்ரி கிளப்பில் நடைபெறவிருக்கும் ஆசிய கோல்ஃப் விருதுகள் காலா விருந்தில் நடைபெறும்.
- பிஜிஏ சுற்றுப் பயணம், ஐரோப்பிய சுற்றுப் பயணம் மற்றும் ஆசிய சுற்றுப் பயணம் ஆகிய மூன்று முக்கிய கோல்ஃப் சுற்றுப் பயணங்களிலும் அவர் ஒரு பங்குதாரர் ஆவார்.

## தனுஷ் ஸ்ரீகாந்த் - செவித்திறன் குறைபாடு உள்ள இளம் துப்பாக்கி சுடும் வீரர்

- தெலுங்கானாவைச் சேர்ந்த தனுஷ் ஸ்ரீகாந்த் என்பவர் இந்திய தேசிய அணியில் தேர்வு செய்யப்பட்ட முதல் செவித்திறன் குறைபாடு உள்ள துப்பாக்கி சுடும் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




- நவம்பர் மாதம் திட்டமிடப்பட்டுள்ள தோஹாவில் நடைபெறும் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிக்கான இளையோர் (U-21) ஆடவர் அணியின் 10 மீட்டர் ஏர் ரைபிள் அணியில் இவர் போட்டியிட உள்ளார்.
- இவர் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்று வழக்கமான பிரிவில் தேசிய பதக்கம் வென்ற முதல் செவித்திறன் குறைபாடுள்ள துப்பாக்கி சுடும் வீரர் ஆவார்.

## மல்யுத்தம் - வினேஷ் போகாட்

- கஜகஸ்தானின் நூர் - சுல்தானில் நடைபெற்ற மல்யுத்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வினேஷ் போகாட் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- இவர் 53 கிலோ ஃப்ரீஸ்டைல் போட்டியில் இரண்டு முறை உலக வெண்கலப் பதக்கம் வென்ற கிரேக்கத்தைச் சேர்ந்த மரியா ப்ரெவோலராகியைத் தோற்கடித்தார்.
- சிறப்புமிக்க இந்தப் போட்டியில் பதக்கம் வென்ற நான்காவது இந்தியப் பெண் மல்யுத்த வீரர் இவர் மட்டுமே ஆவார்.
- இவர் காமன்வெல்த் விளையாட்டு மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் இவர் 2020 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

### IBSF உலக ஸ்னூக்கர் போட்டி

- IBSF உலக ஸ்னூக்கர் போட்டியில் இந்திய அணியின் ஜோடிகளான பங்கஜ் அத்வானி மற்றும் ஆதித்யா மேத்தா ஆகியோர் உலக சாம்பியன்களாக உருவெடுத்துள்ளனர்.
- மியான்மரின் மாண்டலேயில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இவர்கள் தாய்லாந்து அணியைத் தோற்கடித்தனர்.
- பங்கஜ் அத்வானியின் உலகப் பட்டத்தின் எண்ணிக்கை தற்பொழுது 23 ஆக உள்ளது. ஆதித்யா தற்பொழுது தனது முதலாவது பட்டத்தைப் பெற்றுள்ளார்.

### அமித் பங்கல் - இந்தியாவின் முதலாவது குத்துச் சண்டைப் பதக்கம்

- ரஷ்யாவின் எகடெரின்பெர்க்கில் நடைபெற்ற உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய குத்துச் சண்டை வீரர் அமித் பங்கல் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- இவர் 52 கிலோ எடைப் பிரிவு கொண்ட இறுதிப் போட்டியில் உஸ்பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் சாம்பியனான ஷாகோபிடின் சோயிரோவ் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார்.
- இரண்டாம் நிலை வீரரான பங்கல் உலகப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பிடித்த முதலாவது இந்திய ஆண் குத்துச் சண்டை வீரராக உருவெடுத்துள்ளார்.
- மேலும் இதே போட்டியில் மணிஷ் கௌசிக் (63 கிலோ எடைப் பிரிவு) வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.
- உலக சாம்பியன்ஷிப்பின் ஒரு பதிப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட வெண்கலப் பதக்கங்களை இந்தியா வென்றது இதுவே முதல் முறையாகும்.
- கடந்த வெற்றியாளர்கள்: விஜேந்தர் சிங் (2009), விகாஸ் கிரிஷன் (2011), சிவா தாபா (2015) மற்றும் கௌரவ் பிதூரி (2017).

## முக்கிய தினங்கள்

### தேசிய ஊட்டச்சத்து வாரம்: செப்டம்பர் 1 – 7

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 7 வரை தேசிய ஊட்டச்சத்து வாரம் கொண்டாடப் படுகின்றது.
- தேசிய ஊட்டச்சத்து வாரத்தின் நோக்கமானது மக்களிடையே ஊட்டச்சத்து நடைமுறை குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதாகும்.
- குறிப்பாகப் பாலூட்டும் தாய்மார்கள் தங்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு "சீம்பால்" என்று அழைக்கப்படும் பிரசவத்திற்குப் பிறகான முதல் பால் கொடுக்க ஊக்குவிக்கப் படுகிறார்கள்.
- இந்தப் பிரச்சாரமானது முதன்முதலில் மத்திய அரசினால் 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 2

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 2 ஆம் தேதி உலக தேங்காய் தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த நாள் தேங்காயின் சுகாதாரம் சார்ந்த நன்மைகள் மற்றும் பொருளாதார நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் தேங்காய் மேம்பாட்டு வாரியமானது செப்டம்பர் 2 ஆம் தேதி ஒடிசாவில் 'குடும்ப நலனுக்கான தேங்காய்' என்ற கருப்பொருளின் கீழ் 21வது உலக தேங்காய் தினத்தைக் கொண்டாட இருக்கின்றது.

## உலக அறக்கட்டளை தினம் – செப்டம்பர் 5


- ஆண்டுதோறும் செப்டம்பர் 5 ஆம் தேதி உலக அறக்கட்டளை நாளாக அனுசரிக்கப்படுகின்றது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2012 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது.
- கல்கத்தாவில் அன்னை தெரசாவின் இறந்த தினத்தை அனுசரிப்பதற்காக செப்டம்பர் 5 ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இத்தினமானது முதன்முதலாக 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அன்று அனுசரிக்கப்பட்டது.




## ஆசிரியர்கள் தினம் – செப்டம்பர் 5


- இந்தியாவின் முதல் மற்றும் இரண்டாவது துணைக் குடியரசுத் தலைவரும் (1952 - 1962) மற்றும் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவருமான (1962-1967) டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினத்தின் நினைவாக ஆண்டுதோறும் செப்டம்பர் 5 ஆம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப் படுகின்றது.
- இந்தியா போன்ற மக்களாட்சி நாட்டில் ஆசிரியர்கள் மற்றும் கல்வியின் முக்கியத்துவம் குறித்து டாக்டர் ராதாகிருஷ்ணன் "நவீன இந்தியாவில் அரசியல் சிந்தனையாளர்கள்" என்ற அவரது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.
- இவர் 1954 ஆம் ஆண்டு பாரத் ரத்னா விருது பெற்றார்.
- இவர் Helpage India என்ற இந்தியாவின் நலிந்த முதியோர்களுக்கான இலாப நோக்கமற்ற அமைப்பை ஏற்படுத்திய நிறுவனர்களில் ஒருவர் ஆவார்.

- உலகளவில் ஆசிரியர்கள் தினம் அக்டோபர் 5 அன்று கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் 1962 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 5 அன்று இந்நாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகின்றோம்.




## உலக பிசியோதெரபி (உடல் சிகிச்சை) தினம் – செப்டம்பர் 8

- இந்தத் தினம் மக்கள் நலமாக வாழ, பயணத்திற்கு ஏற்ற வகையில் மற்றும் சுதந்திரமாகத் தொழில் செய்வதற்கு ஏற்ற வகையில் முக்கிய பங்காற்றுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த உலகளாவிய உடல் சிகிச்சை வல்லுநர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைகின்றது.
- உடல் சிகிச்சைக்கான உலகக் கூட்டமைப்பு (WCPT - World Confederation of Physical Therapy) 1996 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 8 ஆம் தேதியை உடல் சிகிச்சை தினமாக அறிவித்தது.
- 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 அன்று WCPT தொடங்கப்பட்டது.
- இந்த வருடத்திற்கான கருப்பொருள் “நாள்பட்ட வலி” என்பதாகும்.



## சர்வதேச எழுத்தறிவு தினம் – செப்டம்பர் 8

- கல்வியறிவுப் பிரச்சினை என்பது ஐ.நாவின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் ஐ.நா.வின் 2030 ஆம் ஆண்டின் நீடித்த வளர்ச்சிக்கானப் பணி நிரலின் முக்கிய அங்கமாகும்.
- நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு 4 ஆனது அனைத்து இளைஞர்களும் கல்வியறிவு மற்றும் எண்ணறிவை அடைவதை தனது இலக்குகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது. மேலும் இந்த திறன்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.
- சர்வதேச எழுத்தறிவு நாள் 2019 என்பது 2019 ஆம் ஆண்டின் சர்வதேசப் பூர்வகுடி மொழிகளுக்கான ஆண்டுக் கொண்டாட்டங்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும்.
- சிறப்புத் தேவைகள் கல்வி குறித்த உலக மாநாட்டின் 25வது ஆண்டு விழா தற்பொழுது கொண்டாடப்படுகின்றது. அனைவரையும் உள்ளடக்கிய கல்வி குறித்த சலமன்கா அறிக்கையானது இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சர்வதேச எழுத்தறிவு தினம் 2019 ஆனது 'கல்வியறிவு மற்றும் பன்மொழியியல்" ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்த விருக்கின்றது.
- செப்டம்பர் 8 ஆம் தேதியை சர்வதேசக் கல்வியறிவு தினமாக யுனெஸ்கோ தனது 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 26 அன்று நடைபெற்ற யுனெஸ்கோவின் பொது மாநாட்டின் 14வது அமர்வில் அறிவித்தது.
- இது முதல் முறையாக 1967 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.




## உலக தற்கொலை தடுப்பு தினம் – செப்டம்பர் 10

- உலக தற்கொலை தடுப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 10 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது உலகெங்கிலும் பல்வேறு நடவடிக்கைகளுடன், தற்கொலைகளைத் தடுப்பதற்கு உலகளாவிய அர்ப்பணிப்பு மற்றும் நடவடிக்கைகளை வழங்குவதற்கான விழிப்புணர்வு நாள் ஆகும்.
- இதன் முதலாவது தினக் கொண்டாட்டமானது 2003 இல் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது ஆண்டுதோறும் தற்கொலை தடுப்புக்கான சர்வதேச சங்கம், உலக சுகாதார அமைப்பு (WHO - World Health Organization) மற்றும் மனநலத்திற்கான உலகக் கூட்டமைப்பு ஆகியவற்றால் இணைந்து ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- ஒவ்வொரு 40 விநாடிகளிலும் ஒருவர் தற்கொலையினால் தங்களது வாழ்க்கையை இழக்கின்றார்.

- 2019 ஆம் ஆண்டில், உலகெங்கிலும் தற்கொலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த WHO ஆனது "40 விநாடிகள் நடவடிக்கை" என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.




## தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐ.நா தினம் – செப்டம்பர் 12

- தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐக்கிய நாடுகளின் தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 12 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- 2003 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது டிசம்பர் 19ஐ தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கான ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடுவதாக அறிவித்தது.
- ஆனால் 2011 ஆம் ஆண்டில் இத்தினமானது செப்டம்பர் 12 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.
- இத்தேதியானது வளரும் நாடுகளிடையே தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் 1978 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஒரு செயல் திட்டத்தை ஏற்றுக் கொண்ட தேதியை நினைவு கூர்கின்றது.
- தென் அரைக் கோளத்தில் உள்ள நாடுகளுக்குப் பல்வேறு சேவைகளை வழங்குவதற்கான ஐ.நாவின் முயற்சிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

## உலக முதலுதவி நாள் – செப்டம்பர் 14

- உலக முதலுதவி தினமானது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (International Federation of Red Cross - IFRC) மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றினால் 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- செப்டம்பர் மாதத்தின் இரண்டாவது சனிக் கிழமையானது உலக முதலுதவி தினமாகக் கொண்டாடப்படுகின்றது.
- இத்தினமானது அன்றாட மற்றும் நெருக்கடி கால சூழ்நிலைகளில் முதலுதவியின் மூலம் எவ்வாறு உயிரைக் காப்பாற்ற முடியும் என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அது மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்கள் உட்பட அனைவருக்கும் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் உலக முதலுதவி தினத்தின் கருத்துரு, "முதலுதவி மற்றும் விடுபட்ட மக்கள்" ஆகும்.

## பேரறிஞர் அண்ணா பிறந்த தினம் – செப்டம்பர் 15

- முன்னாள் முதலமைச்சரும் திராவிடத் தலைவருமான சி.என். அண்ணாதுரையின் 111வது பிறந்த நாளானது செப்டம்பர் 15 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.





- அவரது குறிப்பிடத்தக்க சாதனைகள்:
    - மதராஸ் மாநிலத்தைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றியது
    - வேதச் சடங்குகளை மறுக்கும் "சுய மரியாதைத்" திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கியது.
    - தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.
    - முழு பெரும்பான்மையுடன் காங்கிரஸ் கட்சி அல்லாத முதலாவது முதல்வர்.
- 1969 ஆம் ஆண்டில், அவரது இறுதிச் சடங்கானது உலகின் இரண்டாவது மிகப்பெரிய உலகச் சாதனையாக தற்பொழுதும் விளங்குகின்றது.
- அவரது இறுதி ஊர்வலத்தில் 1.5 கோடி மக்கள் கலந்து கொண்டதாக கின்னஸ் சாதனைப் புத்தகம் தெரிவிக்கின்றது.

## தேசியப் பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15


- 1968 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதியானது பொறியாளர்களின் தினமாகக் கொண்டாடப் படுகின்றது.
- மேலும் இத்தினமானது சர் மோக்சகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளன்று அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் கொண்டாடப்படுகின்றது.
- இவர் மைசூருவில் அமைந்துள்ள கிருஷ்ண ராஜா சாகர் அணை மற்றும் ஹைதராபாத்தில் வெள்ளப் பாதுகாப்பு முறை ஆகியவற்றை ஏற்படுத்தியதற்காக மதிக்கப் படுகின்றார்.
- இதன் கட்டுமானம் 1911 ஆம் ஆண்டில் தொடங்கி 1932 ஆம் ஆண்டில் முடிவுற்றது.
- அவர் 1955 ஆம் ஆண்டில் பாரத் ரத்னா விருதைப் பெற்றார்.
- இவர் இந்தியாவின் புகழ்பெற்ற பொறியியலாளராக உயர்ந்த பதவியில் இருந்தார்.
- இந்த 52வது பொறியாளர்கள் தினத்தின் கருத்துரு “மாற்றத்திற்கானப் பொறியியல்”

என்பதாகும்.




## சர்வதேச மக்களாட்சி தினம் – செப்டம்பர் 15

- ❖ வருடாந்திர சர்வதேச மக்களாட்சி தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகின்றது.
- ❖ செப்டம்பர் 15 ஆம் தேதியை சர்வதேச மக்களாட்சி தினமாகக் கொண்டாடுவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- ❖ இத்தகைய முதலாவது தினமானது 2008 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- ❖ மக்களாட்சியின் கொள்கைகளை நிலைநிறுத்தவும் ஊக்குவிக்கவும் இத்தினமானது கொண்டாடப்படுகின்றது.
- ❖ 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "பங்கேற்பு" என்பதாகும்.




## உலக ஓசோன் தினம் – செப்டம்பர் 16

- ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 16 ஆம் தேதி கொண்டாடப்படுகின்றது.
- இந்த நாள் ஆனது ஓசோன் அடுக்கைப் பாதிக்கும் பொருள்கள் மீதான 1987 ஆம் ஆண்டின் மாண்ட்ரீல் நெறிமுறையில் கையெழுத்திட்டதை நினைவு கூர்கிறது.
- அத்தகைய முதலாவது நாள் 1995 ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது.
- காலநிலை மாற்றம் மற்றும் ஓசோன் சிதைவு தொடர்பானத் தலைப்புகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை இந்த நாள் பரிந்துரைக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் “32 ஆண்டுகள் மற்றும் சரி செய்தல்” என்பதாகும்.
- இது ஓசோன் அடுக்கைப் பாதுகாக்க மூன்று தசாப்தங்களாக மேற்கொண்ட குறிப்பிடத்தக்க சர்வதேச ஒத்துழைப்பைக் குறிக்கின்றது.




## உலக நோயாளி பாதுகாப்பு நாள் – செப்டம்பர் 17

- உலக சுகாதார அமைப்பு (WHO - World Health Organization), 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியை உலக நோயாளி பாதுகாப்பு தினமாக அறிவித்துள்ளது.

- இந்த நாள் ஆனது நோயாளியின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, சுகாதார நலத்தைப் பாதுகாப்பதில் தங்கள் அர்ப்பணிப்பைக் காட்டும்படி மக்களைக் கேட்டுக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுகாதாரத்தைப் பெறும் போது "தடுக்கப்படக் கூடிய மருத்துவ விபத்து" காரணமாக நோயாளிகள் இறக்கும் அபாயம் 300ல் 1 என மதிப்பிடப் பட்டுள்ளது.
- உலகளவில், பாதுகாப்பற்ற கவனிப்பு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 134 மில்லியன் எதிர்மறையான நிகழ்வுகள் 2.6 மில்லியன் இறப்புகளுக்குப் பங்களிக்கின்றன.
- இந்த ஆண்டின் சர்வதேச தினத்தின் குறிக்கோள் ஆனது "அனைத்து நிலைகளிலும் பாதுகாப்புக் கலாச்சாரம்" என்பதாகும்.

## ரயில்வே பாதுகாப்புப் படை நிறுவன தினம் – செப்டம்பர் 20

- ரயில்வே பாதுகாப்புப் படை தனது 35வது நிறுவன நாளை செப்டம்பர் 20 அன்று கொண்டாடியது.
- 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 அன்று இந்திய ஒன்றியத்தின் மற்ற துணை ராணுவப் படைகளுக்கு இணையாக ரயில்வே பாதுகாப்புப் படைக்கு ஆயுதப் படை தகுதியை வழங்கியதை நினைவு கூரும் வகையில் இது கொண்டாடப்பட்டது.
- இந்தப் படை மத்திய ரயில்வே துறை அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- ரயில்வே பாதுகாப்புப் படையானது தேடுதல், கைது செய்தல், விசாரணை நடத்துதல் மற்றும் வழக்குத் தொடருதல் போன்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இருப்பினும் இறுதி அதிகாரம் மத்திய அரசின் ரயில்வே காவல்துறையின் கைகளில் உள்ளது.
- தற்போதைய ரயில்வே பாதுகாப்புப் படையின் பொது இயக்குநர் அருண் குமார் ஐ.பி.எஸ் ஆவார்.

## சர்வதேச சிவப்புப் பாண்டா தினம் – செப்டம்பர் 21

- உலகில் சிவப்புப் பாண்டா இனங்களின் எண்ணிக்கை குறைந்து வருவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் கொண்டாடப்படுகின்றது.
- சிவப்புப் பாண்டா ஆனது கிழக்கு இமயமலை மற்றும் தென்மேற்கு சீனா ஆகியவற்றில் வாழும் ஒரு பாலூட்டியாகும்.
- துருப் பிடித்த நிறத்திலான இந்த உயிரினங்கள் கூடு கட்டும் மரங்கள் மற்றும் மூங்கில் ஆகியவற்றின் இழப்பைச் சந்தித்து வருகின்றன. இது அந்த இனத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கின்றது.
- இந்த விலங்குகள் பெரும்பாலும் மரங்களிலேயே தங்கள் வாழ்வினைக் கழித்தும் உயரமான இடங்களில் தூங்கியும் நேரத்தைக் கழிக்கின்றன.




- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (International Union for Conservation of Nature - IUCN) சிவப்புப் பட்டியலில் “அருகி வரும் இனமாகப்” பட்டியலிடப் பட்டுள்ளது.

## சுழிய உமிழ்வு தினம் - செப்டம்பர் 21

- செப்டம்பர் 21 ஆம் தேதியானது சுழிய உமிழ்வு தினமாகக் (ZeDay) கொண்டாடப் படுகின்றது. "வருடத்திற்கு ஒரு தினத்தை பூமிக்குச் சேமிப்பதற்காக" ZeDay உருவாக்கப்பட்டது.
- அன்றாட வாழ்வில் நமது பூமி பயன்படுத்தும் அபரிதமான புதைபடிவ எரிபொருட்கள் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ZeDay இயக்கம் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது.
- வடக்கு மற்றும் தெற்கு அரைக் கோளங்களில் சம ஒளியுடன் பகலும் இரவும் சமமாக இருப்பதால் இந்தக் குறிப்பிட்ட தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.




## உலக அல்சைமர் நாள் – செப்டம்பர் 21

- அல்சைமர் நோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதம் ஆனது உலக அல்சைமர் மாதமாக அனுசரிக்கப்படுகின்றது. செப்டம்பர் 21 ஆம் தேதி உலக அல்சைமர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.
- "உலக அல்சைமர் அறிக்கை 2019: மறதி நோய் (Dementia) மீதான அணுகுமுறைகள்" ஆனது அல்சைமர் நோய் சர்வதேச அமைப்பால் (Alzheimer's Disease International - ADI) வெளியிடப்பட்டது.
- அல்சைமர் நோய் என்பது ஒரு வளர்வீரிய மூளைக் கோளாறு ஆகும். இது பொதுவாக 60 வயதுகளில் உள்ள நபர்களுக்குத் தோன்றும்.
- டிமென்ஷியா என்பது ஒரு நோய்க்குறியாகும். இது நோய் அல்ல. ஆனால் அல்சைமர் என்பது ஒரு நோயாகும்.
- டிமென்ஷியா பொதுவாக அல்சைமர் நோயால் ஏற்படுகின்றது.
- பார்கின்சன் மற்றும் ஹண்டிங்டன் நோய் போன்ற பிற நோய்களாலும் டிமென்ஷியா ஏற்படலாம்.





## சர்வதேச அமைதி தினம் – செப்டம்பர் 21

- சில நேரங்களில் அதிகாரப் பூர்வமற்ற முறையில் உலக அமைதி தினம் என்று அழைக்கப்படுகின்ற சர்வதேச அமைதி தினமானது ஆண்டுதோறும் செப்டம்பர் 21 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- 1981 ஆம் ஆண்டில் அமைதிக் கலாச்சாரம் குறித்த ஐ.நா. தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் இத்தினமானது நிறுவப்பட்டது.
- இந்த தினத்தை அனுசரிப்பதற்காக ஐ.நா. அமைதி மணி ஐ.நா.வின் தலைமையகத்தில் (நியூயார்க் நகரில்) ஒலிக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துருவாக "அமைதிக்காக காலநிலை நடவடிக்கை" என்பதினை அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு கொண்டாட்டங்கள் ஒப்பீட்டளவில் தனித்துவமானது. ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபையின் இந்த ஆண்டு கருத்துருவானது போர், மோதல் அல்லது அமைதி ஆகியவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.




## உலக ரோஜா தினம் – செப்டம்பர் 22

- இரத்தப் புற்றுநோயின் அரிய வடிவமான அஸ்கின்ஸ் கட்டியைக் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்ட கனடாவைச் சேர்ந்த 12 வயதான மெலிண்டா ரோஸின் நினைவாக உலக ரோஜா தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- உலக ரோஜா தினத்தன்று, புற்றுநோயாளிகளுக்கு கையால் தயாரிக்கப்பட்ட ரோஜாக்கள், அட்டைகள் மற்றும் பரிசுகள் வழங்கப் படுகின்றன.
- அன்பு, மென்மை மற்றும் அக்கறையின் அடையாளமான ரோஜா, புற்றுநோய் நோயாளிகளுக்கு புற்றுநோயை எதிர்கொள்ளும் போது அவர்களுக்கு வலிமை அளிப்பதற்காக வழங்கப்படுகின்றது.
- உலக புற்றுநோய் தினமானது பிப்ரவரி 4 அன்று அனுசரிக்கப்படுகின்றது.



## சர்வதேச சைகை மொழிகள் தினம் – செப்டம்பர் 23

- சர்வதேச சைகை மொழிகள் தினமானது (International Day of Sign Languages - IDSL) உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 23 அன்று சர்வதேச காது கேளாதோர் வாரத்துடன் இணைந்து கொண்டாடப்படுகின்றது.
- "சைகை மொழியுடன், அனைவரும் உள்ளடக்கப் பட்டுள்ளனர்!" என்ற கருப்பொருளின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் முதலாவது சர்வதேச சைகை மொழிகள் தினமானது கொண்டாடப்பட்டது.
- 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று தொடங்கப்பட்ட உலக காது கேளாதோர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட அதே தேதியானது இத்தினத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- சர்வதேச காது கேளாதவர்களின் வாரமானது (International Week of the Deaf - IWDeaf) 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் கடைசி வாரம் முழுவதும் உலகெங்கிலும் கொண்டாடப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "அனைவருக்கும் சைகை மொழிகள் மீதான உரிமைகள்" என்பதாகும்.
- இந்தத் தினமானது காது கேளாதவர்களுக்கான சர்வதேச வாரத்துடன் ஒத்துப்போகிறது, மேலும் வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் பின்வரும் துணை கருத்துருக்கள் உள்ளன:

| Day | Theme |
|---|---|
| **Monday, 23 September** | Sign Language Rights for All! |
| **Tuesday, 24 September** | Sign Language Rights for All Children |
| **Wednesday, 25 September** | Sign Language Rights for Deaf Senior Citizens |
| **Thursday, 26 September** | Sign Language Rights for Deaf Blind People and Deaf People with Disabilities |
| **Friday, 27 September** | Sign Language Rights for Deaf Women |
| **Saturday, 28 September** | Sign Language Rights for Deaf LGBTIQA+ |
| **Sunday, 29 September** | Sign Language Rights for Deaf Refugees |

## உலக மருந்தாளுனர் தினம் 2019 - செப்டம்பர் 25

- உலகெங்கிலும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மருந்தாளுனரின் பங்கை ஊக்குவிக்கவும் அவர்களை ஆதரிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 25 அன்று உலக மருந்தாளுநர் தினம் கொண்டாடப்படுகின்றது.
- இத்தினமானது 2009 ஆம் ஆண்டில் துருக்கியின் இஸ்தான்புல்லில் சர்வதேச மருந்து கூட்டமைப்பால் (International Pharmaceutical Federation - FIP) உருவாக்கப்பட்டது.
- சர்வதேச மருந்துக் கூட்டமைப்பு ஆனது 4 மில்லியனுக்கும் அதிகமான மருந்தாளுநர்கள் மற்றும் மருந்து விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு உலகளாவிய அமைப்பாகும்.

- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, 'அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் திறனுள்ள மருந்துகள்' என்பதாகும்.




## அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26 அன்று அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கான சர்வதேச தினம் (International Day for the Total Elimination of Nuclear Weapons - INTEN) அனுசரிக்கப் படுகின்றது.
- 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா பொதுச் சபைத் தீர்மானமானது செப்டம்பர் 26 ஆம் தேதியை INTEN தினமாக அறிவித்தது.
- இது அணு ஆயுதங்களால் மனித குலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் அவை முற்றிலுமாக அகற்றப்படுவதன் அவசியம் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வையும் அது குறித்த அறிவையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகக் கடல்சார் தினம் - செப்டம்பர் 26


- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் கடைசி வியாழக்கிழமை அன்று உலக கடல்சார் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- கப்பல் பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல் சூழலின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்துவதற்காக இத்தினக் கொண்டாட்டங்கள் நடத்தப் படுகின்றன.
- இத்தினமானது உலகின் பொருளாதாரத்திற்கு அதிலும் குறிப்பாகக் கப்பல் போக்குவரத்திற்கு சர்வதேச கடல்சார் தொழிற்துறையின் பங்களிப்பை அங்கீகரிக்கின்றது.
- சர்வதேச கடல்சார் அமைப்பு (International Maritime Organisation - IMO) ஒப்பந்தத்தின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இது 1978 ஆம் ஆண்டில் முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- IMOவின் தற்போதையப் பொதுச் செயலாளர் கிடாக் லிம் ஆவார்.

- இந்த ஆண்டிற்கான உலக கடல்சார் தினத்தின் கருத்துரு, "கடல் சமூகத்தில் பெண்களை மேம்படுத்துதல்" என்பதாகும்.




## உலகக் கருத்தடை தினம் - செப்டம்பர் 26

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26 அன்று உலகக் கருத்தடை தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- தற்பொழுது இருக்கக் கூடிய அனைத்து விதமான கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதும் இளைஞர்கள் தங்களின் பாலியல் மற்றும் இனவிருத்தி சுகாதாரத்தைப் பற்றிய தகவல்களைத் தெரிவு செய்ய அவர்களுக்கு உதவுவதும் இத்தினத்தின் நோக்கங்களாகும்.
- இந்த நாள் 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது ஆகும்.



## உலக சுற்றுச்சூழல் ஆரோக்கிய தினம் - செப்டம்பர் 26

- ❖ உலக சுற்றுச்சூழல் ஆரோக்கிய தினமானது ஆண்டுதோறும் செப்டம்பர் 26 அன்று கொண்டாடப் படுகின்றது. இது சர்வதேச சுற்றுச்சூழல் ஆரோக்கியக் கூட்டமைப்பால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- ❖ 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "காலநிலை மாற்றம் மீதான சவால்கள், உலகளாவிய சுற்றுச்சூழல் ஆரோக்கியத்திற்காக ஒற்றுமையாக செயல்பட வேண்டிய நேரம்" என்பதாகும்.
- ❖ இந்தக் கருத்துருவானது அடிமட்ட நிலையில் காலநிலை மாறுபாட்டின் சவால்களுக்கு எதிராக சமூகங்களைப் பாதுகாக்குமாறு சுற்றுச்சூழல் சுகாதாரப் பயிற்சியாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

## உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27

- ❖ 1980 ஆம் ஆண்டு முதல், ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பானது (UNWTO - United Nations World Tourism Organization) செப்டம்பர் 27 அன்று உலக சுற்றுலா தினத்தை கொண்டாடி வருகின்றது.
- ❖ 1970 செப்டம்பர் மாதம் 27 அன்று UNWTOன் விதிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- ❖ இந்தத் தினமானது சர்வதேசச் சமூகத்திற்குள் சுற்றுலாவின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் உலகெங்கிலும் உள்ள சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார விழுமியங்கள் மீது சுற்றுலா எவ்வாறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை நிரூபிப்பதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சுற்றுலா உலகின் ஒரு முக்கியத் துறை" என்பதாகும்.


### *2019 ஆம் ஆண்டில் இத்தினத்தை தலைமையேற்று நடத்தும் நாடுகள்*

- ❖ 1997 ஆம் ஆண்டு முதல், UNWTO ஆனது இத்தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட நாட்டைத் தேர்ந்தெடுக்கின்றது.
- ❖ 2019 ஆம் ஆண்டில் இந்தியா இத்தினத்தை தலைமையேற்று நடத்துகின்றது. "சுற்றுலா மற்றும் பணிகள்: அனைவருக்கும் சிறந்த எதிர்காலம்" என்ற கருப்பொருளின் கீழ் இந்தியா இத்தினத்தை அனுசரிக்கின்றது.



## உலக வெறிநாய்க்கடி (ரேபிஸ்) தினம் - செப்டம்பர் 28

- உலக ரேபிஸ் தினம் என்பது செப்டம்பர் 28 அன்று அனுசரிக்கப்படும் ஒரு சர்வதேச விழிப்புணர்வுப் பிரச்சாரமாகும். இது அமெரிக்காவின் வெறிநாய்க்கடி கட்டுப்பாட்டிற்கான உலகளாவியக் கூட்டிணைவினால் ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- இது ஒரு ஐ.நா அனுசரிப்பு நாளாகும். லூயிஸ் பாஸ்டரின் நினைவு தினத்தை செப்டம்பர் 28 ஆனது நினைவு கூர்கின்றது.
- பாஸ்டர் முதலாவது வெறிநாய்க்கடி தடுப்பூசியை உருவாக்கினார்.
- இந்தத் தினமானது மனிதர்கள் மற்றும் விலங்குகளின் மீதான வெறிநாய்க்கடியின் தாக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்நோயை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தத் தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்குவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.




## உலகளவில் தகவல்களை அணுகுவதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 28


- உலகளவில் தகவல்களை அணுகுவதற்கான சர்வதேச தினமானது யுனெஸ்கோ பொது மாநாட்டால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்தினமானது செப்டம்பர் 28ஆம் தேதி அனுசரிக்கப் படுகின்றது.

- இந்தத் தினமானது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறுவப்பட்டது. இத்தினமானது முதன்முதலில் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று அனுசரிக்கப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தகவலை அணுகுதல்: எந்தவொரு நபரும் விடுபட்டு விடாமல்" என்பதாகும்.




## உலக இருதய தினம் - செப்டம்பர் 29

- உலக இருதய தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 29 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2000 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் படுகின்றது.
- இருதய நோய் மற்றும் பக்கவாதம் உள்ளிட்ட இருதய நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான உலக இருதயக் கூட்டமைப்பின் மிகப்பெரிய தளம் இதுவாகும்.




## உலக நதிகள் தினம் – செப்டம்பர் 22

- உலக நதிகள் தினம் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிறு அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது உலக நீர்வழிப் பாதைகளைக் கொண்டாடும் ஒரு தினமாகும்.
- இந்த வருடம் உலக நதிகள் தினமானது செப்டம்பர் 21ம் தேதி அன்று அனுசரிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "நதிகளுக்கான செயல்பாட்டிற்கான தினம்" என்பதாகும்.
- இது முதலில் 2005 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டதாகும்.
- 2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை நமது நீர்வள மூலங்கள் மீது கவனம் செலுத்துவதன் மீதான ஒரு மிகப்பெரிய விழிப்புணர்விற்காக "பத்தாண்டு காலகட்டத்தைக் கொண்ட உயிருக்கான நீர்" என்ற பிரச்சாரத்தைத் துவங்கியது.




## உலக காது கேளாதோர் தினம் – செப்டம்பர் 29

- உலக காது கேளாதோர் தினம் பொதுவாக ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிறு அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இவ்வருடம் இது செப்டம்பர் 29ம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- இத்தினம் சமுதாயத்திற்கு காது கேளாதோர் ஆற்றிய பங்களிப்புகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த எண்ணுகின்றது.
- இத்தினம் பின்லாந்தின் ஹெல்சிங்கியைத் தலைமையிடமாகக் கொண்ட உலக காது கேளாதோர் கூட்டமைப்பினால் துவங்கப் பட்டதாகும்.




## சர்வதேச மொழிபெயர்ப்பியல் தினம் – செப்டம்பர் 30


- சர்வதேச மொழிபெயர்ப்பியல் தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- மொழிபெயர்ப்பாளர்களின் புனிதப் புரவலராக கருதப்படும் பைபிள் மொழிபெயர்ப்பாளரான செயின்ட் ஜெரோம் என்பவரது விருந்தினை இது அனுசரிக்கின்றது.
- 2017 ஆம் ஆண்டு மே மாதம் 24ம் தேதி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை செப்டம்பர் 30ம் தேதியை சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாக அறிவிப்பதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.



# இதரச் செய்திகள்

## இந்திய ரயில்வேயின் குறுகிய வரலாறு

- இந்திய ரயில்வேயின் வரலாறு குறித்த இந்த புதிய புத்தகமானது 1830களில் இருந்து புதிய அதிவேக ரயில் 18 வரையிலான இந்திய ரயில்வேயின் பயணம் பற்றி விளக்குகிறது.
- "இந்திய ரயில்வேயின் குறுகிய வரலாறு" என்ற இந்தப் புத்தகத்தை மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ராஜேந்திர பி அக்லேகர் எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகத்திற்கான முன்னுரையை பிரபல பத்திரிகையாளரான மார்க் டல்லி எழுதியுள்ளார்.




## உலகளாவிய மகிழ்ச்சி ஆய்வு

- 28 சர்வதேச சந்தை நாடுகளில் உலகளாவிய மகிழ்ச்சிக் குறியீட்டில் இந்தியா ஒன்பதாவது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய மகிழ்ச்சி ஆய்வானது இந்த 28 நாடுகள் ஒவ்வொன்றிலும் 1000க்கும் மேற்பட்ட நபர்களை ஆய்வு செய்தது.
- இந்தியாவில் பதிலளித்த 77%க்கும் மேற்பட்டவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிவித்தனர்.
- ஆனால், 2018 இல் 83% ஆக இருந்த இதில் 6% வீழ்ச்சி ஏற்பட்டு 2019ல் அது 77 சதவீதமாக உள்ளது.


- தரவரிசை பின்வருமாறு
    1) ஆஸ்திரேலியா மற்றும் கனடா
    2) சீனா
    3) கிரேட் பிரித்தானியா
    4) பிரான்ஸ்
    5) அமெரிக்கா
    6) சவுதி அரேபியா
    7) ஜெர்மனி
    8) இந்தியா
- ரஷ்யா, ஸ்பெயின் மற்றும் அர்ஜென்டினா ஆகியவை பட்டியலில் கடைசியில் உள்ளன.

## இந்தியாவின் அதி உயர ஆகாய சைக்கிள் பூங்கா

- சுற்றுலாத் தலமான மணாலியில் உள்ள குலாபா என்னுமிடத்தில் 9000 அடி உயரத்தில் நாட்டின் அதி உயர ஆகாய சைக்கிள் பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்காவின் தொலைவு 350 மீட்டர் ஆகும். இது பொதுமக்களின் பார்வைக்காக அக்டோபர் முதல் வாரம் திறந்து வைக்கப்படும்.
- இந்தப் பூங்காவானது துணைத் தளபதி நீரஜ் ராணா அவர்களின் மேற்பார்வையின் கீழ் அடல் பிகாரி வாஜ்பாய் மலையேற்ற கல்வி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இந்தப் பூங்காவானது அரசின் வருவாயை அதிகரிக்கவும் சுற்றுலாப் பயணிகள் சாகச நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது.

## ரோஹித்4ரைனோஸ் (Rohit4Rhinos) பிரச்சாரம்

- உலக வனவிலங்கு நிதியம் மற்றும் அனிமல் பிளானட் (Animal Planet) உடன் இணைந்து இந்தியாவின் துணை கேப்டன் ரோஹித் சர்மா, ரோஹித்4ரைனோஸ் என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளார்.
- பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் (அ) இந்திய காண்டாமிருகத்தினை பராமரிக்கும் தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதலே இதன் நோக்கமாகும்.
- உலக காண்டாமிருக நாளான செப்டம்பர் 22 இன் நினைவாக அனிமல் பிளானட் சேனலில் இந்த பிரச்சாரம் தொடங்கப்படவுள்ளது.
- வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு மற்றும், இனப்பெருக்கக் கால நோய்களினால் ஏற்படும் அதிக அளவு இறப்பு போன்ற பலவிதமான அச்சுறுத்தல்களை இந்தக் காண்டாமிருகங்கள் எதிர்கொள்கின்றன.
- நேபாளின் தராய் புல்வெளிகள், உத்திரப் பிரதேசத்தின் வட பகுதி, பீகாரின் வட பகுதி, மேற்கு வங்காளத்தின் வட பகுதி மற்றும் அசாமின் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்குகளில் மட்டுமே இவை வாழ்கின்றன.




## 76வது வெனிஸ் சர்வதேசத் திரைப்படத் திருவிழா

- 76வது வெனிஸ் சர்வதேசத் திரைப்படத் திருவிழா இத்தாலியின் வெனிஸில் நடத்தப்பட்டது.
- இது 1932இல் தொடங்கப்பட்டது. இது உலகின் மிகப் பழமையான திரைப்படத் திருவிழா ஆகும்.
- 'ஒரிசோன்டி' (ஹொரைஸன்ஸ்) போட்டிப் பிரிவின் ஒரு பகுதியாக சனல் குமார் சசிதரனால் இயக்கப்பட்ட மலையாளத் திரைப்படமான "சோழா" என்ற திரைப்படமும் இந்தத் திரைப்பட விழாவில் கலந்து கொண்டது.
- சிறந்த படத்திற்கான கோல்டன் லயன் விருதானது டோட் பிலிப்ஸால் இயக்கப்பட்ட 'ஜோக்கர்' என்ற படத்திற்கு வழங்கப்பட்டது.

## உலகின் தலைசிறந்த 10 IB பள்ளிகள்

- உலக அளவில் தலைசிறந்த 10 சர்வதேச பேகலரேட் (International Baccalaureate - IB) பள்ளிகளில் இந்தியாவில் இருந்து இடம்பெற்ற ஒரே பள்ளி திருபாய் அம்பானி சர்வதேசப் பள்ளி ஆகும்.
- இங்கிலாந்தில் உள்ள தன்னாட்சிக் கல்வி ஆலோசகர்களின் மதிப்பீட்டின்படி இந்த தரவரிசைப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம்பெற்ற ஒரே சர்வதேச இந்திய பேகலரேட் பள்ளி இதுவேயாகும்.
- இந்தப் பட்டியலில் சிங்கப்பூரின் ஆங்கிலோ – சீனர்கள் முதலிடத்திலும், இங்கிலாந்தின் கோடால்பின் & லேடிமர் மற்றும் சிங்கப்பூரின் செயின்ட் ஜோசப் கல்வி நிறுவனம் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களிலும் உள்ளனர்.

## IIFL செல்வ ஹுருன் இந்தியா - செல்வந்தர் பட்டியல்

- IIFL செல்வ ஹுருன் இந்தியா என்ற அமைப்பானது செல்வந்தர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது.
- ரிலையன்ஸ் தொழில் துறையின் தலைவரான முகேஷ் அம்பானி தொடர்ந்து எட்டாவது ஆண்டாக செல்வம் மிக்க இந்தியர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். இவரின் நிகர சொத்து மதிப்பு ரூ 3,80,700 கோடி ஆகும்.
- இந்தப் பட்டியலில் ரூ 1,86,500 கோடி சொத்து மதிப்புடன் லண்டனைச் சேர்ந்த எஸ்பி இந்துஜா & குழுமமானது இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து இந்தப் பட்டியலில் ரூ 1,17,100 கோடி சொத்து மதிப்புடன் விப்ரோ நிறுவனர் ஆசிம் பிரேம்ஜி மூன்றாவது இடத்தில் உள்ளார்.

***நகரங்கள்***

- இந்தப் பட்டியலில் உள்ள 246 தனிநபர்கள் அல்லது 26 சதவீதம் பேர் தொழில்முனைவோருக்கு உகந்த நகரமாக மும்பையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- அதைத் தொடர்ந்து இந்தப் பட்டியலில் டெல்லி (175), பெங்களூரு (77) ஆகிய நகரங்கள் தொழில்முனைவோருக்கு உகந்த நகரங்களாக உள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★